ஸ்ரீ விஷ்ணு
ஸஹஸ்ரநாம-பாஷ்யம்

॥ श्रीविष्णु-सहस्रनाम-भाष्यम् ॥

உரை ஆசிரியர்

"அண்ணா"

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
11, இராமகிருஷ்ண மடம் சாலை,
மயிலாப்பூர் :: சென்னை-600004.

ஸ்ரீ விஷ்ணு
ஸஹஸ்ரநாம-பாஷ்யம்

॥ श्रीविष्णु - सहस्रनाम - भाष्यम् ॥

உரை ஆசிரியர்

"அண்ணா"

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை-600004.

Published by :

©THE PRESIDENT
Sri Ramakrishna Math
11, Ramakrishna Math Road,
Mylapore, MADRAS - 600-004.

Third Impression
III-3M-3C-11-'75

Printed in India :

RAJPRIYA PRINTERS
Lloyd's Colony,
MADRAS–600014.

36—

பொருளடக்கம்

			பக்கம்
குறிகளின் விளக்கம்	...	...	v
முகவுரை	...	...	vii

ஸ்ரீவிஷ்ணு-ஸஹஸ்ரநாம-ஸ்தோத்ரம்

பூர்வ பாகம்	...	...	1
ஸ்தோத்திரம்	...	...	20
உத்தர பாகம்	...	...	49
ஸஹஸ்ரநாமாவளி	...	...	68
ஸ்ரீலக்ஷ்மி அஷ்டோத்தர நாமாவளி	...	...	76
ஸஹஸ்ரநாமபாஷ்யம்	...	...	81

குறிகளின் விளக்கம்

உச்சரிப்புக் குறிகள்

க	ग	'கங்கை'	என்பதில் போல
ட	ड	'குடம்'	,,
த	द	'பாதம்'	,,
ப	ब	'இன்பம்'	,,
ரு	ऋ	'எருது'	,,

: — ஹ, ஹி, ஹு... 'ராம:' = ராமஹ; 'ஸ்ரீ:' = ஸ்ரீஹி;
'பாண்டு:' = பாண்டுஹு' என்றவாறு
ஈற்றெழுத்துடன் ஒத்து வரும்,
ஹ் 'க: கிம்' = கஹ் கிம்.

ऽ — 'அ' தொக்கி நிற்பதைக் குறிக்கும்

மற்றக் குறிகள்

அ.—அவயவப் பொருள்,
உ-ம்.—உதாரணம்.
ஒ.—ஒப்பிடுக
கீ.—பகவத்கீதை.
ரு. வே—ருக்வேதம்.
பா. பே.—பாடபேதம்
ப. பா. ஸ்ரீபட்டர் பாடம்.
சங்.—ஸ்ரீசங்கரர்
பாக—ஸ்ரீமத் பாகவதம்

ஈச. உப.—ஈச உபநிஷத்து
கே. உப.—கேன ,,
கட. உப.—கட ,,
மு. உப.—முண்டக ,,
தை. உப.—தைத்திரீய ,,
சா. உப.—சாந்தோக்கிய ,,
ப்ரு. உப.—ப்ருஹதாரண்யக ,,
ச்வே. உப. ச்வேதாச்வதர ,,
தை. ஆ. தைத்திரீய ஆரண்யகம்

முகவுரை

I

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் வாயிலாக ஸம்ஸ்கிருதத்திலுள்ள மத நூல்கள் பல ஆங்கிலத்திலும் நாட்டு மொழிகள் பலவற்றிலும் பதவுரை, பொழிப்புரை, விரிவுரைகளுடன் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வரிசையில் தமிழ் மொழி பெயர்ப்புடனும் விரிவுரையுடனும் **ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்** வெளிவருகிறது. ஒப்பிட்டுப் படிக்க உபயோகமாயிருக்கும் வகையில் ஸ்ரீசங்கர பகவத்பாதருடைய பாஷ்யத்தின் ஸாரமான பகுதிகளும் ஸ்ரீபராசர பட்டர் எழுதிய 'பகவத் குணதர்ப்பணம்' எனும் உரையின் முக்கியமான கருத்துக்களும் இந் நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. உபநிஷத்து, பகவத்கீதை, இராமாயணம், பாகவதம், திவ்யப் பிரபந்தம், திருக்குறள் முதலிய நூல்களிலிருந்தும் ஆங்காங்கு பொருத்தமான மேற்கோள்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மூலம் முதலில் நாகர எழுத்திலும் அதனடியில் தமிழ் எழுத்திலும் அச்சிடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருத உச்சரிப்பைத் தமிழ் எழுத்துக்களிலும் கூடிய வரை காட்டுவதற்காகப் பக்கம் vi-ல் குறிப்பிட்டுள்ள சங்கேதமும் தமிழ் நாட்டில் வழக்கத்தில் உள்ள ஷ, ஸ, ஹ, க்ஷ முதலிய கிரந்தாக்ஷரங்களும் விஸர்க்கம் (:) முதலியனவும் கையாளப்பட்டிருக்கின்றன.

II

மஹாபாரதத்திற்கு உள்ளம் போன்றதாகிய அனுசாஸன பர்வத்தில் தானதர்ம ரகசியங்களையும், எல்லா சாஸ்திரங்களின் முடிவான கருத்துக்களையும் எடுத்துரைக்குமிடத்தில் பீஷ்மாசாரியரால் ஸ்ரீ விஷ்ணு

ஸஹஸ்ரநாமம் தருமபுத்திரருக்கும் அவர் மூலமாகப் பிறருக்கும் உபதேசிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீகிருஷ்ணபகவான் 'பீஷ்மர் அம்புப் படுக்கையில் சயனித்து அக்னி ஆறுவது போலிருக்கிறார். புருஷசிரேஷ்டரான அவர் இப்பொழுது என்னைத் தியானம் செய்கிறார். ஆதலால் என் மனம் அவரிடம் சென்றது. குருவம்சத்தவருக்குத் தலைவராகிய அவர் அஸ்தமனமாகி விட்டால் உலகில் ஞானச்செல்வம் (அல்பீ பவிஷ்யதி) குறைந்துபோம்' என்று தருமபுத்திரரைத் தூண்டி உபதேசம் பெறச் செய்தார். பீஷ்மரை நோக்கி, 'பரத சிரேஷ்டரே! அறியவேண்டுமென்று கேட்கும் தர்மராஜருக்கு நீர் என்ன சொல்லப்போகிறீரோ அவையெல்லாம் வேதவாக்கியங்கள் போலப் பூமியில் நிலைபெறப் போகின்றன' என்று கூறியருளினார். பீஷ்மரும் 'கோவிந்தரே! உமதனுக்கிரஹத்தினால் எனக்குத் தாபமும் மயக்கமும் மனச்சோர்வும் ஒய்வும் வாட்டமும் நோய்களுமாகிய எல்லாம் உடனே போய்விட்டன. உம்மை இடைவிடாது தியானம் செய்ததினால் பூரித்து இளமைப்பருவத்தில் இருப்பவன் போல ஆனேன். உமது அனுக்கிரஹத்தினால் தர்மங்களைச் சொல்வதற்குச் சக்தியுள்ளவனாயிருக்கிறேன்' என்று கூறி, 'இது தான் எல்லாத் தருமங்களிலும் மிகச் சிறந்த தருமம் என்று நான் நினைப்பது (ஏஷ மே ஸர்வதர்மாணாம் தர்மோ ऽதிகதமோ மத:)' என்று இறுதிகட்டி இந்த ஸஹஸ்ரநாமத்தை உபதேசிக்கலானார். உபதேச முடிவில் 'தேவகீ-நந்தன:' என்ற பெயரால் 'இங்கு நம்முடனிருக்கும் தேவகிநந்தனனே பரமபத நாதனாகிய பகவான். யுதிஷ்டிரரே! அகன்று நீண்ட கண்களையுடையவரும் உமது உறவினருமாகிய இவரே சென்றதும் நிகழ்வதும் வருவதுமாகிய அனைத்தும்' என்று கூறினார். ஸ்ரீராமாயணத்திற்கு ஸ்ரீ ராமனே கேட்ட சிறப்பைப்போல் இந்த ஸஹஸ்ரநாமத்திற்கு ஸ்ரீகிருஷ்ணனே உடனிருந்து கேட்ட தனிச்சிறப்புண்டு. எத்தனையோ கீதைகளிருந்தாலும், கீதையென்று அடைமொழியில்லாமல் சொல்

36

ஞல் பகவத்கீதையே கொள்ளப்படுவதுபோல், ஸஹஸ்ர நாமம் என்று சொன்ஞல் விஷ்ணு ஸஹஸ்ரநாமமே கொள்ளப்படுவதாலும் இதின் பெருமை விளங்கும். (ஒ. 'கேயம் கீதா நாமஸஹஸ்ரம்.'—சங்). மஹாபாரதம் (இதிஹாஸம்) சரித்திரம் என்றும், நீதிசாஸ்திரம் என்றும் கூறப்பட்டபோதிலும் ஆதியிலும் நடுவிலும் முடிவிலும் முக்கியமாக அது பகவானுடைய பெருமையையே கூறுவதாகும். ஸஹஸ்ரநாமத்திற்கு மஹாபாரதமே கதை வடிவிலமைந்த விரிவான வியாக்கியானம்.

III

இந்த விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் ஆதியில் ஸநகாதியர் செய்தது. பீஷ்மர் உபதேசித்தது. வேத வியாஸர் மஹாபாரதத்தில் தொகுத்தது. சங்கரர், பராசரபட்டர், மத்வர் முதலிய ஆசாரியர்கள் விரிவுரையெழுதி உலகில் பரப்பியது. ஆயிரம் பெயர்களைக் கணக்கிடுவதில் சங்கரர் பாடத்திலும், பட்டர் பாடத்திலும் உள்ள வேறுபாடுகளும், பொருள் வேற்றுமையுடன் இரண்டு, மூன்று அல்லது நான்கு தடவை வெவ்வேறிடங்களில் வரும் நாமங்களும் இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மாத்வ ஸம்பிரதாய பாடம் சங்கரபாஷ்ய பாடத்தையே பெரும்பாலும் ஒத்திருக்கிறது. சங்கரபாஷ்யத்தில் 'நாரஸிஹ்மவபு:' என்றது மாத்வபாஷ்யத்தில் 'நாரஸிஹ்ம வபு:' என்றும், 'யஜ்ஞ இஜ்ய:' என்றது 'யஜ்ஞ ஈஜ்ய:' என்றும், 'க்ருதாசீ:' என்றது, 'த்ருதாசீ:' என்றும், 'அப்ருதாச:' என்றது, 'அம்ருதாம்சு:' என்றும், 'ஸவிதா' என்றது 'ஸபிதா' என்றும் 'பஜந்தி யே புஷ்கராக்ஷம்' என்றது 'பஜந்தி புண்டரீகாக்ஷம்' என்றும் கொள்ளப்பட்டிருக்கின்றன. மற்ற விஷயங்களில் சங்கரர் பாடத்திற்கும் மாத்வ பாடத்திற்கும் வேறுபாடில்லை,*

* ஒ. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்—ம. வி. இராமானுஜாசாரியார்.

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம், பகவத்கீதை, ஸநத்ஸு ஜாதீயம் என்ற இம்மூன்றும் மஹாபாரதத்தின் ஸார மாயமைந்தவை என்று கருதித்தான் ஸ்ரீசங்கரர் இம்மூன் றிற்கும் பாஷ்யம் எழுதியுள்ளார் என்று கொள்வது தவரு காது. முக்குணங்களையும் கடந்த நிலை முக்தி. 'த்ரை குண்ய விஷயா வேதா நிஸ்த்ரை-குண்யோ பவார்ஜுன' என்று கீதை கூறுகிறது. முக்குணங்களையும் கடக்க வழி காட்டும் நூல்களாக இம்மூன்றும் அமைகின்றன. பிறவி யிலேயே புறக்கண்ணை இழந்திருந்தது மட்டுமன்றி தமோ குணத்தில் ஆழ்ந்து 'நான், எனது' எனும் செருக்கால் அகக் கண்ணையும் இழந்திருந்த திருதராஷ்டிரனுக்கு ஸநத்ஸுஜாதரால் உபதேசிக்கப்பட்டது ஸநத்ஸுஜாதீ யம். இரஜோகுணம் மேலிட்ட கர்ம வீரனுகிய அர்ஜுன னுக்குக் கிருஷ்ண பகவானுல் உபதேசிக்கப்பட்டது பகவத் கீதை. ஸத்துவகுணம் மிக்க தருமபுத்திரருக்கு பீஷ்மா சாரியரால் உபதேசிக்கப்பட்டது விஷ்ணு ஸஹஸ்ரநாமம்.

'எல்லா அறங்களையும் விட்டொழிந்திங் கென்றனையே
நல்லாய் சரண்புகுக நானுன்னை — அல்லல்தரு
பாவங்க ளின்முற்றும் பற்றறவே விடுவிப்பேன்
மேவுதுயர் எல்லாம் விடு.' —(கீ. 18. 66)

என்பது கீதையின் (சரம சுலோகம்) முடிவான உபதேசம். மஹாபாரத யுத்தத்தின் முடிவில் ஸஹஸ்ரநாமம் உப தேசிக்கப்பட்டாற்போல் கீதையின் உபதேசம் முடியுமிடத் தில் ஸஹஸ்ரநாமம் தொடங்குவதாய்க் கொள்ளலாம். அர்த்தத்தில் ஸஹஸ்ரநாமம் கீதையுடன் ஐக்கியப்பட்டது. அது ஆயிரம் பெயர்களின் கோர்வை மட்டுமன்று. மேற் கூறிய மூன்று நூல்களுள்ளும் முதன் முதலாக ஆதிசங்க ரர் பாஷ்யம் எழுதிய நூல் விஷ்ணு ஸஹஸ்ரநாமம் தான் எனவும் கேள்விப்படுகிறோம். ஸ்ரீசங்கரர் காஷ்மீர தேசத் திலிருந்த காலத்தில் பிரம்மஸூத்ர பாஷ்யம் செய்வ தற்கு முன்னுல் ஏதாவதொரு நூலுக்குப் பாஷ்யம் செய்ய வேண்டுமென்று எண்ணித் தமது சிஷ்யர் ஒருவரைப்

புஸ்தகசாலைக்கு அனுப்பி ஒரு புஸ்தகம் எடுத்துவரச் சொல்ல அச்சிஷ்யர் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை எடுத்து வந்தார். சங்கரர் அதைத் திருப்பி யனுப்பி விட்டு மறுபடியும் 'ஒரு புஸ்தகம் எடுத்து வா' என்று மற்றொரு சிஷ்யரை யனுப்ப அவரும் போய் அதையே கொண்டுவந்தார். அதைப்பற்றிச் சங்கரர் யோசித்துக் கொண்டிருக்கையில் ஸரஸ்வதீ தேவி நேரில் தோன்றி 'விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கே பாஷ்யம் செய்க' என்று கூறியருளியதாயும் அதன்மேல் ஆசாரியர் அதற்கு பாஷ்யம் செய்தார் என்றும் ஒரு வரலாறு வழங்கி வருகிறது. சங்கரபகவத்பாதர் சுகப் பிரம்மத்தைப்போல் குணங்களைக் கடந்த நிலையில் நிற்பவராயினும் பகவத் குணங்களில் முழ்கித் திளைத்து பக்தி வெள்ளம் பெருக்கெடுக்கும்படி பரவசப்பட்ட நிலை பாஷ்யத்தில் காணப்படுகிறது. உதாரணமாக 'ஸ்வாஸ்ய:' என்பதின் உரையிலே 'மங்களகரமானதாய்த் தாமரையின் மத்திய பாகத்திலுள்ள இதழைப்போல் சிவந்ததாய் எல்லாவற்றினும் மிகுந்த அழகு வாய்ந்ததாய் இருப்பதால் ஸ்வாஸ்ய:' (844) என்றும்; 'புஷ்கராக்ஷ:' என்பதற்கு 'நினைப்பவரின் இருதயத் தாமரையிலே தன்னுருக்கொண்டு விளங்குகிறார்' (556) என்றும்; 'சுபேக்ஷண:' என்பதற்கு எவருடைய கண்ணோக்கமானது சுபகரமாய், மோக்ஷத்தை நாடுவோர்க்கு மோக்ஷத்தைக் கொடுப்பதாயும், போகத்தை வேண்டுவோர்க்குப் போகத்தைக் கொடுப்பதாயும், எல்லா ஸந்தேகங்களையும் போக்குவதற்குக் காரணமாயும், பாவிகளைத் தூய்மை செய்வதாயும், இருதயக்கிரந்தி என்னும் சிக்கலைச் சேதிப்பதாயும், எல்லாக் கருமத்தளைகளையும் அழிப்பதாயும் அவித்தையைப் போக்குவதாயும் இருக்கிறதோ அவர் சுபேக்ஷண:' (393) என்றும்; 'க்ருதஜ்ஞ:' என்பதற்கு 'பச்சிலை, புஷ்பம் முதலியவற்றை ஒரு சிறிது ஸமர்ப்பிப்போர்க்கும் மோக்ஷானந்தத்தை அளிப்பவர்' (82) என்றும்; 'ராம:' என்பதற்கு 'நித்தியானந்த வடிவினனான இவனிடத்திலே யோகிகள் இன்புறுகிறார்கள்

என்பதாலும் தன்னிச்சையாலே ரமணீயமான உடலைத் தாங்கிய தசரதபுத்திரன் ஆனமையாலும் ராம:' (394) என்றும்; 'ஸுமுக:' என்பதற்கு மலர்ந்த முகமும், தாமரை இதழ் போல் நீண்ட கண்களும் உடையவனுக வும், பட்டாபிஷேகத்தை விலக்கிக் காட்டுக்குப் போகச் சொல்லுகையிலும் முகமலர்ச்சி மாருதவர்' (456) என் றும்; 'வ்ருஷபாக்ஷ:' என்பதற்கு வேண்டியவற்றையெல் லாம் அருள்கொண்டு பொழியும் கண்களை உடையவர்' (594) என்றும்; 'பூசய:' என்பதற்கு இலங்கைக்குச் செல்ல வழிகாண விரும்பிச் சமுத்திரத்தை நோக்கிப் பூமியிலே சயனித்த அழகர்' (628) என்றும்; 'பிஷக்' என் பதற்கு 'ஸம்ஸாரமாகிய நோயினின்றும் விடுவிப்பதான றந்த வித்தையைக் கீதையிலே உபதேசித்தருளியவர்' (579) என்றும்; 'பவித்ராணும் பவித்ரம் என்ற முன்னு ரைப் பத விளக்கத்தில் 'புருஷோத்தமனைத் தியானித்தா லும் பார்த்தாலும் பேசினலும் துதித்தாலும் பூஜித்தா லும் வணங்கினலும் பாவங்கள் எல்லாம் பறந்துபோம்' என்றும் கூறியுள்ளதை யெல்லாம் படிக்கும்போது உடல் சிலிர்த்து உள்ளங் குளிரும்.

IV

நமஸ்கரித்தல், ஆசிகூறுதல், ஸித்தாந்தத்தை எடுத் துரைத்தல், பராக்கிரமத்தைப் புகழ்தல், பெருமைகளைப் பேசுதல், பிரார்த்தனை செய்தல் என ஸ்தோத்திரத்தின் லக்ஷணம் அறுவகை என்று கூறுவர். (நமஸ்காரஸ்-ததாசீச்ச ஸித்தாந்தோக்தி: பராக்ரம: | விபூதி; ப்ரார்த் தனு சேதி ஷட்விதம் ஸ்தோத்ர-லக்ஷணம் ||). ஆயிரம் பெயர்களுக்கும் முதலில் ஓங்காரமும் முடிவில் 'நம:' என்ற பதமும் சேர்க்கப்பட்டு ஒவ்வொன்றும் சிறந்த மந்திரமாக அர்ச்சனையிலும் ஜபத்திலும் உபயோகப் படுவதால் விஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் முதல் லக்ஷணம் முற்றும் பொருந்தியிருக்கிறது. 'நம:' என்று உபாஸித் தால் ஆசைகளெல்லாம் உபாஸிப்பவனை நமஸ்கரிக்கும்'

என்று உபநிஷத் கூறும் உண்மை இங்கு அனுபவத்தில் காணப்படும். முன்னுரையும் பலசுருதியும் ஆசிகூறுவதாயும் ஸித்தாந்தத்தை எடுத்துரைப்பதாயும் அமைகின்றன. 'வாசுதேவபக்தர்களுக்கு எவ்விடத்திலும் தீங்கு விளையாது. பிறப்பு இறப்பு மூப்புப்பிணிகளின் பயமும் ஒரு பொழுதும் உண்டாவதில்லை. புருஷோத்தமனிடம் பக்தி செய்யும் புண்ணியவான்களுக்குக் கோபமில்லை, பொறுமையில்லை, பேராசையில்லை. கெட்ட எண்ணமில்லை' என்றும், 'சாஸ்திரங்கள் அனைத்திற்கும் ஆசாரமே முதலாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆசாரத்தில் பிறப்பது தருமம்; தருமத்திற்குப் பிரபு அச்சுதர்' என்றும் சொல்லப்படுவதெல்லாம் ஸித்தாந்தம். 'விச்வம் விஷ்ணு:', 'முக்தானாம் பரமாகதி:', 'ப்ரதானபுருஷேச்வர:' என்பவை போன்ற பெயர்களும் ஸித்தாந்தத்தைத் தெரிவிக்கின்றன. 'அபராஜித:,' 'ஸர்வஸஹ:,' 'சத்ருஜித்' 'அமிதவிக்ரம:,' என்பவை போன்ற பெயர்கள் பராக்கிரமத்தைப் பேசுகின்றன. பெரும்பாலான பெயர்கள் பகவானுடைய விபூதிகளை விளக்குகின்றன. 'என்னையன்றி அசையும் பொருளோ அசையாப்பொருளோ ஏதேனும் உளதோ எனில் அது இல்லவே இல்லை. பரந்தபா! என்னுடைய தெய்வசக்திகளை விளக்கும் விபூதிகளுக்கு எல்லை இல்லை' என்று கீதையில் விபூதி யோகத்தில் பகவான் எதை உபதேசித்தாரோ அதன் தொடர்ச்சியாகவே ஸஹஸ்ர நாமத்தைக் கொள்ளலாம். 'நிற்பதெல்லாம் நெடுமால்'. அவனே அக்னியும் வாயுவும் பூமியும்; அவனே சூரியனும் சந்திரனும்; அவனே நியக்ரோதம், உதும்பரம், அசுவத்தம் முதலிய மரங்கள், அவன் உருவே உலகெல்லாம்; எனினும் அவன் உருவில்லாதவன்; 'அநிர்தேச்யவபு:' இவ்விதமென்று சுட்டிக்காட்ட முடியாதவன்; 'ஆணல்லன் பெண்ணல்லன் அலியுமல்லன் காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன், பேணுங்கால் பேணுமுருவாகும் அல்லனுமாம் கோணை பெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே' என்றார் நம்

மாழ்வார். 'விச்வமூர்த்திர்-மஹாமூர்த்திர்-தீப்தமூர்த்தி-ரமூர்த்திமான் | அநேக மூர்த்தி-ரவ்யக்த: சதமூர்த்தி: சதானன: ||' அவனே பிரணவமும் வ்யாஹ்ருதியும் எல்லா மந்திரங்களும். அவன் உலகின் பிதா, பிதாமஹறன்; அவனே மரமும் மலையும் திசைகளும்; அவன் அணுவுக் கணுவாகியன், பெரிதினும் பெரிதாகியவன்; அவனே யஜ்ஞமும், யஜ்ஞஸாதனமும், யஜ்ஞத்தைப் புசிப் பவனும்; அவனே பயத்தைத் தருபவன், அவனே பயத்தைப் போக்குபவன். அவனே மருந்து, அவனே வைத்தியன்."

பிரம்ம வைவர்த்த புராணம் கிருஷ்ணஜன்ம காண்டம் கூறுவதாவது:—

"ஜகத்யோனி-ரயோநிஸ்த்வம் மந்தவ்யோऽவ்யய ஏவ ச |

ஜ்யோதிஸ்வரூபோ-ஹ்யனக: ஸகுணோ நிர்க்குணோ மஹான் ||

பக்தானுரோதாத் ஸாகாரோ நிராகாரோ நிரங்குச: |

நிர்வ்யூஹோ நிகிலாதாரோ நிஸ்ஸங்கோ நிருபத்ரவ: |

நிருபாதிச்ச நிர்லிப்தோ நிரீஹோ நிதனாந்தக: ||"

ஆறுவது லக்ஷணமாகக் கூறப்பட்ட பிரார்த்தனை வடிவில் 'வனமாலீ கதீ சார்ங்கீ சங்கீ சக்ரீ ச நந்தகீ | ஸ்ரீமாந் நாராயணோ விஷ்ணுர்-வாஸுதேவோऽபிரக்ஷது ||' என்பது அமைகின்றது.

V

உபநிஷத்து, கீதை, ருத்ரம், புருஷஸூக்தம் இந் நான்குடன் சேர்த்து விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைத் தினந் தோறும் பாராயணம் செய்ய வேண்டுமென்பது முதியோர் கண்டமுறை.

ஸ்வசாகோபநிஷத் கீதா விஷ்ணோர்-நாம-
ஸஹஸ்ரகம் ।
ருத்ரஞ்ச பௌருஷம் ஸூக்தம் நித்ய-மாவர்த்த
யேத்-புத: ॥

மற்றவைகளைப் பாராயணம் செய்யச் சக்தியில்லாத பொழுதும் ஸஹஸ்ரநாமத்தை மட்டுமாவது பாராயணம் செய்யவேண்டும். அதனால் அனைத்தையும் பாராயணம் செய்த பலன் கிட்டும்.

'வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்று ஆண்டாள் அருளிய வண்ணம் ஸஹஸ்ரநாமஜபத்தால் நமது பாவங்களெல்லாம் தீயிலிட்ட பஞ்சுபோல் பொசுங்கிப்போம். பகவானுடைய நாம ஜபம், இடம் பொருள் காலம் முதலிய கடினமான நியமம் இல்லாமல், எளிதில் இனிது செய்யக் கூடியது. பகவத்கீதை ஒன்பதாவது அத்தியாயத்தின் தொடக்கத்தில் 'இது வித்தைகளுக்கரசன், இரகசியங்களுக்குள் சிறந்தது, உத்தமமானது, பரிசுத்தமளிப்பது, நேரில் கண்டனுபவிக்கக் கூடியது, தருமத்தினின்று பிறழாதது. அனுஷ்டிப்பதற்கு மிக எளியது, என்றும் அழியாதது. பரந்தபா! இந்த தருமத்தில் சிரத்தையில்லாத மானிடர்கள் என்னையடையாமல் மரணத்துடன் கூடிய ஸம்ஸார மார்க்கத்தில் திரும்பவும் புகுகின்றனர்' என்று பகவான் கூறியது ஸஹஸ்ரநாம விஷயத்தில் முற்றும் பொருந்தும். ஆயுர்வேத நூல்களில் உடலையும் உள்ளத்தையும் பற்றிய நோய்களை அகற்றவும், ஜோதிஷ நூல்களில் கிரக பீடைகளின் நிவிருத்திக்காகவும், தர்ம சாஸ்திரங்களில் பிராயச்சித்தமாகவும், தீயகனவு, அபசகுனம் முதலிய அமங்களங்களுக்குச் சாந்தியாகவும் ஸஹஸ்ரநாம ஜபம் விதிக்கப்பட்டுள்ளது. இக்காரணம் பற்றி முன்னாட்களில் சிறுவர்கள் கல்வி கற்கத் தொடங்கியதும் விஷ்ணு ஸஹஸ்ர

நாமத்தை அவர்களுடைய வாழ்க்கைக்குச் சிறந்த துணையாயிருக்கும் பொருட்டு மனப்பாடம் செய்து வைப்பது வழக்கம். தொன்றுதொட்டு வந்த அந்த முறையில் அர்த்தத்துடன் ஸஹஸ்ரநாமத்தைக் கற்று அனைவரும் வாழ்க்கையில் உயர் நலனையடைய இந்நூல் பயன்படுமாறு ஸர்வேசுவரனான கிருஷ்ணபரமாத்மா அருள் புரியவேண்டும்.

ஸஹஸ்ர நாமத்தைப் பிரசாரம் செய்வதில் ஊக்கம் மிகுந்தவரும் இந்நூலை அச்சிடுகையில் பிழைகளைத் திருத்திக் கொடுத்தவருமான எனது நண்பர் பிரம்மஸ்ரீ எழுத்தூர் ராஜகோபால சர்மா அவர்களுக்கும், அழகுபட அச்சிட்டுத்தந்த அச்சுக்கூடத்தாருக்கும் இந்நூலை உபயோகிப்பதால் எனக்கு அனுக்கிரஹம் செய்யும் அன்பர் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகும்,

மயிலாப்பூர், சென்னை
விளம்பி, மார்கழி 17உ — உரையாசிரியர்
1—1—1959

सहस्रमूर्तेः पुरुषोत्तमस्य
सहस्र-नेत्रानन-पाद-बाहोः ।
सहस्रनाम्नां स्तवनं प्रशस्तं
निरुच्यते जन्म-जरादि-शान्त्यै ॥

—शंकरभगवत्पादाः

ஏற்றிப் பணிந்தவன்பே ரீரைஞ்ஞூ றெப்பொழுதும்
சாற்றி யுரைத்தல் தவம்.

—பூதத்தாழ்வார்

‘ஸமத்வ-மாராதன-மச்யுதஸ்ய’

ஸமத்துவ பாவனேயே அச்சுதனுக்குச் செய்யும் ஆராதனேயாம்.

—பிரஹ்லாதன்: விஷ்ணுபுராணம், 1. 17. 90.

श्रीः

॥ श्रीविष्णुसहस्रनाम - स्तोत्रम् ॥

पूर्वभागः

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्व-विघ्नोपशान्तये ॥ १ ॥

ஸ்ரீ:

ஸ்ரீ விஷ்ணு-ஸஹஸ்ரநாம - ஸ்தோத்ரம்

பூர்வ பாக:

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம் ।
ப்ரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வ-விக்னோபசாந்தயே ॥

ஸ்ரீ:

ஸ்ரீ விஷ்ணு-ஸஹஸ்ரநாம-ஸ்தோத்ரம்

பூர்வ பாகம்

1- வெண்மையான ஆடை உடுத்தவரும் எங்கும் நிறைந்தவரும் நிலவு போன்ற ஒளியுள்ளவரும் நான்கு கைகள் உள்ளவரும் ஆனந்தம் பொங்கும் முகமண்டலத்தை உடையவரும் ஆகியவரை எல்லா இடையூறுகளும் நீங்குவதற்காகத் தியானம் செய்யவேண்டும்.

ஸ்ரீ சங்கரபாஷ்யத்திலுள்ள மங்களாசரணம்—

ஸச்சிதானந்த-ரூபாய க்ருஷ்ணாயாக்லிஷ்டகாரிணே ।
நமோ வேதாந்த-வேத்யாய குரவே புத்திஸாக்ஷிணே ॥ 1 ॥

व्यासं वसिष्ठ-नप्तारं शक्तेः पौत्र-मकल्मषम् ।
पराशरात्मजं वन्दे शुकतातं तपोनिधिम् ॥ २ ॥
व्यासाय विष्णुरूपाय व्यासरूपाय विष्णवे ।
नमो वै ब्रह्मनिधये वासिष्ठाय नमो नमः ॥ ३ ॥

வ்யாஸம் வஸிஷ்ட-நப்தாரம் சக்தே: பௌத்ர-
மகல்மஷம் ।
பராசராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம் ॥ 2 ॥
வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே ।
நமோ வை ப்ரஹ்மநிதயே வாஸிஷ்டாய நமோ நம: ॥ 3 ॥

---

2. வசிஷ்டருடைய கொள்ளுப்பேரரும், சக்தியின் பேரரும், பராசரருடைய புத்திரரும், சுகருடைய தகப்பனரும், மாசற்ற தபோதனருமாகிய வியாஸரை வணங்குகின்றேன்.

3. விஷ்ணுவடிவுள்ள வியாஸராகவும், வியாஸர் வடிவங்கொண்ட விஷ்ணுவாகவும், வேதத்தின் பொக்கிஷமாகவுமுள்ள அவருக்கு நமஸ்காரம். வசிஷ்டர் குலத்துதித்த அவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

க்ருஷ்ணத்வைபாயனம் வ்யாஸம் ஸர்வபூத-ஹிதே ரதம் ।
வேதாப்ஜ-பாஸ்கரம் வந்தே சமாதிநிலயம் முனிம் ॥ 2 ॥
ஸஹஸ்ரமூர்த்தே: புருஷோத்தமஸ்ய ஸஹஸ்ர-நேத்
ரானன-பாத-பாஹ்வோ: ।
ஸஹஸ்ரநாம்நாம் ஸ்தவனம் ப்ரசஸ்தம் நிருச்யதே
ஜன்மஜராதி-சாந்த்யை ॥ 3 ॥

ஸ்ரீபட்டர் பாஷ்யத்திலுள்ள மங்களாசரணம்—

ஸ்ரீபராசர-பட்டார்ய: ஸ்ரீரங்கேச-புரோஹித: ।
ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமான் ச்ரேயஸே மே(அ)ஸ்து
பூயஸே ॥ 1 ॥

வந்தே கோவிந்ததாதௌ முனிமத மனவை லக்ஷ்மணார்-
யம் மஹாந்தம்
த்யாயேயம் யாமுனார்யம் மம ஹ்ருதி தனவை
ராமமேவாபியாயாம் ।

अविकाराय शुद्धाय नित्याय परमात्मने ।
सदैकरूप-रूपाय विष्णवे सर्वजिष्णवे ॥ ४ ॥

यस्य स्मरण-मात्रेण जन्मसंसार-बन्धनात् ।
विमुच्यते नमस्तस्मै विष्णवे प्रभविष्णवे ॥
ओं नमो विष्णवे प्रभविष्णवे ॥ ५ ॥

அவிகாராய சுத்தாய நித்யாய பரமாத்மனே ।
ஸதைகரூப-ரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே ॥ 4 ॥

யஸ்ய ஸ்மரண-மாத்ரேண ஜன்மஸம்ஸார-பந்தனுத் ।
விமுச்யதே நமஸ்தஸ்மை விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே ॥
ஓம் நமோ விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே ॥ 5 ॥

---

4. மாறுபாடற்றவராய்ப் பரிசுத்தராய் அழிவற்றவராய், என்றும் ஒரே வடிவினராய் அனைத்தையும் வெல்பவராய்ப் பரமாத்மாவாய் விளங்கும் விஷ்ணுவுக்கு (நமஸ்காரம்).

5. எவரை நினைத்த மாத்திரத்தில் பிறந்துழலும் தளையினின்று ஒருவன் விடுபடுவானோ அந்த ஸர்வ வல்லமை பொருந்திய விஷ்ணுவுக்கு நமஸ்காரம்.

ஓம் ஸர்வவல்லமை பொருந்திய விஷ்ணுவுக்கு நமஸ்காரம்.

பத்மாக்ஷம் ப்ரேக்ஷிஷீய ப்ரதமமபி முனிம் நாத-மீடே
சடாரிம்
ஸ்தௌமி ப்ரேக்ஷேய லக்ஷ்மீம் சரண-மசரண: ஸ்ரீதரம்
ஸம்ச்ரயேயம் ॥ 2 ॥

ஓம் நமோ கஜவக்த்ராத்யை: பாரிஷத்யை: ப்ரசாஸதே ।
ஸ்ரீரங்கராஜ-ஸேநான்யே ஸூத்ரவத்யா ஸமேயுஷே ॥3॥

நமோ நாராயணயேதம் க்ருஷ்ணத்வைபாயனாத்மனே ।
யதா(அ)முஷ்யாயணு வேதா மஹாபாரத பஞ்சமா: ॥ 4 ॥

श्री वैशंपायन उवाच*—

श्रुत्वा धर्मानशेषेण पावनानि च सर्वशः ।
युधिष्ठिरः शान्तनवं पुनरेवाभ्यभाषत ॥ ६ ॥

ஸ்ரீவைசம்பாயன உவாச*—

ச்ருத்வா தர்மா-னசேஷேண பாவனானி ச ஸர்வச: ।
யுதிஷ்டிர: சாந்தனவம் புனரேவாப்யபாஷத ॥ 6 ॥

ஸ்ரீவைசம்பாயனர் (ஜனமேஜயரிடம்) கூறியது—

6. எல்லா தருமங்களையும், பாவங்களைப் போக்கும் முறைகளையும் குறைவின்றிப் பலவாறாகக் கேட்டபின் யுதிஷ்டிரர் பீஷ்மரை நோக்கி மீண்டும் கேட்கலானார்.

ஜாதோ லக்ஷ்மண - மிச்ர – ஸம்ச்ரயதனுச் - ச்ரீவத்ஸ - சின்ஹாத்ருஷேர் - பூயோ பட்டபராசரேதி பணித: ஸ்ரீரங்க பர்த்ராஸ்வயம் । ஸ்ரீஸ்ரீரங்கபதி-ப்ரஸாத-த்ருஷயா ஸ்ரீரங்க நாதாஹ்வய: ஸ்ரீரங்கேச்வர-காரிதோ விவ்ருணுதே நாம்னும் ஸஹஸ்ரம் ஹரே: ॥ 5 ॥

ஸம்ஸாரோய-மபண்டிதோ பகவதி ப்ராகேவ பூய: கலெள
பூர்ணம் மன்யதமே ஜனே ச்ருதி-சிரோ குஹ்யம் ப்ருவே ஸாஹஸாத் ।
தத்ர ஸ்தோத்ரமிதம் ப்ரகாசயதி ய: ஸ்துத்யச்ச யஸ்தாவுபெள
வ்யாஸ: காருணிகோ ஹரிச்ச ததிதம் மெளர்க்யம் ஸஹேதாம் மம ॥6॥

அர்த்தே ஹரெள ததபிதாயினி நாமவர்க்கே
தத்வ்யஞ்ஜகே மயி ச பந்த-விசேஷ-மேத்ய ।
ஸேவத்வ-மேததம்ருதம் ப்ரணிபத்ய யாசே
மத்யஸ்த மத்ஸரிஜனா இஹ மா ச பூவன் ॥ 7 ॥

6. மீண்டும்—(ஸகல-புருஷார்த்த - ஸாதனம் அல்ப-ப்ரயாஸம் அனல்ப-பலம் அனுக்தமிதி) எல்லாப் புருஷார்த்தங்

* மஹாபாரதம் அனுசாஸன பர்வத்தில் ஸஹஸ்ர நாமப் பிரகரணம் இங்கிருந்து ஆரம்பம்.

युधिष्ठिर उवाच—

किमेकं दैवतं लोके किं वाप्येकं परायणम् ।
स्तुवन्तः कं कमर्चन्तः प्राप्नुयु-र्मानवाः शुभम् ॥ ७ ॥
को धर्मः सर्वधर्माणां भवतः परमो मतः ।
किं जपन् मुच्यते जन्तु-र्जन्म-संसार-बन्धनात् ॥ ८ ॥

யுதிஷ்டிர உவாச—

கிமேகம் தைவதம் லோகே கிம் வாப்யேகம் பராயணம் ।
ஸ்துவந்த: கம் கமர்ச்சந்த: ப்ராப்னுயுர்-மானவா: சுபம் ॥
கோ தர்ம: ஸர்வதர்மாணும் பவத: பரமோ மத: ।
கிம் ஜபன் முச்யதே ஜந்துர்-ஜன்மஸம்ஸார-பந்தனுத் ॥8॥

யுதிஷ்டிரர் கூறியது—

7. உலகில் (காண்பதற்குக் காரணமான வித்யாஸ்தானம் முழுவதிலும்) (i) ஒன்ருகிய தெய்வம் எது? (ii) ஒன்றேயாகிய புகலிடம் எது? (iii) எவனைத் துதித்து மனிதர்கள் உயர்நலனைப் பெறுவார்கள்? (iv) எவனை அர்ச்சித்து (மனிதர்கள் உயர் நலனைப் பெறுவார்கள்?)

8. (v) எந்த தருமமானது எல்லா தருமங்களிலும் தங்களால் சிறந்த தருமமாகக் கருதப்படுவது? (vi) (பிறவியடைந்த) ஜந்து எதை ஜபித்துப் பிறந்துழலும் தளையினின்று விடுபடும்?

களையும் பெறச் செய்வதாயும், சிறுமுயற்சியால் பெரும் பயன் அடையக் கூடியதாயுமுள்ள உபாயம் சொல்லப்படவில்லையென்று கருதி மீண்டும் கேட்டார்.

7. லோகே—'லோகன - ஹேதுபூதே ஸமஸ்த - வித்யா - ஸ்தானே.' வேதவித்யாஸ்தானமாவது—வேதம் 4, வேதாங்கம் 6, மீமாம்ஸா 1, நியாய சாஸ்திரம் 1, தர்மசாஸ்திரம் 1, புராணம் 1 ஆக 14. லோகவித்யாஸ்தானமாவது—ஆயுர்வேதம், அர்த்த சாஸ்திரம், காந்தர்வம், தனுர்வேதம் ஆக 4.

श्री भीष्म उवाच—

जगत्प्रभुं देवदेव-मनन्तं पुरुषोत्तमम् ।
स्तुवन् नामसहस्रेण पुरुषः सततोत्थितः ॥ ९ ॥

ஸ்ரீபீஷ்ம உவாச—

ஜகத்ப்ரபும் தேவதேவ-மனந்தம் புருஷோத்தமம் |
ஸ்துவந் நாமஸ்ஹஸ்ரேண புருஷ: ஸததோத்தித: ॥ 9 ||

ஸ்ரீபீஷ்மர் கூறியது—

9. உலக நாயகனும், தேவதேவனும், அளவுகடந்தவனும் ஆகிய புருஷோத்தமனை இடைவிடா முயற்சியுடன் ஆயிரம் நாமங்களால் ஒரு புருஷன் துதித்தும்;

ஏகம் பராயணம்—(கிம் பரமயனம்-ப்ராப்தவ்யம் ஸ்தானம் யஸ்மிந் நிரீக்ஷிதே 'பித்யதே ஹ்ருதய-க்ரந்திச்-சித்யந்தே ஸர்வஸம்சயா: | க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் த்ருஷ்டே பராவரே || யஸ்ய விஜ்ஞானமாத்ரேணனந்த-லக்ஷணோ மோக்ஷ: ப்ராப்யதே, யத்வித்வாந் ந பிபேதி குதச்சனேதி, யத்ப்ரவிஷ்டஸ்ய ந வித்யதே புனர்ப்பவ:, யஸ்ய வேதனத் ததேவ பவதி, யத்விஹாயாபரபந்தா ந்ருணும் நாஸ்தி, ததுக்த-மேகம் பராயணம்). அடைவதற்குரிய மேலான இடம் எது? எதனைக்கண்டதும் இவனுடைய இருதய முடிச்சு அவிழ்கிறதோ, சந்தேகங்களெல்லாம் ஒழிகின்றனவோ, கருமபந்தங்களெல்லாம் சிதைகின்றனவோ, எதனை அறிந்தமாத்திரத்தில் ஆனந்தவடிவான மோக்ஷம் பெறப்படுகிறதோ, எதனை அறிந்தவன் எதற்கும் அஞ்சமாட்டானோ, எதனிடம் புகுந்தவனுக்கு மீண்டும் பிறப்பில்லையோ, எதனை அறிந்ததும் அதுவே ஆகின்றானோ, எதைத் தவிர்த்து மானிடர்க்கு வேறுகதியில்லையோ அந்தப் பரம்பொருளே ஒன்றேயாகிய புகலிடம்.— சங்.

பீஷ்மர்—இவர் உட்பகை வெளிப் பகைகளுக்கெல்லாம் அச்சத்தை உண்டுபண்ணுகிறவர்; மோக்ஷதர்மம் முதலிய உபதேசங்களை வெளியிட்டவர்; எல்லாம் அறிந்தவர்.

9. முதலில் ஆறுவது கேள்விக்கு இதில் விடை கூறப்படுகிறது.

तमेव चार्चयन्नित्यं भक्त्या पुरुषमव्ययम् ।
ध्यायन् स्तुवन् नमस्यंश्च यजमानस्तमेव च ॥ १० ॥
अनादि-निधनं विष्णुं सर्व-लोक-महेश्वरम् ।
लोकाध्यक्षं स्तुवन्नित्यं सर्वदुःखातिगो भवेत् ॥ ११ ॥
ब्रह्मण्यं सर्वधर्मज्ञं लोकानां कीर्ति-वर्धनम् ।
लोकनाथं महद्भूतं सर्वभूत-भवोद्भवम् ॥ १२ ॥

தமேவ சார்ச்சயந் நித்யம் பக்த்யா புருஷமவ்யயம் |
த்யாயன் ஸ்துவந் நமஸ்யம்ச்ச யஜமானஸ்-தமேவ ச ||10||
அனுதிநிதனம் விஷ்ணும் ஸர்வலோக-மஹேச்வரம் |
லோகாத்யக்ஷம் ஸ்துவந்நித்யம் ஸர்வது:க்காதிகோ
பவேத் || 11 ||
ப்ரஹ்மண்யம் ஸர்வதர்மஜ்ஞம் லோகானும்
கீர்த்திவர்த்தனம் |
லோகநாதம் மஹத்பூதம் ஸர்வபூத பவோத்பவம் || 12 ||

---

10. மாறுபாடற்ற அந்தப் புருஷனேயே பக்தியுடன் அர்ச்சித்தும், அவனேயே மேலும் தியானித்தும், புகழ்ந்தும் நமஸ்கரித்தும் வழிபடுபவன்;

11. ஆதியும் முடிவுமற்றவனும், எல்லா உலக நாயகர்க்கும் நாயகனும், உலகனைத்தையும் மேலிருந்து பார்த்துக் கொண்டிருப்பவனும் ஆகிய விஷ்ணுவை எப்போதும் போற்றி எல்லாத் துன்பங்களேயும் கடந்து செல்பவன் ஆவான்.

---

10. இதில் நாலாவது கேள்விக்கு விடை கூறப்படுகிறது. 'த்யாயன்-ஸ்துவந் நமஸ்யந்நிதி மானஸம் வாசிகம் காயிகஞ் சோச்யதே.'

பக்தியுடன்—தான் செய்யும் காரியம் யாவும் அவரைப் பற்றினவாகவே இருக்கும்படி செய்தலே பக்தி.

11. இனி மூன்ருவது கேள்விக்கு விடை. எல்லாத்துன் பங்களேயும்—'ஆத்யாத்மிகம்' தேகத்திலுண்டாகும் பிணி,

एष मे सर्वधर्माणां धर्मोऽधिकतमो मतः ।
यद्भक्त्या पुण्डरीकाक्षं स्तवै-रर्चे-न्नरः सदा ॥ १३ ॥

ஏஷ மே ஸர்வதர்மாணும் தர்மோ(அ)திகதமோ மத: ।
யத்பக்த்யா புண்டரீகாக்ஷம் ஸ்தவை-ரர்ச்சேந்-நர:
ஸதா ॥ 13 ॥

---

12. வேதத்திலும் தவத்திலும் நட்புக்கொண்டவனும், (எல்லா) தர்மங்களேயும் அறிபவனும், உலகங்களின் புகழை வளர்ப்பவனும், உலகநாயகனும், எல்லாவற்றிற்கும் மேலானவனும், பரப்பொருளும், எல்லா உயிர்க்கும் பிறப்பிறப்பைக் கூட்டுவிப்பவனும் ஆகிய அவனேயே (எப்போதும் போற்றி ஒருவன் எல்லாத் துன்பங்களேயும் கடந்து செல்பவன் ஆவான்).

13. புண்டரீகாக்ஷனை பகவானை எப்போதும் பக்தியுடன் ஒரு மனிதன் ஸ்தோத்திரத்தால் அர்ச்சித்து வழிபடுவானுயின் இந்த தருமமே எல்லா தருமங்களிலும் மிகச் சிறந்ததென்பது என் கொள்கை.

'ஆதிதைவிகம்' மழை காற்று இடி முதலியன, 'ஆதிபௌதிகம்' தேள் பாம்பு புலி கரடி முதலிய பிராணிகளால் உண்டாகும் துன்பம். இவை தாபத்ரயம் எனப்படுவன.

12. ப்ரஹ்மண்யம்—(ப்ரஹ்மணே ஸ்ரஷ்ட்ரே, ப்ராஹ்மணுய, தபஸே, ச்ருதயே ஹிதம்) சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவுக்கும், பிராம்மணனுக்கும், தவத்துக்கும், சுருதிக்கும் நன்மை பயப்பவரை. மஹத்பூதம்—'விச்வோத்கர்ஷேண வர்த்தமானத்வாத் மஹத்பூதம் பரமார்த்த-ஸத்யம்.'

13. இங்கு ஐந்தாவது கேள்விக்கு விடை.

புண்டரீகாக்ஷம்—ஹ்ருதய புண்டரீகே ப்ரகாசமானம் வாஸுதேவம்.

அதிகதமோ மத:—'த்ரவ்ய - தேச - காலாதி-நியம அனபேக்ஷத்வாச்-சாதிக்யே காரணம்.'

ஒ. (த்யாயன் க்ருதே, யஜன் யஜ்ஞைஸ்-த்ரேதாயாம், த்வாபரே(அ)ர்ச்சயன் । யதாப்னோதி ததாப்னோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம் ॥) கிருத யுகத்தில தியானத்தாலும், திரேதா

परमं यो महत्तेजः परमं यो महत्तपः ।
परमं यो महद्ब्रह्म परमं यः परायणम् ॥ १४ ॥
पवित्राणां पवित्रं यो मङ्गलानां च मङ्गलम् ।
दैवतं देवतानां च भूतानां योऽव्ययः पिता ॥ १५ ॥

பரமம் யோ மஹத்தேஜ: பரமம் யோ மஹத்தப: ।
பரமம் யோ மஹத்ப்ரஹ்ம பரமம் ய: பராயணம் ॥ 14 ॥
பவித்ராணும் பவித்ரம் யோ மங்கலானுஞ்ச மங்கலம் ।
தைவதம் தேவதானுஞ்ச பூதானும் யோ(அ)வ்யய: பிதா ॥

14. எது சிறந்ததும் பெரிதுமான ஒளியோ, எது சிறந்ததும் பெரிதுமான தவமே வடிவாகியதோ, எது சிறந்ததும் பெரிதுமான பிரம்மமோ, எது சிறந்த புகலிடமோ (அதுவே ஒன்றேயாகிய புகலிடம்.)

15. பரிசுத்தமானவற்றுள் பரிசுத்தமாயும், மங்களமானவற்றுள் மங்களமாயும், தேவதைகளுக்குள் தேவதையாகவும், (உயிர் தரும்) அழிவற்ற பிதாவாயும் எவன் (உளனே அவனே உலகில் ஒன்ருகிய தெய்வம்.)

யுகத்தில் யாகங்களால் ஆராதித்தும், துவாபரத்தில் அர்சித்தும் எதை ஒருவன் அடைவானே அதைக் கலியில் கேசவ ேர்த்தனத்தாலேயே அடைவான்.

—(விஷ்ணு புராணம் 6. 2. 17.)

ஒ. 'யஜ்ஞானும் ஜப-யஜ்ஞோ஽ஸ்மி' —கீ. 10. 25.

14. இங்கு இரண்டாவது கேள்விக்கு விடை.

மஹத்தேஜ:—ஒ. 'ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர-தாரகம்.' —மு. உ. 2, 2. 10:

சூரியனைச் சார்ந்த எந்த ஒளி உலகனைத்தையும் பிரகாசிப்பிக்கின்றதோ, சந்திரனிடமுள்ளதெதுவோ, அக்கினியிடமுள்ள தெதுவோ அவ்வொளியை என்னுடையதாக அறிவாய். —கீ. 15: 12.

மஹத்தப:—ஒ. (ய: ஸர்வஜ்ஞ : ஸர்வவித்-யஸ்ய ஜ்ஞான மயம் தப:) எல்லாவற்றையும் அறிந்தவரும் எல்லாவற்றையும் அறிபவரும் எவரோ, ஞானபூர்த்தியே எவருடைய தவச்சக்தியோ. —மு. உப. 1. 1. 9

यतः सर्वाणि भूतानि भवन्त्यादियुगागमे ।
यस्मिंश्च प्रलयं यान्ति पुनरेव युगक्षये ॥ १६ ॥
तस्य लोकप्रधानस्य जगन्नाथस्य भूपते ।
विष्णो-र्नाम-सहस्रं मे शृणु पाप-भयापहम् ॥ १७ ॥

யத: ஸர்வாணி பூதானி பவந்த்யாதி-யுகாகமே ।
யஸ்மிம்ச்ச ப்ரலயம் யாந்தி புனரேவ யுகக்ஷயே ॥ 16 ॥
தஸ்ய லோகப்ரதானஸ்ய ஜகந்நாதஸ்ய பூபதே ।
விஷ்ணோர் நாமஸஹஸ்ரம் மே ச்ருணு பாப-பயாபஹம் ॥

16. எவனிடமிருந்து எல்லா உயிர்களும் ஆதியுகத்தின் தொடக்கத்தில் பிறக்கின்றனவோ, எவனிடத்தில் யுகத்தின் முடிவில் மீண்டும் மறைவை யடைகின்றனவோ;

17. எவன் உலகைத் தாங்கிக் கொண்டு எங்கும் விளங்கும் ஜகந்நாதனே அந்த விஷ்ணுவினுடைய ஆயிரம் நாமங்கள் பாவத்தையும் பயத்தையும் போக்குவன. அவற்றை என்னிடம் கேட்பாயாக.

---

15. பவித்ராணாம் பவித்ரம்—(பாவனானாம் தீர்த்தாதீனாம் பரமம் பவித்ரம் । பரமஸ்து புமான், 'த்யாதோ த்ருஷ்ட: கீர்த்திதச்ச ஸ்துத: ஸம்பூஜித: ஸ்ம்ருத: ப்ரணத: பாப்மன: ஸர்வா-னுன்மூலயதி, இதி) புனிதமான தீர்த்தங்களினும் தூயது. புருஷோத்தமனை தியானித்தாலும் பார்த்தாலும் பேசினாலும், துதித்தாலும், பூஜித்தாலும், நினைத்தாலும், வணங்கினாலும், பாவங்களெல்லாம் பறந்து போம்.

ஓ. ஆலோட்ய ஸர்வசாஸ்த்ராணி விசார்ய ச புன: புன: । இதமேகம் ஸுநிஷ்பன்னம் த்யேயோ நாராயண: ஸதா ॥ —ம. பா. அனு. 186. 11.

ஓ. ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தர: சுசி: ॥ —பத்ம. புரா, 9, 80. 12.

மங்கலானாஞ்ச மங்கலம்—(மங்கலம் ஸுகம் தத்ஸாதனம் தத்ர ஜ்ஞாபகம் ச தேஷாமபி பரமானந்த-லக்ஷணம் பரம் மங்கலமிதி) மங்களமென்பது இன்பமளிப்பதும் அதற்குரிய ஸாதனமாவதும் அதனை அறிவுறுத்துவதும் ஆம். மங்களமானவற்றுள்ளும் பரமானந்த வடிவினதாய் உள்ளது.

यानि नामानि गौणानि विख्यातानि महात्मनः ।
ऋषिभिः परिगीतानि तानि वक्ष्यामि भूतये ॥ १८ ॥
ऋषिर्नाम्नां सहस्रस्य वेदव्यासो महामुनिः ।
छन्दोऽनुष्टुप् तथा देवो भगवान् देवकी-सुतः ॥ १९ ॥

யானி நாமானி கௌணானி விக்யாதானி மஹாத்மன: ।
ருஷிபி: பரிகீதானி தானி வக்ஷ்யாமி பூதயே ॥ 18 ॥
ருஷிர்-நாம்னும் ஸஹஸ்ரஸ்ய வேதவ்யாஸோமஹாமுனி: ।
ச்சந்தோऽனுஷ்டுப் ததா தேவோ பகவான் தேவகீஸுத:

---

18. மஹாத்மாவான பகவானுக்கு எந்தெந்த நாமங்கள் குணங்களைப் பற்றியவையாய்ப் பிரசித்தமானவையோ, ரிஷிகளால் நன்கு கீர்த்தனம் செய்யப்பெற்றவையோ, அவற்றைப் புருஷார்த்தங்களைப் பெற்று மேன்மை யடைவதற்காக (உனக்குக்) கூறுகிறேன்.

19. ஸஹஸ்ர நாமத்திற்கு ரிஷி வேதவியாஸமகாமுனிவர்; சந்தஸ் அனுஷ்டுப்; தேவகீ புத்திரனுன பகவான் தேவதை.

தைவதம் தேவதானும்—ஒ. ஏகோ தேவ: ஸர்வ-பூதேஷு கூட: ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா । கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்க்குணச்ச ॥
—ச்வே. உப. 5. 11.

ஏகம் ஸத்-விப்ரா பஹுதா வதந்தி ॥ —ரு. வே. 1. 164. 46.

ஸர்வபூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகன்மயே । பரமாத்மனி கோவிந்தே மித்ராமித்ர—கதா குத: ॥
—விஷ்ணுபுராணம். 1. 19. 37.

16. ஒ. யதோ வா இமானி பூதானி ஜாயந்தே । யேன ஜாதானி ஜீவந்தி । யத் ப்ரயந்த்-யபிஸம்விசந்தி ॥
—தை. உப. 3. 1.

18. 'ஸகுணே ப்ரஹ்மணி ஸர்வகாரணே ச ஸர்வாத்மத்வாத் தேஷாம் சப்த-ப்ரவ்ருத்தி-ஹேதூனும் ஸம்பவாத் ஸர்வே சப்தா: பரஸ்மின் புட்ஸி வர்த்தந்தே ।'

अमृतांशूद्भवो बीजं शक्ति-र्देवकिनन्दनः ।
त्रिसामा हृदयं तस्य शान्त्यर्थे विनियुज्यते ॥ २० ॥
विष्णुं जिष्णुं महाविष्णुं प्रभविष्णुं महेश्वरम् ।
अनेक-रूप-दैत्यान्तं नमामि पुरुषोत्तमम् ॥ २१ ॥

அம்ருதாம்ஶூத்பவோ பீஜம் சக்திர்-தேவகிநந்தன: ।
த்ரிஸாமா ஹ்ருதயம் தஸ்ய சாந்த்யர்த்தே விநியுஜ்யதே ॥
விஷ்ணும் ஜிஷ்ணும் மஹாவிஷ்ணும் ப்ரபவிஷ்ணும் மஹேச்வரம் ।
அநேக-ரூப-தைத்யாந்தம் நமாமி புருஷோத்தமம் ॥ 21 ॥

---

20. அம்ருதாம்ஶூத்பவ:' என்பது பீஜம்; 'தேவகீ நந்தன:' என்பது சக்தி; 'த்ரிஸாமா' என்பது அதற்கு ஹ்ருதயம்; (மந்திர ஜபம்) சாந்தியின் பொருட்டுப் பயன் படுகின்றது.

21. எங்கும் நிறைந்தவனாய், ஜயசீலனாய், அனைத்துள்ளும் உறைபவனாய், மகேசுவரனாய், பல வடிவங் கொண்ட அசுரர்களை முடிப்பவனாய், புருஷோத்தமனாய் விளங்கும் மஹாவிஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன்.

மஹாத்மன:—'யச்சாப்னோதி யதாதத்தே யச்சாத்தி விஷயானிஹ । யச்சாஸ்தி ஸந்ததோ பாவஸ்-தஸ்மா-தாத்மேதி கீர்த்யதே ॥'

19. ருஷிர்-நாம்னாம்—இதற்குப் பின் ஸஹஸ்ரநாம ஆரம்பம் வரை உள்ள பகுதி மகாபாரதத்திலும் பாஷ்யங்களிலும் இல்லை. ஆனால் ஸம்பிரதாயத்தில உளது.

விஷ்ணோர்-நாம-ஸஹஸ்ரஸ்ய. —பா. பே.

இந்த ஸஹஸ்ரநாமத்தில் 'ஆதித்ய:' முதலிய சொற்கள் வெவ்வேறு பொருளில் பிரசித்தமாயினும் அவை பகவானுடைய விபூதிகளாதலால் அவனையே துதிப்பனவாகும்.
—(ஒ. கீதை விபூதி யோகம்.)

ஜ்யோதிம்ஷி விஷ்ணுர்-புவனானி விஷ்ணுர்-வனானி விஷ்ணுர்-கிரயோ திசச்ச । நத்ய: ஸமுத்ராச்ச ஸ ஏவ ஸர்வம் யதஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய ॥ —விஷ்ணுபுரா. 2. 12. 38.

॥ पूर्व-न्यासः ॥

अस्य श्रीविष्णो-र्दिव्य-सहस्रनाम-स्तोत्र-महामन्त्रस्य। श्रीवेदव्यासो भगवान् ऋषिः। अनुष्टुप् छन्दः। श्रीमहाविष्णुः परमात्मा श्रीमन्नारायणो देवता। अमृतांशूद्भवो भानुरिति बीजम्। देवकीनन्दनः स्रष्टेति शक्तिः। उद्भवः क्षोभणो देव

॥ பூர்வ - ந்யாஸ: ॥

அஸ்ய ஸ்ரீ விஷ்ணோர்-திவ்ய-ஸஹஸ்ரநாம-ஸ்தோத்ர-மஹாமந்த்ரஸ்ய। ஸ்ரீவேதவ்யாஸோ பகவான் ருஷி:। அனுஷ்டுப் சந்த:। ஸ்ரீமஹாவிஷ்ணு: பரமாத்மா ஸ்ரீமந்நாராயணோ தேவதா। அம்ருதாம்சூத்பவோ பானுரிதி பீஜம்। தேவகீநந்தன: ஸ்ரஷ்டேதி சக்தி:। உத்பவ:

பூர்வ நியாஸம்

ஸ்ரீவிஷ்ணுவின் திவ்ய ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரமாகிய இம்மஹா மந்திரத்திற்கு, பகவான் வேதவியாஸரிஷி (சிரசில்) அனுஷ்டுப் சந்தம் (நாவில்), ஸ்ரீமஹாவிஷ்ணுவும் பரமாத்மாவுமான ஸ்ரீமந்நாராயணன் தேவதை (ஹிருதயத்தில்), 'அம்ருதாம்சூத்பவோ பானு:' என்பது

---

21. அநேக ரூபம் தைத்யாந்தம். —பா. பே.

விஷ்ணு முதலிய சொற்கள் பலமுறை கூறப்படினும் சொற்களைப் பிரித்துப் பொருள் கொள்ளும் முறையில் வேறு பாடிருத்தலால் கூறியது கூறலென்னும் குற்றம் ஆகாது. 'ஸ்ரீபதி:, 'மாதவ:, என்னும் இடங்களிலும் பொருள் ஒன்றுயினும், சொற்கள் வேறானதால் கூறியது கூறலாகாது.

இங்கு ஆண்பாற் சொற்களை விஷ்ணு என்னும் சொல்லுக்கு அடைமொழியாகவும், பெண்பாற் சொற்களை 'தேவதா' என்னும் சொல்லுக்கு அடைமொழியாகவும், அஃறிணைச் சொற்களை 'ப்ரஹ்ம' என்னும் சொல்லுக்கு அடைமொழியாகவும் கொள்க. —சங்.

इति परमो मन्त्रः । शङ्खभृन्नन्दकी चक्रीति कीलकम् । शार्ङ्गधन्वा गदाधर इत्यस्त्रम् । रथांगपाणि-रक्षोभ्य इति नेत्रम् । त्रिसामा सामगः सामेति कवचम् । आनन्दं परब्रह्मेति योनिः । ऋतुः सुदर्शनः काल इति दिग्बन्धः । श्रीविश्वरूप इति ध्यानम् ॥

श्रीमहाविष्णुप्रीत्यर्थे सहस्रनामजपे विनियोगः ॥ *

ध्यानम् ॥ —

க்ஷோபணோ தேவ இதி பரமோ மந்த்ர: । சங்க ப்ருந் நந்தகீ சக்ரீதி கீலகம் । சார்ங்கதன்வா கதாதர இத்யஸ்த்ரம் । ரதாங்கபாணி-ரக்ஷோப்ய இதி நேத்ரம் । த்ரிஸாமா ஸாமக: ஸாமேதி கவசம் । ஆனந்தம் பரப்ரஹ்மேதி யோனி: । ருது: ஸுதர்சன: கால இதி திக்பந்த: ॥ ஸ்ரீ விச்வரூப இதி த்யானம் ॥

ஸ்ரீமஹாவிஷ்ணு-ப்ரீத்யர்த்தே ஸஹஸ்ரநாம ஜபே விநியோக: * ॥

த்யானம் ॥

பீஜம் (வலது புஜத்தில்). தேவகீ 'நந்தன: ஸ்ரஷ்டா' என்பது சக்தி (இடது புஜத்தில்). 'உத்பவ: க்ஷோபணோதேவ:' என்பது பரமமந்திரம் (மார்பில்). 'சங்கப்ருந் நந்தகீ-சக்ரீ' என்பது கீலகம் (நாபியில்). 'சார்ங்கதன்வா - கதாதர:' என்பது அஸ்திரம் (தலையைச் சுற்றி நான்கு திக்குகளிலும்). 'ரதாங்கபாணிரக்ஷோப்ய:' என்பது நேத்ரம் (இரு கண்களிலும்). 'த்ரிஸாமாஸாமக: ஸாம' என்பது கவசம் (கைகளால் கவசம் போல் மார்பில்). 'ஆனந்தம் பரப்ரஹ்ம' என்பது யோனி (கருக்குழியில்). 'ருது: ஸுதர்சன: கால:' என்று திக்பந்தம். (எத்திக்கிலிருந்தும் தீமை வராமல் இந்த மந்திரத்தால் காப்பு). 'ஸ்ரீவிச்வரூப.' (எங்கும் நிறைந்தவன்) என்று தியானம்.

* கீழே குறிப்பிட்டுள்ள முறையில் கர-நியாஸமும் அங்க-நியாஸமும் கூட்டிச் செய்தல் சிறப்பாகும்.

क्षीरोदन्वत्प्रदेशे शुचि-मणि-विलसत्-सैकते मौक्तिकानां
मालाक्लृप्तासनस्थः-स्फटिकमणिनिभै-र्मौक्तिकैर्मण्डिताङ्गः ।

க்ஷீரோதன்வத் ப்ரதேசே சுசி - மணி - விலஸத்-ஸைகதே மௌக்திகானும் மாலாக்லுப்தாஸனஸ்த: ஸ்படிகமணி - நிபைர் - மௌக்திகைர் - மண்டிதாங்க: । சுப்ரை-ரப்ரை-ரதப்ரை - ருபரிவிரசிதைர் - முக்த-பீயூஷ -

---

ஸ்ரீமஹாவிஷ்ணுவின் திருவருள் சித்திக்கும் பொருட்டு ஸஹஸ்ர நாம ஜபத்தில் இதற்குப் பயன் (என்று இருகைகளாலும் எல்லா அங்கங்களேயும் தொடுக).

1. தூய்மையான இரத்தினங்களே மணற் பரப்பாக வுடைய திருப்பாற்கடற் பிரதேசத்தில், முத்து மாலே களால் அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தில் எழுந்தருளியிருப்பவரும், ஸ்படிக மணிகளேப் போன்ற முத்துக்களால்

(i) விச்வம் விஷ்ணுர்வஷட்கார இத்யங்குஷ்டாப்யாம் நம:

(ii) அம்ருதாம்சூத்பவோ பானுரிதி தர்ஜநீப்யாம் நம:

(iii) ப்ரஹ்மண்யோ ப்ரஹ்மக்ருத்ப்ரஹ்மேதி மத்யமாப்யாம் நம:

(iv) ஸுவர்ணபிந்து-ரக்ஷோப்ய இத்யநாமிகாப்யாம் நம;

(v) நிமிஷோ(அ)நிமிஷ: ஸ்ரக்வீதி கனிஷ்டிகாப்யாம் நம:

(vi) ரதாங்கபாணி-ரக்ஷோப்ய இதி கரதல-கரப்ருஷ்டாப்யாம் நம:

(vii) ஸுவ்ரதஸ்-ஸுமுகஸ்-ஸூக்ஷ்ம இதி ஜ்ஞானய ஹ்ருதயாய நம:

(viii) ஸஹஸ்ரமூர்த்தா-விச்வாத்மேதி ஐச்வர்யாய சிரஸே ஸ்வாஹா

(ix) ஸஹஸ்ரார்ச்சிஸ் ஸப்தஜிஹ்வ இதி சக்த்யை சிகாயை வஷட்.

(x) த்ரிஸாமா ஸாமகஸ்-ஸாமேதி பலாய கவசாய ஹும்

(xi) ரதாங்கபாணி-ரக்ஷோப்ய இதி தேஜஸே நேத்ராப்யாம் வௌஷட் ||

(xii) சார்ங்கதன்வா கதாதர இதி வீர்யாய அஸ்த்ராய பட் ருது: ஸுதர்சன: கால இதி திக்பந்த: || (த்யானம்) ||

शुभ्रै-रभ्रै-रदभ्रै-रुपरिविरचितै-र्मुक्त-पीयूष-वर्षैः
आनन्दी नः पुनीया-दरि-नलिन-गदा-शङ्खपाणि-र्मुकुन्दः ॥ १ ॥
भूः पादौ यस्य नाभि-र्वियदसु-रनिल-श्चन्द्रसूर्यौ च नेत्रे
कर्णावाशाः शिरो द्यौ-र्मुखमपि दहनो यस्य वास्तेयमब्धिः ।
अन्तस्थं यस्य विश्वं सुर-नर-खग-गो-भोगि-गन्धर्व-दैत्यैः
चित्रं रंरम्यते तं त्रिभुवन-वपुषं विष्णु-मीशं नमामि ॥ २ ॥

வர்ஷை:, ஆநந்தீ ந: புனீயா - தரி - நலின - கதா-சங்க-பாணிர்-முகுந்த: ॥ ॥ 1 ॥

பூ: பாதௌ யஸ்ய நாபிர்-வியதஸு-ரநிலச்-சந்த்ர-ஸூர்யௌ ச நேத்ரே, கர்ணு-வாசா: சிரோத்யௌர்-முகமபி தஹனோ யஸ்ய வாஸ்தேயமப்தி: । அந்தஸ்தம் யஸ்ய விச்வம் ஸுர-நர-கக கோ-போகி - கந்தர்வ - தைத்யை: சித்ரம் ரம்ரம்யதே தம் த்ரிபுவன-வபுஷம் விஷ்ணுமீசம் நமாமி ॥ 2 ॥

அலங்கரிக்கப் பெற்ற அங்கங்களையுடையவரும், மேலே (விதானம் போல்) விளங்கும் வெண்மையான மேகங்கள் பலவற்றுல் (பூமாரி போல்) துளிக்கப்பட்ட அமுதத் திவலைகளால் மகிழ்பவரும், சக்ரமும் பத்மமும் கதையும் சங்கமும் கைக்கொண்டவரும் ஆகி விளங்கும் முகுந்தர் நம்மைப் புனிதமாக்கவேண்டும்.

2. எவருக்குப் பூமி பாதங்களாகவும், வானம் நாபியாகவும், வாயு பிராணனுகவும், சந்திரனும் சூரியனும் கண்களாகவும், திக்குகள் காதுகளாகவும், தேவலோகம் தலையாகவும், அக்கினி வாயாகவும், சமுத்திரம் அடிவயிருகவும் அமைகின்றனவோ, எவருடைய வயிற்றில் தேவர், மனிதர், பறவைகள், மிருகங்கள், நாகர், கந்தர்

(அல்லது "உந்பவாய, க்ஷோபணுப, தேவாய" என்று இரண்டு முறை திருப்பி கரநியாஸ அங்கநியாஸங்களைச் செய்யலாம்).

(ओं नमो भगवते वासुदेवाय ॥)

शान्ताकारं भुजगशयनं पद्मनाभं सुरेशं
विश्वाधारं गगनसदृशं मेघवर्णं शुभांगम् ।
लक्ष्मीकान्तं कमलनयनं योगिहृद्ध्यान-गम्यं
वन्दे विष्णुं भवभयहरं सर्वलोकैक-नाथम् ॥ ३ ॥

(ஓம் நமோ பகவதே வாஸுதேவாய ||)

சாந்தாகாரம் புஜகசயனம் பத்மநாபம் ஸுரேசம்
விச்வாதாரம் ககனஸத்ருசம் மேகவர்ணம் சுபாங்கம் |
லக்ஷ்மீகாந்தம் கமலநயனம் யோகிஹ்ருத்-த்யானகம்யம்
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைக-நாதம் ||3||

வர் அசுரர், என விரிந்த உலகு விசித்திரமாய் விளையாடிக் களிக்கின்றதோ அந்த முவ்வுலக வடிவினரும் ஈசருமான விஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன்.

(ஓம் பகவான் வாஸுதேவருக்கு நமஸ்காரம்.)

3. சாந்தவடிவினராய், அரவணைமேல் சயனித்தவராய், நாபியில் தாமரை மலர்ந்தவராய், தேவர்கள் நாயகனுய், உலகிற்கு ஆதாரமாய், ஆகாயத்திற் கொப்பானவராய்,மேகம் போன்ற நிறமுடையவராய், லக்ஷ்மீ தேவியின் உள்ளத்தைக் கவர்பவராய்த் தாமரைக் கண்ணராய், யோகிகளின் இருதயத்தில் தியானத்தால் அடையப்படுபவராய், பிறவித் துன்பத்தைத் துடைப்பவராய், அனைத்துலகிற்கும் ஒரு நாயகராய் விளங்கும் விஷ்ணுவை வணங்குகின்றேன்.

4. மேகம்போல் கரியவராய், மஞ்சட்பட்டாடை

---

2. வாஸ்தேயம்-வாஸோயம்; வாஸ்தவ்யம்: —பா. பே.
3. விச்வாகாரம். யோகிபிர்-த்யான-கம்யம் ,,

मेघश्यामं पीतकौशेयवासं श्रीवत्साङ्कं कौस्तुभोद्भासिताङ्गम् ।
पुण्योपेतं पुण्डरीकायताक्षं विष्णुं वन्दे सर्वलोकैक-नाथम् ॥ ४॥
(नमः समस्त-भूताना-मादिभूताय भूभृते ।
अनेकरूप-रूपाय विष्णवे प्रभविष्णवे ॥)
सशङ्ख-चक्रं सकिरीट-कुण्डलं सपीतवस्त्रं सरसीरुहेक्षणम् ।
सहार-वक्षस्थल-शोभि-कौस्तुभं नमामि विष्णुं शिरसा चतुर्भुजम् ॥
छायायां पारिजातस्य हेमसिंहासनोपरि ।

மேகச்யாமம் பீதகௌசேயவாஸம்
ஸ்ரீவத்ஸாங்கம் கௌஸ்துபோத்பாஸிதாங்கம் ।
புண்யோபேதம் புண்டரீகாயதாக்ஷம்
விஷ்ணும் வந்தே ஸர்வலோகைக-நாதம் ॥ 4 ॥
(நம: ஸமஸ்த-பூதானு-மாதி-பூதாய-பூப்ருதே ।
அநேக-ரூப-ரூபாய விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே ॥)
ஸசங்க-சக்ரம் ஸகிரீட-குண்டலம்
ஸபீதவஸ்த்ரம் ஸரஸீருஹேக்ஷணம் ।
ஸஹார-வக்ஷஸ்தல-சோபி-கௌஸ்துபம் ।
நமாமி விஷ்ணும் சிரஸா சதுர்ப்புஜம் ॥ 5 ॥
ச்சாயாயாம் பாரிஜாதஸ்ய ஹேம-ஸிஹ்மாஸனோபரி ।

யுடுத்தவராய், ஸ்ரீவத்ஸமெனும் மறுவை அடையாள மாய்க் கொண்டவராய், கௌஸ்துப மணியால் பிரகாசிக்கும் அங்கங்களை யுடையவராய், தாமரை போல் அலர்ந்து விரிந்த கண்களையுடையவராய், புண்ணியவான்களால் சூழப் பெற்றவராய் விளங்கும் ஸர்வலோக நாயகரான விஷ்ணுவை வணங்குகின்றேன்.

(எல்லாப் பொருளுக்கும் ஆதியாய், பூமியைத் தாங்குபவராய், பலவகை வடிவங்களைக் கொண்டவராய்ப் பிரபுவாய் விளங்கும் விஷ்ணுவுக்கு நமஸ்காரம்.)

आसीन-मंबुद-श्याम-मायताक्ष-मलंकृतम् ॥ ६ ॥
चन्द्राननं चतुर्बाहुं श्रीवत्साङ्कित-वक्षसम् ।
रुक्मिणी-सत्यभामाभ्यां सहितं कृष्ण-माश्रये ॥ ७ ॥

ஆஸீன-மம்புத-ச்யாம-மாயதாக்ஷ-மலங்க்ருதம் ॥ 6 ॥
சந்த்ரானனம் சதுர்பாஹும் ஸ்ரீவத்ஸாங்கித-வக்ஷஸம் ।
ருக்மிணீ-ஸத்யபாமாப்யாம் ஸஹிதம் க்ருஷ்ணமாச்ரயே ॥

---

5. சங்கும் சக்கரமும் தாங்கியவராய், கிரீடமும் குண்டலமும் அணிந்தவராய், பொன்னுடை உடுத்தவராய், தாமரைக் கண்ணராய், மாலையணிந்த மார்பில் கௌஸ்துபம் பிரகாசிப்பவராய், நான்கு புஜங்களுடன் விளங்கும் விஷ்ணுவைத் தலையால் வணங்குகின்றேன்.

6-7. பாரிஜாத விருக்ஷ நிழலில் தங்கச் சிங்காசனத்தில் அமர்ந்தவராய், மேகவண்ணராய், நீண்டு அகன்ற கண்களை உடையவராய், அலங்கரிக்கப் பெற்றவராய், சந்திரன் போன்ற முகத்தினராய், நான்கு புஜங்களுடனும், ஸ்ரீவத்ஸம் தோன்றும் மார்புடனும், ருக்மிணீ ஸத்யபாமை இருவருடனும் சேர்ந்து விளங்கும் ஸ்ரீகிருஷ்ணனைச் சரணடைகின்றேன்.*

---

* தியானத்தின் முடிவில் பின்வருமாறு பஞ்ச பூஜையும் செய்தல் சிறப்பாகும்.

லம்—ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்பயாமி.
ஹம்—ஆகாசாத்மனே புஷ்பை: பூஜயாமி.
யம்—வாய்வாத்மனே தூபமாக்ராபயாமி.
ரம்—அக்ன்யாத்மனே தீபம் தர்சயாமி.
வம்—அம்ருதாத்மனே அம்ருதம் மஹாநைவேத்யம் நிவேதயாமி.
ஸம்—ஸர்வாத்மனே ஸர்வோபசாரபூஜாம்ஸமர்ப்பயாமி

॥ स्तोत्रम् ॥

॥ हरिः ओम् ॥

विश्वं विष्णु-र्वषट्कारो भूत-भव्य-भवत्प्रभुः ।
भूतकृद्भूतभृद्भावो भूतात्मा भूतभावनः ॥ १ ॥
पूतात्मा परमात्मा च मुक्तानां परमागतिः ।
अव्ययः पुरुषः साक्षी क्षेत्रज्ञोऽक्षर एव च ॥ २ ॥
योगो योगविदांनेता प्रधान-पुरुषेश्वरः ।
नारसिंहवपुः श्रीमान् केशवः पुरुषोत्तमः ॥ ३ ॥

॥ ஸ்தோத்ரம் ॥

॥ ஹரி: ஓம் ॥

விச்வம் விஷ்ணுர்-வஷட்காரோ பூத-பவ்ய-
பவத்ப்ரபு: ।
பூதக்ருத்-பூதப்ருத்பாவோ பூதாத்மா பூதபாவன: ॥
பூதாத்மா பரமாத்மா ச முக்தாநும் பரமாகதி: ।
அவ்யய: புருஷ: ஸாக்ஷீ க்ஷேத்ரஜ்ஞோ
ऽக்ஷர ஏவ ச ॥ 2 ॥
யோகோ யோகவிதாம்நேதா ப்ரதான-புருஷேச்வர:
நாரஸிஹ்மவபு: ஸ்ரீமான் கேசவ: புருஷோத்தம: ॥3॥

ஆயிரம் நாமங்களின் பாகுபாடு

பொருள் வேற்றுமையுடன் இரண்டு தடவை வெவ்வேறிடங்களில் வரும் நாமங்கள் (75) :

*அச்யுத: **100, 318**; அனக: **146, 831**; அனந்த: **659, 886**; அனல: **293, 711**; அநிர்த்தேச்யவபு: **177, 656**; அநிர்விண்ண: **435, 892**; அநிருத்த: **185, 638**; அநில: **234, 812**; அபராஜித: **716, 862**; அமிதவிக்ரம: **516, 641**; அமேயாத்மா **102, 179**; அமோக: **110, 154**; அக்ஷோப்ய: **801, 999**; ஆதித்ய: **39, 563**; ஆதிதேவ: **335, 491**; ஈச்வர: **36, 74**; உத்பவ: **373, 790**; ருத்த: **278, 351**.*

सर्वः शर्वः शिवः स्थाणु-र्भूतादि-र्निधि-रव्ययः ।
संभवो भावनो भर्ता प्रभवः प्रभु-रीश्वरः ॥ ४ ॥
स्वयंभूः शंभु-रादित्यः पुष्कराक्षो महास्वनः ।
अनादिनिधनो धाता विधाता धातुरुत्तमः ॥ ५ ॥
अप्रमेयो हृषीकेशः पद्मनाभोऽमरप्रभुः ।
विश्वकर्मा मनु-स्त्वष्टा स्थविष्टः स्थविरोध्रुवः ॥ ६ ॥

ஸர்வ: சர்வ: சிவ: ஸ்தாணுர்-பூதாதிர்-நிதி-ரவ்யய: ।
ஸம்பவோ பாவனோ பர்த்தா ப்ரபவ: ப்ரபு-ரீச்வர: ॥ 4 ॥
ஸ்வயம்பூ: சம்பு-ராதித்ய: புஷ்கராக்ஷோ மஹாஸ்வன: ।
அநாதிநிதனோ தாதா விதாதா தாதுருத்தம: ॥ 5 ॥
அப்ரமேயோ ஹ்ருஷீகேச: பத்மநாபோ ऽமரப்ரபு: ।
விச்வகர்மா மனுஸ்-த்வஷ்டா ஸ்தவிஷ்ட:
ஸ்தவிரோத்ருவ: ॥ 6 ॥

க்ருதஜ்ஞ: *82, 532*; க்ருதாகம: *655, 739*; க்ருஷ்ண: *57*; *550*; காந்த: *296, 654*; குமுத: *589, 807*; கேசவ: *23, 648*; கஹன: *382, 544*; கோப்தா *496, 593*; கோபதி: *495, 592*; கோவிந்த: *187, 539*; சக்ரீ *908, 995*; சதுர்வ்யூஹ: *138, 767*; சதுராத்மா *137, 769*; தார: *338, 968*; தக்ஷ: *423, 917*; துர்த்தர: *266, 715*; நிவ்ருத்தாத்மா *229, 597*; ப்ரஜாபதி: *69, 197*; ப்ரணவ: *409, 957*; ப்ரபு: *299, 435*; ப்ரமாணம் *428, 959*; பாவன: *292, 811*; புண்ய: *687, 925*; புருஷ: *14, 406*; புஷ்கராக்ஷ: *40, 556*; பீம: *357, 948*; மஹாகர்மா *672, 787*; மஹீதர: *317, 369*; மார்க்க *365, 397*; வஸுப்ரத: *693, 694*; வஸுமனு: *105, 697*; வாயுவாஹன: *331, 856*; வாஸுதேவ: *332, 695*; விக்ரமீ *75, 909*; விதாதா *44, 484*; விபு: *240, 880*; விச்வயோனி: *117, 149*; வேதவித் *128, 131*.

சிவ: *27, 600*; சுசி: *155, 251*; சுபாங்க: *586, 782*; சௌரி: *340, 644*; ஸ்ரீநிவாஸ: *183, 607*; ஸ்தவிஷ்ட: *53, 436*;

अग्राह्यः शाश्वतः कृष्णो लोहिताक्षः प्रतर्दनः ।
प्रभूत-स्त्रिककुब्धाम पवित्रं मङ्गलं परम् ॥ ७ ॥
ईशानः प्राणदः प्राणो ज्येष्ठः श्रेष्ठः प्रजापतिः ।
हिरण्यगर्भो भूगर्भो माधवो मधुसूदनः ॥ ८ ॥
ईश्वरो विक्रमी धन्वी मेधावी विक्रमः क्रमः ।
अनुत्तमो दुराधर्षः कृतज्ञः कृतिरात्मवान् ॥ ९ ॥
सुरेशः शरणं शर्म विश्वरेताः प्रजाभवः ।
अहः संवत्सरो व्यालः प्रत्ययः सर्वदर्शनः ॥ १० ॥

அக்ராஹ்ய: சாச்வத: க்ருஷ்ணோ லோஹிதாக்ஷ: ப்ரதர்த்தன: ।
ப்ரபூதஸ்-த்ரிககுப்தாம பவித்ரம் மங்களம் பரம் ॥ 7 ॥
ஈசான: ப்ராணத: ப்ராணோ ஜ்யேஷ்ட: ச்ரேஷ்ட: ப்ரஜாபதி: ।
ஹிரண்யகர்ப்போ பூகர்ப்போ மாதவோ மதுஸூதன: ॥ 8 ॥
ஈச்வரோ விக்ரமீ தன்வீ மேதாவீ விக்ரம: க்ரம:
அனுத்தமோ துராதர்ஷ: க்ருதஜ்ஞ: க்ருதிராத்மவான் ॥ 9 ॥
ஸுரேச: சரணம் சர்ம விச்வரேதா: ப்ரஜாபவ: ।
அஹ: ஸம்வத்ஸரோ வ்யால: ப்ரத்யய: ஸர்வதர்சன: ॥ 10 ॥

ஸ்ரஷ்டா 588, 990 ; ஸதாம்கதி: 184, 450 ; ஸம்வத்ஸர: 91, 422 ; ஸர்வஜ்ஞ: 453, 815 ; ஸவிதா 884, 969 ; ஸஹிஷ்ணு: 144, 565 ; ஸித்த: 97, 819 ; ஸிம்ஹ: 200, 488 ; ஸுகத: 419, 889 ; ஸுபர்ண: 192, 855 ; ஹிரண்யகர்ப்ப: 70, 411 ; ஹுதபுக் 879, 887 ; க்ஷாம: 443, 854.

---

7. த்ரிககுத்தாம. —ப. பா.

अजः सर्वेश्वरः सिद्धः सिद्धिः सर्वादि-रच्युतः ।
वृषाकपि-रमेयात्मा सर्वयोगविनिःसृतः ॥ ११ ॥
वसु-र्वसुमनाः सत्यः समात्मा ऽसंमितः समः ।
अमोघः पुण्डरीकाक्षो वृषकर्मा वृषाकृतिः ॥ १२ ॥
रुद्रो बहुशिरा बभ्रु-र्विश्वयोनिः शुचिश्रवाः ।
अमृतः शाश्वतस्थाणु-र्वरारोहो महातपाः ॥ १३ ॥

அஜ: ஸர்வேச்வர: ஸித்த: ஸித்தி: ஸர்வாதி-ரச்யுத: ।
வ்ருஷாகபி-ரமேயாத்மா ஸர்வயோகவிநி:ஸ்ருத: ॥ *11* ॥
வஸுர்-வஸுமனா: ஸத்ய: ஸமாத்மா ऽஸம்மித: ஸம: ।
அமோக: புண்டரீகாக்ஷோ வ்ருஷகர்மா வ்ருஷாக்ருதி: ॥
ருத்ரோ பஹுசிரா பப்ருர்-விச்வயோனி: சுசிச்ரவா: ।
அம்ருத: சாச்வதஸ்தாணுர்-வராரோஹோ மஹாதபா: ॥

மூன்று தடவை வரும் நாமங்கள் (9)

அஜ: 95, 204, 521; ப்ராண: 66, 320, 407; பத்மநாப: *48, 196, 346;* போக்தா *143, 500, 888; மாதவ: 72, 167, 735; வஸு: 104, 270, 696; விஷ்ணு: 2, 258, 657, வீர, 401, 643, 658; வீரஹா 166, 741, 927; ஸத்ய: 106, 212, 869.*

இந்நாமங்கள் மூன்று தடவை வந்தாலும் அர்த்த பேதத்தால் எங்ஙனம் வெவ்வேறாகக் கொள்ளப்படுகின்றன என்பது கீழேயுள்ள குறிப்பால் விளங்கும்.

அஜ: (95) ந ஜாயத இத்யஜ: (204) அஜதி கச்சதி க்ஷிபதி இதி வா அஜ: (521) ஆத்-விஷ்ணோரஜாயதேதி காமோ அஜ: ।

ப்ராண: (66) ப்ராணிதீதி ப்ராண: க்ஷேத்ரஜ்ஞ: பரமாத்மா வா ப்ராணஸ்ய ப்ராணமிதி ச்ருதே: முக்யப் ராணோ வா; (320) ஸூத்ராத்மனா ப்ரஜா: ப்ராணயதீதி; (407) ப்ராணிதி க்ஷேத்ரஜ்ஞ-ரூபேண ப்ராணாத்மனோ சேஷ்டயன் வா.

---

12. ஸம்மித: —ப. பா.

सर्वगः सर्वविद्भानु-र्विष्वक्सेनो जनार्दनः ।
वेदो वेदवि-दव्यंगो वेदाङ्गो वेदवित् कविः ॥ १४ ॥
लोकाध्यक्षः सुराध्यक्षो धर्माध्यक्षः कृताकृतः ।
चतुरात्मा चतुर्व्यूह-श्चतुर्दंष्ट्र-श्चतुर्भुजः ॥ १५ ॥
भ्राजिष्णु-र्भोजनं भोक्ता सहिष्णु-र्जगदादिजः ।
अनघो विजयो जेता विश्वयोनिः पुनर्वसुः ॥ १६ ॥

ஸர்வக: ஸர்வவித்பானுர்-விஷ்வக்ஸேனோ ஜனார்த்தன: ।
வேதோ வேதவிதவ்யங்கோ வேதாங்கோ வேதவித்கவி: ॥
லோகாத்யக்ஷ: ஸுராத்யக்ஷோ தர்மாத்யக்ஷ: க்ருதாக்ருத: ।
சதுராத்மா சதுர்வ்யூஹச்-சதுர்தம்ஷ்ட்ரச்-சதுர்ப்புஜ: ॥
ப்ராஜிஷ்ணுர்-போஜனம் போக்தா ஸஹிஷ்ணுர் ஜகதாதிஜ: ।
அனகோ விஜயோ ஜேதா விச்வயோனி: புனர்வஸு: ॥16॥

பத்மநாப : (48) ஜகத்காரணம் பத்மம் நாபௌ யஸ்யேதி; (196) பத்மமிவ ஸுவர்த்துலா நாபிரஸ்யேதி; ஹ்ருதய பத்மஸ்ய நாபௌ மத்யே ப்ரகாசனத்வா; (346) பத்மஸ்ய நாபௌ மத்யே கர்ணிகாயாம் ஸ்தித இதி பத்மநாப:.

போக்தா (143) போஜ்யரூபதயா ப்ரக்ருதிர்-மாயா போஜனமுச்யதே; புருஷரூபேண தான் புனக்தீதி; (500) பாலகோ போக்தா நிரதிசயானந்த - ஸந்தோஹ - ஸம்போகாத்; (888) ப்ரக்ருதிம் அசேதனம் புங்க்த இதி.

மாதவ: (72) மாயாயா: ச்ரிய: தவ: பதி: மதுவித்யாச்ச மாதவ: 'மௌனத்-த்யானச்ச யோகாச்ச வித்தி பாரத மாதவம்; (167 'மா வித்யா ச ஹரே! ப்ரோக்தா தஸ்யா ஈசோ யதோ பவான்l தஸ்மான்–மாதவ நாமாஸி தவ: ஸ்வாமீதி சப்தித:' (735) மது-குலே ஜாதத்வாத்.

வஸு: (104) பாவக: (270) வஸு அபி ஸ ஏவ ஆச்சாதயத்யாத்ம-மாயயா இதி; (696) வஸந்தி பூதானி தத்ர, தேஷு வா வஸதீதி.

उपेन्द्रो वामनः प्रांशु-रमोघः शुचि-रूर्जितः ।
अतीन्द्रः संग्रहः सर्गो धृतात्मा नियमो यमः ॥ १७ ॥
वेद्यो वैद्यः सदायोगी वीरहा माधवो मधुः ।
अतीन्द्रियो महामायो महोत्साहो महाबलः ॥ १८ ॥
महाबुद्धि-र्महावीर्यो महाशक्ति-र्महाद्युतिः ।
अनिर्देश्यवपुः श्रीमा-नमेयात्मा महाद्रिधृक् ॥ १९ ॥

உபேந்த்ரோ வாமன: ப்ராம்சு-ரமோக: சுசிரூர்ஜித: ।
அதீந்த்ர: ஸங்க்ரஹ: ஸர்க்கோ த்ருதாத்மா நியமோயம:॥
வேத்யோ வைத்ய: ஸதாயோகீ வீரஹா மாதவோ மது:।
அதீந்த்ரியோ மஹாமாயோ மஹோத்ஸாஹோ மஹாபல: ॥ 18 ॥
மஹாபுத்திர்-மஹாவீர்யோ மஹாசக்திர்-மஹாத்யுதி: ।
அநிர்த்தேச்யவபு: ஸ்ரீமா-னமேயாத்மா மஹாத்ரித்ருக் ॥

விஷ்ணு: (2) வேவேஷ்டி வ்யாப்னோதீதி விஷ்ணு: (258) விஷ்ணுர்-விசக்ரமணாத்; (657) ரோதஸீ வ்யாப்ய காந்தி ரப்யதிகா ஸ்திதாஸ்யேதி விஷ்ணு:.

வீர: (401) விக்ரமசாலித்வாத்; (643) கணம் விநா சத்ருணாம் குலானி நிஹத்ய ராஜதே; (658) கத்யாதிமத்வாத்-வீர:. 'வீ கதி-வ்யாப்தி-ப்ரஜனன - காந்த்யஸன - காதனேஷு இதி தாதுபாடாத்'.

வீரஹா (166) தர்மத்ராணாய வீரான் அஸுரபடான் ஹந்தி, (741) ராகாதி-சத்ரூன் ஹந்தி; (927) விவிதா: ஸம்ஸாரிணாம் கதீர்-முக்திப்ரதானேன ஹந்தீதி.

ஸத்ய: (106) அவிதத-ரூபத்வாத் பரமாத்மா ஸத்ய: (212) ஸத்ய-வசன லக்ஷண - தர்மரூபத்வாத்; (869) ஸத்ஸு ஸாதுத்வாத் ஸத்ய:,

महेष्वासो महीभर्ता श्रीनिवासः सतांगतिः ।
अनिरुद्धः सुरानन्दो गोविन्दो गोविदांपतिः ॥ २० ॥
मरीचि-र्दमनो हंसः सुपर्णो भुजगोत्तमः ।
हिरण्यनाभः सुतपाः पद्मनाभः प्रजापतिः ॥ २१ ॥
अमृत्युः सर्वदृक् सिंहः सन्धाता सन्धिमां-स्थिरः ।
अजो दुर्मर्षणः शास्ता विश्रुतात्मा सुरारिहा ॥ २२ ॥

மஹேஷ்வாஸோ மஹீபர்த்தா ஸ்ரீநிவாஸ: ஸதாங்கதி: ।
அநிருத்த: ஸுராநந்தோ கோவிந்தோ கோவிதாம்பதி: ॥
மரீசிர்-தமனோ ஹம்ஸ: ஸுபர்ணோ புஜகோத்தம: ।
ஹிரண்யநாப: ஸுதபா: பத்மநாப: ப்ரஜாபதி: ॥ 21 ॥
அம்ருத்யு: ஸர்வத்ருக் ஸிம்ஹ: ஸந்தாதா ஸந்திமாம்-ஸ்திர: ।
அஜோ துர்மர்ஷண: சாஸ்தா விச்ருதாத்மா ஸுராரிஹா ॥

நான்கு தடவை வரும் நாமங்கள் (2) :
ப்ராணத : *65, 321, 408, 956*; ஸ்ரீமான் *178, 220, 613, 722.*

ஸ்ரீசங்கராசாரியரால் ஒரு நாமமாகவும் ஸ்ரீபட்டரால் இரண்டு நாமங்களாகவும் கொள்ளப்படுபவை :

ஸ்தவிரோத்ருவ: *54* ; ஸர்வவித்பானு: *124* ; வாசஸ்பதிருதாரதீ: *217* ; க்ரோதக்ருத்கர்த்தா *315* ; தேவப்ருத்குரு: *493*; விநயிதாஸாக்ஷீ *514*; மஹர்ஷி: கபிலாசார்ய: *531* ; ஸங்கர்ஷணோச்யுத: *552* ; ஸர்வத்ருக்வ்யாஸ: *572*; வாசஸ்பதிரயோனிஜ: *573*.

ஸ்ரீ பட்டரால் ஒரு நாமமாகவும் ஸ்ரீ சங்கராசாரியரால் இரண்டு நாமங்களாகவும் கொள்ளப்படுபவை:

குருர்-குருதம: *209-210* ; விச்வபுக்விபு: *239-240* ; இஷ்டோऽவிசிஷ்ட: *308-309* ; ப்ரஹ்மக்ருத் ப்ரஹ்மா *662-663* ; ச்ரேய: ஸ்ரீமான் *612-613* ; சத்ருஜிச்சத்ருதாபன: *820-821* ; ந்யக்ரோதோதும்பர: *822 – 823* ; ஹுதபுக்விபு: *879-880* ; கபிரவ்யய: *899-900*.

गुरु-र्गुरुतमो धाम सत्यः सत्यपराक्रमः ।
निमिषोऽनिमिषः स्रग्वी वाचस्पति-रुदारधीः ॥ २३ ॥
अग्रणी-र्ग्रामणीः श्रीमान् न्यायो नेता समीरणः ।
सहस्रमूर्धा विश्वात्मा सहस्राक्षः सहस्रपात् ॥ २४ ॥
आवर्तनो निवृत्तात्मा संवृतः संप्रमर्दनः ।
अहः संवर्तको वह्नि-रनिलो धरणीधरः ॥ २५ ॥

குருர்-குருதமோ தாம ஸத்ய: ஸத்யபராக்ரம: ।
நிமிஷோऽநிமிஷ: ஸ்ரக்வீ வாசஸ்பதி-ருதாரதீ: ॥ 23 ॥
அக்ரணீர்-க்ராமணீ: ஸ்ரீமான் ந்யாயோ நேதா ஸமீரண: ।
ஸஹஸ்ரமூர்த்தா விச்வாத்மா ஸஹஸ்ராக்ஷ:
ஸஹஸ்ரபாத் ॥ 24 ॥
ஆவர்த்தனோ நிவ்ருத்தாத்மா ஸம்வ்ருத: ஸம்ப்ரமர்த்தன:
அஹ: ஸம்வர்த்தகோ வஹ்னி-ரநிலோ தரணீதர: ॥ 25 ॥

ஸ்ரீபட்டரால் ஒரு நாமமாகவும் ஸ்ரீசங்கராசாரியரால் மூன்று நாமங்களாகவும் கொள்ளப்படுவது:

அனந்தஹுதபுக்போக்தா (886-888).

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களாலாகி ஸ்ரீ சங்கராசாரியராலும் ஸ்ரீபட்டராலும் ஒரே நாமமாய்க் கொள்ளப் படுபவை:

அஹ:-ஸம்வர்த்தக: 232; ஓஜஸ்தேஜோத்யுதிதர: 275; ஜ்ஞான முத்தமம் 454; ஜ்யோதிர்கணேச்வர: 619; ஜ்யோதி ராதித்ய: 877; த்ரிககுப்தாம 61; தேஜோவ்ருஷ: 757; தர்ம விதுத்தம: 404; தாதுருத்தம: 45; தேவப்ருத்குரு: 493; நிதிரவ்யய: 30; பரமஸ்பஷ்ட: 390; பதமனுத்தமம் 732; பீஜமவ்யயம் 429; பூர்ப்புவ: 942; பூர்ப்புவ: ஸ்வஸ்தரு: 967;

---

26. விச்வஸ்ருக் விச்வபுக் விபு: — பா. பே.

सुप्रसादः प्रसन्नात्मा विश्वधृग्-विश्वभुग् विभुः ।
सत्कर्ता सत्कृतः साधु-र्जह्नु-र्नारायणो नरः ॥ २६ ॥

असंख्येयो ऽप्रमेयात्मा विशिष्टः शिष्टकृ-च्छुचिः ।
सिद्धार्थः सिद्धसंकल्पः सिद्धिदः सिद्धिसाधनः ॥ २७ ॥

वृषाही वृषभो विष्णु-र्वृषपर्वा वृषोदरः ।
वर्धनो वर्धमानश्च विविक्तः श्रुतिसागरः ॥ २८ ॥

ஸுப்ரஸாத: ப்ரஸந்நாத்மா விச்வத்ருக் விச்வபுக் விபு: ।
ஸத்கர்த்தா ஸத்க்ருத: ஸாதுர்-ஜஹ்னுர்-நாராயணோ நர: ॥
அஸங்க்யேயோ ऽப்ரமேயாத்மா விசிஷ்ட: சிஷ்டக்ருச்சுசி: ।
ஸித்தார்த்த: ஸித்தஸங்கல்ப: ஸித்தித: ஸித்திஸாதன: ॥
வ்ருஷாஹீ வ்ருஷபோ விஷ்ணுர்-வ்ருஷபர்வா
வ்ருஷோதர : ।
வர்த்தனோ வர்த்தமானச்ச விவிக்த: ச்ருதிஸாகர: ॥ 28 ॥

மங்களம்பரம் 63; சாச்வதஸ்தாணு: 120; சாச்வதஸ்திர: 617; ஸ்தாவரஸ்தாணு: 427; ஸர்வவாகீச்வரேச்வர: 802; ஸர்வத்ருக்வ்யாஸ: 5; ஸர்வவிஜ்ஜயீ 799; ஹவிர் ஹரி: 359,

ஒரு சொல்லிற் கிளைக்கும் பல நாமங்கள் :

அக்ரஜ: 891; கதாக்ரஜ: 764. அச்யுத: 100, 318: ஸங்கர்ஷணோऽச்யுத: 552. (அத்யக்ஷ:) த்ரிதசாத்யக்ஷ: 535; தர்மாத்யக்ஷ: 135; லோகாத்யக்ஷ: 135; ஸுராத்யக்ஷ: 134. அனந்த: 659, 889; அனந்தஜித் 307; அனந்தரூப: 932; அனந்த-ஸ்ரீ: 933. அனாதி: 941; அனாதிநிதன: 42. அப்ரமேய: 46; அப்ரமேயாத்மா 248. அம்ருத: 119; அம்ருதப: 504; அம்ருதவபு: 814. அவ்யய: 13; நிதிரவ்யய: 30. அஹ: 190; அஹ: ஸம்வர்த்தக: 232. (அக்ஷ:) அரவிந்தாக்ஷ: 347; புண்டரீகாக்ஷ: 111; புஷ்கராக்ஷ: 40, 556; மஹாக்ஷ: 353; லோஹிதாக்ஷ 58; வ்ருஷபாக்ஷ: 594; ஸஹஸ்ராக்ஷ: 256.

सुभुजो दुर्धरो वाग्मी महेन्द्रो वसुदो वसुः ।
नैकरूपो बृहद्रूपः शिपिविष्टः प्रकाशनः ॥ २९ ॥
ओजस्तेजो द्युतिधरः प्रकाशात्मा प्रतापनः ।
ऋद्धः स्पष्टाक्षरो मन्त्रश्चन्द्रांशुर्भास्करद्युतिः ॥ ३० ॥
अमृतांशूद्भवो भानुः शशबिन्दुः सुरेश्वरः ।
औषधं जगतः सेतुः सत्यधर्मपराक्रमः ॥ ३१ ॥

ஸுபுஜோ துர்த்தரோ வாக்மீ மஹேந்த்ரோ வஸுதோ வஸு: ।
நைகரூபோ ப்ருஹத்ரூப: சிபிவிஷ்ட: ப்ரகாசன: ॥ 29 ॥
ஓஜஸ்தேஜோ த்யுதிதர: ப்ரகாசாத்மா ப்ரதாபன: ।
ருத்த: ஸ்பஷ்டாக்ஷரோ மந்த்ரச்-சந்த்ராம்சுர் பாஸ்கரத்யுதி: ॥ 30 ॥
அம்ருதாம்சூத்பவோ பானு: சசபிந்து: ஸுரேச்வர: ।
ஔஷதம் ஜகத: ஸேது: ஸத்யதர்ம-பராக்ரம: ॥ 31 ॥

(ஆத்மா) அனந்தாத்மா 518; அநிவ்ருத்தாத்மா 774, அப்ரமேயாத்மா 248; அமேயாத்மா 102, 179; அவிதேயாத்மா 521; ஆத்மயோனி: 985; ஆத்மவான் 84; ஏகாத்மா 965; கபீராத்மா 937; சதுராத்மா 137, 739; த்ரிலோகாத்மா 646; த்ருதாத்மா 160; நிவ்ருத்தாத்மா 229, 597; நைகாத்மா 468; ப்ரகாசாத்மா 276; ப்ரஸன்னாத்மா 237; பரமாத்மா 11, பூதாத்மா 10; பூதாத்மா 8; வ்ருத்தாத்மா 352; விஜிதாத்மா 620; விமுக்தாத்மா 452; விச்ருதாத்மா 207; விச்வாத்மா 225, விசுத்தாத்மா 636; ஸமாத்மா 107.

ஈச்வர: 36, 74; ஜனேச்வர: 341; தனேச்வர: 574; ப்ரதான-புருஷேச்வர: 20; பரமேச்வர: 377: பூதமஹேச்வர: 489; ஸர்வவாகீச்வரேச்வர: 802; ஸுரேச்வர: 286.

உத்பவ: 373, 790; அம்ருதாம்சூத்பவ: 283.

भूतभव्यभवन्नाथः पवनः पावनो ऽनलः ।
कामहा कामकृत् कान्तः कामः कामप्रदः प्रभुः ॥ ३२ ॥
युगादिकृद्-युगावर्तो नैकमायो महाशनः ।
अदृश्यो व्यक्तरूपश्च सहस्रजि-दनन्तजित् ॥ ३३ ॥
इष्टो ऽविशिष्टः शिष्टेष्टः शिखण्डी नहुषो वृषः ।
क्रोधहा क्रोधकृत् कर्ता विश्वबाहु-र्महीधरः ॥ ३४ ॥

பூதபவ்யபவந்நாத: பவன: பாவனோ ऽநல: ।
காமஹா காமக்ருத் காந்த: காம: காமப்ரத: ப்ரபு: ॥ 32 ॥
யுகாதிக்ருத் யுகாவர்த்தோ நைகமாயோ மஹாசன: ।
அத்ருச்யோ வ்யக்தரூபச்ச ஸஹஸ்ரஜி-தனந்தஜித் ॥ 33 ॥
இஷ்டோ ऽவிசிஷ்ட: சிஷ்டேஷ்ட: சிகண்டீ நஹுஷோ வ்ருஷ: ।
க்ரோதஹா க்ரோதக்ருத் கர்த்தா விச்வபாஹுர்-மஹீதர: ॥ 34 ॥

கதாதர: 997; சக்ரகததார: 546.

7. (எல்லாவற்றிற்கும்) இருப்பாயிருப்பவர். (ஒ. 'ஸதியஞ்சான் ருதஞ்ச ஸத்ய–மபவத் |' உளதாகவும் இலதாகவும் அந்த உண்மைப் பொருளே ஆயிற்று. உடலினுள் உத்தமன் இருப்பதால் பொய்யாகிய உடலும் மெய்யெனக் கூறப்படுகிறது.)

8. உயிர்களுக்குயிராயிருப்பவர். (ஒ. 'ஏஷ த ஆத்மா அந்தர்யாம்–யம்ருத:—'ப்ரு. உப. 3. 7. 22. ஒ. பூதாத்மா சேந்த்ரியாத்மா ச ப்ரதானாத்மா ததா பவான்| ஆத்மா ச பரமாத்மா ச த்வமேக: பஞ்சதா ஸ்தித: ||—விஷ்ணு புராணம். 5. 18. 50.)

9. உண்டாக்கியவற்றையெல்லாம் போஷித்து வளர்ப்பவர். ('பூதானி பாவயதி ஜனயதி வர்த்தயதீதி பூதபாவன:'—சங்.)

10. பூதாத்மனே நம:
11. பரமாத்மனே நம:
12. முக்தானும் பரமாயை கதயே நம:
13. அவ்யயாய நம:
14. புருஷாய நம:

---

10. பரிசுத்த ஸ்வபாவமுள்ளவர். (பற்றற்றவர். ஒ. ஆக்கியளித்துத் துடைக்கும் தொழிலத்தனை வைத்தும் எள்ளத்தனையேனும் தாக்கற நிற்கும் சமர்த்தன்—தாயுமானவர். ஒ. தனஞ்ஜயா! அச்செயல்களில் பற்றற்றவனும் உதாசீனனைப் போலிருப்பவனுமாகிய என்னை அச்செயல்கள் கட்டுப்படுத்துவதில்லை.—கீ. 9. 9.)

11. அனைத்திற்கும் உள்ளிருந்தும் அனைத்தையும் கடந்து அப்பால் நிற்பவர். (அ. 'கட—வுள்.' ஒ. உபத்ரஷ்டானுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர: | பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹே஽ஸ்மின் புருஷ: பர: ||' பார்ப்பவனுக்கு மேல் நின்று பார்ப்பவனாகவும், நினைப்பவனுக்குப் பின் நின்று நினைப்பவனாகவும், தாங்குபவனாகவும், அனுபவிப்பவனாகவும் ஆளும் இறைவனுக்கும் இறைவனாகவும் பரமாத்மா என்று கூறப்படுபவனாகவும் உள்ளவன் இந்த சரீரத்திலேயே வேறாக உள்ள புருஷன்.—கீ. 13. 22.)

12. முக்தர்களுக்கு ஒப்புயர்வற்ற கதி. (ஒ. தனஞ்ஜயா! என்னைக் காட்டிலும் உயர்ந்தது வேறு ஒரு சிறிதும் இல்லை.—கீ. 7. 7. ஒ. என்னை யடைந்தவனுக்கு மீண்டுந் திரும்புதல் என்பது இல்லை.—கீ. 8. 16.)

13. மாறுபாடற்றவர். (ஒ. அஜரோ஽மரோ஽வ்யய:—ப்ரு. உப. 4. 4. 25. ஒ. 'மூடோயம் நாபிஜானாதி லோகோ மாமஜமவ்யயம்'—இவ்வுலகம் பிறப்பற்றவனும் மாறுபாடற்றவனுமாகிய என்னை அறிவதில்லை.—கீ. 7. 25.)

14. புரமெனப்படும் சரீரத்தில் இருப்பவர். (ஒ. 'பூர்வமேவாஹமிஹாஸமிதி தத் புருஷஸ்ய புருஷத்வம்'—(தை. 1. 23. ஒ. 'பூரணாத் ஸதனாச் சைவ ததோ஽ஸௌ புருஷோத்தம:'—ம. பா. உத். 69. 11.)

---

12. முக்தானும் பரமாகதயே நம: —ப. பா.

15. ஸாக்ஷிணே நம:
16. க்ஷேத்ரஜ்ஞாய நம:
17. அக்ஷராய நம:
18. யோகாய நம:
19. யோகவிதாம் நேத்ரே நம:
20. ப்ரதானபுருஷேச்வராய நம:

---

15. (எல்லாவற்றையும் வேறு துணையின்றி) நேரில் காண்பவர்.

16. க்ஷேத்ரம் எனப்படும் சரீரத்தை அறிபவர். (ஒ. அர்ஜுனா! எல்லா க்ஷேத்திரங்களிலும் என்னையே க்ஷேத்ரஜ்ஞனாக அறிவாய்.—கீ. 13. 2. ஒ. யோऽஸ்யாத்மன: காரயிதா தம் க்ஷேத்ரஜ்ஞம் ப்ரசக்ஷதே புதா: । ஜீவ-ஸஞ்ஜ்ஞோந்தராத்மாऽன்ய: ஸஹஜ: ஸர்வ-தேஹினம் ॥ ..மனுஸ்ம்ருதி.)

17. அழிவற்றவர். (ஒ. க்ஷரன், அக்ஷரன், என்று இருவர் உலகில் புருஷர்கள் எனப்படுவோர். உருப்படைத்த அனைத்தும் க்ஷரபுருஷன்; கூடஸ்தன் அக்ஷர புருஷன். கீ. 15. 16. அக்ஷர புருஷன் ஜீவஸாக்ஷியாய் இருதயத்திலுறையும் ஈச்வரன். இந்த நாமத்திற்குப்பின் உள்ள 'ஏவ ச' என்ற இரு சொற்களில் 'ஏவ' என்பதனால் அக்ஷரனான பரமாத்மாவிற்கும் க்ஷேத்ரஜ்ஞனான ஜீவனுக்கும் உண்மையில் அபேதமும் 'ச' காரத்தினால் விவகாரத்தில் உண்டான பேதமும் குறிக்கப்பட்டன.—சங்.)

18. (ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய சிந்தனையாகிய) யோகத்தால் அடையத்தக்கவர். (ஒ. 'நாநேந்த்ரியாணி ஸர்வாணி நிருத்ய மனஸா ஸஹ । ஏகத்வ-பாவனா யோக: க்ஷேத்ரஜ்ஞ-பரமாத்மனோ: ॥' முக்திக்கு உபாயமாகவும் தானே ஆகியவர்.—ப. பா.)

19. யோகத்தை அறிந்தவர்களுடைய தலைவர். (அவர்களுடைய யோக க்ஷேமங்களை வகித்துக் காப்பாற்றுகிறவர். ஒ. என்னைவிட வேறொன்றிலும் நாட்டமில்லாதவராய் என்னையே சிந்திப்பவராய் எந்த ஜனங்கள் பரிவுடன் உபாசிக்கின்றார்களோ அந்த நிலைபெற்ற யோகிகளுடைய யோக க்ஷேமத்தை நான் தாங்குகின்றேன்.—கீ. 9. 22.)

20. பிரகிருதிக்கும் புருஷனுக்கும் ஈசுவரர்.

21. நாரஸிம்ஹவபுஷே நம:
22. ஸ்ரீமதே நம:
23. கேசவாய நம:
24. புருஷோத்தமாய நம:
25. ஸர்வஸ்மை நம:
26. சர்வாய நம:

---

21. மனித வடிவும் சிங்க வடிவும் கலந்த உடல் கொண்டவர்.

22. ஸ்ரீமான். (மார்பில் ஸ்ரீதேவி நீங்காதுறைவதால் மனதைக் கவரும் வடிவினர்.)

23. அழகிய கூந்தலை உடையவர். (அ. 'அபிரூபா: கேசா:யஸ்ய ஸ:' அல்லது 'க: எனும் பிரம்மனும், 'அ' எனும் விஷ்ணுவும், 'ஈச:' எனும் ருத்திரனும் எவருக்கு வசமாகியவர்களோ அவர். அல்லது கேசியைக் கொன்றதால் கேசவர். ஒ. 'கேசவ: கேசிஹா ஹரி: ‖ ஒ. 'மஹார்ஹ - வைடூர்ய - கிரீட குண்டலத்விஷா பரிஷ்வக்த-ஸஹஸ்ர-குந்தலம்.')

24. புருஷர்களிற் சிறந்தவர். (ஒ. அபராபிரகிருதியின் அம்சமான மனம் புத்தி இந்திரியங்கள் சரீரம் இவற்றைத் தான் என்று அபிமானிக்கும் ஜீவனாகிய க்ஷரபுருஷனைக் காட்டிலும், ஜீவஸாக்ஷியாய் இருதயத்திலுறையும் அக்ஷர புருஷனைக் காட்டிலும் மேலானவர்.—கீ. 15. 18. கட்டுண்டவர், விடுபட்டவர், நித்தியர் என்னும் மூவகைச் சேதனர்களைக் காட்டிலும் சிறந்தவர்.—ப. பா.)

25. எல்லாமாயிருப்பவர். (ஒ. எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கு மவ்வுயிராய் அங்கங்கிருப்பது நீயன்றோ பராபரமே, ஒ. 'யாவையு மெவருந்தானே'.—நம்மாழ்வார். ஒ. 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே'—கீ. 10. 8. ஒ. 'யஜன் யஜ்ஞான் யஜத்யேனம் ஜபத்யேனம் ஜபந் ந்ருப ! நிக்னன்–வன்யான் ஹினஸ்த்யேனம் ஸர்வ பூதோ யதோ ஹரி: ‖—விஷ்ணுபுராணம்)

26. (ஸம்ஹார காலத்தில்) பிரஜைகளை அழிப்பவர். (அ. ச்ருணாதி ஸகலா: ப்ரஜா: ஸம்ஹரதி இதி சர்வ:—சங். ஒ. 'பொன்திகழுமேனிப் புரிசடை யம்புண்ணியனும் நின்றுலகளும் தாய நெடுமாலும்—என்றும் இருவரங்கத்தால் திரிவரேனும் ஒருவன் ஒருவனங்கத் தென்றுமுளன்.'—பொய்கையாழ்வார்.)

---

25. ஸர்வாய நம:

27. சிவாய நம:
28. ஸ்தாணவே நம:
29. பூதாதயே நம:
30. நிதயே ऽவ்யயாய நம:
31. ஸம்பவாய நம:
32. பாவனாய நம:
33. பர்த்ரே நம:
34. ப்ரபவாய நம:
35. ப்ரபவே நம:
36. ஈச்வராய நம:

27. (முக்குணங்கள் இல்லாமையால்) பரிசுத்தர். ('நிஸ்த்ரை—குண்யதயா சுத்தத்வாச் சிவ:'—சங். ஒ. அத்ருஷ்ட-மவ்யவஹார்ய-மக்ராஹ்ய-மலக்ஷண - மசிந்த்ய - மவ்யபதேச்ய-மேகாத்ம-ப்ரத்யய-ஸாரம் ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவம் —மா. உப. 7. பிராணிகளுக்கு நன்மைகளைச் செய்பவர்.—ப. பா.)

28. ஸ்திரமாயிருப்பவர்.

29. உண்டாயவற்றிற்கெல்லாம் முதற்காரணமாகியவர்.

30. அழியாத நிதி, (ஒ. 'ய: ஸ ஸர்வேஷு பூதேஷு நச்யத்ஸு ந விநச்யதி. எல்லாப் பொருள்களும் அழியும் போதும் எது அழிவதில்லையோ அது—கீ. 8. 20. 'ப்ரலய காலே அஸ்மின் ஸர்வம் நிதீயத இதி நிதி:'—சங்.)

31. (நல்லோரைக் காக்கவும் தீயோரைப் போக்கவும்) அவதாரம் செய்பவர். (ஒ. 'ஸம்பவாமி யுகே யுகே.'—கீ. 4. 8)

32. (எல்லாப் பலன்களையும்) அளிப்பவர். (அ. 'ஸர்வேஷாம் போக்த்ரூணாம் பலானி பாவயதீதி பாவன:' ஒ. 'பலமத உபபத்தே:'—பி. சூ. 3. 2. 38.)

33. (பிரபஞ்சத்திற்கு) ஆதாரமாயிருந்து தாங்குகின்றவர். (ஒ. கதிர்-பாத்தா ப்ரபு: ஸாக்ஷீ—கீ. 9. 18. அ. ப்ரபஞ்சஸ்யா-திஷ்டானத்வேன தாரணாத் பர்த்தா. தம்மைத் தந்து காப்பாற்றும் இயற்கையுள்ளவர். ப. பா.)

34. உயர்ந்த ஜன்மமுடையவர். (அ. 'ப்ரக்ருஷ்டோ பவோ ஜன்மாஸ்யேதி.' அல்லது பஞ்ச மஹா பூதங்களும் எவரிடம் தோன்றினவோ அவர். ஒ. 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே'—கீ. 10. 8.)

35. மிக்க ஸாமர்த்திய முள்ளவர்.

36. அனைத்தையும் அடக்கியாள்பவர்.

30. அவ்யயாய நிதயே நம: ப. பா.

37. ஸ்வயம்புவே நம:
38. சம்பவே நம:
39. ஆதித்யாய நம:
40. புஷ்கராக்ஷாய நம:
41. மஹாஸ்வநாய நம:
42. அனாதிநிதனாய நம:
43. தாத்ரே நம:
44. விதாத்ரே நம:
45. தாதவ உத்தமாய நம:
46. அப்ரமேயாய நம:

37. தான் தானாகவே உண்டாகியவர். (அ. 'ஸ்வயமேவ பவதி ஸ்வயம்பூ:'.)

38. சுகத்தை யளிப்பவர். (அ. 'சம் ஸுகம் பக்தானாம் பாவயதீதி சம்பு:')

39. சூரிய மண்டலத்திலுறையும் பரமபுருஷர். (ஒ. 'த்யேய: ஸதா ஸவித்ரு - மண்டல-மத்யவர்த்தி நாராயண:' அல்லது ஒரே சூரியன் உலகனைத்திற்கும் ஒளி தருவது போல் அனைத்தையும் விளங்க வைப்பதால் ஆதித்யன் எனும் உவமைப் பெயர் பொருந்தும். ஒ. கீ. 13. 33.)

40. தாமரை மலருக்கு ஒப்பான கண்களை உடையவர்.

41. கம்பீரமான நாதத்தையுடையவர். (அவரிடமிருந்து வெளிப்படும் நாதமே வேதம். ஒ. 'அஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸித - மேதத் ருக்வேதோ யஜுர்வேத:'—ப்ரு. உப. 2. 4. 10)

42. முதலும் முடிவும் இல்லாதவர்.

43. (ஆதிசேஷ வடிவில்) உலகைத் தாங்குபவர். (எல்லா அசேதனங்களின் தொகுதியும் எல்லாவற்றிற்கும் விளைநிலமுமாகிய மூலப்பிரகிருதியின்கண் சேதனர்களின் தொகுதியாகிய பிரம்மதேவர் எனும் கர்ப்பத்தை வைப்பவர்.—ப.பா.)

44. எல்லாச் செயல்களையும் அவற்றின் பலன்களையும் விசேஷமாய் உண்டாக்குகிறவர்.

45. பிரம்மதேவரிலும் சிறந்தவர்.

46. பிரமாணங்களுக்கு எட்டாதவர். (ஒ. 'யன்-மனஸா ந மனுதே'—கேன. உப. 15.)

45. தாதுருத்தமாய நம:

47. ஹ்ருஷீகேசாய நம: 51. மனவே நம:
48. பத்மநாபாய நம: 52. த்வஷ்ட்ரே நம:
49. அமரப்ரபவே நம: 53. ஸ்தவிஷ்டாய நம:
50. விச்வகர்மணே நம:

47. இந்திரியங்களை ஆள்பவர். (அ. ஹர்ஷம்+க: (சுகம்) =ஹ்ருஷீக: | 'ஹ்ருஷீகாணி இந்த்ரியாணி தேஷாமீச:' ஒ. 'ஸூர்யா-சந்த்ரமஸோ: சச்வ-தம்சுபி: கேச - ஸம்ஜ்ஞிதை: | போதயன் ஸ்வாப - யம்ச்சைவ ஜகதுத்திஷ்டதே ப்ருதக் || போதனாத் ஸ்வாபனாச்சைவ ஜகதோ ஹர்ஷணம் பவேத் | அக்னிஷ்டோம க்ருதை-ரேவ கர்மபி: பாண்டுநந்தன | ஹ்ருஷீகேசோ மஹீசாநோ வரதோ லோகபாவன:'—மோக்ஷதர்மம்: ம. பா. சாந்தி. 352. 1-2.)

48. (உலகத்துக்கெல்லாம் காரணமாகிய) கமலத்தை நாபியில் உடையவர். (பத்மம் என்றால் நூறாயிரம் கோடி. காலவ்யூஹந்தான் பத்மம். காலத்தையும் விழுங்கிய பகவானிடமிருந்து காலம் கமல ரூபமாய் நாபியில் தோன்றிற்று. அதில் ஆதிகவியாகிய பிரம்மா தோன்றினர். புஷ்கரம், புண்டரீகம், பத்மம், சக்ரம் எனப்படுவதெல்லாம் காலம். ஒ. காலாத்மகஸ்து யத் பத்மம் நாபௌ யஸ்ய ஸ உச்யதே | பார்த்திவம் பூரி பத்மம் து நாபாவஷ்டதலம் மஹத்.)

49. தேவர்களுக்குத் தலைவர்.

50. பிரபஞ்சத்தைச் செய்தவர்.

51. எல்லாவற்றையும் நினைப்பவர். (அல்லது மந்த்ர வடிவினர். அ 'மனனான்-மனு:' ஒ. 'நான்யோऽதோऽஸ்தி மந்தா.' அவரைக் காட்டிலும் வேறாக நினைப்பவர் இல்லை.—ப்ரு. உப. 3. 7. 23. ஒ உபத்ரஷ்டாऽனுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர:—கீ. 13. 22. ஒ. மனஸோ மன:'—கேன. உப. 1. 2.)

52. (ஸம்ஹார காலத்தில்) எல்லாவற்றையும் அழிப்பவர். (அ. 'தனூகரணத்வாத் த்வஷ்டா, த்வக்ஷதேஸ் - தனூகரணத்வார்த்தே.)

53. மிகப்பருத்தவர்.

54. ஸ்தவிராய த்ருவாய நம:
55. அக்ராஹ்யாய நம:
56. சாச்வதாய நம:
57. க்ருஷ்ணாய நம:
58. லோஹிதாக்ஷாய நம:
59. ப்ரதர்த்தனாய நம:
60. ப்ரபூதாய நம:
61. த்ரிககுப்தாம்னே நம:

54. பழைமையானவரும் நிலையானவரும், (ஒ. 'பூர்வோ யோ தேவேப்யோ ஜாத:'—எவர் தேவர்களுக்கும் முன் உண்டானவரோ. ஒ. 'ய: ஸ ஸர்வேஷு பூதேஷு நச்யத்ஸு ந விநச்யதி'—கி. 8. 20.)

55. இந்திரியங்களால் அறியக்கூடாதவர். (ஒ. 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ' எதினின்று எட்டிப்பிடிக்க முடியாமல் வாய்ச் சொற்கள் திரும்பி விடுகின்றனவோ மனத்துடன் கூட—தை. உப. 2. 9. ஒ உன்னுடைய இக்கண்களால் என்னைக் காண இயலாது.—கீ. 11. 8.)

56. எல்லாக் காலங்களிலும் இருப்பவர். (ஒ. 'சாச்வதம் சிவ-மச்யுதம்'—நாராயண ஸூக்தம்.)

57. கரிய நிறம் படைத்தவர். (அல்லது ஸச்சிதானந்த வடிவினர். ஒ. 'ஸச்சிதானந்த-ரூபாய க்ருஷ்ணாயாக்லிஷ்ட காரிணே | நமோ வேதாந்த-வேத்யாய குரவே புத்தி ஸாக்ஷிணே ||'—சங். ஒ. 'நீலோऽபி நீரந்த்ர தம; ப்ரதிப:'—லீலாசுகர். ஒ. நிவாஸ-வ்ருக்ஷ: ஸாதூனாமா-பன்னானாம் பரா கதி: | பக்தார்த்திபஞ்ஜன: ஸ்ரீமான் க்ருஷ்ண ஏவ கதிர்-மம ||')

58. (தாமரைபோல்) சிவந்த கண்களையுடையவர். (ஒ. 'ஸமா வ்ருஷபோ லோஹிதாக்ஷ: ஸூர்யோ விபச்சின்-மனஸா புனாது'—ஸந்நியோபஸ்தானம்).

59. பிரளயகாலத்தில் எல்லாவற்றையும் அழிப்பவர்.

60. ஞானம் ஐசுவரியம் முதலிய குணங்கள் நிரம்பியவர்.

61. (மேல் கீழ் நடுவாகிய) மூன்று உலகங்களுக்கும் இருப்பிடம். (த்ரிபாத்-விபூதி எனப்படும் பரமபதத்தை இடமாக உடையவர். அல்லது மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்ட ஞானம்-சக்தி, பலம்-ஐசுவரியம், வீரியம்-தேஜஸ் என்னும் ஆறு குணங்களுக்கும இடமாயிருப்பவர். த்ரிக்குத், தாமா என இரண்டு நாமமுமாம்.—ப. பா.)

54. ஸ்தவிராய நம: த்ருவாய நம:। —ப. பா.
61. த்ரிககுத்தாம்னே நம:। —ப. பா.

62. பவித்ராய நம: 66. ப்ராணுய நம:
63. மங்கலாய பரஸ்மை நம: 67. ஜ்யேஷ்டாய நம:
64. ஈசாஞய நம: 68. ச்ரேஷ்டாய நம:
65. ப்ராணதாய நம: 69. ப்ரஜாபதயே நம:

62. தூய்மைப்படுத்தும் ரிஷியாகவும் மந்திரமாகவும் தேவதையாகவும் இருப்பவர். (ஒ. யேன புஞதி யோ வா புஞதி.)

63. சிறந்த மங்கள வடிவினர். (அல்லது வழிபடுவோர்க்கு சிறந்த நலன்களே அருள்பவர். ஒ. அசுபானி நிராசஷ்டே தனேதி சுபஸந்ததிம் | ஸ்ம்ருதி-மாத்ரேண யத் பும்ஸாம் ப்ரஹ்ம தன் மங்கலம் விது: ||— விஷ்ணுபுராணம். பரம் மங்கல-மித்யேக-மிதம் நாம ஸவிசேஷணம்—சங்.)

64. எல்லாவற்றையும் அடக்கியாள்பவர்.

65. உயிர்களே நடத்துகிறவர். (ப்ராணுன் தஜாதிசேஷ்டயதிதி வா ப்ராணத: || ஒ. 'கோ ஹ்யேவான்யாத் க: ப்ராண்யாத்' தை. உப. 2. 7. அல்லது கால ரூபியாக உயிர்களேத் துண்டிப்பவர். ஒ. காலோஃஸ்மி லோககக்ஷயக்ருத் ப்ரவ்ருத்த: கீ. 11. 32.)

66. உயிர் வடிவினர். (அல்லது உயிர்க்குயிராகியவர். ஒ. 'ப்ராணஸ்ய ப்ராண:'—கேன. உப. 1. 2.)

67. (அனைத்திற்கும்) முதன்மையானவர். (ஒ. 'பூர்வோ யோ தேவேப்யோ ஜாத:' தேவர்களுக்கு முன்னுண்டாகியவர். புருஷ ஸூக்தம், அல்லது 'ப்ராணோ வாவ ஜ்யேஷ்டச்ச ச்ரேஷ்டச்ச' என்னும் சாந்தோக்ய சுருதியால் முக்கியப் பிராணன் எனலுமாம்.)

68. (அனைத்திற்கும்) மேலாகியவர். (பிரம்மஸூத்ரம் 2, 4, 8ல் விளக்கியுள்ளபடி எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பதால் ஜ்யேஷ்டர்; எல்லாவற்றையுங் கடந்து மேலாயிருப்பதால் சிரேஷ்டர்.)

69. உயிர்த் தொகுதிக்குத் தலைவர்.

63. பரஸ்மை மங்களாய நம:. ப. பா.

70. ஹிரண்யகர்ப்பாய நம: 72. மாதவாய நம:
71. பூகர்ப்பாய நம: 73. மதுஸூதனாய நம:

---

70. பொன்மயமான பிரம்மாண்டத்தினுள் பிரம்மரூபியாக உறைபவர். (அல்லது ஹிரண்யகர்ப்பர் எனப்படும் பிரம்மாவுக்கும் ஆத்மாவாய் விளங்குவதால் ஹிரண்யகர்ப்பர். குற்றமற்ற சுத்த ஸத்துவமே ஹிரண்யம் எனப்படுவது. அதுவே பரமபதம். அதில் உறைபவர். ப. பா.)

71. பூமியைத் தமது வயிற்றினுள் வைத்துக் காப்பவர். (ஆயர்பாடியின் அமளியை அடக்கக் கண்ணனை யசோதை உரலில் கட்டியபோது உலகனைத்தும் வயிற்றில் கட்டுண்டு அமளிப்படும் ஓசையை யோகமாயையால் யசோதை கேட்கலானாள். கண்ணன் மண் தின்றதைச் சோதிக்க வாயைத் திறக்கச் சொன்னபோது அவன் வாயினுள் வையகங் கண்டாள்.)

72. லக்ஷ்மியின் பதியாகியவர். (அ. 'மா' எனப்படும் திருவின் தவ:' நாயகன். அல்லது மது வித்தையால் உணர்தற்குறியவராதலால் மாதவர். அல்லது மௌனத்தாலும், தியானத்தாலும், யோகத்தாலும் உணர்தற்குறியவர். ஒ. மௌனாத்-த்யானாச்ச யோகாச்ச வித்தி பாரத மாதவம்.'—ம. பா. உத். 69. 4. ஒ. 'மாதவோ பக்தவத்ஸல:' ஞானம் சக்தி பலம் ஐசுவரியம் வீரியம் தேஜஸ் என்னும் ஆறு குணங்களும் சேர்ந்து உருக்கொண்டவளும் பகவானுடைய எல்லாச் சக்திகளுக்கும் தலைமையாக உலகங்களை நடத்தும் பராசக்தியும், உலகனைத்தும் வியாபித்திருப்பதால் அனந்தை என்று சொல்லப்படுகிறவளும் தயாமூர்த்தியுமாகிய திருமகள் தம்மை விட்டு என்றும் அகலப் பெறுமலிருப்பவர். ப. பா.)

73. மது எனும் அசுரனைக் கொன்றவர். (எந்த இயற்கை விஷய சுகத்தைத் தேன் எனக் கருதுகிறதோ அதுவே மது எனும் அசுரனைத் தோன்றுகிறது. ஒ. 'அசுஷயம் மதுஹந்தாரம் ஜாநாமி'—ராமாயணத்தில் பரசுராமர். விஷ்ணு யோக நித்திரையிலிருக்கும்போது அவருடைய காதுக் குறும்பியிலிருந்து உண்டானவர்கள் மது கைடபர் என்ற அசுரர்கள். பிரம்மாவின் பிரார்த்தனைக் கிணங்கி விஷ்ணு அவர்களைக் கொன்றார். ஒ. தேவீமாஹாத்மியம் அத். 1.)

74. ஈச்வராய நம: 77. மேதாவினே நம:

75. விக்ரமிணே நம: 78. விக்ரமாய நம:

76. தன்வினே நம: 79. க்ரமாய நம:

---

74. ஸர்வசக்தியுள்ளவர். (ஆக்கவும் அழிக்கவும் மாற்றவும் காக்கவும் வல்லமை பொருந்தியவர். ஒ. 'ஈச்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசே அர்ஜுன திஷ்டதி । ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா ॥' அர்ஜுனா! தேகமாகிய இயந்திரத்தில் ஏற்றி வைக்கப்பட்ட பொம்மைகள் போன்ற எல்லாப் பிராணிகளையும் மாயாசக்தியினால் ஆட்டிவைத்துக் கொண்டு ஈசுவரன் எல்லாப் பிராணிகளுடைய இருதயத்துள்ளும் நிற்கிறான்—கீ. 18. 61.

75. எதிரிகளை அழிக்கும் ஆற்றலுடையவர். (ஒ. 'பிசாசான் தானவான் யக்ஷான் ப்ருதிவ்யாஞ்சைவ ராக்ஷஸான் । அங்குல்யக்ரேண தான் ஹன்யா-மிச்சன் ஹரிகணேச்வர ॥' வானரப் படைத்தலைவனே! பைசாசர்களோ, தானவர்களோ, யக்ஷர்களோ, பூமியிலுள்ள ராக்ஷஸர்களோ, எவராயினும் நான் விரும்பினால் விரல் நுனியால் அவர்களைக் கொல்லுவேன்'.—ஸ்ரீராமாயணம். 6. 18. 23.)

76. வில்லாளி. (ஒ. 'நான் ஆயிதமேந்தியவர்களில் ராமன்'—கீ. 10. 31. புலன்களுக்குக் காரணமாகிய ஸாத்துவிகா ஹங்காரமே பகவானுடைய கையில் சார்ங்கம் எனும் வில் வடிவில் அமைந்திருப்பது.)

77. அனைத்தையும் அறியும் மதியூகம் வாய்ந்தவர். (ஒ. 'ய: ஸர்வஜ்ஞ: ஸர்வ-வித் யஸ்ய ஜ்ஞானமயம் தப:' எல்லாவற்றையும் அறிந்தவரும் எல்லாவற்றையும் அறிபவரும் எவரோ, ஞான பூர்த்தியே எவருடைய தவச் சக்தியோ அவர்.—மு. உப. 1. 9.)

78. உலகத்தை அளந்தவர். (ஒ. 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி'—திருப்பாவை. வேதமூர்த்தியான கருடனை வாகனமாகக் கொண்டு செல்லுபவர்.)

79. அனைத்தையும் வியாபித்திருப்பவர் (ஒ. 'யச் ச கிஞ்சிஜ்ஜகத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:' எவ்வளவு சிறிதாயினும் உலகிலுள்ள அனைத்தையும் வியாபித்திருப்பவர் நாராயணர்.-நாராயணஸூக்தம்.)

80. அனுத்தமாய நம:
81. துராதர்ஷாய நம:
82. க்ருதஜ்ஞாய நம:
83. க்ருதயே நம:
84. ஆத்மவதே நம:
85. ஸுரேசாய நம:
86. சரண்யாய நம:

---

80. தமக்கு மேற்பட்டவர் இல்லாதவர். (ஒ. 'யஸ்மாத் பரம் நாபர-மஸ்தி கிஞ்சித்'—நாராயண உப. 12. 3. ஒ. 'ந த்வத்ஸமோஸ்த்யப்யதிக: குதோऽன்ய:' உனக்குச் சமமான வர் இல்லை என்றால் மேம்பட்ட வேறொருவர் எங்ஙனம்? கீ. 11. 43. உயர்வற உயர்நலமுடையவன் யவனவன், மயர்வற மதி நலமருளினன் யவனவன், அயர்வறு மமரர்கள் அதிபதியவன வன், துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.-நம்மாழ்வார் 1. 1. 1.)

81. எதிரிகளால் பயமுறுத்த முடியாதவர். (கடல் போல் மிக ஆழ்ந்திருப்பதனால் கலக்க முடியாதவர்.—ப. பா.)

82. பிராணிகளின் நன்மை தீமைகளை அறிகிறவர். (அல்லது பச்சிலையோ பூவோ சிறிதளவு கொடுத்தாலும் மோக்ஷத்தை யளிப்பவர். சிறிய உபசாரத்தையும் பெரிய உபசாரமாகக் கொண்டு அதனை என்றும் மறவாதவர். ஒ. 'திரௌபதி நெடுந்தூரத்திலிருந்து என்னைக் கோவிந்தா என்று கூவினது வட்டியேறின கடன்போல் என்னுள்ளத்தை விட்டு நீங்காமலிருக்கிறது.'—ம. பா. உத். பர்வம்.)

83. முயற்சியா யிருப்பவர். (அல்லது செய்கையாயிருப் பவர். தன்னை நாடும் எண்ணத்திற்குக் காரணமாகிய ஸுகி ருதத்தையும் அவர்கள் மேல் அனுக்கிரகம் வைத்துத் தாமே கொடுப்பவர்.—ப. பா. ஒ. எதனால் அவர்கள் என்னை அடை வார்களோ அந்த புத்தியோகத்தை நான் கொடுக்கிறேன். கீ. 10. 10.)

84. (தமக்கு வேறு ஆதாரமின்றி) தம் மகிமையையே தமக்கு ஆதாரமாகக் கொண்டிருப்பவர். (ஒ. 'ஸ பகவ: கஸ்மின் ப்ரதிஷ்டித இதி, ஸ்வே மஹிம்னி'—சா. உப. 7. 24. 1.)

85. தேவர்களுக்கு ஈசுவரர். (பிரம்மா இந்திரன் முதலிய தேவர்களை அவரவர்களுடைய அதிகாரங்களில் நிய மிப்பவர்.)

86. துயருற்றவர்களின் துயரைப் போக்குபவர். (ஒ. ஆர்த்தானா-மார்த்தி ஹந்தாரம் பீதானாம் பயநாசனம் । த்விஷதாம் காலதண்டம் தம் ராமசந்த்ரம் நமாம்யஹம் ॥)

87. ச்ர்மணே நம:
88. விச்வரேதஸே நம
89. ப்ரஜாபவாய நம:
90. அஹ்னே நம:
91. ஸம்வத்ஸராய நம:
92. வ்யாலாய நம:
93. ப்ரத்யயாய நம:
94. ஸர்வதர்சனாய நம:
95. அஜாய நம:

---

87. பரமானந்த வடிவினர்.

88. உலகத்திற்கு வித்தாகியவர். (ஒ. எல்லாக் கருப்பைகளிலும் எந்தெந்த உருவங்கள் பிறக்கின்றனவோ அவைகட்கெல்லாம் மஹத் என்னும் பெரும் பிரகிருதியே பிறப்பிடமாகிய க்ஷேத்ரம் அல்லது தாய். நானே கர்ப்பாதானம் செய்யும் தகப்பன். கீ. 14. 4.)

89. பிரஜைகளின் உற்பத்திக்குக் காரணமாகியவர்.

90. பகல்போல் பிரகாசமாயிருப்பவர். (அநாதியான அவித்தை எனும் நித்திரையிலிருந்து கண்விழிக்கும் போதே முதலில் தம் ஸ்வரூபததைக் காண்பிப்பதனால் பகல் போன்றவர். தூக்கம் விழித்தபோதே புலப்படுவது பகலன்றோ?--- ப. பா. ஒ. ஆத்மஞானத்தால் எவர்களுடைய அஞ்ஞானம் அழிவுற்றதோ அவர்களுக்கு ஞானமானது சூரியனைப்போல் அந்தப் பரம்பொருளைப் பிரகாசிக்கச் செய்கிறது.—கீ. 5. 16.)

91. ஸம்வத்ஸரமாகிய காலரூபி.

92. மஹாஸர்ப்பம்போல் யாராலும் பிடிக்கமுடியாதவர்.

93. அறிவே வடிவாகியவர். ('ப்ரதீதி: ப்ரஜ்ஞா தத்ரூபத்வாத் ப்ரத்யய:। ஒ. 'ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம.' ஐ. உப. 3. 3.)

94. எல்லாவற்றையுங் கண்களாயுடையவர். (அல்லது எல்லாவற்றையும் அறிகிறவர். ஒ. 'ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோঽக்ஷி—சிரோமுகம்.' கீ. 13. 13.)

95. பிறப்பில்லாதவர். (ஒ. பிறப்பற்றவனாகவும், மாறுபாடற்றவனாகவும் உயிர்கட்கெல்லா மீசனாகவும் இருந்தும் என் பிரகிருதியை வசப்படுத்திக் கொண்டு என் மாயையினால் தோன்றுகிறேன்.--கீ. 4. 6. தேஹவானிவ ஜாத இவ நலோகவத்.'--சங்.)

96. ஸர்வேச்வராய நம: 99. ஸர்வாதயே நம:
97. ஸித்தாய நம: 100. அச்யுதாய நம:
98. ஸித்தயே நம:

---

96. எல்லோருக்கும் ஈசுவரர். (ஒ. ''யோ லோகத்ரய மாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர:' கீ. 15.17. ஒ. வானத்தவர்க்கு மல்லாதவர்க்கும் மற்றெல்லா யவர்க்கும் ஞானப்பிரானை யல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே.--நம்மாழ்வார்.)

97. எப்பொழுதும் எங்கும் உள்ளவர், 'நித்யம் நிஷ்பன்ன-ரூபத்வாத் ஸித்த:' சங். ஒ. ,அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயானந்த பூர்த்தியாகி யருளொடு நிறைந்ததெது' —தாயுமானவர். உபாயங்களைக் கொண்டு தேட வேண்டாது புதைத்து வைத்த பொருள் போல் முன்னமே அமைந்திருப்பவர்.--ப. பா.)

98. எல்லாவற்றிலும் சிறந்த பயனாயிருப்பவர். (சுவர்க்கம் முதலியவை அழிவுறுவனவாதலால் அவை சிறந்த பயனாக மாட்டா. சேதனன் செய்யும் சிறிய பக்தி முதலிய உபாயங்களையும் பெரியனவாய்க் கொண்டு பரமபுருஷார்த்தமான தமது ஸ்வரூபத்தைத் தமது பேரருளால் தாமே அளிப்பவர் என்பது இரண்டு நாமங்களாலும் தேர்ந்த பொருள்.'--ப. பா.)

99. அனைத்திற்கும் ஆதிகாரணமாகியவர். (ஒ. நான் அனைத்திற்கும் பிறப்பிடம், என்னிடமிருந்தே எல்லாம் தோன்றி இயங்குகின்றது என்றுணர்ந்து புத்திமான்கள் எங்கும் என்னைப் பாவித்துப் பூஜிக்கின்றனர். கீ. 10 8.)

100. என்றும் வழுவாதவர். ('ஸ்வரூப-ஸாமர்த்யாந்-ந ச்யுதோ ந ச்யவதே ச ச்யவிஷ்யதே இதயச்யுத:' சங். ஒ. சாச்வதம் சிவ-மச்யுதம்'—நாராயண ஸூக்தம. ஒ. 'அச்யுதானந்த கோவிந்த நாமோச் சாரண-பேஷஜாத் | நச்யந்தி ஸகலா ரோகா: ஸத்யம் ஸத்யம் வதாம் யஹம்||' தம்மை யடைந்தவர்களை விட்டு நீங்காதவர்; அடைந்தவர்களுக்குத் தவறுதல் வராமலிருக்கும்படி செய்பவர்—ப. பா. தன் பதத்திலிருந்து நழுவாதவர், பக்தர்களை நழுவவிடாதவர், பக்தர்கள் உள்ளத்திலிருந்து நழுவாதவர், என்ற மூன்று கருத்துக்கள் அடக்கம். 'அச்யுத' நாமம் ஸஹஸ்ரநாமத்தில் இன்னும் இரண்டு இடங்களில வருகிறது.—அச்யுத:ப்ரதித: ப்ராண:, த்ருட: ஸங்கர்ஷணோச்யுத: |)

101. வ்ருஷாகபயே நம:
102. அமேயாத்மனே நம:
103. ஸர்வயோக-விநி:ஸ்ருதாய நம:
104. வஸவே நம:
105. வஸுமனஸே நம:
106. ஸத்யாய நம:
107. ஸமாத்மனே நம:

---

101. தர்ம ரூபியாகவும் வராகரூபியாகவுமிருப்பவர் (எல்லா விருப்பங்களையும் வர்ஷிப்பதால் தர்மம் 'வ்ருஷ:' எனப்படும். 'காத்' நீரிலிருந்து பூமியை 'அபாத்' காப்பாற்றியதால் வராகம் 'கபி' எனப்பட்டது. ஒ. 'கபிர்வராஹ: ச்ரேஷ்டச்ச தர்மச்ச வ்ருஷ உச்யதே । தஸ்மாத் வ்ருஷாகபிம் ப்ராஹ காச்யபோ மாம் ப்ரஜாபதி: ||—ம. பா. சாந்தி, 352.24. ஒ. 'வ்ருஷான் தேஹான் ஜீவரூபேண ப்ரவிச்ய ஆகம்பயதீதி வ்ருஷாகபி:'—ஸ்ரீதரர்: பாக. 10.1.20).

102. அளவிடமுடியாத வடிவினர்.

103. எல்லாத் தொடர்பும் நீங்கியவர். (அல்லது எல்லா யோகங்களாலும் அறியக்கூடியவர்.)

104. எல்லா உயிர்களிலும் வசிப்பவர். (அல்லது எல்லா உயிர்களுக்கும் வாசஸ்தானமாயிருப்பவர். அல்லது வசுக்களில் ஒருவராகிய அக்கினி வடிவினர். (ஒ. 'வஸூனும் பாவகச் சாஸ்மி'—கீ. 10. 23.)

105. சிறந்த மனம் படைத்தவர். (விருப்பு வெறுப்பால் கலங்காததால் சிறந்தவர். 'தன்னை நினைப்பவர்களைத் தனது செல்வமாக மனதில் கருதுபவர்.—ப. பா.)

106. மெய்யே வடிவாய்க் கொண்டவர். (ஒ. 'ஸத்யம் ஜ்ஞான-மனந்தம் ப்ரஹ்ம'—தை. உப. 2. 1. 1. உருவமும் அருவமும் ஆகியவர். ஒ. 'ஸச்ச த்யச்சாபவத்' தை. உப. 2.6. அல்லது 'ஸதிதி ப்ராண: தீத்யன்னம் யமித்யஸாவாதித்ய:' ஐத. ஆரண். 2, 1. 5-6. அல்லது நல்லோர்க்கு நல்லவர்.)

107. எல்லா உயிர்களிடத்தும் ஸமமான ஆத்மாவாயிருப்பவர். (அல்லது ஏற்றத்தாழ்வுகளைக் கருதாது எல்லோரையும் ஸமமாய்க் கொள்பவர்.)

108. அஸம்மிதாய நம:
109. ஸமாய நம:
110. அமோகாய நம:
111. புண்டரீகாக்ஷாய நம:
112. வ்ருஷகர்மணே நம:
113. வ்ருஷாக்ருதயே நம:
114. ருத்ராய நம:

108. (அஸம்மித:) அளவிடப்படாதவர். ('ஸம்மித:' அடங்கியிருப்பவர். தாமரைக்கண்ணனை எனது ராமன் இன்னும் பதினறு வருஷங்கள் நிரம்பாதவன் என்று தசரதர், இவன் எனது சொந்தப் பிள்ளை என்று வசுதேவர் சொல்வதைக் கவனிக்க.—ப. பா.)

109. எக்காலத்தும் மாறுபாடற்றவர். (அல்லது 'மயா லக்ஷ்ம்யா ஸஹ வர்த்தத இதி வா ஸம:')

110. தமது ஸம்பந்தம் வீண் போகாதவர். (பூஜிப்பவர்க்கும், துதிப்பவர்க்கும், தியானிப்பவர்க்கும் எல்லாப் பலன்களையும் அளிப்பவர். தமது ஸங்கல்பம் வீணுகாதவர். ஒ. 'ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:'— சா. உப. 8. 7. 1. ஒ. 'ராமா! உம்மைக் காண்பதும் துதிப்பதும் பயன்படாமற் போவதில்லை; எந்த மனிதர்கள் உம்மிடம் பக்தியுள்ளவர்களோ அவர்கள் பயன் பெறுமல் போவதில்லை'.—ஸ்ரீராமாயணம்: யுத்த காண்டம்.)

111. தாமரை மலர் போன்ற கண்களையுடையவர். (அல்லது 'ஹ்ருதயஸ்தம் புண்டரீக-மச்னுதே வ்யாப்னோதி தத்ரோபலக்ஷித இதி புண்டரீகாக்ஷ:। யத்புண்டரீகம் புரமத்யஸம்ஸ்தம் இதி ச்ருதே:।'—சங். புண்டரீகம் எனப்படும் பரமபதத்தில் நிலையாய் வசிப்போர்க்குக் கண் போன்றவர். —ப. பா.)

112. தர்மநிமித்தமான செய்கையை உடையவர்.

113. தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகவே அவதாரத்தில் வடிவேற்பவர். (ஒ. 'தர்ம-ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே' கீ. 4.8.)

114. துக்கத்தையும் துக்கத்தின் காரணத்தையும் ஓட்டுகிறவர். (ஒ 'ருர்:து:க்கம் து:க்கஹேதும் வா வித்ராவயதி ஸ ப்ரபு:। ருத்ர இத்யுச்யதே தஸ்மாச் சிவ: பரமகாரணம்॥'—லிங்கபுராணம். தனது திவ்விய ரூபத்தாலும் லீலைகளாலும் பக்தர்கள் நெஞ்சுருகிக் கண்ணீர் விடும்படி செய்பவர்.—ப. பா.)

---

108. ஸம்மிதாய நம:. --ப. பா.

115. பஹுசிரஸே நம:	119. அம்ருதாய நம:
116. பப்ரவே நம:	120. சாச்வதஸ்தாணவே நம:
117. விச்வயோனயே நம:	121. வராரோஹாய நம:
118. சுசிச்ரவஸே நம:	122. மஹாதபஸே நம:

115. பல தலைகளையுடைய விராட்புருஷ வடிவினர். (ஒ. 'ஸஹஸ்ர-சீர்ஷா புருஷ:'—புருஷஸூக்தம்).

116. உலகங்களைத் தாங்குபவர். ('பிபர்த்தி லோகானிதி பப்ரு:'—சங். ஆதிசேஷரூபத்தினால் உலகங்களைத் தாங்குகிறவர்.—ப. பா.)

117. அனைத்திற்கும் பிறப்பிடமாகியவர். (ஒ. 'யோனிச் ச ஹி கீயதே'—பி. சூ. 1 : 4. 27 'யதோ வா இமானி பூதானி ஜாயந்தே' தை. உப. 3-1.)

118. பாவங்களைப் போக்கும் பரிசுத்தமான திவ்விய நாமங்களை உடையவர். ('சுசீனி ச்ரேயாம்ஸி நாமானி ச்ரவணீயான்-யஸ்யேதி சுசிச்ரவா:' சங். ஒ. 'தனஞ்ஜயா! கேட்பதற்கினிய பக்தர்களின் பரிசுத்தமான சொற்களைக் கேட்கிறேன்; அன்பில்லாத சொற்களைக் கேட்பதில்லை. அதனால் என்னை 'சுசிசிரவஸ்' என்பர்'.—ம. பா. சாந்திபர்வம், மோக்ஷ தர்மம்.)

119. அழிவில்லாதவர். (ஒ. 'அஜரோऽமர:'—ப்ரு. உப. 4. 4. 25. முக்தியை யளித்து மூப்பு இறப்புக்களை யொழிப்பவர்.—ப. பா.)

120. என்றும் நிலையாயிருப்பவர். ('தேவலோகத்திய அமிருதம் போலன்றி என்றும் அழிவில்லாமலும் எவராலும் அபகரிக்கப்படாமலும் பக்தர்களிடம் நிலையாயிருப்பவர்'.—ப. பா.)

121. (தன்னையடைந்தவர் திரும்பி வருதலில்லாத) சிறந்த ஏற்றமுடையவர். (ஒ. 'எதை அடைந்தபின் திரும்பி வருதலில்லையோ அது தான் எனது மேலிடம்.' கீ. 8.21.)

122. (சிருஷ்டியைப் பற்றிய) சிறந்த ஞானமுள்ளவர். (ஒ. 'யஸ்ய ஜ்ஞானமயம் தப:'— மு. உப. 1.1.9.).

123. ஸர்வகாய நம:	127. வேதாய நம:
124. ஸர்வவித்பானவே நம:	128. வேதவிதே நம:
125. விஷ்வக்ஸேநாய நம:	129. அவ்யங்காய நம:
126. ஜனார்த்தனாய நம:	130. வேதாங்காய நம:

123. எங்கும் செல்லுகிறவர். (அனைத்திற்கும் காரணமாதலால் காரியங்களிற் புகுந்திருப்பவர். ஒ. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமா யானந்த பூர்த்தியாகி யருளொடு நிறைந்தெதது.—தாயுமானவர். 'எங்கும் நிறைந்திருப்பன் எட்டியு மெட்டாதிருப்பன்'--கிளிக்கண்ணி. 'யத்ர ஸர்வம் யத: ஸர்வம் ய: ஸர்வம் ஸர்வஸம்ச்ரய: | ஸர்வகத்வாதனந்தஸ்ய ஸ ஏவாஹ மவஸ்தித: ||'—விஷ்ணுபுராணம்.)

124. அனைத்தையும் அறிந்து பிரகாசிப்பவர். (ஒ. 'தமேவ பாந்த-மனுபாதி ஸர்வம்'—கட. உப. 4.15. ஸர்வ விதே நம:, பானவே நம: என்று இரண்டும் நாமம்.—ப. பா.)

125. அசுர சேனைகளைப் பல திசைகளில் சிதறடிப்பவர்.

126. கெட்ட மனிதர்களை அழிப்பவர் அல்லது பீடிப்பவர். (அல்லது மனிதர்களால் ஐசுவரியத்திற்காகவும் மோக்ஷத்திற்காகவும் வேண்டப்படுகிறவர்.)

127. வேத வடிவாகியவர்.

128. வேதத்தின் பொருளை அறிபவர். (ஒ. 'வேதத்தை ஆக்குபவனும் வேதத்தை உணர்பவனும் நானே' கீ. 15. 15. 'ஸர்வே வேதா: ஸர்வவேத்யா: ஸசாஸ்த்ரா: ஸர்வே யஜ்ஞா: ஸர்வ இஜ்யாச்ச க்ருஷ்ண: | விது: க்ருஷ்ணம் ப்ராஹ்மணாஸ்-தத்வதோ யே தேஷாம் ராஜன் ஸர்வயஜ்ஞா: ஸமாப்தா: |' —ம. பா.)

129. புலன்களுக்கெட்டாதவர். (அல்லது ஞானம் முதலிய குணங்கள் நிறைந்தவர். 'ஜ்ஞானாதிபி: பரிபூர்ணோ விலக:)'

130. வேதங்களை அங்கங்களாயுடையவர்.

---

124. ஸர்வவிதே நம | பானவே நம | —ப. பா.

131. வேதவிதே நம:
132. கவயே நம:
133. லோகாத்யக்ஷாய நம:
134. ஸுராத்யக்ஷாய நம:
135. தர்மாத்யக்ஷாய நம:
136. க்ருதாக்ருதாய நம:
137. சதுராத்மனே நம:
138. சதுர்வ்யூஹாய நம:

---

131. வேதங்களை ஆராய்பவர். ('வேதான் விசாரயதீதி வேதவித்.')

132. அனைத்தையுங் காண்பவர். ('கவி: க்ராந்ததர்சீ ஸர்வத்ருக்; நான்யோதோஸ்தி த்ரஷ்டா இத்யாதிச்ருதே: கவிர்மனீஷி இத்யாதி மந்த்ரவர்ணாத்'—சங். 'அனந்த-மவ்யயம் கவிம்'—நாராயண ஸூக்தம்.)

133. உலகங்களை மேல்பார்வையிடுபவர். ('ஸர்வேஷாம் லோகானாம் ப்ராதான்யேனோபத்ரஷ்டா'—சங். ஒ. 'மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்' கீ 9.10. 'உபத்ரஷ்டானுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர:'—கீ. 13.22.)

134. தேவர்களுடைய செயல்களை மேல் பார்வையிடுபவர்.

135. (அவ்வவற்றிற்குறிய பலன்களை யளிக்க) தர்மா தர்மங்களை நேராகக காண்பவர்.

136. காரியமாகவும் காரணமாகவும் இருப்பவர். ('க்ருதச்ச கார்யரூபேண, அக்ருதச்ச காரண ரூபேணேதி க்ருதாக்ருத:'—சங். 'போகம் ஐசுவரியம் முதலிய அநித்திய பலன்களைத் தரும் பிரவிருத்தி தர்மமாகவும், நித்திய பலனான மோக்ஷத்தைத் தரும் நிவிருத்தி தர்மமாகவும் இருப்பவர்.'—ப. பா.)

137. நான்கு மூர்த்திகளை உடையவர். (ஒ. 'ப்ரஹ்மாதக்ஷாதய: காலஸ்-ததைவாகில ஜந்தவ:। விபூதயோ ஹரே-ரேதா ஜகத: ஸ்ருஷ்டி-ஹேதவ:॥ விஷ்ணுர்-மன்வாதய: கால: ஸர்வபூதானி ச த்விஜ। ஸ்திதோ-நிமித்தபூதஸ்ய விஷ்ணோ-ரேதா விபூதய:॥ ருத்ர: காலோऽந்தகாத்யாச்ச ஸமஸ்தாச்சைவ ஜந்தவ:। சதுர்த்தா ப்ரலயாயைதா ஜனார்த்தன-விபூதய:॥'—விஷ்ணுபுராணம் 1.22. 31-33.)

138. நான்கு வியூஹங்களை உடையவர். (ஒ. 'வ்யூஹ்யாத்மானம் சதுர்த்தா வை வாஸுதேவாதி-மூர்த்திபி:।

139. சதுர்-தம்ஷ்ட்ராய நம: 142. போஜனாய நம:
140. சதுர்ப்புஜாய நம: 143. போக்த்ரே நம:
141. ப்ராஜிஷ்ணவே நம: 144. ஸஹிஷ்ணவே நம:

ஸ்ருஷ்ட்யாதீன் ப்ரகரோத்,-யேஷ விச்ருதாத்மா ஜனார்த்தன: ||'—வியாஸர். ஜாக்கிரத்தில் அநிருத்தராகவும், ஸ்வப்னத்தில் பிரத்யும்னராகவும், ஸுஷுப்தியில் ஸங்கர்ஷணராகவும், துரீயத்தில வாஸுதேவராகவும் தாமே தம்மை நான்காக வகுத்துக் கொண்டிருப்பவர்.—ப. பா.)

139. நான்கு தெற்றிப்பற்களை உடையவர். (இது நரசிம்மாவதாரம். ஒப்புமையால நான்கு கொம்புகளை உடையவர் என்னலுமாம். ஒ. 'சத்வாரி ச்ருங்கா:'—ருக். வே. 4. 58. 3.)

140. நான்கு தோள்களை உடையவர். (ஒ. நான் உன்னைக் கிரீடம் தரித்துக் கதை பிடித்துச் சக்கரம் கையில் ஏந்தியவனாய்க் காண விரும்புகிறேன். ஆயிரம் தோள்களை உடையவனே! உலகம் நிறைந்த வடிவினனே! நான்கு கைகளுடன் கூடிய உருவமுடையவனாக ஆவாய்.—கீ. 11. 46.)

141. ஒளிவடிவமானவர்.

142. அனுபவிக்கப்படும் பிரகிருதி வடிவாகியவர். ('போஜ்ய-ரூபதயா ப்ரக்ருதிர்-மாயா போஜ்ய-முச்யதே'—பக்தர்களால் உணவுபோல சுகமாக அனுபவிக்கப்படுகின்றவர்.—ப. பா. ஒ. 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன்'—நம்மாழ்வார். 6.7.1.)

143. பிரகிருதியை அனுபவிக்கும் புருஷனாக இருப்பவர். (ஒ. பர்த்தா போக்தா மஹேச்வர:—கீ 13. 22. பக்தர்கள் நிவேதனம் செய்யும் பதார்த்தங்களை அமிருதத்தைப் போல அங்கிகரித்து உண்பவர். —ப. பா.)

144. (ஹிரண்யாக்ஷன் முதலியவர்களை) வென்று அடக்குகிறவர். ('ஸஹதே' வென்று அடக்குகிறான் என்பதால் 'ஸஹிஷ்ணு:'—சங். அறிந்தும் அறியாமலும் மனம் வாக்குக் காயங்களினால் தம்மிடத்திலும் தம்மடியாரிடத்திலும் செய்யும் அபராதங்கள் எல்லாவற்றையும் பொறுக்குந் தன்மையுடையவர்.—ப. பா.)

145. ஜகதாதிஜாய நம:
146. அனகாய நம:
147. விஜயாய நம:
148. ஜேத்ரே நம:
149. விச்வயோநயே நம:
150. புனர்வஸவே நம:
151. உபேந்த்ராய நம:
152. வாமனாய நம:
153. ப்ராம்சுவே நம:

---

145. உலகம் உண்டாவதற்கு முன் (ஹிரண்யகர்ப்ப வடிவில்) உதித்தவர். (ஒ. 'பூர்வோ யோ தேவேப்யோ ஜாத:' – புருஷ–ஸூக்தம்.)

146. (பிரபஞ்சத்தில் அவதரித்தும்) பாவம் சிறிதும் பற்றாதவர்: (ஒ. 'அபஹத-பாப்மா'—சா. உப. 8. 1. 5.)

147. (ஞானம் வைராக்யம் ஐசுவரியம் முதலிய குணங்களால் உலகனைத்தையும்) ஜயிப்பவர்.

148. (இயல்பாகவே அனைத்திற்கும் மேம்பட்டிருப்பதால்) ஜயசாலியாய் விளங்குபவர்.

149. உலகனைத்தையும் உதிக்குமிடமாய்க் கொண்டவர். (அல்லது உலகாகவும் அதன் காரணமாகவும் ஆகியவர். 'விச்வம் யோனிர்-யஸ்ய விச்வச்சாஸௌ யோனிச்சேதி வா விச்வயோனி:'—சங்.)

150. உடல்தோறும் க்ஷேத்ரஜ்ஞராய் உறைபவர். ('புன: புன: சரீரேஷு வஸதி க்ஷேத்ரஜ்ஞ-ரூபேணேதி புனர்வஸு:'—சங்.)

151. இந்திரனுக்குத் தம்பியாகியவர். (அல்லது இந்திரனுக்கும் மேலான இந்திரனாகியவர். ஒ. 'மமோபரி யதேந்த்ரஸ்த்வம் ஸ்தாபிதோ கோபி-ரீச்வர: । உபேந்த்ர இதி க்ருஷ்ண த்வாம் காஸ்யந்தி புவி தேவதா: ॥'—ஹரிவம்சம்.)

152. வாமனாவதாரம் செய்தவர். (வந்தனம் செய்தற்குரிவர். ஒ 'மத்யே வாமன-மாஸீனம் விச்வேதேவா உபாஸதே' கட. உப. 4. 3.)

153. மூவுலகையும் அளந்தபோது உயர்ந்தவர். (ஒ. 'தோயே து பதிதே ஹஸ்தே வாமனோऽபூதவாமன: । ஸர்வ தேவமயம் ரூபம் தர்சயாமாஸ வை ப்ரபு: ॥'—ஹரிவம்சம். ஒ. 'ஓங்கி யுலகளந்த உத்தமன்'—திருப்பாவை.)

154. அமோகாய நம:
155. சுசயே நம:
156. ஊர்ஜிதாய நம:
157. அதீந்த்ராய நம:
158. ஸங்க்ரஹாய நம:
159. ஸர்க்காய நம:
160. த்ருதாத்மநே நம:
161. நியமாய நம:
162. யமாய நம:
163. வேத்யாய நம:

154. வீண்போகாத செயலுடையவர். (தம்மை அடுத்தவர் யாரும் வீண்போகாமலிருக்கச் செய்பவர். பலிச்சக்ரவர்த்திக்கும் இந்திரனுக்கும் வித்தியாசமின்றிச் சிறந்த அனுக்கிரகத்தைச் செய்தவர்.–ப. பா.)

155. (தம்மைத் தியானிப்பவரையும் துதிப்பவரையும் ஆராதிப்பவரையும்) சுத்தப்படுத்துகிறவர். (ஒ. 'வாயினல் பாடி மனத்தினல் சிந்திக்கப் போய் பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'—திருப்பாவை.)

156. மிக்க வலிமையுடையவர்.

157. இந்திரனுக்கு மேற்பட்டவர்.

158. (ப்ரளய காலத்தில் அனைத்தையும்) ஸம்ஹரிப்பவர்.

159. சிருஷ்டிவடிவினர். (அல்லது சிருஷ்டி கர்த்தா 'தம்மைத்தாமே ஆக்கியளிப்பவர்'—ப. பா.)

160. பிறப்பிறப்பற்ற ஒரே நிலையான ஆத்மவடிவினர். (தம்மையே தந்து ஆத்மாக்களை உய்விப்பவர்—ப. பா.)

161. (பிரம்மாதி தேவர்களையும் தம்தம் அதிகாரங்களில்) நியமிப்பவர்.

162. (அந்தர்யாமியாயிருந்து அனைத்தையும்) அடக்கியாள்பவர். ('ய: ஸர்வாணி பூதான்யந்தரோ யமயத்யேஷ த ஆத்மா அந்தர்யாம்-யம்ருத:'—ப்ரு. உப. 3. 7. 15. 'நியமயதீதி நியம: | அந்தர்–யமயதீதி யம:'—சங்.)

163. (மோக்ஷத்தில் நாட்டமுடையவர்களால்) அறியக்கூடியவர். (ஒ. கற்பாரிராம பிரானையல்லால் மற்றுங் கற்பரோ?, புற்பா முதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே, நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும், நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே—திருவாய்மொழி. 7. 5. 1.)

164. வைத்யாய நம:
165. ஸதாயோகினே நம:
166. வீரக்னே நம:
167. மாதவாய நம:
168. மதவே நம:
169. அதீந்த்ரியாய நம:
170. மஹாமாயாய நம:

---

164. எல்லா வித்தைகளையும் அறிந்தவர். ('ஸர்வவித்யானும் வேதித்ருத்வாத்-வைத்ய:'—சங். 'தம்மைத் தியானிப்பவர்களுக்குப் பிறப்பு இறப்புக்களை நிவிருத்தி செய்யும் வகையை அறிந்தவர்.'—ப. பா. ஒ. பீயூஷபாணிம் குசலம் க்ரியாஸு தீரம் நிரீஹம் சுபதம் தயாளும் । ப்ரபுத்தஸாங்காகத-வைத்யம் தன்வந்தரிம் வைத்யவரம் நமாமி ।

165. எப்போதும் பிரகாசிக்கும் ஸ்வரூபம் உள்ளவர்.

166. அசுரவீரர்களை ஒழிப்பவர். (ஒ. பகைமையுடையவர்களும் கொடியவர்களும் மனிதப்பதர்களும் பாவிகளும் ஆன அவர்களைப் பிறந்திறந்துழலு முலகங்களில் அசுரயோனிகளிலேயே அடிக்கடி தள்ளுகிறேன். கீ. 16. 19.)

167. வித்தைக்குத் தலைவர். (ஒ. 'மா வித்யா ச ஹரே: ப்ரோக்தா தஸ்யா ஈசோ யதோ பவான் । தஸ்மான் மாதவ நாமாஸி தவ: ஸ்வாமீதி சப்தித: ॥'—ஹரிவம்சம். ஒ. மா ச ப்ரஹ்மஸ்வரூபா ச யா மூல-ப்ரக்ருதி-ரீச்வரீ । நாராயணீதி விக்யாதா விஷ்ணுமாயா ஸநாதனீ ॥ மஹாலக்ஷ்மீஸ்வரூபா ச வேதமாதா ஸரஸ்வதீ । ராதா வஸுந்தரா கங்கா தாஸாம் ஸ்வாமீ ச மாதவ: ॥)

168. தேன் போன்றவர். (ஒ. 'மது நமக்கு மது நமக்கு மது நமக்கு விண்ணெலாம், மதுரமிக்க ஹரி நமக்கு மதுவெனக்கதித்தலால்'.—பாரதி.)

169. புலன்களுக்கு எட்டாதவர். (ஒ. 'புத்தி க்ராஹ்ய-மதீந்த்ரியம்'—கீ. 6. 21. 'அசப்த-மஸ்பர்ச மரூப-மவ்யயம் ததாரஸம் நித்ய-மகந்தவச்ச யத்'—கட. உப. 3. 15.)

170. மிக்க மாயையுடையவர். ('மாயாவினு - மபி மாயா-காரித்வான்-மஹாமாய:'—சங். ஒ. 'தைவீஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா'—கீ. 7. 14. ஒ. 'இனியவன் மாயனெனவுரைப்பரேலும், இனியவன் காண்பரியனேலும்—இனியவன், கள்ளத்தால் மண்கொண்டு விண்கடந்த பைங்கழலான், உள்ளத்தினுள்ளே யுளன்—பூதத்தாழ்வார்).

171. மஹோத்ஸாஹாய நம: 176. மஹாத்யுதயே நம:
172. மஹாபலாய நம: 177. அநிர்த்தேச்ய-வபுஷே நம:
173. மஹாபுத்தயே நம:
174. மஹாவீர்யாய நம: 178. ஸ்ரீமதே நம:
175. மஹாசக்தயே நம: 179. அமேயாத்மனே நம:

---

171. மிக்க ஊக்கமுடையவர். (ஒ. பார்த்தா! செய்ய வேண்டிய கருமம் எனக்கு மூவுலகிலும் ஒரு சிறிதும் இல்லை; அடையப்படாததாயும் இனி அடைவதற்குரியதாயும் ஒன்றும் இல்லை; எனினும் கருமத்தில் முயன்று கொண்டே இருக்கிறேன்.—கீ. 3. 22.)

172. மிக்க வலிமையுள்ளவர். (ஒ. 'பலம் பலவதாமஸ்மி'—கீ. 7. 11.)

173. மிக்க ஞானமுள்ளவர். (ஒ. 'ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்ய ஜ்ஞானமயம் தப:'—மு. உ. ப. 1. 1.9.)

174. மிக்க விரியமுடையவர். ('மஹதுத்பத்தி-காரணமவித்யா-லக்ஷணம் வீர்ய-மஸ்யேதி மஹா-வீர்ய:'—சங். விகாரப்படுவதற்குக் காரணங்களிருப்பினும் தமது இயற்கை விகாரப்படாம லிருப்பவர்.—ப. பா.)

175. மிக்க ஸாமர்த்திய முள்ளவர்.

176. மிக்க ஒளிபொருந்தியவர். (ஒ. 'ஜ்யோதிஷாமபி தஜ்-ஜ்யோதிஸ்-தமஸ: பரமுச்யதே!'—கீ. 13. 17.)

177. இது இவ்விதமென்று சுட்டிக்காட்ட முடியாத ஸ்வரூபமுடையவர். (ஒ. 'ஆணல்லன் பெண்ணல்லன் அலியுமல்லன் காணலுமாகான் உளனல்லன் இல்லை யல்லன், பேணுங்கால் பேணுமுருவாகு மல்லனுமாம் கோணை பெரிதுடைத்தெம் பெமானைக் கூறுதலே.'—நம்மாழ்வார் 2.5.10.)

178. ஈசுவரத் தன்மையாகிய திருவுடன் கூடியவர்.

179. அளவிடமுடியாத ஞானமுள்ளவர். ('ஸர்வை: ப்ராணிபி-ரமேயா புத்தி-ராத்மா யஸ்ய ஸோऽமேயாத்மா.'—சங்.)

180. மஹாத்ரி-த்ருஷே நம:
181. மஹேஷ்வாஸாய நம:
182. மஹீ-பர்த்ரே நம:
183. ஸ்ரீநிவாஸாய நம:
184. ஸதாம்கதயே நம:
185. அநிருத்தாய நம:
186. ஸுராநந்தாய நம:
187. கோவிந்தாய நம:
188. கோவிதாம்-பதயே நம:

180. பெரிய மலையைத் தாங்கியவர். ('பெரிய மலையாகிய மந்தரத்தை அமுதங் கடையும்போதும், கோவர்த்தனத்தைப் பசுக்களைக் காக்கவும் தாங்கியதால் மஹாத்ரித்ருக்.' —சங். 'மஹாத்ரித்ருத்' என்றும் பாடம்.)

181. பெரிய வில்லாளி. (ஒ. 'ராம: சஸ்த்ரப்ருதாமஹம்.'—கீ. 10. 31.)

182. வராஹாவதாரம் செய்து பூமியைத் தூக்கியவர். (ஒ. பூமிர்த்தேனுர்த்தரணீ | லோகதாரிணீ உத்ருதாஸி வராஹேண க்ருஷ்ணேன சதபாஹுனு ||—தை. ஆ. ஆதிகூர்மரூபியாக எப்போதும் பூமியைத் தாங்கிக் கொண்டிருப்பவர்.)

183. ஸ்ரீதேவி நித்திய வாஸம் செய்யும் திருமார்பையுடையவர்.

184. ஸாதுக்களுக்குக் கதியாகியவர்.

185. எவராலும் தடுக்க முடியாதவர்.

186. தேவர்களை மகிழ்விப்பவர்.

187. 'கோ' எனும் பூமியைத் தூக்கியவர். (அல்லது பசுக்களுக்குத் தலைவர். அல்லது 'கோ' எனும் வாக்கு தன்னை அடையும்படி செய்பவர். ஒ. 'கோவிந்தேதி யதா-க்ரந்தத் க்ருஷ்ணு மாம் தூரவாஸினம்.' துன்புற்ற துரௌபதி 'கோவிந்தா' எனக் கூவியழைத்தாள். ஒ. 'பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூடமதே'—சங். ஒ. 'ஸர்வ பூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகன்மயி | பரமாத்மனி கோவிந்தே மித்ராமித்ரகதா குத: ||'—விஷ்ணுபுராணம்.)

188. வேதவாக்கை யறிந்தவர்களுக்குத் தலைவர். (ஒ. 'வேதாந்த க்ருத்-வேதவிதேவ சாஹம்'—கீ. 15. 15.)

189. மரீசயே நம:
190. தமனாய நம:
191. ஹம்ஸாய நம:
192. ஸுபர்ணாய நம:
193. புஜகோத்தமாய நம:
194. ஹிரண்யநாபாய நம:
195. ஸுதபஸே நம:
196. பத்மநாபாய நம:
197. ப்ரஜாபதயே நம:

---

189. ஒளி வடிவாகியவர். ('தேஜஸ்வினாமபி தேஜஸ்வான் மரீசி:'—சங். ஒ. 'தேஜஸ்வினா-மஹம்'—கீ. *10. 36.* அல்லது 'மரீசிர்-மருதா-மஸ்மி' கீ. *10: 21.*)

190. (யமன் முதலிய வடிவில் நின்று) தண்டிக்கும் தன்மையுள்ளவர். (ஒ. 'தண்டோ தமயதா மஸ்மி' கீ. *10. 38.*)

191. 'அஹம் ஸ:' என்று தம்மைத் தன்மயமாகப் பாவிப்போரின் ஸம்ஸார பயத்தைப் போக்குகிறவர். (எல்லாத் தேகங்களினும் ஆத்மாவாக இருப்பவர். ஒ. 'ஹம்ஸ: சுசிஷத்' கட. உப. *4. 2.* ஹம்ஸாவதாரம் செய்தவர்.—ப. பா.)

192. (பேரறிவு பேரின்பமாகிய) அழகிய சிறகுகளை உடையவர். ('இது ஹம்ஸாவதாரக் குறிப்பு'—ப. பா. ஒ. 'த்வாஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே'—மு. உப. *3. 1; 1.*)

193. உத்தமமான ஸர்ப்ப வடிவினர். (ஒ. 'ஸர்ப்பாணாமஸ்மி வாஸுகி:'—கீ. *10. 26* அரவணையின்மேல் பள்ளி கொண்டிருப்பவர்—ப. பா.)

194. பொன்போல் அழகிய நாபியை உடையவர்.

195. (நர நாராயண வடிவில்) சிறந்த தவம் செய்தவர். (அல்லது சிறந்த ஞானமுள்ளவர். ஒ. 'யஸ்ய ஜ்ஞானமயம் தப: |' மு. உப. *1. 1. 9.*)

196. பத்மம்போன்ற நாபியுடையவர். (இருதயகமலத்தில் பிரகாசிப்பவர். 'ஹ்ருதயபத்மஸ்ய நாபௌ மத்யே ப்ரகாசனாத்வா பத்மநாப:'—சங். பத்மம் என்றால் நூறாயிரம் கோடி. காலவ்யூஹந்தான் பத்மம். காலத்தையும் விழுங்கிய பகவானிடமிருந்து காலம் கமலரூபமாய்த் தோன்றிற்று.)

197. பிரஜைகளுக்குத் தலைவர். (நாபிகமலத்தில் பிறந்த பிரம்மா முதலிய பிரஜைகளுக்குத் தலைவர்.)

198. அம்ருத்யவே நம:
199. ஸர்வத்ருசே நம:
200. ஸிஹ்மாய நம:
201. ஸந்தாத்ரே நம:
202. ஸந்திமதே நம:
203. ஸ்திராய நம:
204. அஜாய நம:
205. துர்மர்ஷணாய நம:
206. சாஸ்த்ரே நம:
207. விச்ருதாத்மனே நம:
208. ஸுராரிக்னே நம:

198. அழிவில்லாதவர். (ஒ. 'ம்ருத்யுர்-யஸ்யோபஸேசனம் க இத்தா வேத யத்ர ஸ:'—'எந்தப் பரமாத்மாவுக்கு யமனும் ஊறுகாய் போன்றவனோ அவர் எப்படிப்பட்டவர் என்று யார் அறிவர்?' கட. உப. 2. 2. 25.)

199. அனைத்தையும் பார்ப்பவர். (ஒ. 'விச்வதச்-சக்ஷுருத விச்வதோ முக:'—தை. ஆ.)

200. பாவிகளை இம்சிப்பவர். ('ஹிநஸ்தீதி ஸிஹ்ம:'—சங். மஹா நரசிம்ம ரூபி.—ப. பா.)

201. (பிராணிகளுக்குக் கர்மபலனை) கூட்டுவிப்பவர். (பக்தர்களைத் தம்மிடம் கூட்டிக் கொள்பவர்.—ப. பா.)

202. (வினைப்பயன்களை) அனுவிப்பவரும் தாமாகவே இருப்பவர். (பக்தர்களுக்குத் தம் சேர்க்கை எப்போதும் நீங்காமலிருக்கச் செய்பவர்.—ப. பா.)

203. மாறுபாடற்றவர்.

204. எல்லாவற்றுள்ளும் புகுந்திருப்பவர். ('அஜதி கச்சதி க்ஷிபதி இதி வா அஜ:'—சங். மற்றவர்களைப் போல் ஜனிக்காதவர்.—ப. பா.)

205. பகைவரால் அடக்குதற்கும் தாங்குதற்கும் முடியாதவர்.

206. கட்டளையிட்டு நடத்துகிறவர். ('ச்ருதி-ஸம்ருத்யாதிபி: ஸர்வேஷா-மனுசிஷ்டிம் கரோதீதி சாஸ்தா.'—சங்.)

207. (ஸத்தியம் ஞானம் முதலிய லக்ஷணங்களால்) ச்ருதியில் வெகுவாய்க் கூறப்பட்ட ஸ்வரூபமுடையவர்.

208. தேவசத்ருக்களை யழிப்பவர்.

209. குரவே நம
210. குருதமாய நம.
211. தாம்னே நம:
212. ஸத்யாய நம:
213. ஸத்யபராக்ரமாய நம:
214. நிமிஷாய நம:
215. அநிமிஷாய நம:

209. எல்லா வித்தைகளையும் உபதேசிப்பவர். (அல்லது எல்லாருக்கும் தந்தையாயிருப்பவர். 'குருர்குருதம:' என்பது ஒரே நாமம். எல்லாவித்தைகளையும் பிரம்மா முதலானவர்களுக்கும் உபதேசித்த பரமாசிரியர்'—ப. பா.)

210. பரமகுருவாய் விளங்குபவர். (ஒ. 'ஸ பூர்வேஷாமபி குரு: காலேனானவச்சேதாத்'—யோகஸூத்ரம் 1.26.) 'யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை'—ச்வே. உப. 6. 18. ஒ. ஸித்தம் ஸத் ஸம்ப்ரதாயே ஸ்திரதிய-மனகம் ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் ஸத்வஸ்தம் ஸத்யவாசம் ஸமயநியதயா ஸாது-வ்ருத்யா ஸமேதம் । தம்பாஸூயாதி-முக்தம் ஜிதவிஷய-கணம் தீர்க்கபந்தும் தயாளும் ஸ்காலித்யே சாஸிதாரம் ஸ்வபரஹிதபரம் தேசிகம் பூஷ்ணு-ரீப்ஸேத் ||)

211. ஒளியாயிருப்பவர். (அல்லது விரும்பினவற்றிற்கெல்லாம் இருப்பிடமாகியவர். ஒ. 'பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவான்.'—கீ. 10. 12. பிரளய காலத்தில் அழிந்துபோன சராசரங்களின் வித்துக்களுக்கு ஆதாரமான பூமியென்னும் கம்பலைத் தாங்கி நடத்தினவர்.—ப. பா.)

212. ஸத்தியமே வடிவாகியவர். (ஒ. 'ஸத்யவ்ரதம் ஸத்யபரம் த்ரிஸத்யம் ஸத்யஸ்ய யோனிம் நிஹிதஞ்ச ஸத்யே । ஸத்யஸ்ய ஸத்யம் ருத-ஸ்த்ய-நேத்ரம் ஸத்யாத்மகம் த்வாம் சரணம் ப்ரபன்னா: ||'-பாகவதம் 10. 2. 26. ஒ. 'ப்ராணா வை ஸத்யம் தேஷா மேஷ ஸத்யம்'—ப்ரு. உப. 2. 1. 20.)

213. வீண்போகாத பராக்கிரம முடையவர்.

214. (யோகநித்திரையில்) கண்களை மூடியிருப்பவர்.

215. (அனைத்தையும்) கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருப்பவர். (மத்ஸ்யாவதாரம் செய்தமையாலும் ஆத்மஸ்வருபத்தன்மையாலும் எப்போதும் விழித்துக் கொண்டிருப்பவர்.)

209-10. குருதமாய குரவே நம: —ப. பா.

216. ஸ்ரக்விணே நம:
217. வாசஸ்பதய உதாரதியே நம:
218. அக்ரண்யே நம:
219. க்ராமண்யே நம:
220. ஸ்ரீமதே நம:
221. ந்யாயாய நம:
222. நேத்ரே நம:
223. ஸமீரணாய நம:
224. ஸஹஸ்ரமூர்த்னே நம:

---

216. (பஞ்சதன்மாத்திரை வடிவாகிய வைஜயந்தீ) மாலையணிந்தவர்.

217. வித்தைக்கு அதிபதியான ஸர்வஜ்ஞர். (வாசஸ்பதி:, உதாரதீ: என இரண்டு நாமங்கள்—ப. பா.)

218. (முமுக்ஷுக்களை) உயர்பதவிக்கு அழைத்துச் செல்பவர்.

219. உயிர்த்தொகுதியை வழிப்படுத்துகிறவர். (அல்லது ஐம்பெரும்பூதங்களை நியமிப்பவர். 'பூதக்ராமஸ்ய நேத்ருத்வாத் க்ராமணீ:'—சங்.)

220. காந்தி மிக்கவர்.

221. நியாயமான யுக்தி வடிவினர்.

222. உலகமென்னும் யந்திரத்தை நடத்துகிறவர். ('ஜகத்யந்த்ர–நிர்வாஹகோ நேதா'—சங். ஒ. 'அர்ஜுனா! தேகமாகிய இயந்திரத்தில் ஏற்றி வைக்கப்பட்ட பொம்மைகள் போன்ற எல்லாப் பிராணிகளையும் மாயாசக்தியினால் ஆட்டி வைத்துக்கொண்டு ஈசுவரன் எல்லாப் பிராணிகளுடைய இருதயத்துள்ளும் நிற்கின்றான்'—கீ. 18. 61.)

223. வாயுருபியாக எல்லாவற்றையும் அசையும்படி செய்பவர். (ஒ. 'நமஸ்தே வாயோ! த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி'—தை. உப. 1. 1.)

224. கணக்கற்ற தலைகளையுடையவர். (எல்லோருடைய தலைகளும் பகவானுடைய தலைகளே. ஒ. 'ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோக்ஷிசிரோமுகம்.')—கீ. 13. 13.)

---

217. வாசஸ்பதயே நம: । உதாரதியே நம: । —ப. பா.

225. விச்வாத்மனே நம:	230. ஸம்வ்ருதாய நம:
226 ஸஹஸ்ராக்ஷாய நம:	231. ஸம்ப்ரமர்த்தனாய நம:
227. ஸஹஸ்ரபதே நம:	232. அஹ:ஸம்வர்த்தகாய
228. ஆவர்த்தனாய நம:	233. வஹ்னயே நம:
229. நிவ்ருத்தாத்மனே நம:	234. அநிலாய நம:

---

225. எல்லாவற்றிற்கும் ஆத்மாவாயிருப்பவர். (ஒ. 'அஹமாத்மா குடாகேச ஸர்வபூதாசயஸ்தித: |'—கீ. 10. 20.)

226 ஆயிரம் கண்களையுடையவர். (எல்லோருடைய கண்களாலும் காண்பவர் அவரே. விராட்ருபி.)

227. ஆயிரம் கால்களையுடையவர். (ஒ. 'ஸஹஸ்ர சீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்'—புருஷஸூக்தம்.)

228. (ஸம்ஸார சக்ரத்தைச்) சுழற்றும் இயல்பினர்.

229. ஸம்ஸாரப் பற்றில்லாத ஸ்வரூபமுடையவர். (ஒ. 'ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா'—கீ. 4. 14.)

230. அவித்தையால் மறைக்கப்பட்டவர். (ஒ. 'நான் யோக மாயையினால் மூடப்பட்டு எல்லோருக்கும் விளங்குவதில்லை.'—கீ. 7. 25.)

231. (ருத்ரன் யமன் முதலிய வடிவங்களில் உலகை) ஸம்ஹரிப்பவர். (ஒ. 'தம்மை உபாஸிப்பவரின் அக இருளை முழுதும் அழிப்பவர்'—ப. பா)

232. பகலை உண்டாக்கும் சூரிய வடிவினர். (ஒ. 'த்வ மந்தரிக்ஷேசரஸி ஸூர்யஸ் த்வம் ஜ்யோதிஷாம் பதி:'—ப்ர. உப. 2. 9. 'பகல் முதலிய பிரிவுகளோடு கூடிய காலசக்கரத்தை உருட்டுகிறவர்'—ப. பா.)

233. (யாகங்களில் அளிக்கப்படும் ஹவிஸ்ஸை தேவர்களுக்குக் கொண்டு சேர்க்கும்) அக்கினி வடிவினர். (ஒ. 'ஹவிர்வஹனாத் வஹ்னி:'—சங். யாவரையும் தாங்குகிறவர். —ப. பா.)

234. காற்று வடிவினர். (அனைத்தும் தன்னிடம் ஒடுங்குவதால் தான் ஒடுங்குதற்குரிய இடமில்லாதவர். அல்லது ஒன்றையும் கிரகிக்காதவர். அல்லது அனைத்தையும் உயிர்ப்பிப்பவர். 'அனுதானு-தநில: அனனுத்வா அநில:,)

235. தரணீதராய நம:
236. ஸுப்ரஸாதாய நம:
237. ப்ரஸந்நாத்மனே நம:
238. விச்வத்ருஷே நம:
239. விச்வபுஜே நம:
240. விபவே நம:
241. ஸத்கர்த்ரே நம:

235. ஆதிசேஷனுகவும் (வராஹமூர்த்தியாகவும்) பூமியைத் தாங்குகிறவர்.

236. அருள் மிகுந்தவர். (ஒ. 'அபகாரவதாமபி சிசுபாலாதீனும் மோக்ஷ-ப்ரதாத்ருத்வாத்' அவருடைய அனுக்கிரஹம் நிக்கிரஹ ரூபமாஞலும் மங்களமானதேயாகும்.)

237. கலங்காத மனமுள்ளவர். விருப்பு வெறுப்பில்லாமல் தெளிந்த மனமுள்ளவர். அனுக்கிரஹிக்கும் தன்மை உள்ளவர். அல்லது 'அவாப்த-ஸமஸ்த-காமர்.')

238. உலகைத் தாங்குகிறவர். ('விச்வஸ்ருக்' என்றும் 'விச்வஸ்ருட்' என்றும் பட்டர் பாடம். குணத்தையும் குற்றத்தையும் பாராமல் உயிர்கள் உய்வதையே கருதி உலகைப் படைப்பவர்.)

239. உலகை ஸம்ஹார காலத்தில் புசிப்பவர். (ஒ. எவருக்குப் பிராம்மணரும் க்ஷத்திரியரும் ஏனையோரும் அன்னம் போன்றவர்களோ எவருக்கு யமனும் ஊறுகாய் போன்றவனே அவரை இப்படிப்பட்டவர் என்று எவர்தான் அறிவார்? —கட. உப. 2. 25.)

240. பலவாருன வடிவுகொண்டவர். ('ஹிரண்யகர்ப்பாதி ரூபேண விவிதம் பவதிதி விபு:।'—சங். ஒ. 'அஜாயமானே பஹுதா விஜாயதே' அவர் பிறவாமலேயே பலவாய்ப் பிறக்கிருர்.—புருஷஸூக்தம். 'விசவபுக்விபு:' உலகங்களை வியாபித்துக் காப்பவர் என ஒரே நாமம்.—ப. பா.)

241. நல்லோரைப் போற்றிப் பூஜிப்பவர். (ஒ. 'அமானீ மானதோ மான்ய:' நாமா 747–49. தர்மபுத்திரருடைய ராஜஸூய யாகத்தில் பகவான் பக்தர்களுடைய பாதத்தை யலம்பிப் பணி செய்தார். 'க்ருஷ்ண: பாதாவநேஜனே.'—பாகவதம் 10. 75. 5.)

238. விச்வஸ்ருஜே நம:। —ப. பா.

239-40. விச்வபுக்-விபவே நம:। ,,

242. ஸத்க்ருதாய நம: 244. ஜஹ்னவே நம:
243 ஸாதவே நம: 245. நாராயணாய நம:

---

242. நல்லோரால் பூஜிக்கப்படுபவர். (ஒ. 'பார்த்தா! மஹாத்மாக்கள் தெய்வத்தன்மையை யனுசரிப்பவர்களாய் வேறு சிந்தையில்லாதவர்களாகப் பொருள்களின் ஆதியாகிய வனும் அழிவற்றவனுமான என்னை அறிந்து பூஜிக்கின்றார் கள்.—கீ 9. 13. 'சபரி முதலானவர்கள் அன்புடன் கொடுத்த சிறு பொருளையும் தமது மகிமைக்குத் தகுதியானவற்றைப் போலவே அங்கீகரித்துச் சந்தோஷம் அடைகிறவர்.'— ப. பா.)

243. நியாயமான வழியில் நடப்பவர். (ஒ. 'ராமோ விக்ரஹவான் தர்ம:.' நியாயமான வழியில் ராமன் நடந்த தால் காட்டு மிருகங்களும் அவருக்குத் துணை செய்தன; அநியாய வழியில் நடந்ததால் ராவணனைச் சகோதரனும் விட்டு நீங்கினான். அல்லது எல்லாக் காரியங்களையும் ஸாதிப் பவர். தூது போவது தேரோட்டுவது முதலாக அடியவர்கள் விரும்பினவற்றை யெல்லாம் செய்து முடிப்பவர்.'—ப. பா.)

244. ஸம்ஹார காலத்தில் எல்லாவற்றையும் மறைப்ப வர். ('ஜனான் ஸம்ஹாரஸமயே அபஹ்னுதே அபநயதீதி ஜஹ்னு:' அல்லது பக்தியில்லாதவர்களைப் பரமபதத்திலிருந்து 'ஜஹாதி' விலக்கி விடுகிறார் என்பதால் ஜஹ்னு:—சங்.)

245. உண்டாயவற்றிற்கெல்லாம் உறைவிடமாகியவர். ('நர:' எனப்படும் ஆத்மாவிடமிருந்து உண்டானவை யெல் லாம் 'நாராணி' எனப்படுவன. அவைகட்கு 'அயனம்' இருப் பிடமாதலால் 'நாராயண:'

ஒ. 'யச்ச கிஞ்சிஜ்ஜகத் ஸர்வம் த்ருச்யதே ச்ருயதேபி வா ।
அந்தர்-பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண:
ஸ்தித: ||'
—நாராயண ஸூக்தம்.

'நாராயணாய நம இத்யமு-மேவ ஸத்யம் ஸம்ஸாரகோர விஷ-ஸம்ஹரணாய மந்த்ரம் । ச்ருண்வந்து பவ்ய-மதயோ யத யோஃஸ்தராகா உச்சைஸ்தரா - முபதிசாம் - யஹமூர்த்வ பாஹு:'
—நாரசிம்ம புராணம்.)

246. நராய நம:
247. அஸங்க்யேயாய நம:
248. அப்ரமேயாத்மனே நம:
249. விசிஷ்டாய நம:
250. சிஷ்டக்ருதே நம:
251. சுசயே நம:
252. ஸித்தார்த்தாய நம:
253. ஸித்தஸங்கல்பாய நம:
254. ஸித்திதாய நம:
255. ஸித்திஸாதனாய நம:

---

246. வழிநடத்துகிறவர். ('நயதீதி நர: ப்ரோக்த: பரமாத்மா ஸநாதன:'—வியாஸவசனம். 'நான்ய: பந்தா வித்யதேऽயனாய'—அவர் வழிகாட்டினாலன்றி அவரையடைய வேறு வழியில்லை.)

247. கணக்கிலடங்காதவர். (ஒ 'பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே'—ஈச. உப. 1. பூர்ணத்திலிருந்து பூர்ணத்தையெடுத்தும் பூர்ணமே மிஞ்சி நிற்கிறது. ஆகையால் பரமாத்மஸவரூபம் கணித நூல் நியதிக்கடங்காது. ஒ. ''என்னுடைய விபூதிகளின் விரிவுக்கு எல்லையே இல்லை' ஸ்ரீ: 10. 19.)

248. அறிவுக்கெட்டாதவர். ('எதினின்று எட்டிப்பிடிக்க முடியாமல் வாய்ச் சொற்கள் மனத்துடன்கூடத் திரும்பி விடுகின்றனவோ அந்த பிரம்மானந்த நிலையை எய்தியவன் ஒருபோதும் பயப்படமாட்டான்:' தை. உப. 2. 4.)

249. அனைத்திற்கும் மேலானவர். ('விச்வத: பரமாந் நித்யம்'—நாராயண ஸூக்தம்.)

250. கட்டளை இடுபவர். (அல்லது நல்லோரைக் காப்பவர்.)

251. மாசற்றவர்.

252. வேண்டியவெல்லாம் தமக்குத்தாமாகவே அமைந்திருப்பவர். ('பார்த்தா! செய்ய வேண்டிய கருமம் எனக்கு மூவுலகிலும் ஒரு சிறிதும் இல்லை; அடையப்படாததாயும் இனி அடைதற்குரியதாயும் ஒன்றும் இல்லை'—கீ 3. 22. ஒ. 'ஸத்யகாம:'—சா. உப. 8. 7. 1.)

253. எண்ணியவாறு எய்துபவர். (ஒ. 'ஸத்யஸங்கல்ப:' சா. உப. 8. 7. 1.)

254. காரிய ஸித்தியை அளிப்பர்.

255. ஸித்திக்கு ஸாதனமாகவும் இருப்பவர். (உபாயமாகவும் உபேயமாகவும் இருப்பவர்.)

256. வ்ருஷாஹிணே நம:
257. வ்ருஷபாய நம:
258. விஷ்ண்வே நம:
259. வ்ருஷபர்வணே நம:
260. வ்ருஷோதராய நம:
261. வர்த்தனாய நம:
262. வர்த்தமானாய நம:
263. விவிக்தாய நம:

---

256. பகல்போல் பிரகாசிக்கும் தர்மத்தையுடையவர். ('வ்ருஷோ தர்ம: புண்யம் தஹேவாஹ: ப்ரகாச-ஸாதர்ம்யாத், த்வாதசாஹப்ரப்ருதிர்-வ்ருஷாஹ: லோகஸ்யாஸ்தீதி வ்ருஷாஹீ' — சங்.

257. பக்தர்களுக்கு விரும்பினவற்றையெல்லாம் வர்ஷிப்பவர். (ஒ. 'வானமாய் நின்று இன்ப மழையாயிரங்கி எனை வாழ்விப்பதுன்பரங் காண்'—தாயுமானவர். ஒ. க்ருஷ்ண—த்விநேத்ரம் கடிபத்த-ஸூத்ரம் ரக்த-த்விச்ருங்கம் ஹ்யதிரக்த வர்ணம் I சங்கப்ரபம் ஹேமகுரம் ததானம் த்யாயேத் பரேசம்-வ்ருஷரூப-மேவம் ||)

258. (வாமனாவதாரத்தில்) உலகங்களை அளந்தவர். ('இதம் விஷ்ணுர்-விசக்ரமே த்ரேதா நிதஹே பதம்'—'ஓங்கி உலகளந்த உத்தமன்'—திருப்பாவை. 'விஷ்ணுர்—விசக்-ரமணாத்.—யாஸ்கர்.)

259. தருமரூபமான படிகளால் அடையக்கூடியவர். (ஒ. ஆசாரப்ரபவோ தர்ம: தர்மஸ்ய ப்ரபுரச்யுத:)

260. உயிர்களைப் பிரளயகாலத்தில் தன் வயிற்றினுள் அடக்கி வைப்பவர். (அல்லது தர்மத்தையே வயிறாக உடையவர்.—ப. பா.)

261. போஷித்து வளர்ப்பவர்.

262. பிரபஞ்ச ரூபமாகத் தாமே வளர்பவர். (ஒ. நிற்பதெல்லாம் நெடுமால்.)

263. (பிரபஞ்ச ரூபமாயிருந்தும்) ஒன்றிலும் சேராமல் தனித்து நிற்பவர். (ஒ. 'என்னுடைய ஆத்மாவானது பொருள்களைத் தாங்குவது, பொருள்களை உண்டாக்குவது. ஆனால் பொருள்களில் இருப்புடையதன்று'—கீ. 9. 5.)

264. ச்ருதிஸாகராய நம:
265. ஸுபுஜாய நம:
266. துர்த்தராய நம:
267. வாக்மினே நம:
268. மஹேந்த்ராய நம:
269. வஸுதாய நம:
270. வஸவே நம:
271. நைகரூபாய நம:
272. ப்ருஹத்ரூபாய நம:
273. சிபிவிஷ்டாய நம:
274. ப்ரகாசனாய நம:

---

264. சுருதிகளாகிய நதிகள் நாடியடையும் கடல் போன்றவர். (எல்லா வேதங்களாலும் அறிய வேண்டியவன் நானே'—கீ. 15. 15.)

265. சிறந்த புஜங்களை உடையவர்.

266. எல்லாவற்றையும் தாங்குபவராய்த் தான் வேறொருவரால் தாங்கப்படாமலிருப்பவர். (அல்லது தாரணை செய்வதற்குக் கடினமாயிருப்பவர்.)

267. வேதரூபமான சிறந்த வாக்கையுடையவர்.

268. ஈசுவரருக்கும் ஈசுவரர்.

269. செல்வத்தைக் கொடுப்பவர்.

270. செல்வமாயிருப்பவர். (அல்லது ஸூர்ய ரூபியாக ஆகாசத்தில் வசிப்பவர். ஒ. வஸுரந்தரிக்ஷஸத்'—தை. ஆ.)

271. வடிவம் ஒன்றல்லாதவர். (ஒ. 'இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே'. அந்தப் பரம்பொருள் மாயைகளால் பல ரூபங்களையடைகிறது.—ப்ரு. உப. 2. 5. 19.)

272. (பூமியைத் தாங்கும்படி பெரிதான வராஹம் போன்ற) பெரிய வடிவங்களை உடையவர்.

273. ஒளிக்கிரணங்களில் ஊடுருவி நிற்பவர். (சைத்யாச்சயனயோகாச்ச சீதி வாரி ப்ரசக்ஷதே । தத்பானுத் ரக்ஷணச்சைவ சிபயோ ரச்மயோ மதா: । தேஷுப்ரவேசாத்விச்வேச: சிபிவிஷ்டஇஹோச்யதே ||' அல்லது யாகப்பசுக்களிடத்தில் யாகரூபியாக உறைபவர்.)

274. எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்பவர். (ஒ. 'தமேவ பாந்த-மனுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி'. அவரைப் பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கின்றது. அவரொளியாலேயே இவையனைத்தும் விளங்குகின்

275. ஓஜஸ்தேஜோ த்யுதிதராய நம:
276. ப்ரகாசாத்மனே நம:
277. ப்ரதாபனாய நம:
278. ருத்தாய நம:
279. ஸ்பஷ்டாக்ஷராய நம:
280. மந்த்ராய நம:
281. சந்த்ராம்சுவே நம:
282. பாஸ்கரத்யுதயே நம:

றன.—கட. உப. 5. 15. தமது திவ்ய ரூபத்தைக் காண விரும்பும் அர்ஜுனன் போன்ற பக்தர்களுக்குப் புலப்படுத்து கிறவர் 'திவ்யரூபம் தித்ருக்ஷுப்ய: பார்த்தாதிப்யோ விசேஷத: । ரூபம் ப்ரகாசயதி யஸ்ஸ ப்ரகாசன இதீரித: ||'—ப. பா.)

275. பலத்தையும் பராக்கிரமத்தையும் ஒளியையும் உடையவர். (ஒ. தேஜஸ்-தேஜஸ்விநாமஹம்,' 'பலம் பலவதாமஸ்மி'—கீ. 7. 10-11.)

276. எங்கும் பிரகாசிக்கும் இயல்புடையவர். (ஒ. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமா யானந்த பூர்த்தியாகி யருளொடு நிறைந்ததெது'—தாயுமானவர்.)

277. (சூரியன் முதலிய விபூதிகளால்) உஷ்ணத்தை உண்டு பண்ணுகிறவர். (ஒ. 'நான் வெயிலாய்க் காய்கின்றேன். நான் மழையைப் பெய்யச் செய்கின்றேன்; பெய்யாமலும் தடுக்கின்றேன்.'—கீ. 9. 19.)

278. (தர்மம் ஞானம் வைராக்கியம் முதலிய குணங்கள்) நிரம்பியிருப்பவர்.

279. உதாத்த ஸ்வரமுள்ள ஓம் என்னும் எழுத்தினால் குறிப்பிடப்படுபவர். ('ஓம், தத், ஸத் என்று பிரம்மத்திற்கு மூன்று வகையான குறிப்புப் பெயர் கூறப்பட்டுள்ளது. கீ.)

280. வேதமந்த்ர ரூபமாயிருப்பவர். (அல்லது மந்திரங்களினால் அறியப்படுபவர். 'தியானம் செய்பவர்களைக் காப்பாற்றுகிறவர்'—ப. பா.)

281. சந்திர கிரணம் போல மகிழ்ச்சி யளிப்பவர்.

282. சூரியனது போன்ற ஒளி பொருந்தியவர். (ஒ. 'வானத்தில் ஆயிரம் சூரியர்களின பிரகாசம் ஒருங்கு கூடி உதிக்குமேயானால் அது அந்த மகாபுருஷனுடைய பிரகாசத்திற்குச் சமமாக இருக்கும்.'-கீ. 11. 12.)

283. அம்ருதாம்ஶூத்பவாய நம. 286. ஸுரேச்வராய நம:
284. பானவே நம: 287. ஔஷதாய நம:
285. சசபிந்தவே நம: 288. ஜகத: ஸேதவே நம:
289. ஸத்யதர்மபராக்ரமாய

283. (பாற்கடலிலிருந்து) சந்திரனைத் தோன்றச் செய்தவர்.

284. தாமே பிரகாசிப்பவர்.

285. (உயிர்களைப் போஷிப்பதில்) சந்திரன் போன்றவர். (ஒ. 'ரஸமயமான சந்திரனாக இருந்து கொண்டு நான் எல்லாப் பயிர்களையும் போஷிக்கின்றேன்'—கீ. 15. 13.)

286. தேவர்களுக்குத் தலைவர். (நன்மையைக் கொடுக்கும் அனைவருக்கும் தலைவர். 'ஸுராணும் தேவாணும் சோபனதாத்ருணுஞ் சேச்வர:'—சங்.)

287. (பிறவிப் பிணிக்கு) மருந்தாகியவர். (ஒ. 'பவதீவ்ர விஷம் ஹர்த்தா ஹ்யௌஷதம் யஸ்ஸ உச்யதே' 'வ்பாமோஹப்ரசமௌஷதம் முனி-மனோ-வ்ருத்தி ப்ரவ்ருத்யௌஷதம். தைத்யேந்த்ரார்த்தி-ஹரௌஷதம் த்ரிஜகதாம் ஸஞ்ஜீவனைகௌஷதம் | பக்தாத்யந்த ஹிதௌஷதம் பவபய ப்ரத்வம்ஸனைகௌஷதம் ச்ரேய:-ப்ராப்திகரௌஷதம் பிப மன: ஸ்ரீக்ருஷ்ண-திவ்யௌஷதம்||' —முகுந்தமாலை—குலசேகராழ்வார்.)

288. உலகைக் கரையேற்றுபவர். (அல்லது கரைபோல் காப்பவர். 'ஸமுத்தாரண-ஹேதுத்வா-தஸம்பேத-காரணுத்வா'—சங். 'உலகத்தில் நல்லவை தியவைகளைப் பிரிக்கும் அணையாயிருப்பவர்; புண்ணிய பாவ பலன்களை மாறாமல் கொடுப்பவர்.'—ப. பா. ஒ. 'ஏஷ ஸேதுர்-விதரண ஏஷாம் லோகாணுமஸம்பேதாய' இவ்வுலகங்கள் பிரிந்து போகாமல் சேர்த்துப் பிடிக்கும் கரைபோலிருப்பவர்.—ப்ரு. உப. 4. 4. 22.)

289. பொய்க்காத ஞானம் முதலிய குணங்களும் வீரச் செயல்களும் உடையவர். ('தர்மங்கள் எனப்படும் தமது கல்யாண குணங்களும், பராக்கிரமங்கள் எனப்படும் திவ்விய சேஷ்டிதங்களும் வீண் போகாமல் உலகத்தை உய்விக்கும்படி இருப்பவர்.'—ப. பா.)

290. பூதபவ்யபவந்நாதாய [நம:
291. பவனாய நம:
292. பாவனாய நம:
293. அனலாய நம
294. காமக்னே நம:
295. காமக்ருதே நம:
296. காந்தாய நம:
297. காமாய நம:

---

290. சென்றது, வருவது, நிகழ்வது ஆகிய அனைத்திற்கும் ஈசுவரர்.

291. (காற்று வடிவிலிருந்து) பரிசுத்தப் படுத்துகிறவர். (ஒ. 'பவன: பவதாமஸ்மி' சுத்தம் செய்யும் பொருள்களுள் நான் காற்றாக இருக்கிறேன்'.—கீ. 10. 31. 'எல்லாக் காலங்களிலும் காற்றைப்போல் செல்கிறவர்.'—ப. பா.)

292. காற்றையும் வீசும்படி செய்பவர் (ஒ. 'பீஷாஸ்மாத்வாத: பவதே' இவரிடம் பயத்தாலேயே காற்றும் வீசுகிறது—தை. உப. 2. 8. 'உலகைப் பரிசுத்தம் செய்யும் கங்கை முதலியவற்றிற்கும் அந்தச் சக்தி தம் சம்பந்தத்தினால் உண்டாகும்படி இருப்பவர்.' ப. பா.)

293. போதுமென்பதில்லாதவர். (அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டாதவர். உலகங்களை உயிர்ப்பிப்பவர். 'பல வகைகளால் அடியவர்களுக்கு அனுக்கிரஹித்தும் அது போதாது என்று நினைப்பவர். இந்தச் சக்தியின் ஒரு சிறிது இருப்பது பற்றித்தான் அக்கினிக்கு அநலன் என்று பெயர் வந்தது.'—ப. பா.)

294. பக்தர்களுக்கு ஸம்ஸாரப் பற்றுகளைப் போக்குகிறவர். ('தம் குணங்களில் ஈடுபட்டவர்களுக்கு மற்ற எல்லா விஷயங்களிலும் விருப்பத்தைக் கொடுப்பவர்.'—ப. பா. 'மற்றை நங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.'—திருப்பாவை.)

295. பக்தர்கள் விரும்பியவற்றைக் கொடுப்பவர். (அல்லது காமன் எனப்படும் பிரத்யும்னனை உண்டுபண்ணின பிதா.)

296. அழகினால் கவர்ச்சி மிக்கவர்.

297. எல்லோராலும் விரும்பப்படுபவர்.

298. காமப்ரதாய நம: 303. மஹாசனாய நம:
299. ப்ரபவே நம: 304. அத்ருச்யாய நம:
300. யுகாதிக்ருதே நம: 305. வ்யக்தரூபாய நம:
301. யுகாவர்த்தாய நம: 306. ஸஹஸ்ரஜிதே நம:
302. நைகமாயாய நம:

298. வேண்டுவோர் வேண்டியவற்றை யளிப்பவர். ('தம்மை விரும்பினவர்களுக்குத் தம்மையும் மற்றச் சிறிய பலன்களை விரும்பியவர்களுக்கு அவற்றையும் அளிப்பவர்'— ப. பா. 'எவர்கள் எவ்வாறு என்னை நாடுகின்றார்களோ அவர்களை அவ்வாறே நான் அனுக்கிரஹிக்கிறேன் — கீ. 4. 11.)

299. உயர்ந்து விளங்குபவர்.

300. யுகம் முதலிய காலவேறுபாடுகளை உண்டாக்கியவர். (அல்லது யுகங்களை ஆரம்பித்து வைப்பவர்.)

301. (கால வடிவங்கொண்டு) யுகங்களைத் திரும்பத் திரும்ப வரச் செய்பவர். (நான்கு யுகங்களையும் அவ்வவற்றின் தர்மவரையறைகளோடு அடிக்கடி திரும்பச் செய்கிறவர்.)

302. பல மாயைகளைத் தரிப்பவர். ('சிறு குழந்தையாயிருந்து அளவற்ற உலகங்களை விழுங்கியும் ஒரே நீரில் பிடிப்பில்லாத ஆலிலையில் படுத்தும் ஊகிப்பதற்கும் எட்டாத மற்றும் பல ஆச்சரியங்களைச் செய்து கொண்டுமிருப்பவர்.'— ப. பா.)

303. ஸம்ஹாரகாலத்தில் அனைத்தையும் விழுங்குவதால்) பெருந்தீனி யுடையவர். (ஒ. 'எவருக்கு பிராம்மண க்ஷத்திரியராதியோரும் ஏனையோரும் அன்னம் போன்றவர்களோ, எவருக்கு உலகை உண்ணும் யமனும் ஊறுகாய் போன்றவனோ அவர் பெருமை எத்தகைத்தென்று யாருணர்வர்.'— கட. உப. 2-25.)

304. புலப்படாதவர். ('தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படா னுணர்வில் மூர்த்தி.'— நம்மாழ்வார்.)

305. யோகிகளுக்குப் புலப்படும் உருவமுள்ளவர். (அல்லது ஸ்தூலப் பிரபஞ்சமாகப் புலப்படும் உருவமுள்ளவர்.)

306. ஆயிரக்கணக்கான அசுரர்களை ஜயிப்பவர். ('ஆயிரம் யுகங்களாக எண்ணப்படும் பிரளயகாலத்தை யோகநித்திரையிலிருந்து ஜயிப்பவர்'.—ப. பா.)

307. அனந்தஜிதே நம: 311. சிகண்டினே நம:
308. இஷ்டாய நம: 312. நஹுஷாய நம:
309. அவிசிஷ்டாய நம: 313. வ்ருஷாய நம:
310. சிஷ்டேஷ்டாய நம: 314. க்ரோதக்னே நம:

307. (சிந்தனைக்கு எட்டாத தமது சக்தியால்) எல்லாவிடத்திலும் எல்லா உயிர்களையும் (போர் விளையாட்டு முதலியவற்றில்) வெல்பவர்.

308. (ஆனந்த ரூபியா யிருப்பதால்) எல்லோருக்கும் இஷ்டமானவர். (அல்லது இஷ்டிகளால் பூஜிக்கப்படுகிறவர்.)

309. (அந்தர்யாமியாயிருப்பதாலும் தம் உயர்விலும்) மிக்காரில்லாதவர். ('இஷ்டோऽவிசிஷ்ட:' என்பது ஒரு நாமம். வித்தியாஸமின்றி விரும்பும்படி இருப்பவர்.—ப. பா.)

310. ஞானிகளுக்குப் பிரியமானவர். (அவர்களால் பூஜிக்கப்படுகிறவர். ஓ. மகாத்மாக்கள் தெய்வத் தன்மையை அனுசரிப்பவர்களாய் வேறு சிந்தையில்லாதவராய் பொருள்களின் ஆதியும் அழிவற்றவனுமாகிய என்னை அறிந்து பூஜிக்கின்றார்கள். கீ. 9. 13. அல்லது ஞானிகளால் பூஜிக்கப்பெற்றவர். ஓ. நிச்சயமாக ஞானிகளுக்கு நான் மிகவும் பிரியமானவன்; ஞானியும் எனக்குப் பிரியமானவன்.'-கீ. 7. 17.)

311. மயில்தோகையை அணிந்தவர். ('யாராலும் வெல்லக் கூடாத அளவற்ற ஐசுவரியமாகிய சிறந்த மகிமையையே சிரோபூஷணமாக வுடையவர்'—ப. பா.)

312. மாயையால் உயிர்களைக் கட்டுகிறவர். ('யத: நஹ்யதி பூதானி மாயயாऽதோ நஹுஷ:'—சங்.)

313. (அடியார் விரும்பியவற்றை) வர்ஷிப்பவர். (அல்லது தரும வடிவினர். ஓ. 'வ்ருஷோ ஹி பகவான் தர்ம: ஸ்ம்ருதோ லோகேஷு பாரத । நைகண்டுக-பதாக்யானைர்-வித்திமாம் வ்ருஷ-முத்தமம் ||'—ம. பா. சாந்தி. 352-23.)

314. சாதுக்களின் கோபத்தை யொழிப்பவர். (பரசுராமரவதாரத்தில் க்ஷத்திரியர்களை மூவேழு முறை வதம் செய்தபிறகு காசியபர் வேண்டினவுடன் அந்தக் கோபத்தை யொழித்தவர்.'—ப. பா.)

308-309. இஷ்டாய அவிசிஷ்டாய நம:. —ப. பா.

315. க்ரோதக்ருத் கர்த்ரே நம:
316. விச்வபாஹவே நம:
317. மஹீதராய நம:
318. அச்யுதாய நம:
319. ப்ரதிதாய நம:
320. ப்ராணாய நம:
321. ப்ராணதாய நம:
322. வாஸவானுஜாய நம:
323. அபாம்நிதயே நம:

---

315. கோபங்கொள்ளும் தைத்தியரை வெட்டி எறிபவர். ('க்ரோதக்ருத் கர்த்தா' என ஒரே நாமம்—சங். 'க்ரோதக்ருத்.' கர்த்தா என இரண்டு நாமங்கள்.—ப. பா.)

316. எங்குங் கைகளை யுடையவர். (அல்லது எல்லோர்க்கும் ஆதரவான புஜங்களைப் படைத்தவர்.)

317. பூமியைத் தாங்குகிறவர். (அல்லது பூஜிக்கப் பெறுகிறவர். பூபாரமாயுள்ள துஷ்டர்களை ஒழித்துப் பூமியைத் தாங்குகிறவர்.'—ப. பா. 'மஹீம் பூஜாம் தரணீம் வா தரதி இதி மஹீதர:'—சங்.)

318. (அறுவகையான) மாறுதலற்றவர். (மறைந்திருத்தல் வெளி வருதல், ஓங்கி வளர்தல், வளர்தலின் முடிவை யடைதல், தேய ஆரம்பித்தல், முற்றுந் தேய்த்துவிடல் என்பவை ஆறுவிதமான மாறுதல்கள், 'ஜாயதே, அஸ்தி, வர்த்ததே, விபரிணமதே, அபக்ஷீயதே, நச்யதி' என்பது யாஸ்கர் நிருக்தி. ஒ. 'ஸித்தி: ஸர்வாதி-ரச்யுத:'—நாமா. 98-100).

319. பிரசித்தி பெற்றவர். (ஒ. 'தஸ்ய நாம மஹத்-யச:)' தை. ஆ.)

320. வாயுருபியான ஸூத்ராத்மாவாக இருப்பவர். (ஒ. 'மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ'—கீ. 7. 7.)

321. பலத்தைக் கொடுப்பவர். (அல்லது பலத்தைக் கெடுப்பவர். ஒ. ப்ராணம் பலஞ்ச ததாதி த்யதி வா இதி ப்ராணத:'—சங்.)

322. (கசியபருக்கு அதிதியிடம்) இந்திரனது தம்பியாகப் பிறந்தவர்.

323. கடலாயிருப்பவர். ('நீர் நிலைகளுள் கடலாயிருக்கிறேன்'—கீ. 10. 24.)

315-316. க்ரோதக்ருதே நம: | கர்த்ரே நம:. —ப. பா.

324. அதிஷ்டானாய நம:
325. அப்ரமத்தாய நம:
326. ப்ரதிஷ்டிதாய நம:
327. ஸ்கந்தாய நம:
328. ஸ்கந்ததராய நம:
329. துர்யாய நம:
330. வரதாய நம:
331. வாயுவாஹநாய நம:
332. வாஸுதேவாய நம:

---

324. உலகிற்கிருப்பிடம். (ஒ. 'மத்ஸ்தானி ஸர்வ பூதானி'—கீ. 9. 4.) 'கடல் கடைந்தபோது மந்தரமலை நிலை நிற்கும்படி அதனைத் தாங்கினவர்.'—ப. பா.)

325. (கருமபலனை யளிப்பதில்) கவனக் குறைவில்லாதவர் (அடியார்களைக் காப்பதில் ஊக்கம் தவறாமலிருப்பவர். —ப பா.)

326. (தமக்கு வேறு ஆதாரம் வேண்டாதபடி தம் மகிமையிலேயே) நிலை பெற்றிருப்பவர். (ஒ.:ஸ பகவ: கஸ்மின் ப்ரதிஷ்டித இதி, ஸ்வே மஹிம்னி'—சா. உப. 7. 24. 1)

327. அமுதாகப் பெருகுகிறவர் (அல்லது வாயு ரூபியாக எல்லாவற்றையும் உலர்த்துகிறவர். 'ஸ்கந்தத்யம்ருத ரூபேண, கச்சதி வாயு ரூபேண, சோஷ்யதீதி வா ஸ்கந்த:'—சங். 'அசுரர் முதலானவர்களை வற்றச் செய்பவர், அழிப்பவர்.' அஸுரான் சோஷயதி ஸ்கந்தயதீதி ஸ்கந்த: | ப. பா. க்ருதே ஸேனாபதி: ஸ்கந்தஸ்—த்ரேதாயாந்து குமாரக: | ஸுப்ரஹ்மண்யோ த்வாபரே து கலௌ வேங்கடநாயக: ||)

328. தர்ம மார்க்கத்தைத் தாங்குகிறவர். ('ஸ்கந்தம் தர்மபதம் தாரயதீதி ஸ்கந்ததர:'—சங்.)

329. உலகின் பாரத்தைத் தாங்குபவர்.

330. வரங்களை அளிப்பவர்.

331. காற்றையும் இயக்குபவர். (ஏழுவிதமான காற்றையும் விசும்படி செய்பவர்.)

332. அனைத்திலும் உறைந்து விளையாடுபவர். (எல்லாவற்றிலும் வசித்தும் எல்லாவற்றையும் மாயையால் மறைத்து வைத்தும் இருப்பதால் 'வாசு' எனப்படுகிறார். விளையாடுவதாலும் ஜபிப்பதாலும், பிரவிருத்தி நிவிருத்திகளை உண்டாக்குவதாலும், பிரகாசிப்பதாலும், மோக்ஷத்தைக் கருது

333. ப்ருஹத்பானவே நம: 335. புரந்தராய நம:
334. ஆதிதேவாய நம: 336. அசோகாய நம:

கிறவர்களால் துதிக்கப்பெற்று விரும்பப்படுவதாலும் 'தேவர்' எனப்படுகிறார். வாசுவாயும் தேவனுயுமிருப்பதால் 'வாசு தேவன்.'

ஒ. சாதயாமி ஜகத்விச்வம் பூத்வா ஸுூர்ய இவாம்சுபி: ।
ஸர்வபூதாதிவாஸச்ச வாஸுதேவஸ்தத: ஸ்ம்ருத: ॥
வஸனுத் ஸர்வபூதானும் வஸுத்வாத் தேவ யோனித: ।
வாஸுதேவஸ்ததோ ஜ்ஞேயோ யோகிபிஸ்-தத்வ-தர்சிபி: ॥
ஸர்வத்ராஸௌ ஸமஸ்தஞ் ச வஸத்யத்ரேதி வை யத: ।
தத: ஸ வாஸுதேவேதி வித்வத்பி: பரிபட்யதே ॥
ஸர்வாணி தத்ர பூதானி வஸந்தி பரமாத்மனி ।
பூதேஷு ச ஸ ஸாவாத்மா வாஸுதேவஸ்தத: ஸ்ம்ருத: ॥

—விஷ்ணு புராணம்.

'தாய் கர்ப்பத்தில் வசிப்பதுபோல் உலகங்களைத் தமக்குள் வைத்தும், பக்ஷிகள் சிறகுகளினுல் குஞ்சுகளை அணைப்பது போல் தீங்குகள் வராமல மூடிக் காப்பற்றியும் அவற்றின் கண் தாம் அந்தர்யாமியாக வசித்தும் இருப்பதனுல் 'வாசு' என்றும் இந்த ரக்ஷணத்தை விளையாட்டாக வைத்திருப்பதாலும், எல்லாவற்றையும் அடக்கி மேலாயிருக்க நினைப்பதாலும், எப்போதும் விளங்குவதாலும், யாவராலும் துதிக்கப் பெறுவதாலும் பக்தர்களிடத்தில் விசேஷித்துச் செல்லுவதாலும் 'தேவர்' என்றும் சொல்லப்படுகிறார். அதனுல் பரஸ்வரூபியான பகவான் வாசுதேவராகிறார் என்று ரிஷிகள் சொல்லுகின்றனர்.'—ப. பா.)

333. விஸ்தாரமாக எங்கும் பரவிநிற்கும் கிரணங்களை உடையவர். (ஒ. ப்ருஹந்தோ பானவோ யஸ்ய சந்த்ர-ஸுூர்யாதி-காமின: । விச்வம் ஜகத் பாஸயதி ஸ ப்ருஹத்பானுருச்யதே ॥')

334. உலகிற்கு முதற்காரணமாய்ப் பிரகாசிப்பவர்.

335. அசுரர்களின் புரங்களைப் பிளந்தவர்.

336. சோகமற்றவர். (பசி, தாகம், விசனம், மயக்கம், மூப்பு, மரணம் எனகிற ஆறு குறைகளும் இல்லாதவர்.)

337. தாரணாய நம:
338. தாராய நம:
339. சூராய நம:
340. சௌரயே நம:
341. ஜனேச்வராய நம:
342. அனுகூலாய நம:
343. சதாவர்த்தாய நம:
344. பத்மினே நம:
345. பத்மநிபேக்ஷணாய நம:
346. பத்மநாபாய நம:
347. அரவிந்தாக்ஷாய நம:
348. பத்மகர்ப்பாய நம:
349. சரீரப்ருதே நம:

337. பிறவிக்கடலைத் தாண்டுவதற்கு உதவுபவர்.

338. ஸம்ஸாரக் கடலிலுள்ள கொடிய பயங்களினின்று கரையேற்றுகிறவர். (ஒ. 'என்னிடம் நிலைபெற்ற மனமுடைய அவர்களுக்குச் சாவுடன் கூடிய ஸம்ஸாரக் கடலின்று சீக்கிரத்தில் நான் கரையேற்றிக் காப்பவனாக ஆகின்றேன்". கீ. 12. 7.)

339. பராக்கிரமமுடையவர்.

340. சூரர் எனப் பெயர்பெற்ற வசுதேவருடைய புத்திரர்.

341. ஜனித்தவர்க் கெல்லாம் ஈசுவரர்.

342. அனைவர்க்கும் (ஆத்மாவா யிருப்பதால்) அனுகூலமாயிருப்பவர்.

343. (தர்மத்தை ரக்ஷிப்பதற்காக) அநேக அவதாரங்களைச் செய்பவர்.

344. தாமரையைக் கையில் தரித்திருப்பவர்.

345. தாமரைபோன்ற இருகண்களை யுடையவர்.

346. பதினான்கு உலகங்களாகிய பத்மத்தைத் தமது நாபியில் உடையவர். (தாமரையின் நாபியாகிய உட்காயில் இருப்பவர். ஒ. யஸ்யா ஹேமமயீ திவ்யா கர்ணிகா மேருருச்யதே। யஸ்ய நாபௌ ததுத்பக்தி: பத்மநாபஸ்ஸ உச்யதே॥ ஔஷதே சிந்தயேத் விஷ்ணும் போஜனே ச ஜனார்த்தனம்। சயனே பத்மநாபஞ்ச விவாஹே ச ப்ரஜாபதிம் ॥)

347. தாமரைமலர்போல் அழகிய கண்களை யுடையவர்.

348. உள்ளத் தாமரையில் உபாஸிக்கப்படுகிறவர்.

349. தமது மாயையினால் அநேக சரீரங்களை எடுப்பவர். ('பிறப்பற்றவனாகவும், மாறுபாடற்றவனாகவும், உண்டாயின

350. மஹர்த்தயே நம:
351. ருத்தாய நம:
352. வ்ருத்தாத்மனே நம:
353. மஹாக்ஷாய நம:
354. கருடத்வஜாய நம:
355. அதுலாய நம:
356. சரபாய நம:
357. பீமாய நம:

வற்றிற்கெல்லாம் ஈசுவரனுகவுமிருந்தும் என்னுடைய பிரகிருதியை வசப்படுத்திக்கொண்டு என் மாயையினுல் தோன்றுகிறேன்.'—கீ. 4. 6. அல்லது அன்னமாகவும் பிராணனுகவும் இருந்துகொண்டு பிராணிகளின் சரீரங்களைக் காப்பாற்றுகிறவர்.)

350. பெருஞ் செல்வமுடையவர். (ஓ. 'என்னுடைய தெய்வ சக்தியை விளக்கும் விபூதிகளுக்கு எல்லை இல்லை.'—கீ. 10. 40.)

351. பிரபஞ்ச ரூபமாக விருத்தியடைபகிறவர்.

352. அனுதியா யிருப்பதால் முதியவர். (ஓ. 'பூர்வோ யோ தேவேப்யோ ஜாத:' எவர் தேவர்களுக்கும் முன் தோன்றியவரோ அவர்.—புருஷஸூக்தம்.)

353. பெரிய கண்களையுடையவர்.

354. கருடக் கொடியை உடையவர்.

355. ஒப்பற்றவர். (ஓ. 'ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய நாம மஹத் யச:'—ச்வே. உப. 4. 19. ஓ. ஒப்புயர்வில்லாத பெருமை வாய்ந்தவனே! மூவுலகிலும் உனக்கு சமமானவர் இல்லை. இன்னும் மேலானவர் ஏது?'—கீ. 11. 43.)

356. சரீரங்களில் ஆத்மாவாய் உறைபவர். ('சரீராணி சீர்யமாணத்வாத் தேஷு ப்ரத்யகாத்மதயா பாதீதி சரப:'—சங். 'ஈசுவரன் எல்லாப் பிராணிகளுடைய இருதயத்துள்ளும் உறைகின்றுன்.'—கீ. 18. 61.)

357. எல்லோரும் தம்மிடம் பயந்து நடக்கும்படி இருப்பவர். (ஓ. பீஷாஸ்மாத் வாத: பவதே | பீஷோதேதி ஸூர்ய:' இவருக்குப் பயந்தே காற்று வீசுகிறது. இவரிடம் பயத்தாலேயே சூரியன் உதிக்கிறுன்.—தை. உப. 2. 8)

358. ஸமயஜ்ஞாய நம:
359. ஹவிர்ஹரயே நம:
360. ஸர்வலக்ஷண-லக்ஷண்-யாய நம:
361. லக்ஷ்மீவதே நம:
362. ஸமிதிஞ்ஜயாய நம:

---

358. ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரத்திற்குரிய ஸமயங்களை அறிபவர். (அல்லது ஸமயம் எனப்படும் வெவ்வேறு வழிபாட்டு முறைகளை அறிந்து ஏற்றுக்கொள்பவர். அல்லது 'ஸம-யஜ்ஞ: ஸர்வபூதேஷு ஸமத்வம் யஜனம் ஸாத்வஸ்யேதி வா'—எல்லா உயிர்களையும் ஸமமாகக் கொள்வதே இவருக்குச் சிறந்த பூஜையாகும் என்பதால் 'ஸமயஜ்ஞ:' ஒ. 'ஸமத்வமாராதன—மச்யுதஸ்ய' விஷ்ணு புரா. 1.17.90)

359. யாகத்தில் ஹவிர்ப்பாகங்களை எடுத்துக் கொள்ளுகிறவர். (ஒ. அஹம் ஹி ஸர்வயஜ்ஞானும் போக்தா ச ப்ரபுரேவ ச'–கீ. 9.24. அல்லது புருஷோத்தமனே ஹவிஸ்ஸாகவும் இருப்பதால் 'ஹவி:' ஒ. 'அபத்னன் புருஷம் பசும்'.—புருஷஸூக்தம். மனிதர்களுடைய பாவத்தையும் பிறவிப்பிணியையும் போக்குவதால் 'ஹரி:' அல்லது 'ஹரி:' என்றால் பச்சை நிறத்தினர். இவ்வாறாக ஹவி:, ஹரி: என்று இரண்டு பெயராகவும் கொள்ளலாம். ஒ. 'ஹராம்-யகஞ்ச ஸ்மர்த்ருணும் ஹவிர்ப்பாகம் க்ரதுஷ்வஹம் I வர்ணச்ச மே ஹரிர்-வேதி தஸ்மாத் ஹரிரஹம் ஸ்ம்ருத:'—ம. பா. சாந்தி. 352.3.)

360. எல்லாப் பிரமாணங்களாலும் அறியப்படுகிறவர். ('வேதேஷு தர்மவசனேஷு ததாகமேஷு ராமாயணேபி ச புராண-கதம்பகே வா I ஸர்வத்ர ஸர்வ-விதிஞ கதிதஸ்-த்வமேவ தஸ்மாத் த்வமேவ சரணம் மம சங்கபாணே'—ஹரிசரணாஷ்டகம்—சங். 'மஹாபுருஷ லக்ஷணங்கள் எல்லாவற்றாலும் ஸ்ரீபதி என்று அறியத்தக்கவர்.'—ப. பா.)

361. லக்ஷ்மி எப்போதும் தம்மை விட்டு விலகாதிருப்பவர்.

362. யுத்தங்களில் ஜயிப்பவர். (எல்லா யுத்தங்களிலும் ஜயிப்பவர் பகவானே. ஒ. 'ப்ரஹ்ம ஹ தேவேப்யோ வ்ஜிக்யே தஸ்ய ஹ ப்ரஹ்மணோ விஜயே தேவா அமஹீயந்த' பிரம்மம் தேவர்களுக்காக ஜயித்தது. அந்த விஜயத்தில் தேவர்கள் பெருமிதமெய்தினா.—கேன. உப. 3.1.)

363. விக்ஷராய நம:
364. ரோஹிதாய நம:
365. மார்க்காய நம:
366. ஹேதவே நம:
367. தாமோதராய நம:
368. ஸஹாய நம:
369. மஹீதராய நம:
370. மஹாபாகாய நம:

---

363. அழிவில்லாதவர். (ஒ. 'ய: ஸ ஸர்வேஷு பூதேஷு நச்யத்ஸு ந விநச்யதி.' எது எல்லாப் பொருள்களும் அழியும் போதும் அழிவதில்லையோ அது.— கீ. 8. 20. 'தன்னை நாடியவர்களிடத்தில் அழியாத அன்புடையவர்.'—ப. பா.)

364. ரோஹிதமெனும் சிவப்பு மீனாக அவதரித்தவர். ('தாமரையில் உட்புறம்போலச் சிவந்த நிறமுள்ளவர்.'—ப. பா.)

365. மோக்ஷத்தில் நாட்டமுடையவர்களால் தேடப்படுகிறவர். (பரமானந்தம் எய்துதற்குத் தாமே மார்க்கமாகவும் இருப்பவர்.)

366. உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருப்பவர்.

367. தமம் எனும் தன்னடக்கம் முதலிய ஸாதனங்களால் சிந்திக்கும் சிறந்த புத்தியின் பயனாய் அறியப்படுபவர். ('தமாதி ஸாதனேன உதர: உத்க்ருஷ்டா மதிர்யா தயா கம்யதே இதி தாமோதர:' —சங். 'தமாத்-தாமோதரம் விது:'— ம. பா. உத். 69. 8. அல்லது கயிற்றால் யசோதையால் வயிற்றிலே கட்டப்பட்டவர். அல்லது 'தாம' எனும் உலகங்களைத் தமது வயிற்றுள் வைத்திருப்பதால் தாமோதரன் எனலுமாம். 'தாமானி லோகநாமானி ஹ்யுதரே யஸ்ய ஸந்தி ஸ: । தாமோதர இதி க்யாதோ யசோதா தாம-பந்தனாத் ॥')

368. எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்பவர். (அல்லது வெல்லுகிறவர்.)

369. பூமியைத் தாங்குகிறவர். ('பூபாரத்தைப் போக்கிப் பூமியை நிலை நிறுத்துகிறவர்.'—ப. பா.)

370. பெரும் பாக்கியம் பொருந்திய அவதாரங்களால் சிறந்தவர். ('மஹான் பாக: பாக்யம் அஸ்ய அவதாரேஷ்விதி' —சங். அல்லது அன்பர்கள் அளிக்கும் சிறந்த போஜனங்களாகிய பாகங்களை ஏற்றுக் கொள்பவர். 'ஆயர்பாடிப் பெண்களும் நப்பின்னைப் பிராட்டியும். திவ்யகன்னிகைகள்

371. வேகவதே நம:
372. அமிதாசனாய நம:
373. உத்பவாய நம:
374. க்ஷோபணாய நம:
375. தேவாய நம:

பதினாறாயிரவரும் ருக்மிணி ஸத்யபாமை ஜாம்பவதி முதலிய பெண்ணரசிகளும் தாமே வலிய வந்து வரிக்கத்தக்க வடிவழகுடையவர்.—ப. பா.)

371. மிகுந்த வேகமுள்ளவர். (ஒ. 'அநேஜ-தேகம் மனஸோ ஜவீய:' அசையாமலே மனதைக் காட்டிலும் வேகமாய்ச் செல்வது.—ஈச. உப. 4.)

372. அளவில்லாத உணவை உடையவர். (ஸம்ஹார காலத்தில் அளவற்ற உலகங்களை உண்பவர். 'இடையர்கள் இந்திரனுக்காகச் செய்த அளவற்ற அன்னக்குவியலைத் தாம் உண்டவர்.'—ப. பா.)

373. உலகின் உற்பத்திக்குக் காரணமானவர். (ஒ. 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே.' நான் அனைத்துக்கும் பிறப்பிடம். என்னிடமிருந்தே அனைத்தும் தோன்றி இயங்குகின்றது—கீ. 10. 8. அல்லது 'உத்பூதோ பவதி ஸம்ஸாராதிதி' ஸம்ஸாரத்திற்கு அப்பாற்பட்டவர். 'கயிற்றினால் கட்டப்பட்ட அவருடைய உருவத்தைத் தியானிப்பவர்களுக்கு ஸம்ஸார பந்தத்தை ஓடச் செய்பவர்.'—ப. பா.)

374. சிருஷ்டி காலத்தில் பிருகிருதியையும் புருஷனையும் உட்புகுந்து கலக்குபவர். (ஒ. 'ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ ப்ரவிச்யாத்மேச்சயா ஹரி: । க்ஷோபயாமாஸ பகவான் ஸர்க்க காலே வ்யயாவ்யயௌ'—விஷ்ணுபுராணம் 1. 2. 29.)

375. சிருஷ்டி முதலியவற்றால் விளையாடுகிறவர். (அல்லது அசுரர் முதலியவர்களை வெற்றி கொள்பவர்; எல்லா உயிர்களையும் இயக்குபவர்; ஆத்மாவாய் ஒளிர்பவர்; துதிக்கப்படுபவர்; எங்கும் செல்பவர். 'யதோதீவ்யதி க்ரீடதி ஸர்க்காதிபிர் - ஜிகீஷதேஸுராதீன் வ்யவஹரதி ஸர்வ பூதேஷு ஆத்மதயா த்யோததே, ஸ்தூயதே ஸ்துத்யை: ஸர்வதா கச்சதி தஸ்மாத் தேவ:'—சங். 'புலி முதலிய பிராணிகளைக் கயிற்றினால் கட்டி விளையாடுவது போல ஜீவர்களை மாயை என்னும் கயிற்றினால் கட்டி விளையாடுகிறவர்.' —

376. ஸ்ரீகர்ப்பாய நம: 379. காரணாய நம:
377. பரமேச்வராய நம: 380. கர்த்ரே நம:
378. கரணாய நம: 381. விகர்த்ரே நம:

ப.பா. ஒ. 'கார்த்தண் கமலக்கண்ணென்னும் நெடுங் கயிறு படுத்தி என்னை ஈர்த்துக்கொண்டு விளையாடு மீசன்றன்னைக் கண்டீரே?'—பெரியாழ்வார்.)

376. தமது செல்வமாகிய உலகனைத்தையும் வயிற்றுக்குள் வைத்திருப்பவர். ('ஸ்ரீர்-விபூதிர் - யஸ்யோதராந்தரே ஜகத்ரூபா ஸ்திதா ஸ ஸ்ரீகர்ப்ப:'—சங். 'போகங்களிலும் விளையாட்டுக்களிலும் அகலாமலிருக்கும் திருமகளைக் கர்ப்பத்தைப் போலக் காப்பவர்.)

377. மிகவும் சிறந்த ஆட்சித்திறனை உடையவர். (ஒ. 'எல்லாப் பொருள்களிலும் ஸமமாக நிலைபெற்றுள்ளவனும் அழியும் பொருள்களில் அழியாமலிருப்பவனும் ஆகிய பரமேசுவரனை எவன் பார்க்கின்றானோ அவன் தான் பார்க்கின்றான்'.—கீ. 13. 27.)

378. உலகின் உற்பத்திற்குக் கருவியாயிருப்பவர். ('அடியார்கள் தம்மை அடைவதற்குத் தாமே சிறந்த கருவியாயிருப்பவர். அறிவுக்குக் கருவிகளான ஞானேந்திரியங்களும் செய்கைக்குக் கருவிகளான கருமேந்திரியங்களும் பகவானுடைய சக்தியின் ஒரு திவலை சேர்ந்ததினால் கரணங்கள் எனப் படுகின்றன. கண்ணும் காணப்படுகின்றவையும் நாராயணனே என்று மஹோபநிஷத்துக் கூறுகிறது.'—ப.'பா.)

379. உபாதான காரணமும் நிமித்த காரணமுமாயிருப்பவர். ('இந்திரியங்களாகிற கருவிகளால் ஜீவர்களுக்கு எல்லா அறிவையும் உண்டுபண்ணுகிறவர். இந்திரியங்களுக்கும் அதிஷ்டான தேவதை.'—ப. பா.)

380. ஸ்வதந்திரர்.

381. விசித்திரமான உலகங்களைப் படைத்தவர். ('தமக்காக இன்ப துன்பங்களில்லாமலிருந்தும் பிறர் இன்ப துன்பங்களுக்காகத் தாம் இன்பமும் துன்பமும் அடைந்து மாறுகிறவர். இந்த மாறுதல் பிறரிடத்திலுள்ள அன்புபற்றி யாதலால் ஈசுவரனுக்குக் குற்றமாகாது.)

382. கஹனாய நம:
383. குஹாய நம:
384. வ்யவஸாயாய நம:
385. வ்யவஸ்தானாய நம:
386. ஸம்ஸ்தானாய நம:
387. ஸ்தானதாய நம:
388. த்ருவாய நம:
389. பரர்த்தயே நம:
390. பரமஸ்பஷ்டாய நம:
391. துஷ்டாய நம:
392. புஷ்டாய நம:

---

382. தம்முடைய ஸ்வரூபமும் சக்தியும் செய்கைகளும் அறியக் கூடாமலிருப்பவர்.

383. மாயையினால் எல்லாவற்றையும் மறைப்பவர். (ஒ. 'யோக மாயையினால் மூடப்பட்டு நான் எல்லோருக்கும் விளங்குவதில்லை.'—கீ. 7. 25.)

384. ஞானஸ்வரூபி. (ஒ. 'வ்யவஸாயாத்மிகா - புத்தி ரேகேஹ குருநந்தன.'—கீ. 2. 41.)

385. எல்லா வரையறைகளுக்கும் ஆதாரமானவர். ('திக்பாலர்களின் அதிகாரங்களையும் ஜராயுஜம் முதலிய படைப்பு வகைகளையும், வர்ணாசிரமங்களையும் அவற்றின் தர்மங்களையும் வகைவகையாக ஸ்தாபிப்பவர்.'—சங்.)

386. எல்லாம் தம்மிடத்தில் பிரளயமாகும்படி இருப்பவர். (அல்லது சிறந்த ஸ்தானமுடையவர். ஒ. 'எதை அடைந்து திரும்புவதில்லையோ அது என்னுடைய சிறந்த ஸ்தானம்'—கீ. 3. 21.)

387. பதவிகளை அளிப்பவர். (துருவனுக்கு அழியாத தான துருவபதத்தை அளித்தாற்போல் அவரவர் தகுதிக்கேற்ற பதவிகளையளிப்பவர்.)

388. நிலையானவர்.

389. சிறந்த ஐசுவரியமுடையவர். ('தம் ஸௌலப்யத்தினால் பரத்வமும் மறையும்படி இருப்பவர்.'—ப. பா.)

390. அழகின் எல்லை நிலமாகவும் ஸ்வயம் பிரகாசராகவும் இருப்பவர். ('யாவரும் தமது மகிமையை வெளிப்படையாய்க் கண்ணால் காணும்படி அவதரித்திருப்பவர்.'—ப. பா.)

391. பேரானந்த வடிவாயிருப்பவர்.

392. எப்போதும் பூர்ணமானவர்.

393. சுபேக்ஷணாய நம: 395. விராமாய நம:
394. ராமாய நம:

---

393. மங்களமான கடாக்ஷமுடையவர். ('ஈக்ஷணம் தர்சனம் யஸ்ய ஸர்வம் சுபம் சுபகரம், நராணும் முமுக்ஷுணும் மோக்ஷதம். போகார்த்தினும் போகதம், ஸந்தேஹ-விச்சேத காரணம், பாவனம். ஹ்ருதயக்ரந்தேர்-விச்சேதகரம் ஸர்வ கர்மணும் க்ஷபணம், அவித்யா நிவர்த்தகம், ஸ 'சுபேக்ஷண: |' எவருடைய கண்ணேக்கமானது சுபகரமாய், மோக்ஷத்தை நாடுவோர்க்கு மோக்ஷத்தைக் கொடுப்பதாயும், போகத்தை வேண்டுவோர்க்குப் போகத்தைக் கொடுப்பதாயும், எல்லா ஸந்தேகங்களையும் போக்குவதற்குக் காரணமாயும், பாவிகளைத் தூய்மை செய்வதாயும், இருதயக்கிரந்தி என்னும் சிக்கலைச் சேதிப்பதாயும், எல்லாக் கருமத்தளைகளையும் அழிப்பதாயும், அவித்தையைப் போக்குவதாயும் இருக்கிறதோ அவர் 'சுபேக்ஷண:'—சங். ஒ' அந்தப் பராபர வஸ்துவின் தர்சனத்தால் இவனுடைய இருதய முடிச்சு அவிழ்கிறது. சந்தேகங்களெல்லாம் ஒழிகின்றன. கருமங்களெல்லாம் நாசமடைகின்றன.' மு. உப. 2.2.9. "பரத்வஸௌலப்யங்களின் மேன்மைக்கு அறிகுறிகளாகக் குளிர்ந்தும் பரந்தும் நீண்டுமிருக்கும் கம்பீரமான திருக்கண்களையுடையவர். தாம் கடாக்ஷிப்பதே யாவருக்கும் மங்களகரமாக இருப்பவர். தம்மைத் தரிசிப்பது எல்லாருக்கும் மங்களமாக இருப்பவர். 'எவன் ராமனைப் பார்க்கவில்லையோ, எவனை ராமன் பார்க்கவில்லையோ அவ்விருவரும் உலகத்தில் இகழப்பட்டேயிருப்பர். தம் மனமும் அவரை இகழும்' என்பது ராமாயணம்." —ப. பா.)

394. யாவரும் தம்மிடம் மகிழும்படி இருப்பவர். ('நித்யானந்தேऽஸ்மின் யோகினோ ரமந்த இதி ராம: || ஸ்வேச்சயாவபுர்-வஹன்வா தாசரதீ ராம:'—சங். 'ரமந்தே யோகினோ யஸ்மின் நித்யானந்தே சிதாத்மனி | இதி ராமபதேனைதத்பரம் ப்ரஹ்மாபிதீயதே ||'—பத்ம புராணம்.)

395. எல்லாப் பிராணிகளுக்கும் முடியும் இடமாயிருப்பவர். ('வரன்களை அளிக்கும் பிரம்மாதி தேவர்களும், அவர்களால் அளிக்கப்படும் வரன்களும் அவ்வரன்களைப் பெற்ற ராவணுதிகளும் தம்மிடத்தில் வியாபிக்காமல் ஒய்ந்து போகும்படி இருப்பவர்.)

396. விரதாய நம:
397. மார்க்காய நம:
398. நேயாய நம:
399. நயாய நம:
400. அநபாய நம:
401. வீராய நம:
402. சக்திமதாம் ச்ரேஷ்டாய நம:

396. உலக இன்பங்களில் ஆசையில்லாதவர். ('விரஜ:' எனும் பாடத்திற்கும் இதுவே பொருள்.)

397. முக்திக்கு வழியாயிருப்பவர். ('யம் விதித்வா அம்ருதத்வாய கல்பந்தே முமுக்ஷவ: ஸ ஏவ பந்தா மார்க்க: | நான்ய: பந்தா வித்யதேऽயனாய இதி ச்ருதே: |'—சங். 'விரஜோ மார்க்க :' 'அடுத்தவர்களுக்குக் குற்றமிலாத வழியைக் காட்டுகிறவர் என்று ஒரே நாமமாகக் கொள்வதும் உண்டு'.—ப. பா.)

398. தத்துவஜ்ஞானத்தினால் ஜீவனைப் பரமாத்மாவாகும்படி அழைத்துக் கொள்பவர். ('மார்க்கேண ஸம்யஜ்-ஜ்ஞானேன ஜீவ: பரமாத்மதயா நீயத இதி நேய:'—சங். "தம்மிடம் அன்பு வைத்த ரிஷிகள் முதலானவர்கள் தம்மைக் கட்டளையிட்டு நடத்தும்படி அவர்களுக்கு அடங்கியிருப்பவர். 'நான் ரிஷிகளால் கட்டளையிடத் தகுந்தவன்' என்பது ஸ்ரீராமாயணம்."—ப. பா.)

399. எல்லாவற்றையும் நடத்துகிறவர்.

400. தாம் யாராலும் நடத்தப்படாதவர்.

401. பராக்கிரமமுள்ளவர். ("ராக்ஷஸர்களைப் பயத்தினால் நடுங்கும்படி செய்பவர். 'பிரம்மதண்டம் போலப் பிரகாசிப்பவையும் மின்னல்போல ஜ்வலிப்பவையுமான ராம பாணங்களை நினைத்து ராக்ஷஸ ராஜனான ராவணன் நடுங்கினான்' என்பது ஸ்ரீராமாயணம்."—ப. பா.)

402. சக்திவாய்ந்த பிரம்மாதி தேவர்களுக்கும் மிகுந்த சக்தியுள்ளவர். ('ராமா, உம்மை முடிவில்லாதவரும் தேவர்களுக்கும் ஈசுவரருமான நாராயணர் என்று உணர்கின்றேன்' என்று ஸ்ரீராமாயணத்தில் பரசுராமர் சொல்வது—ப. பா.)

396-97. விரஜோ மார்க்காய நம: | —பா. பே.

403. தர்மாய நம:
404. தர்மவிதுத்தமாய நம:
405. வைகுண்டாய நம:
406. புருஷாய நம:

---

403. எல்லாப் பொருளுக்கும் ஆதாரமாயிருப்பவர். (அல்லது எல்லாத் தருமங்களாலும் ஆராதிக்கப்படுகின்றவர். "ஐசுவரியத்தையும் மோக்ஷத்தையும் கொடுத்து ஜீவர்கள் எல்லோரையும் தாமே நேரில் தாங்குகிறவர். 'என் பாணமே! தசரத புத்திரரான ராமர் தர்மாத்மாவாகவும், ஸத்திய ஸந்தராகவும், பராக்கிரமத்தில் ஒப்பற்றவராகவும் இருப்பது உண்மையாயின், நீ இந்திரஜித்தைக் கொல்' என்பது ஸ்ரீராமாயணத்தில் இளைய பெருமாள் வாக்கியம். 'வேதங்களோதின பிராம்மணர்களும் ஆத்மஞானிகளான பெரியோர்களும் கிருஷ்ணனே சாசுவதமான தர்மமென்று சொல்லுகின்றனர்' என்பது ஸ்ரீமஹாபாரதம் ஆரண்ய பர்வம்."—ப. பா.)

404. தர்மந் தெரிந்தவர்களில் சிறந்தவர். ('ச்ருதய: ஸ்ம்ருதயச்ச யஸ்யாஜ்ஞா-பூதா: ஸ ஏவ தர்மவிதா-முத்தம:'—சங். 'வேதாந்த-க்ருத் வேதவிதேவ சாஹம்'—கீ. 15. 15. "வசிஷ்டர், வாமதேவர், மார்க்கண்டேயர் முதலான பெரியோர்களுக்குச் சிஷ்யராயிருந்தும் அவர்களும் தங்களுடைய தர்ம ஸந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள வந்தடையத் தக்கவர். 'நதிகள் கடலில் சேர்வதுபோல ஸாதுக்கள் எப்பொழுதும் வந்தடையும்படி இருப்பவர்' என்பது ஸ்ரீராமாயணம்." —ப. பா.)

405. சிருஷ்டியின் தொடக்கத்தில் பஞ்ச பூதங்களைச் சிதறிப் போகாமல் ஒன்று சேர்த்துக் கட்டுப்படுத்துபவர். (ஒ. "மயா ஸம்ச்லேஷிதா பூமி-ரத்பிர்-வ்யோம ச வாயுனா| வாயுச்ச தேஜஸா ஸார்த்தம் வைகுண்டத்வம் ததோ மம||" ம. பா. சாந்தி. 325. 15. 'பக்தர்களின் இடையூறுகள் எல்லாவற்றையும் விலக்கி அவர்களை எளிதில் தம்மிடம் சேர்த்துக் கொள்ளுகிறவர்'. ப. பா.)

406. எல்லாவற்றிற்கும் முன்னுலிருப்பவர். (அல்லது எல்லாப் பாவங்களையும் அழிப்பவர்; அல்லது உடல் தோறும் ஆத்மாவாக உறைந்திருப்பவர். 'ஸர்வஸ்மாத் புரா ஸதனாத் ஸர்வபாபஸ்ய ஸாதனாத் வா புருஷ:'—சங். ஒ. 'ஸ வா அயம் புருஷ: ஸர்வாஸு பூர்ஷு புரிசய:'—ப்ரு. உப. 2. 5. 18.)

407. ப்ராணாய நம:
408. ப்ரணதாய நம:
409. ப்ரணவாய நம:
410. ப்ருதவே நம:
411. ஹிரண்யகர்ப்பாய நம:
412. சத்ருக்னாய நம:
413. வ்யாப்தாய நம:

---

407. க்ஷேத்ரஜ்ஞ வடிவுகொண்டு உயிர்க்குயிராயிருப்பவர். (அல்லது பிராணவாயு வடிவில் உலகை இயக்குபவர். ஒ. 'கேன ப்ராண: ப்ரதம: ப்ரைதி யுக்த:'—கேன. உப. 1. 1.)

408. உயிரைக் கொடுப்பவர். (அல்லது பிரளய காலத்தில் உயிர்களை அழிப்பவர். 'ஸ்ரீராமர் வனம் சென்றபோது அவரைப் பிரிந்ததினால் மரங்களும் மலர்கள் முளைகள் அரும்புகளுடன் வாடிப்போயின' என்பது ஸ்ரீராமாயணம்.'—ப. பா.)

409. ஓம் என்று ஒலிப்பவர். (அல்லது உலகனைத்தாலும் வணங்கப்படுகிறவர். 'ப்ரணம:' என்றும் பாடம். ஒ. ஆத்மோஜ்-ஜீவன-ஸம்பந்த-முத்போத்ய ப்ரணவேன வை। பாதாரவிந்தயோஸ்—தான் ய: ப்ரணமயதி நித்யச: || ப்ரணவ: ஸ ஸமாக்யாத: ஸப்தார்ணோ மோக்ஷதோ மனு: || ஓம் ப்ரணவாய நம: இதி ||)

410. பிரபஞ்ச ரூபமாய் விரிந்துள்ளவர்.

411. பிரம்மாவின் உற்பத்திக்குக் காரணமாகிய பொன் அண்டத்தைத் தம்முள் வைத்திருப்பவர். ('பொற்புதையல் போன்றவர்'—ப. பா.)

412. தேவசத்துருக்களான அசுரர்களைக் கொல்லுகிறவர். ('விஷயங்களில் பிரவிருத்திப்பதனால் ராவணன் போலவே பகைகளாயுள்ள இந்திரியங்களை விவேகம் என்னும் அம்பினால் அடக்குகிறவர்'— ப. பா. ஒ. 'தமோக்னாய ஹிமக்னாய சத்ருக்னாயாமிதாத்மனே । க்ருதக்னக்னாய தேவாய ஜ்யோதிஷாம் பதயே நம:'.—ஆதித்யஹ்ருதயம்.)

413. காரண வடிவாய்க் காரியங்களில் ஊடுருவி நிற்பவர். ('தியானிப்பவர்களிடத்தில் இளையவன் முதியவன் யஜமானன் வேலைக்காரன் பகைவன் நண்பன் முதலிய வேற்றுமைகளின்றி ஒரே விதமான அன்பினால் வியாபித்திருப்பவர்.—ப. பா.)

414. வாயவே நம:
415. அதோக்ஷஜாய நம:
416. ருதவே நம:
417. ஸுதர்சனாய நம:
418. காலாய நம:
419. பரமேஷ்டினே நம:
420. பரிக்ரஹாய நம:

---

414. மணங்கமழச் செய்கிறவர். ('மண்ணில் நல்ல மணம் நானே'—கீ. 7. 9. 'தம்மைத் தியானிப்பவர்கள் இருக்குமிடந் தேடி ஆங்காங்கு செல்லுகிறவர்.' 'சபரி, பரத்துவாஜர், குகன் முதலானவர்களைத் தேடிச் சென்றார் என்பது குறிப்பு.'—ப. பா.)

415. யாரும் எவ்வளவு அனுபவித்து உபயோகித்துக் கொண்டாலும் வற்றிக் குறைவுபடாதவர். (ஒ. 'அதோ ந க்ஷீயதே ஜாது யஸ்மாத் தஸ்மா-ததோக்ஷஜ:'—ம. பா. உத்யோ. 69. 10. அல்லது ஆகாசம் 'அக்ஷம்;' பூமி 'அத:' ஆக இவ்விரண்டிற்குமிடையில் விராட்புருஷ வடிவுகொண்டு தோன்றுபவர். அல்லது வெளிநோக்கைவிட்டு உள் நோக்கமுள்ள இந்திரியங்களுக்குப் பிரத்தியக்ஷமாக ஆவிர்ப்பவிப்பவர். ஒ. அதோ-பூதே ஹ்யக்ஷகணே ப்ரத்யக்ரூப-ப்ரவாஹிதே। ஜாயதே தஸ்ய வை ஜ்ஞானம் தேனாதோக்ஷஜ உச்யதே ॥')

416. ருது என்னும் காலவடிவினர்.

417. மங்களமான மோக்ஷமென்னும் ஞான வடிவினர். (அல்லது தாமரையிதழ்போல் நீண்டு அழகிய கண்களை உடையவர். பக்தர்கள் எளிதாகக் காணக்கூடியவர். 'சோபனம் நிர்வாணபலம் தர்சனம் ஜ்ஞானமஸ்யேதி ஸுதர்சன:। சுபே தர்சனே ஈக்ஷணே பத்ம-பத்ராயதே அஸ்யேதி வா। ஸ்வேச்சயா ஸுந்தரம் தேஹம் வஹதி ஸுகேன த்ருச்யதே பக்தைரிதி வா ஸுதர்சன:।'—சங். 'சந்திரன் போலக் காட்சிக்கினியவர்'—ராமாயணம் பாலகாண்டம்.)

418. எல்லாவற்றையும் எண்ணுகிறவர். (ஒ. 'கால: கலயதா-மஹம்'—கீ. 10. 30.)

419. மிகச்சிறந்த தமது மகிமையால் இருதயாகாசத்தில் நிலைத்திருப்பவர். ('பரமே ப்ரக்ருஷ்டே ஸ்வே மஹிம்னி ஹ்ருதயாகாசே ஸ்தரதும் சீலமஸ்யேதி பரமேஷ்டீ'—சங்.)

420. சரணாகதர்களால் எல்லாவகைகளாலும் கொள்ளப் படுகிறவர். (அல்லது ஸர்வவியாபி யாதலால் எங்கும்

421. உக்ராய நம:
422. ஸம்வத்ஸராய நம:
423. தக்ஷாய நம:
424. விச்ராமாய நம:
425. விச்வதக்ஷிணாய நம:

அறியப்படுகிறவர்; அல்லது பக்தர்களால் அளிக்கப்படும் தழை, பூ முதலியவற்றையும் ஏற்றுக்கொள்பவர். 'சரணார்த்திபி: பரிதோ க்ருஹ்யதே, ஸர்வகதத்வாத் பரிதோ ஜ்ஞாயதே இதி வா, பதர-புஷ்பாதிகம் பக்தைரர்ப்பிதம் பரிக்ருஹ்ணாதிதி வா பரிக்ரஹ:'—'இராமாவதாரத்தில் தம்மைச் சேர்ந்த நகரத்து ஜனங்களையும் அவர்களின் சுற்றத்தாரையும் அவர்களின் இஷ்ட தேவதைகளையும் தோட்டங்களிலுள்ள மரம் புல் முதலியவற்றையும் கூடப் பரமபதம் சேரும்படி அங்கீகரித்தவர்.'—ப. பா.)

421. கண்டிப்பாக கட்டளையிடுபவர். ('இவரிடத்தில் பயந்து தான் காற்றடிக்கிறது; சூரியன் உதயமாகிறான்' என்பது சுருதி.—தை. உப. 2. 8.) 'தர்ம விரோதிகள் விஷயத்தில் கொடியவராயிருப்பவர்'—ப. பா.)

422. எல்லாப் பொருள்களும் தம்மிடத்தில் வசிக்கும்படி இருப்பவர். ('ஸம்வஸந்தி பூதான்-யஸ்மின்னிதி ஸம்வத்ஸர:'—சங். 'மத்-ஸ்தானி ஸர்வ பூதானி'—கீ. 9. 4.)

423. எல்லாக் காரியங்களையும் விரைவாகச் செய்து முடிப்பவர். (அல்லது உலக வடிவாக விருத்தியடைந்திருப்பவர்.)

424. ஸம்ஸார ஸாகரத்தில் களைத்துப் போனவர்களுக்கு இளைப்பாறுமிடமாகியவர். (அல்லது மோக்ஷமென்னும் இளைப்பாறுதலைக் கொடுப்பவர்.)

425. எல்லாச் செயல்களிலும் திறமையுடையவர். (அல்லது எல்லோரைக் காட்டிலும் மிகுந்த சக்தியுள்ளவர். 'நன்று செய்தவர்களுக்கும் தீது செய்தவர்களுக்கும் வேற்றுமையின்றி விரைவில் நன்மையளிப்பவர். அபராதப் பட்டவர்கள் விஷயத்திலும் மிக்க பொறுமையுள்ளவர். அசுவமேத யாகத்தில் பூமியனைத்தையும் பிராம்மணர்களுக்குத் தக்ஷிணையாகக் கொடுத்தவர்; இவ்வரலாறு கல்கி அவதாரத்தைப்பற்றி மகாபாரதத்தில் ஆரணிய பர்வத்தில் சொல்லப்படுகிறது'—ப. பா.)

426. விஸ்தாராய நம:
427. ஸ்தாவரஸ்தாணவே நம:
428. ப்ரமாணாய நம:
429. பீஜாயாவ்யயாய நம:
430. அர்த்தாய நம:
431. அனர்த்தாய நம:
432. மஹாகோசாய நம:
433. மஹாபோகாய நம:
434. மஹாதனாய நம:
435. அநிர்விண்ணாய நம:

426. தம்மிடம் உலகனைத்தும் விஸ்தரிக்கும்படி இருப்பவர். ('வேதத்தினால் விதிக்கப்படும் முறைகளை வெளிப்படுத்துகிறவர்'—ப. பா.)

427. தாம் நிலைபெற்றவராகவும் பூமி முதலியவை தம்மிடம் நிலையுள்ளவராகவும் இருப்பவர்.

428. ஞானரூபியாயிருப்பவர். (அல்லது பிரத்யக்ஷம் முதலான பிரமாணங்களாக இருப்பவர்.)

429. என்றும் அழிவில்லாத காரணமாயிருப்பவர்.

430. (இன்பவடிவினராதலால்) எல்லோராலும் விரும்பப்படுகிறவர். ('செம்மையாக அறிந்து உறுதியாகப் பக்தி செய்யும் உயர்ந்த அதிகாரிக்குத் தாமே பயனாக இருப்பவர்.' —ப. பா.)

431. (விரும்பினவை யெல்லாம் நிரம்பியவராயிருத்தலின்) தாம் விரும்பத்தக்க பயன் ஒன்றுமில்லாதவர். (ஒ. 'பார்த்தா! செய்ய வேண்டிய கர்மம் எனக்கு மூவுலகிலும் ஒரு சிறிதும் இல்லை; அடையப்படாததாயும் இனி அடைதற்குரியதாயும் ஒன்றும் இல்லை.' —கீ. 3. 22. 'அற்பப் பலன்களை விரும்புகிற பாக்கியஹீனர்களால் வேண்டப்படாதவர்.'—ப. பா.)

432. ஐந்து பெரிய கோசங்களுள் உறைபவர். ('வேண்டுகிறவர்களுக்கெல்லாம் எக்காலமும் எல்லாவகைகளாலும் தானம் செய்தாலும் குறைவுபடாத பொக்கசசாலையை உடையவர்.'—ப. பா.)

433. சிறந்த இன்ப வடிவினர்.

434. போகசாதனமாகிய மிகுந்த தனத்தை உடையவர்.

435. வெறுப்பில்லாதவர். (உத்ஸாகம் குறைவுபடாதவர். 'தம்மை அணுகாமல் பயனற்றுப் போகிறவர்களைத் திரும்பவும் வசப்படுத்தப் பெருமுயற்சி செய்வதில் சிறிதும் சோர்வில்லாதவர்.'—ப. பா. 'கூடாரை வெல்லும் சீர் கோவிந்தன்.')

436. ஸ்தவிஷ்டாய நம:
437. அபுவே நம:
438 தர்மயூபாய நம:
439. மஹாமகாய நம:
440. நக்ஷத்ரநேமயே நம:
441. நக்ஷத்ரிணே நம:
442. க்ஷமாய நம:
443. க்ஷாமாய நம:
444. ஸமீஹனாய நம:

436. விராட்ரூபியாக மிக விரிவாயிருப்பவர். ('எவருக்கு அக்கினி தலையோ: சந்திர சூரியர்கள் கண்களோ, திக்குகள் காதுகளோ, பிரசித்தமான வேதங்கள் வாக்கோ, வாயு பிராணனோ, உலகம் உள்ளமோ எவருடைய பாதங்களி லின்று பூமி தோன்றிற்றோ அவரே உலகில் உண்டாய அனைத்திற்கும் அந்தராத்மா.'—மு. உப. 2. 1. 4.)

437. பிறப்பில்லாதவர். ('அபூ:' என்று பாடம். அல்லது 'பவதிதி பூ:' எக்காலமும் இருப்பவர். அல்லது பூமி வடி வாயிருப்பவர்.)

438. தர்மங்கள் கட்டப்படும் யூபஸ்தம்பம் போன்ற வர்.

439. எவருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டால் யாகங்கள் பெருமை அடைகின்றனவோ அவர்.

440. நக்ஷத்திர மண்டலமாகிய சிம்சுமார சக்கரத்தின் குடம் போன்றவா.

441. நக்ஷத்திரங்களின் நாயகரான சந்திர வடிவினர். (ஒ. 'நக்ஷத்திரங்களிடை நான் சந்திரனாயிருக்கிறேன்.'— கீ. *10. 21.*)

442. பொறுமையுள்ளவர். (ஒ. 'க்ஷமயா ப்ருதிவீ ஸம:' —வால்மீகி. ஸாமர்த்தியமுள்ளவர். 'எல்லா உலகங்களின் பாரங்களையும் எளிதில் தாங்குபவர்.'—ப. பா.)

443. பிரளய காலத்தில் காரியங்களனைத்தும் அழிந்த போது காரணரூபியாகிய தாம் மட்டும் தனித்திருப்பவர். ('ஸர்வ-விகாரேஷு க்ஷயிதேஷு ஸ்வாத்மனா அவஸ்தித இதி க்ஷாம:'—சங்.)

444. சிருஷ்டி முதலிய காரியங்களை விரும்புகிறவர். (ஒ. 'ஸோऽகாமயத! பஹுஸ்யாம் ப்ராஜாயேயேதி ||'—தை. உப. 2. 6. 'சிருஷ்டி காலத்தில் எல்லோரையும் தம் தம் அதி காரங்களில் ஒய்வில்லாமல் பிரவிருத்திக்கச் செய்பவர்.'— ப. பா.)

437. புவே நம: : —ப. பா.

445. யஜ்ஞாய நம:
446. இஜ்யாய நம:
447. மஹேஜ்யாய நம:
448. க்ரதவே நம:
449. ஸத்ராய நம:
450. ஸதாங்கதயே நம:
451. ஸர்வதர்சினே நம:
452. விமுக்தாத்மனே நம:

445. யஜ்ஞஸ்வரூபி. (ஒ. 'யஜ்ஞோ வை விஷ்ணு:')

446. யாகங்களினால் ஆராதிக்கப்படுவர். (ஒ. 'அஹம் ஹி ஸர்வ யஜ்ஞானும் போக்தா ச ப்ரபுரேவ ச |'—கீ. 9. 24. ஒ. "யே யஜந்தி மகை: புண்யைர்-தேவதாதீன் பித்ருனபி | ஆத்மான-மாத்மனு நித்யம் விஷ்ணுமேவ யஜந்தி தே||"—ஹரிவம்சம் 3. 40. 27.)

447. யாகங்களினால் ஆராதிக்கப்படுபவர்களுள் சிறந்தவர். (அல்லது தம்மைக் குறித்துச் செய்யும் யாகமே மோக்ஷ பலனைத் தருவதால் அது மற்ற யாகங்களைவிடச் சிறந்ததாகும்படி இருப்பவர்.)

448. யூபஸ்தம்பம் நாட்டிச்செய்யும் யாகவடிவினர். ('ஸோமபானமுள்ள அக்னிஷ்டோமம் முதலிய எழுவகை யாகங்களால் ஆராதிக்கப்படுபவர். இதற்கு முன் தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம், மனுஷ்யயஜ்ஞம், பிரம்மயஜ்ஞம் என்னும் பஞ்ச மகாயஜ்ஞங்களும் ஔபாஸனம் முதலிய பாக யஜ்ஞங்களும், அக்னிஹோத்ரம் முதலிய ஹவிர் யஜ்ஞங்களும் கொள்ளப்பட்டன.'—ப. பா.)

449. (பல யஜமானர்களால் நீண்டகாலம் செய்யப்படும்) ஸத்ரயாகமாயிருப்பவர். (அல்லது ஸாதுக்களைக் காப்பவர். 'ஸதஸ்-த்ராயத இதி வா ஸத்ரம்'—சங்.)

450. மோக்ஷத்தை நாடுவோர்க்கு அடைக்கலமாகியவர்.

451. (பிராணிகளின் நல்வினை தீவினைகளாகிய) அனைத்தையும் இயற்கையாக அறிபவர்.

452. இயற்கையாகவே எல்லாப் பற்றுகளும் விட்ட ஆத்மாவாயிருப்பவர். (ஒ. 'விமுக்தச்ச விமுச்யதே' கட. உப. 5. 1. ஒ. 'பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்

452. நிவ்ருத்தாத்மனே நம:. —ப. பா.

453. ஸர்வஜ்ஞாய நம 455. ஸுவ்ரதாய நம:
454. ஜ்ஞாநுயோத்தமாய நம: 456. ஸுமுகாய நம:

பற்றுக பற்று விடற்கு'—குறள் 350. 'நிவ்ருத்தாத்மா—நிவிருத்தி தர்மத்தை உபதேசிப்பதற்காகவும் சிறந்த வைராக்கியத்தை அனுஷ்டானத்திஞல் வெளிப்படுத்துவதற்காகவும் நரநாராயணுவதார மெடுத்துச் சப்தாதி விஷயங்களை மனத்திஞல் துறந்திருந்தவர்.'—ப. பா.)

453. எல்லாமாகவும் அறிபவராகவும் இருப்பவர். ('ஸர்வச்ச அஸௌ ஜ்ஞச்சேதி ஸர்வஜ்ஞ:'—சங். ஒ. 'இதம் ஸர்வம் யதயமாத்மா' ப்ரு. உப. 2 4. 6. 'தாமே எல்லாமும் என அறிந்திருப்பவர்.'—ப. பா. 'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கு மவ்வுயிராய் அங்கங்கிருப்பது நீயன்றே பராபரமே'—தாயுமானவர்.)

454. (சிறந்ததாய் வேறென்றிலே பிறவாது தானே என்றுமிருப்பதாய் இடையருததாய் எல்லாவற்றையும் பெறுவிக்கும் கருவிகளுட் சிறந்ததாய் உள்ள) உத்தம ஞானவடிவினர். ('ப்ரக்ருஷ்டம் அஜன்யம் அனவச்சின்னம் ஸர்வஸ்ய ஸாதகதமமிதி ஜ்ஞானமுத்தமம்'—சங். ஒ. 'ஸத்யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்ம'—தை. உப. 2. 1.)

455. (நாடியவர்களை ரக்ஷிக்கும்) சிறந்த விரதத்தை உடையவர். (ஒ. ஸக்ருதேவ ப்ரபன்னுய தவாஸ்மீதி ச யாசதே । அபயம் ஸர்வதா தஸ்மை ததாம்யேதத் வ்ரதம் மம ‖'—ராமாயணம் 6. 18. 33. 'தமக்கு ஒரு கருமமும் வேண்டாமாயினும் தம்மைப் பார்த்து மற்றவர்கள் தர்மம் செய்து பலன் பெறுவதற்காகத் தாம் தர்மத்தை விடாமல் அனுஷ்டிப்பவர்.'—ப. பா.)

456. அழகிய முகமுள்ளவர். ('ப்ரஸன்னவதனம் சாரு பத்ம பத்ராயதேக்ஷணம்' மலர்ந்த முகமும் தாமரை இதழ் போல் நீண்ட கண்களும் உடையவர்.—விஷ்ணுபுராணம் 6. 7. 80. அல்லது ராமாவதாரத்தில் பட்டாபிஷேகத்தை விலகிக் காட்டுக்குப் போகச் சொல்லுகையிலும் முகமலர்ச்சி மாருதவர். 'மெய்த்திருப்பதம் மேவு என்றபோதினும், இத்திருத்துறந்தேகு என்றபோதினும் சித்திரத்தின் அலர்ந்த

457. ஸூக்ஷ்மாய நம: 460. ஸுஹ்ருதே நம:
458. ஸுகோஷாய நம: 461. மநோஹராய நம:
459. ஸுகதாய நம:

செந்தாமரை ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவான்.'—கம்ப ராமாயணம். ஒ. 'ந வனம் கந்து-காமஸ்ய த்யஜதச்ச வஸுந்தராம் | ஸர்வலோகாதிகஸ்யைவ மனோ ராமஸ்ய வ்யதே ||'—ராமாயணம் 2. 19. 33. அல்லது வித்தைகளையெல்லாம் உபதேசிப்பதால் ஸுமுகர். ஒ. 'யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை.'—ச்வே. உப. 6. 18.)

457. ஆதியான ஸூக்ஷ்ம காரணமாக இருப்பவர். ('ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்.'—மு. உப. 1. 1. 'தியானத்தினால் மட்டும் புலப்படக்கூடிய நுண்ணிய ஸ்வரூபமுடையவர்.'—ப. பா. 'காண்பதற்கரியதும் அனைத்திலும் ஊடுருவி உள்ளுறையும் மறைபொருளும் புத்தி குகையில் நிலைபெற்றதும், உடல்தோறும் வியாபித்து நிற்பதும், பழமையான பொருளும் ஆகிய அந்த திவ்ய தேஜோமயத்தை அத்யாத்ம யோகத்தால் உணர்ந்து தீரனானவன் இன்பதுன்பக் கிளர்ச்சிகளை விட்டவனாகின்றான்.'—கட. உப. 2. 12.)

458. வேதமாகிய நல்ல கோஷத்தை செய்தவர். (அல்லது கம்பீரமான குரலை யுடையவர். வேதங்களினால் கோஷிக்கப்படுபவர். ஒ. 'ஸர்வே வேதா யத்பத-மாமனந்தி'—கட. உப. 2. 15.)

459. ஸாதுக்களுக்குச் சுகத்தைக் கொடுப்பவர். (அல்லது அஸாதுக்களின் சுகத்தைக் கெடுப்பவர்.)

460. (கைம்மாறு வேண்டாமல் உதவி செய்யும்) சிறந்த மனமுள்ளவர். (ஒ. 'கதிர்-பர்த்தா ப்ரபு: ஸாக்ஷீ நிவாஸ: சரணம் ஸுஹ்ருத்'—கீ. 9. 18.)

461. (அளவு கடந்த ஆனந்த வடிவினனாகி) மனத்தைக் கவர்பவர். (ஒ. 'யோ வை பூமா தத்ஸுகம்' நால்பே ஸுகமஸ்தி'—சா. உப. 7. 23. 1.)

462. ஜிதக்ரோதாய நம:
463. வீரபாஹவே நம:
464. விதாரணாய நம:
465. ஸ்வாபனாய நம:
466. ஸ்வவசாய நம:
467. வ்யாபினே நம:
468. நைகாத்மனே நம:

---

462. கோபத்தை அடக்கினவர். ('ராக்ஷஸர்களைக் கொல்வது வேதமரியாதைக் காப்பதற்கன்றிக் கோபத்தினாலன்று'—சங். 'தம்மை நாடியவர்க்குக் காமக் குரோதங்களைப் போக்குகிறவர்.'—ப. பா.)

463. (தேவர்களின் சத்துருக்களைக் கொன்று வேத வரம்பை நிலை நிறுத்தும்) பராக்கிரமம் மிக்க தோள்களையுடையவர்.

464. அதர்மஞ் செய்வோரைக் கிழித்துப் போடுபவர். ('கொடிய பயங்களனைத்தையும் சேதிப்பவர் என்பது அவரைப் பற்றிய மந்திரம்.'—ப. பா.)

465. பிராணிகளை மாயையினால் ஆத்ம ஞானமின்றி உறங்கச் செய்பவர். (அங்ஙனம் உறங்குபவர்களையே வேத மாதா 'உத்திஷ்டத ஜாக்ரத' என்று தட்டியெழுப்புகின்றாள். ஒ. 'இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்'—திருப்பாவை.)

466. பிறர்க்கு வசப்படாதவர்.

467. வியாபித்திருப்பவர். (ஆகாயம் போல் எங்கும் நிறைந்திருப்பவர். ஒ. 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தெது.'—தாயுமானவர். 'தேவர்கள் அசுரர்கள் மந்தரமலை வாசுகி முதலியவர்களுக்குக் கடல் கடைவதில் சக்தியை விருத்தி செய்வதற்காக அவர்களெல்லாரிடத்திலும் தாம் வியாபித்தவர்.'—ப. பா.)

468. திருமேனி ஒன்றல்லாதவர். ('வணங்குந் துறைகள் பல பலவாக்கி மதவிகற்பால் பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி அவையவை தோறணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பி வைத்தாய் இணங்கு நின்னோரை யில்லாய் நின்கண் வேட்கை யெழுவிப்பனே.'—நம்மாழ்வார். ஒ. 'விச்வமூர்த்திர்-மஹா-மூர்த்திர் - தீப்தமூர்த்தி-ரமூர்த்திமான் । அநேக

469. நைககர்மக்ருதே நம: 472. வத்ஸினே நம:
470. வத்ஸராய நம: 473. ரத்னகர்ப்பாய நம:
471. வத்ஸலாய நம: 474. தனேச்வராய நம:

மூர்த்தி-ரவ்யக்த: சதமூர்த்தி: சதானன:||'--. வி. ஸ. 717-724. 'கடல் கடையும் காலத்தில் தேவர்கள் பக்கத்தில் விஷ்ணுமூர்த்தியாயிருந்தும், மந்தரபர்வதத்தைத் தாங்குவதற்குக் கூர்மாவதாரமெடுத்தும் பின்னும் அக்காலத்துக்குத் தக்கபடி மோகினி முதலிய ரூபங்கள் காட்டியும் பல உருவங்களெடுத்தவர்.'—ப. பா.)

469. (சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் முதலிய) பலசெய்கைகளைச் செய்கிறவர். ('கடைவது, மலையைத் தாங்குவது, பகைவரை ஒழிப்பது, அமுதம் அளிப்பது முதலிய பல செய்கைகளைச் செய்தவர்.'—ப. பா. ஒ. 'விச்வகர்மா மஹாகர்மா'—வி. ஸ. 50-51)

470. அனைத்திற்கும் தாமே இருப்பிடமானவர். ('வஸத்யத்ரா கிலமிதி வத்ஸர: வத்ஸம் ராதீதி வா'—சங். 'புருஷார்த்தங்களை அவரவர் அதிகாரத்துக்குத் தக்கபடி பகுத்து ஏற்பாடு செய்வதற்காக தர்மாத்மா என்னும் ரூபத்துடன் எல்லாரிடத்திலும் அந்தர்யாமியாக வசிப்பவர்.'—ப. பா.)

471. பக்தர்களிடத்தில் அன்புள்ளவர். ('பசுக்கள் புதியனவாக ஈன்ற கன்றுகளிடத்தில் அன்புவைத்துப் பால் சுரந்துகொண்டு அவற்றைத் தேடித் திரிவதுபோலச் சரணாகதர்களைப் பேரன்புடன் தேடுகிறவர்.'—ப. பா.)

472. கன்றுகளைக் காப்பவர். (உலகிற்குத் தந்தை யாதலின் எல்லா மக்களையும் தம் குழந்தைகளாகக் கருதுபவர்.)

473. ரத்தினங்களை உள்ளே வைத்திருக்கும் கடலாயிருப்பவர். (அல்லது அடியார்களைத் தன் வயிற்றில் வைத்துக் காப்பவர். 'சிறந்த தனங்களை மிகுதியாகத் தம்மிடம் வைத்திருப்பவர். அர்த்தம் காமம் எனும் இரண்டு புருஷார்த்தங்களும் சங்க சக்ரங்களாகத் தம்மிடம் எப்போதும் இருக்கப் பெற்றவர்.'—ப. பா.)

474. செல்வ நாயகர்.

475. தர்மகுபே நம: 477. தர்மிணே நம:
476. தர்மக்ருதே நம: 478. ஸதே நம:

475. தர்மத்தைக் காப்பவர். (ஒ. 'தர்ம-ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே'—கீ. 4. 8. சாச்வத-தர்ம கோப்தா'—கீ. 11. 18.)

476. தாம் தர்மாதர்மங்களுக்கு அப்பாற்பட்டவராயினும் தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகத் தாமே தர்மத்தை அனுஷ்டிப்பவர். (ஒ. 'செய்யவேண்டிய கருமம் எனக்கு மூவுலகிலும் ஒரு சிறிதும் இல்லை. அடையப்படாததாய் இனி அடைதற் குரியதாயும் ஒன்றும் இல்லை. எனினும் தர்மத்தில் முயன்று கொண்டே இருக்கிறேன். பார்த்தா! நான் எப்போதும் அயர்வின்றி கர்மத்தில் முயலாமற்போனால் நிச்சயமாக மனிதர்கள் என்னுடைய நெறியை எவ்வகையிலும் பின் தொடர்வர்.'—கீ. 22-23.)

477. தர்மங்களைத் தாங்குகிறவர். (அல்லது தர்மங்களெல்லாம் சாருமிடமாயிருப்பவர். ஒ. 'ஆசாரப்ரபவோ தர்மோ தர்மஸ்ய ப்ரபுரச்யுத:'—வி. ஸ. பலச்ருதி. 'தாம் எல்லாவற்றையும் காப்பாற்றுவதற்குத் தர்மத்தையே பொதுவான கருவியாக வைத்திருப்பவர்'—ப. பா.)

478. பரப்ரம்மம் அல்லது உண்மையே வடிவாகிய பரம்பொருள். ('குழந்தாய்! ஆதியில் இது ஒன்றேயாக இரண்டற்றதாய் ஸத்தாக இருந்தது.' சா. உ. 6. 2. 1. 'ஓம்-தத்-ஸத்' என்று பிரம்மத்திற்கு மூன்று வகையான குறிப்புப் பெயர் கூறப்பட்டுள்ளது—உள்ளது என்ற பாவனையிலும் ஸத் என்ற இச்சொல் உபயோகிக்கப்படுகிறது.' கீ. 17. 23-26. 'ஒருகாலும் உற்பத்தி நாசங்களின்றி நித்தியமாக இருப்பதினாலும் திருக்கல்யாண குணங்கள் பொருந்தியிருப்பதினாலும் எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் வழுவாதிருக்கும் ஸத் என்று சொல்லப்படும் தன்னை அடைவதற்கு ஸாதனமாயிருப்பதினால் தானும் அழிவில்லாத சிறந்த வஸ்துவாகிய தர்மமே வடிவாக இருப்பவர்.'—ப. பா.)

479. அஸதே நம: 481. அக்ஷராய நம:
480. க்ஷராய நம: 482. அவிஜ்ஞாத்ரே நம:

479. அபரப்பிரம்மம் அல்லது பெயர் வடிவம் முதலிய வற்றில் மறைந்துள்ள பிரம்மம். ஒ. 'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம்'—சா. உப. 6. 1. 4. 'பொன்மயமான வட்டிலால் ஸத்தியத்தின் முகம் மறைக்கப்பட்டுள்ளது. ஸத்தியத்தை நாடும் என்னுடைய பார்வைக்கு நீ அந்த மறைப்பை நீக்கியருள்வாயாக.' ஈச. உப. 15.)

480. க்ஷரவடிவினர் (அல்லது அபராபிரகிருதியின் அம்சமான மனம் புத்தி இந்திரியங்கள் சரீரம் இவற்றைத் தான் என்று அபிமானிக்கும் ஜீவ வடிவினர். ஒ. 'அதிபூதம் க்ஷரோபாவ:' கீ. 8. 4.)

481. அக்ஷரவடிவினர். (அல்லது ஜீவஸாக்ஷியாய் இருதயத்திலுறையும் கூடஸ்தர். ஒ. 'க்ஷர: ஸர்வாணி பூதானி கூடஸ்தோऽக்ஷர உச்யதே ।'—கீ. 15. 16. பிரம்மம் இருவகை. பரம் அபரம். பரம் நிராகாரமாய் நிர்விகல்பமாய் என்று ஒரு படித்தாயுள்ளது. அபரம் விகல்பமுடையதாய்ப் பல வடிவினையடைவது. அபரமே ஜகத்தையாளும் ஈசுவரனாகவும் ஆளப்படும் ஜீவனாகவும் ஜகத்தாகவும் பிரிந்து விளங்கும். 'ஆடல் கண்டவனும் நீ ஆடுகின்றவனும் நீ.' 'ஸதக்ஷர-மஸத்க்ஷரம்' என்பது பட்டர் பாடம். ஸதே நம:, அக்ஷரஸதே நம:, அஸதே நம:, அஸத்க்ஷராய நம: என்று பிரயோகம். 'அக்ஷரஸத்' என்றால் எக்காலத்தும் எத்தேசத்தும் குறைவில்லாதவர். 'அஸத்' என்றால் அநித்தியமாகிய துக்க ரூபமாயிருப்பவர். 'அஸத்க்ஷரம்' என்றால் அஸத்துக்களிடத்தில் நிலைகொள்ளாதவர்.' ப. பா. ஒ. 'அம்ருதஞ்சைவ ம்ருத்யுச்ச ஸதஸச்சாஹமர்ஜுன'—கீ. 9. 19.)

482. அறிபவரல்லாதவர். (அவரே அறிவாக உள்ளவர். ஒ. "ப்ரியே! எங்ஙனம் உப்புக்கட்டி நீரில் போட்டது நீரில் கரைந்து விடுகிறதோ அதை எங்ஙனம் எடுக்க முடியவில்லையோ ஆனால் எந்த இடத்திலிருந்து நீரை எடுத்தாலும்

480-81. ஸதே நம: । அக்ஷரஸதே நம: ‖ அஸதே நம: । அஸத்க்ஷராய நம: । —ப. பா.

483. ஸஹஸ்ராம்சவே நம: 484. விதாத்ரே நம:

அது எங்ஙனம் உப்பாக இருக்குமோ அங்ஙனமே எல்லையற்றதும் கடத்தற்கரியதுமாகிய இந்தப் பெரிய வஸ்து விஜ்ஞான கனமாகவே உள்ளது. எந்தப் பஞ்சபூதங்களின் சேர்க்கை உருப்படைத்தது போல் தோன்றிற்றோ அவற்றினின்று பிரிந்து அவற்றுடன் மறைந்து போகிறது. மறைந்து போன பின் அறிவு இல்லை. இதுதான் நான் உனக்குக் கூறுவது'' என்று யாஜ்ஞவல்கியர் சொன்னார். இதைக் கேட்ட மைத்ரேயி கூறியதாவது—''மறைந்து போனபின் அறிவு இல்லை என்று கூறியதில் தேவரீர் என்னை மயங்கச் செய்து விட்டீர்கள்.,' ''மைத்திரேயி, மயக்கந்தரும் வார்த்தை எதுவும் நான் சொல்லவில்லை. உண்மை அறிவுக்கு இது போதும்.'' ப்ரு. உப. 2. 4. 12-13. ''ஆச்ரிதர்களுடைய குற்றங்களை அறியாதவர். 'கடுஞ்சொற் சொல்லப்பட்டாலும் இராமபிரான் பதில் சொல்வதில்லை.' என்பது ஸ்ரீராமாயணம். 'ஆச்ரிதர்களின் குற்றங்களை ஒப்புக்கொள்ளும் நீர் அவ்விஷயத்தில் அஜ்ஞராதலின் உம்மை ஸர்வஜ்ஞர் என்று சொல்வதை நாம் கண்டிக்கிறோம்' என்பர் கூரத்தாழ்வார்.''—ப. பா.)

483. ஆயிரக்கணக்கான கிரணங்களையுடையவர். (ஒ. 'சூரியனைச் சார்ந்த எந்த ஒளி உலகனைத்தையும் பிரகாசிப்பிக்கின்றதோ, சந்திரனிடம் எது உள்ளதோ, அக்கினியிடம் எது உள்ளதோ அவ்வொளியை என்னுடையதாக அறிவாய்' —கீ. 15. 12. 'அளவற்ற ஞானங்களை உடையவர்'—ப. பா.)

484. விசேஷமாய்த் தாங்குபவர். (ஆதிசேஷன் முதலியோர் உலகைத் தாங்குபவர்கள். பகவான் அவர்களையும் தாங்குபவர். 'விசேஷேண சேஷ-திக்கஜ-பூதரான் ஸர்வ பூதானி வா விதந்தீதி விதாதா'—சங். 'பக்தனுடைய குற்றங்களைப் பகவான் பொறுக்கும்போது பாவங்களுக்குப் பலன்களைத் தரத்தக்க யமனும் அவனால் செய்யப்படும் யாதனைகளும் அந்தப் பக்தனை யாதொன்றும் செய்யாமலிருக்கும்படி தாமே நடத்துகிறவர்.'—ப. பா.

485. க்ருதலக்ஷணாய நம: 488. ஸிம்ஹாய நம:
486. கபஸ்திநேமயே நம: 489. பூதமஹேச்வராய நம:
487. ஸத்வஸ்தாய நம: 490. ஆதிதேவாய நம:

485. நித்யஜ்ஞான ரூபியாக இலக்கணங் கூறப்பட்டவர். (அல்லது லக்ஷணங்கள் எனப்படும் சாஸ்திரங்களைச் செய்தவர். ஒ. 'வேதா: சாஸ்த்ராணி விஜ்ஞானம் ஏதத் ஸர்வம் ஜனார்த்தனாத்'—வி. ஸ. பலச்ருதி. அலலது ஸ்ரீவத்ஸமென்னும் மறுவை மார்பில் அடையாளமாகக் கொண்டவர். அல்லது எல்லாப் பொருள்களுக்கும் தனித்தனி லக்ஷணங்களை அமைத்தவர்.—சங். தாம் அனுக்கிரகிக்கத் தக்கவர்களுக்குத் தாமே லக்ஷணம் கூறியிருப்பவர். 'என்னிடத்தில் மித்திரன் என்ற எண்ணத்துடன் வந்தவனை எவ்வகையிலும் கைவிடேன்' என்பது ஸ்ரீராமாயாணம்.—ப. பா.)

486. சூரியமண்டல வடிவினர். ('த்யேய: ஸதா ஸவித்ரு-மண்டல-மத்யவர்த்தீ நாராயண:'—ஸந்தியாவந்தனம். 'கிரணங்களால் பிரகாசிக்கும் ஆயிரம் முனைகளோடு கூடிய சக்கரத்தை உடையவர்.' ப. பா.)

487. ஸத்துவ குணத்தில் நிலை பெறுகிறவர். (அல்லது உயிர்களிடத்தில் உறைபவர்.)

488. நரசிம்மாவதாரம் செய்தவர். (ஸத்யபாமாவை பாமா என்றாற்போல் நரசிம்மத்தை ஸிஹ்மம் என்றது, அல்லது சிங்கம்போல் கம்பீரமானவர். ஒ. 'மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப் போதருமா போலே.'—திருப்பாவை 23. 'பக்தர்களைத் துன்புறுத்துவோரை இம்சிப்பவர்'—ப. பா.)

489. ஸத்தியமான முதல் ஈசுவரர். (எல்லாப் பிராணிகளுக்கும் ஈசுவரர். ஈசுவரர்களாகிய பிரம்மா யமன் முதலியவர்களுக்கும் ஈசுவரர்.)

490. தேவர்களனைவருக்கும் முந்தியவர். (ஒ. 'பூர்வோ யோ தேவேப்யோ ஜாத:'—புருஷஸூக்தம். அல்லது எல்லாப் பிராணிகளையும் பற்றிக் கொள்ளுகிறவர். 'ஸர்வபூதான்-யாதீயந்தேடனேனேத்-யாதி: ஆதிச்சாஸௌ தேவச்சாதி

491. மஹாதேவாய நம: 494. உத்தராய நம:
492. தேவேசாய நம: 495. கோபதயே நம:
493. தேவப்ருத்குரவே நம: 496. கோப்த்ரே நம:

தேவ:'—சங். ஒ. அவரவர் தாந்தாமறிந்தவாரேத்தி இவரிவ ரெம்பெருமா னென்று சுவர்மிசைச் சாத்தியும் வைத்துந் தொழுவர் உலகளந்த மூர்த்தியுருவே முதல்.—பொய்கை யாழ்வார்.)

491. தமது சிறந்த ஆத்மஞானத்தால் யோகேசுவரர் எனப் பெரிதும் போற்றப் பட்டவர். ('ஸர்வான் பாவான் பரித்யஜ்ய ஆத்மஜ்ஞான-யோகைச்வர்யே மஹதி மஹீயதே, தஸ்மா-துச்யதே மஹாதேவ: இதி ச்ருதே:'—சங்.)

492. தேவர்களின் தலைவர்.

493. தேவர்களை ரக்ஷிக்கும் இந்திரனுக்குக் குருவாகிய வர். (அல்லது தேவர்களுக்கு ரக்ஷகரும் குருவுமாகியவர். தேவப்ருதே நம:, குரவே நம:' என்று இரண்டு நாமங்களாக பட்டர் பாஷ்யம். ஒ. 'யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச ப்ரஹிணோதி தஸ்மை' ச்வே. உப. கால வரையில்லாமையினுல் முன்னேரான பிரம்மாதி தேவர்களுக் கும் அவர் குரு'—பதஞ்ஜலி யோகஸூத்ரம்.)

494. ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றுபவர். (அல் லது எல்லாவற்றிலும் சிறந்தவர். 'ஜன்ம-ஸம்ஸார-ஸாகரா-துத்தாரயதித்-யுத்தர: ஸர்வோத்க்ருஷ்ட இதி வா உத்தர:'—சங். 'விச்வஸ்மாதிந்த்ர உத்தர:' ருக்வே. 10. 86. 1. ஒ. 'தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு-ஸம்ஸார-ஸாகராத்'—கீ. 12. 7. 'தேவகார்யத்துக்காக யோகநித்திரையை விட்டு எழுந்து முயலுகிறவர்.'—ப. பா.)

495. பசுக்களை மேய்ப்பவர் (அல்லது பூமி தேவியின் நாயகர். 'வேதங்களும் தேசபாஷைகளுமாகிய வாக்குகள் எல்லாவற்றையும் நடத்துகிறவர்.'—ப. பா.)

496. (உலகங்களின்) ரக்ஷகர்.

---

493. தேவப்ருதே நம: । குரவே நம: । —ப. பா.

497. ஜ்ஞானகம்யாய நம:
498. புராதனாய நம:
499. சரீரபூதப்ருதே நம:
500. போக்த்ரே நம:
501. கபீந்த்ராய நம:
502. பூரிதக்ஷிணாய நம:
503. ஸோமபாய நம:
504. அம்ருதபாய நம:
505. ஸோமாய நம:

---

497. ஞானத்தாலேயே அடையத் தக்கவர். (ஒ. 'ந கர்மணா ந ப்ரஜயா தனேன.'—தை. ஆ.)

498. காலவரையில்லாமல் முந்தியும் இருப்பவர்.

499. சரீரத்திற்குக் காரணமான பஞ்ச பூதங்களைப் பிராண ரூபியாகத் தாங்குகிறவர்.

500. தமது ஸ்வரூபானந்தத்தை அனுபவிப்பவர். (அல்லது அனைத்தையும் பரிபாலிப்பவர். ஒ. 'உபத்ரஷ்டாऽனுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர:'—கீ. 13. 22.)

501. சிறந்த வராஹ வடிவு கொண்டவர். (அல்லது வானரர்களுக்கு ஈசுவரராகிய ஸ்ரீராமர்.)

502. (தமதனுஷ்டானத்தினால் தர்மத்தை நிலைநிறுத்த யாகங்களைச் செய்து) ஏராளமான தக்ஷிணைகளைக் கொடுத்தவர்.

503. (யாகங்களில் தேவர்களின் வடிவில் நின்று) ஸோமபானம் செய்பவர். (அல்லது தாம் செய்த யாகங்களில் ஸோமபானம் செய்பவர்.)

504. ஆத்மானந்தமாகிய அமிருதத்தைப் பானம் செய்பவர். (அல்லது கடல் கடைந்துண்டான அமிருதத்தை தேவர்களுடன் பானம் செய்தவர். 'சாஸ்திரப்படி மந்திரங்களைச் சொல்லி அக்னியில் ஹோமம் செய்யப்படும் ஹவிஸ்ஸுகள் எல்லாம் அமிருதமாகச் செய்யப்பட்டு விஷ்ணுவுக்குக் கொடுக்கப்படுகின்றன என்றும் அவரே எல்லா யாகங்களிலும் புசிப்பவரும் பலனைக் கொடுப்பவரும் என்றும் சொல்லியபடி அமிருதவடிவான ஹவிஸ்ஸைப் புசிப்பவர்.'—ப. பா.)

505. சந்திரரூபியாகத் தாமே பயிர்களை வளரச் செய்கிறவர். (ஒ 'புஷ்ணாமி சௌஷதீ: ஸர்வா: ஸோமோ பூத்வா ரஸாத்மக:' கீ. 15. 13. அல்லது உமாதேவியோடு கூடிய சிவ ரூபியாகவும் தாமே இருப்பவர். 'ஒளி மணிவண்ண

506. புருஜிதே நம:
507. புருஸத்தமாய நம:
508. விநயாய நம:
509. ஜயாய நம:
510. ஸத்யஸந்தாய நம:
511. தாசார்ஹாய நம:

னென்கோ ஒருவனென்றேத்த நின்ற நவிர்மதிச் சடைய னென்கோ'—நம்மாழ்வார். 'ஓ. ராமா! தசரத மகாராஜர் பெருந் தவத்தினாலும் பெரும் புண்ணியத்தினாலும் தேவர்கள் அமுதத்தை அடைந்ததுபோல உம்மை அடைந்தார்' என்று ஸ்ரீராமாயணத்தில் கூறியபடி தாமே அமிருதமாயிருப்பவர். —ப. பா.)

506. அனேகரை ஜயித்தவர். ('புருன் பஹூன் ஜயதீதி புருஜித்'—சங். 'வீரனான ராகவன் ஸத்தியத்தினால் உலகங் களையும் தானத்தினால் ஏழைகளையும் பணிவிடையினால் பெரி யோர்களையும் போரில் வில்லினால் பகைவர்களையும் ஜயிக்கி றான் என்பது ஸ்ரீராமாயணம்.'—ப. பா.)

507. பலவடிவில் சிறந்து விளங்குபவர். (ஒ. 'இந்த்ரோ மாயாபி: புரு-ரூப ஈயதே' 'இறைவன் தனது மாயையால் பல ரூபங்கொண்டு விளங்குகிறான்.')

508. துஷ்டர்களைத் தண்டிப்பவர். ('விநயம் தண்டம் துஷ்டானாம் ப்ரஜானாம் கரோதீதி விநய:'—சங்.)

509. எல்லாப் பிராணிகளையும் ஜயிப்பவர். ('ஆச்ரிதர் களால் ஏவப்படும்படி இருப்பவர்.'—ப. பா.)

510 ஸங்கல்பம் தவறாதவர். (ஒ. 'ஸத்யவ்ரதம் ஸத்ய பரம் த்ரிஸத்யம் ஸத்யஸ்ய யோனிம் நிஹிதஞ்ச ஸத்யே | ஸத்யஸ்ய ஸத்யம் ருத-ஸத்ய-நேத்ரம் ஸத்யாத்மகம் த்வாம் சரணம் ப்ரபன்னா:' ||—பாக. 10. 2. 27. ஒ. 'ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:'—சா. உப. 8. 1. 5. 'சீதையே! நான் உயிரையும் விடுவேன். உன்னையும் விடுவேன். லக்ஷ்மணனை யும் விடுவேன்; பிரதிஜ்ஞை செய்தபின் அதனை விடேன்'— ஸ்ரீராமாயணம்.)

511. தானத்திற்குரியவர். ('தாசோ தானம் ததர்ஹதீதி தாசார்ஹ: | தாசார்ஹ-குலோத்பவாத் வா |' அல்லது தாசார் ஹர் எனும் யாதவ குலத்துதித்தவர்.)

512. ஸாத்வதாம்பதயே நம: 515. முகுந்தாய நம:
513. ஜீவாய நம: 516. அமிதவிக்ரமாய நம:
514. விநயிதாஸாக்ஷிணே நம: 517. அம்போநிதயே நம:

---

512. ஸாத்வதம் என்னும் சாஸ்திரத்தைச் செய்தவர்களும் சொன்னவர்களுமான பெரியோர்களுக்கு யோக க்ஷேமத்தை நடத்துகிறவர். ('ஸத்வமெனப்படும் பரப்பிரம்மத்தை அறிந்தவர்களும் ஸாத்விகர்களும் ஆகிய பெரியோர்கள் அனுஷ்டிக்கத்தக்க கர்மங்களைச் சொல்லும் பாஞ்சராத்ர சாஸ்திரத்தைக் காப்பாற்றுகிறவர்.'—ப. பா)

513. ஜீவாத்ம வடிவில் நின்று உயிரைத் தாங்குபவர். (ஒ. 'எல்லா உடல்களிலும் என்னையே ஜீவாத்மாவாக அறிவாய்.'—கீ. 13. 2.)

514. பிரஜைகள் தமக்கடங்கியிருப்பதைக் காண்பவர். (அல்லது எல்லாவற்றையும் நடத்துகிறவராகவும் 'அஸாக்ஷீ' தம்மைவிட வேறு ஒன்றைக் காணாதவராகவுமிருப்பவர். 'விநயித்ரே நம:, ஸாக்ஷிணே நம:' என்று இரண்டு நாமங்களாக பட்டர் பாஷ்யம். 'பக்தர்களை ஆதரித்துக் காப்பாற்றுகிறவர்' அவர்களுடைய ஒழுக்கங்களைப் பிரத்யக்ஷமாகப் பார்ப்பவர்.')

515. முக்தியைக் கொடுப்பவர். ('முக்திம் ததாதீதி முகுந்த:'—சங். ஒ. 'முகும் பக்திரஸப்ரேம—வசனம் வேதஸம்மதம் । யஸ்தத் ததாதி விப்ரேப்யோ முகுந்தஸ்தேன கீர்த்தித: ॥')

516. அளவுபடாத அடிவைப்புக்களை உடையவர். (அல்லது அளவற்ற பராக்கிரம முடையவர். ஒ. 'விஷ்ணோர் நு கம் வீர்யாணி ப்ரவோசம் ய: பார்த்திவானி விமமே ரஜாம்ஸி' பூமியில் உள்ள தூசிகளை எண்ணினாலும் எண்ணலாம்; எவன் விஷ்ணுவின் வீரியங்களைக் கணக்கிடக் கூடியவனாவான்?—விஷ்ணுஸூக்தம்.)

517. (நான்கு அம்பஸுகள் என்று வேதங்களில் சொல்லப்படும்) தேவர், மனிதர், பிதிரர், அசுரர் ஆகியவர்களுக்குப் புகலிடமாகியவர். (அல்லது கடலாயிருப்பவர். 'அம்பாம்ஸி தேவாதயோ஽ஸ்மின்னிதீயந்த இத்யம்போநிதி: । தானி

---

514. விநயித்ரே நம: । ஸாக்ஷிணே நம: ।—ப. பா.

518. அனந்தாத்மனே நம:
519. மஹோததிசயாய நம:
520. அந்தகாய நம:
521. அஜாய நம:
522. மஹார்ஹாய நம:
523. ஸ்வாபாவ்யாய நம:
524. ஜிதாமித்ராய நம:
525. ப்ரமோதனாய நம:

ஹ வா ஏதானி சத்வார்-யம்பாம்ஸி தேவா மனுஷ்யா: பிதரோஸுரா: இதி ச்ருதே: | ஸாகரோ வா 'ஸரஸா மஸ்மி ஸாகர:' இதி பகவத்வசனாத் ||'—சங். 'எல்லா உலகங்களையும் தாங்கும் பீடம் போன்ற கூர்மரூபியாகப் பாதாளக்கடலில் தம்மாலேயே தாம் வைக்கப்படுகிறவர்.'—ப. பா.)

518. அளவுபடாதவர். ('ஆதிசேஷனுக்கு ஆத்மாவாயிருப்பவர்.'—ப. பா.')

519. (பிரளய காலத்தில்) பெருங்கடலில் படுத்திருப்பவர்.

520. (பிரளய காலத்தில்) எல்லாவற்றிற்கும் முடிவைச் செய்பவர்.

521. அகாரப் பொருளாகிய தம்மிடத்தில் பிறந்த மன்மத வடிவிலிருப்பவர். ('அகாரத்தின் பொருளாகிய ஸ்ரீமந் நாராயண ரூபியாயிருப்பவர்.)

522. பூஜைக்குரியவர். ('மஹ: பூஜா ததர்ஹத்வான் மஹார்ஹ:' —ப. பா.)

523. இயற்கையாகவே மாறுபாடற்றவர். (அல்லது 'அபாவ்ய:' பிறக்கத் தகாதவர் என்பதால் ஸ்வாபாவ்ய:)

524. உட்பகைகளையும் புறப்பகைகளையும் ஜயித்தவர். ('நிர்ஜிதா அமித்ரா அந்தர்வர்த்தின ராகத்வேஷாதயோ பாஹ்யா ராவண தயச்ச யேனஸௌ ஜிதாமித்ர:'—சங்.)

525. எப்போதும் மகிழ்ந்திருப்பவர். (தம்மைத் தியானிப்பவர்களுக்குத் தியானித்தவளவில் மகிழ்ச்சியளிப்பவர். 'ஸ்வாத்மாம்ருத-ரஸாஸ்வாதாந்-நித்யம் ப்ரமோததே, த்யாயினாம் த்யானமாத்ரேண ப்ரமோதம் குருத இதி வா ப்ரமோதன:.'—சங்.)

526. ஆனந்தாய நம:
527. நந்தனாய நம:
528. நந்தாய நம:
529. ஸத்யதர்மணே நம:
530. த்ரிவிக்ரமாய நம:
531. மஹர்ஷயேகபிலாசார்யாய நம:

---

526. ஆனந்த வடிவினர். ('இந்த ஆனந்தத்தின் ஒரு திவலையைக் கொண்டு தான் பிரிதான பிராணிகளெல்லாம் வாழ்கின்றன.'— ப்ரு. உப. 4. 3. 32.)

527. பக்தர்களை மகிழும்படி செய்கிறவர்.

528. வேண்டியவை யெல்லாம் நிரம்பியவர். (அல்லது விஷய சுகங்களைக் கடந்தவர் எனலுமாம். 'ஸுகம் வைஷயிகம் நாஸ்ய வித்யத இதி வாऽநந்த:'—சங். 'யோ வை பூமா தத் ஸுகம் நால்பே ஸுகமஸ்தி'— சா. உப. 7. 22. 1. ஒ. 'போக்யைர்ப் போகோப கரணைர்ப்-போகைர்ப் போக்த்ருபிரேவ ச। தஸ்மின் ஸம்ருத்யதே நித்யமிதி நந்த: ப்ரகீர்த்தித: ||')

529. உண்மையான தர்மம் ஞானம் முதலியவற்றை யுடையவர். ('ஆரம்பம் முதல் தம்மை அடையும் வரையிலும் தமது தர்மமாகிய சரணாகதரக்ஷணத்தைப் பொறுப்பாக நடத்துகிறவர்.'—ப. பா.)

530. மூன்றடிகளால் மூன்று உலகங்களையும் வியாபித்தவர். ('த்ரிரித்யேவ த்ரயோ லோகா: கீர்த்திதா முனி-ஸத்தமை:। க்ரமதே தாம்ஸ்த்ரிதா ஸர்வாம்ஸ் த்ரிவிக்ரமோऽஸி ஜனார்த்தன ||'—ஹரிவம்சம், 3. 88. 51. 'தமது சிறந்த மகிமையினால் மூன்று வேதங்களையும் வியாபித்திருப்பவர்.'—ப. பா.)

531. மஹரிஷியாகிய கபிலாசார்ய வடிவினர். (வேதத்தின் வெவ்வேறு பகுதியைக் கண்டவர்கள் ரிஷிகள். இவர் வேதம் முழுதும் கண்டறிந்தவராதலால் மஹரிஷி. சுத்த தத்வ விஜ்ஞானமாகிய ஸாங்கியத்தைப் போதித்தவர். ஒ. 'ருஷிம் ப்ரஸூதம் கபிலம் மஹாந்தம்'—ச்வே. உப. 5. 2. 'ஸித்தர்களுள் நான் கபில முனியாயிருக்கிறேன்'—கீ. 10. 26. 'மஹர்ஷயே நம:, கபிலாசார்யாய நம:, என்று பட்டர் இரண்டு நாமங்களாகக் கொள்ளுகிறார்.)

---

531. மஹர்ஷயே நம: । கபிலாசார்யாய நம: ।—ப. பா.

532. க்ருதஜ்ஞாய நம:
533. மேதினீபதயே நம:
534. த்ரிபதாய நம:
535. த்ரிதசாத்யக்ஷாய நம:
536. மஹாச்ருங்காய நம:
537. க்ருதாந்தக்ருதே நம:
538. மஹாவராஹாய நம:
539. கோவிந்தாய நம:
540. ஸுஷேணாய நம:
541. கனகாங்கதினே நம:

---

532. காரியப் பிரபஞ்சமாகவும் அதை அறியும் ஆத்மாவாகவும் இருப்பவர். ('க்ருதம் கார்யம் ஜ்ஞ: ஆத்மா க்ருதஞ் ச ஜ்ஞச்சேதி க்ருதஜ்ஞ:',—சங். 'அடியார் செய்த நன்மையை மட்டுமே நினைப்பவர்'.—ப. பா.)

533. பூமிக்குப் பதி.

534. மூன்று அடிகளை உடையவர். ('ப்ரணவத்திலுள்ள அகார உகார மகாரங்களாகிய மூன்று பதங்களாலும் சொல்லப்படுகிறவர். அசித்து, சித்து, ஈசுவரன் என்ற மூன்று தத்துவங்களையும் அறிவிப்பவர். மூன்று கொண்டைகளுள்ள வராகரூபமெடுத்தவர்'—ப. பா. ஒ. 'மூன்றடி நிமிர்ந்து மூன்றினில் தோன்றி மூன்றினில் மூன்றுருவானான்'—பெரியாழ்வார்.)

535. ஜாக்கிரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்னும் மூன்று நிலைகளுக்கும் மேல் நின்று பார்ப்பவர்.

536. (பிரளய ஸமுத்திரத்தில் ஓடம்போல் பூமியைத் தன் கொம்பில் கட்டி விளையாடின) சிறந்த கொம்புள்ளவர். (ஒ. 'சத்வாரி ச்ருங்காஸ்-த்ரயோ அஸ்ய பாதா த்வே சீர்ஷே ஸப்த ஹஸ்தாஸோ அஸ்ய ||')

537. தம்மாற் செய்யப்பட்ட உலகிற்குத் தாமே ஸம்ஹாரத்தைச் செய்பவர். (அல்லது யமனை ஜயிப்பவர்.)

538. பெரிய வராக வடிவெடுத்தவர்.

539. வேதவாக்யங்களால் அறியப்படுபவர் அல்லது அடையப் படுபவர். (அல்லது பூமியை அடைந்தவர். ஒ. 'அநிருத்த: ஸுராநந்தோ கோவிந்தோ கோவிதாம் பதி:' வி. ஸ. 185-188.)

540. சிறந்த சேனையை உடையவர். (உபநிஷத் மந்திரங்களைச் சேனையாக உடையவர்.)

541. பொன்மயமான தோள்வளைகளை உடையவர். (இங்கு பொன் என்றது 'அப்ராக்ருதம்' எனப் பொருள் படும்.)

542. **குஹ்யாய நம:**
543. **கபீராய நம:**
544. **கஹநாய நம:**
545. **குப்தாய நம:**
546. **சக்ரகதாதராய நம:**
547. **வேதஸே நம:**
548. **ஸ்வாங்காய நம:**

---

542. இரகசியமான உபநிஷத்தினால் மட்டும் அறியக் கூடியவர். (குகை எனப்படும் இருதயாகாசத்தில் இருப்பவர். ஒ. 'யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன் | ஸோசச்னுதே ஸர்வான் காமான் ஸஹ |'—தை. உப. 2. 1.)

543. ஞானம், ஐசுவரியம், பலம், வீரியம் முதலியவற்றால் கம்பீரமாக விளங்குபவர்.

544. இறங்கி ஆழங்காண முடியாதவர். (ஒ. 'து: ப்ரவே சத்வாத்கஹன: | அவஸ்தாத்ரய - பாவாபாவ-ஸாக்ஷித்வாத்-கஹனோ வா |'—சங். 'உட்பொருள் வெளியே காணப் படும்படி தெளிவாயிருப்பினும் கருங்கடல் இழிவதற்குக் கடுமையன்றோ? அப்படியே உபநிஷத்தினால் குணங்கள் அறி யப்பட்டாலும் அளவற்றிருப்பதினால் கிரகிக்கக் கூடா மலிருப்பவர்.'—ப. பா.)

545. வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாது மறைந்திருப்ப வர். (ஒ. 'ஏஷ ஸர்வேஷு பூதேஷு கூடோத்மா ந ப்ரகா சதே' கட. உப. 3. 12. 'பகவானுடைய மகிமையை அறிந்த பூர்வாசாரியர்களால் ரக்ஷிக்கப்பட்டவர். அவர்களின் ஸம் பிரதாய மின்றி மற்றெவ்வகையிலும் அறியக் கூடாதவர்'—ப. பா.)

546. மனஸ் தத்துவமாகிய சக்கரத்தையும் புத்தி தத் துவமாகிய கதையையும் உலகங்களை ரக்ஷிப்பதற்காகத் தரித் துக் கொண்டிருப்பவர். ('மனஸ்-தத்வாத்மகம் சக்ரம் புத்தி-தத்வாத்மிகாம் கதாம் | தாரயன் லோகரக்ஷார்த்த—முக்தச்-சக்ர-கதாதர: ||'

547. சிருஷ்டிப்பவர். (அ. 'விததாதி ஸ்ருஜதீதி விதாதா வேதா: |'—சங். 'அளவற்ற மங்களமான பலவகைப்பட்ட பெரிய விபவங்களைப் பக்தர்களுக்கு எக்காலமும் செய்பவர்'. ப. பா.)

548. தனக்குத்தானே கருவியாகவும் காரணமாகவும் காரியங்களுக்கு அங்கமாக இருப்பவர். (ஒ. 'அங்கான் யன்யா தேவதா: |' 'மற்ற தேவதைகள் அங்கங்கள்.'—தை. உப. 1. 5. 1. 'யஜ்ஞேன யஜ்ஞ-மயஜந்த தேவா: |' யஜ்ஞ புருஷனையே அங்கமாகக் கொண்டு தேவதைகள் யஜ்ஞத்தைச் செய்தார் கள்.—புருஷஸூக்தம்.)

549. அஜிதாய நம:
550. க்ருஷ்ணாய நம:
551. த்ருடாய நம:
552. ஸங்கர்ஷணாச்யுதாய நம:
553. வருணாய நம:
554. வாருணாய நம:
555. வ்ருக்ஷாய நம:

549. எவராலும் ஜயிக்கப்படாதவர்.

550. கிருஷ்ணர் எனப் பெயர் கொண்ட வியாஸர். (ஒ. க்ருஷ்ண த்வைபாயனம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும்। கோ ஹ்யன்ய: புண்டரீகாக்ஷான்-மஹாபாரதக்ருத்-பவேத் ||' —விஷ்ணு பு. 3. 4. 5. 'கார்முகில் போன்ற கருத்த நிறமுள்ளவர்'—ப. பா.)

551. ஸ்வரூபம், ஸாமர்த்தியம் இவற்றால் இயற்கை மாறாதவர்.

552. ஸம்ஹார காலத்தில் பிரஜைகளை இழுத்து ஒடுக்குபவரும் தமது ஸ்வரூபத்தில் தாம் மாறுதலின்றியும் இருப்பவர். ('ஸங்கர்ஷணோச்யுத:' என ஒரு நாமமாய்க் கொள்க. அல்லாவிடின் முன் 'ஸித்தி: ஸர்வாதிரச்யுத:' (100), 'அச்யுத: ப்ரதித: ப்ராண:' (318) என்ற நாமங்களுடன் கூறியது கூறலாகும்.—சங். 'சேதனாசேதனங்களைத் தம்மிடம் ஒன்று சேரும்படி ஆகர்ஷிப்பவராதலால் ஸங்கர்ஷணர், வ்யூஹாவதாரத்திலும் தமது ஸ்தானத்திலிருந்து வழுவாதவராதலால் அச்யுதர், என இரண்டு நாமங்களாகக் கொள்க,'—ப. பா.)

553. ஸாயங்காலத்தில் வருணதிக்கில் அஸ்தமயமாகும் சூரிய வடிவினர். ('வ்ருணோதி வியதே வா வருண: இமம் மே வருண ச்ருதீஹவம் இதி மந்தரவர்ணாத்.' ஒ. 'வருணோ யாதஸாமஹம்'—கீ. 10. 29. 'எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டிருப்பவர்'—ப. பா.)

554. வருணபுத்திரரான வஸிஷ்டராக இருப்பவர். (அல்லது அகஸ்தியராக இருப்பவர்.)

555. மரம்போல் அசையாதிருப்பவர். (ஒ. 'வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேக:' தை. ஆ. 'நிழலுள்ள மரம்

552. ஸங்கர்ஷணாய நம: । அச்யுதாய நம: । —ப. பா.

556. புஷ்கராக்ஷாய நம: 558. பகவதே நம:
557. மஹாமனஸே நம: 559. பகக்னே நம:

போல் அடியார்கள் வந்தடைந்து எல்லாப் பலன்களையும் அனுபவிக்கும்படி இருப்பவர். மேலும் அவர்களால் செய்யப் படும் நிர்ப்பந்தங்களையும் ஸஹிப்பவர். 'ஸாதூனு-மாச்ரயத் வாச்ச ஸர்வைனஸ-ஸஹனு-தபி - ஸர்வஸர்வோப-ஜீவ்யத் வாத் வ்ருக்ஷ இத்யபிதீயதே ||' ப. பா.)

556. பூர்ணமாக வியாபித்திருப்பவர். அல்லது இருதயத்தாமரையில் விளங்குபவர். 'வ்யாப்த்யர்த்தா-தக்ஷதேர்-தாதோ: புஷ்கராக்ஷ: ஹ்ருதய-புண்டரீகே சிந்தித: சித்ஸ்வரூபேண ப்ரகாசத இதி வா புஷ்கராக்ஷ:'—சங். 'கருணை பொழிந்து ஆச்ரிதர்களைப் போஷிக்கும் திருக்கண்களை யுடையவர்.'—ப. பா.)

557. சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காரியங்களை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிக்கும் பெரிய மனமுடையவர். ('மனஸைவ ஜகத் ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்ச கரோதி ய:'—விஷ்ணுபு. 5. 22. 15. 'ஆச்ரிதர்கள் விஷயத்தில் பெரிய மனமுள்ளவர். அவர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் கொடுத்தது போதாதென்று நினைக்கும் உதாரகுணமும் அவர்கள் செய்யும் அபராதங்களினுல் கலங்காமலிருக்கும்படி அகாதமான திருவுள்ளமுமுடையவர்.'—ப. பா.)

558. ஐசுவரியம், தர்மம், கீர்த்தி, செல்வம், வைராக்கியம், மோக்ஷம் ஆகியவற்றின் உறைவிடமாயிருப்பவர். (அல்லது பிராணிகளின் உற்பத்தி, அழிவு, வளர்வு, தேய்வு, அறிவு, அறியாமை எல்லாவற்றையும் அறிபவர்.—சங். ஓ. 'ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய தர்மஸ்ய யசஸ: ச்ரிய: | வைராக்யஸ்ய ச மோக்ஷஸ்ய ஷண்ணும் பக இதீரணு '|| விஷ்ணுபு. 6. 5. 74. 'உத்பத்திம் ப்ரலயஞ் சைவ பூதானுமாகதிம் கதிம் | வேத்தி வித்யா-மவித்யாஞ் ச ஸ வாச்யோ பகவானிதி ||' விஷ்ணுபு. 6. 5. 78. 'குற்றங்களனைத்தையு மொழித்துக் கல்யாண குணங்களே நிரம்பின ஸ்வரூபமாதலின் மிகவும் பூஜிக்கத்தக்கவர்.'—ப.பா.)

559. ஸம்ஹார காலத்தில் ஐசுவரியம் முதலியவற்றை அழிப்பவர்.

560. ஆநந்தினே நம:
561. வநமாலினே நம:
562. ஹலாயுதாய நம:
563. ஆதித்யாய நம:
564. ஜ்யோதிராதித்யாய நம:
565. ஸஹிஷ்ணவே நம:
566. கதிஸத்தமாய நம:
567. ஸுதன்வனே நம:
568. கண்டபரசவே நம:

560. ஸுகஸ்வருபியா யிருப்பவர். ('அல்லது எல்லாச் செல்வங்களும் நிறைந்தவர். வ்யூஹாவதாரத்தில் ஸங்கர்ஷணராயிருந்த தாமே விபவாவதாரத்தில் பலராமராக அவதரித்து நந்தகோபனைத் தந்தையாக அடைந்திருப்பவர். நந்தீ. ஆயர்களுடன் மகிழ்ந்திருக்கும் ஆனந்தீ எனவுங் கொள்ளலாம்.'—ப. பா.)

561. பூத தன்மாத்திரைகளின் வடிவான வைஜயந்தீ மாலையை அணிந்திருப்பவர்.

562. கலப்பை வடிவான ஆயுதமுடையவர். ('பஞ்ச பூதங்களைப் பயிர்களைப்போல அபிவிருத்தி செய்யும் உழவன் போலக் கலப்பையைக் கருவியாக வைத்திருப்பவர். கலப்பையை எடுத்து உழும்போது பயிர்களின் அபிவிருத்திக்காகப் பலராமரின் பேர் சொல்லவேண்டும் என்று சொல்லியிருக்கிறது.'—ப. பா.)

563. அதிதி தேவியிடம் வாமனராக அவதரித்தவர். ('ஆத்-இத்ய:' அகாரத்தால் அடையத்தக்கவர், அல்லது முன் பிறவியில் அதிதியாயிருந்த தேவகியின் புத்திரர்.—ப. பா.)

564 சூரிய மண்டலத்தில் பிரகாசிப்பவர். (ஒ. 'த்யேய: ஸதா ஸவித்ரு-மண்டல-மத்யவர்த்தி நாராயண:.')

565. அனைத்தையும் ஸஹிப்பவர். (அனைத்தையும் வெல்பவர்.)

566. எல்லாரும் சென்றடையும் இடமாகவும் மிக உயர்ந்தவராகவும் இருப்பவர்.

567. இந்திரிய ரூபமான சார்ங்கமென்னும் சிறந்த வில்லையுடையவர்.

568. சத்துருக்களைக் கண்டிக்கும் கோடரியை ஆயுதமாகக் கொண்டவர். (அல்லது 'அகண்டபரசு:' துண்டிக்க முடியாத கோடரியை உடையவர்.)

560. நந்தினே நம: । —ப. பா.

569. தாருணாய நம: 572. ஸர்வத்ருக்வ்யாஸாய நம:
570. த்ரவிணப்ரதாய நம: 573. வாசஸ்பதயேऽயோநிஜாய நம:
571. திவ:ஸ்ப்ருசே நம: 574. த்ரிஸாம்னே நம:

---

569. நல்வழியைக் கெடுப்பவர்க்குக் கொடியவர். ('வெளிப் பகைவர்களையும் உட்பகைவர்களையும் பிளப்பவர்.' —ப பா.)

570. பக்தர்கள் விரும்பிய செல்வத்தை அளிப்பவர். ('த்ரவிணம் வாஞ்சிதம் வித்தம் பக்தேப்ய: ப்ரததாதீதி த்ரவிணப்ரத:'—சங்.)

571. ஆகாசத்தைத் தொடுகிறவர். ('திவஸ்பர்சனாத்-திவஸ்ப்ருக்' ரகசியமான ஸ்வரூபத்தைத் தொட்டுக் காட்டுகிறவர்.) ('திவிஸ்ப்ருக்' என்பது பட்டர் பாடம்.)

572. எல்லா ஞானங்களைப்பற்றியும் விரிவுரை செய்த வியாஸர். அல்லது பிரம்மா. ('ஸர்வத்ருசாம் ஸர்வஜ்ஞானானாம் விஸ்தாரக்ருத்-வ்யாஸ: அதவா ஸர்வா ச ஸா த்ருக்சேதி ஸர்வத்ருக் ஸர்வாகாரம் ஜ்ஞானம்; ஸர்வஸ்ய த்ருஷ்டித்வாத்வா ஸர்வத்ருக் | ருக்வேதாதி விபாகேன சதுர்த்தா வேதா வ்யஸ்தா:, ஆத்யோ வேத: ஏகவிம்சதிதா க்ருத:, த்விதீய ஏகோத்தரசததாக்ருத:, ஸாமவேத: ஸஹஸ்ரதா க்ருத:, அதர்வவேத; நவதாக்ருத: அன்யானி புராணானி வ்யஸ்தான்யனேனேதி வ்யாஸ: ப்ரஹ்மா | '—சங். 'ஸர்வத்ருசே நம:, வ்யாஸாய நம:' என பட்டர் இரண்டு நாமங்களாகக் கொள்ளுகிறார்.)

573. வித்தைக்கு அதிபதியாகவும் கர்ப்பத்தில் பிறவாதவராகவும் இருப்பவர். ('வாசஸ்பதயே நம:, அயோனிஜாய நம:', என பட்டர் இரண்டு நாமங்களாகக் கொள்ளுகிறார்.)

574. மூன்று ஸாமங்களினால் துதிக்கப்படுகிறவர். (தேவவ்ரதங்கள் எனப்படுவன மூன்று ஸாமங்கள். 'ப்ருஹத், ரதந்தரம், வாமதேவ்யம் என வகுக்கப்பட்ட ஸாமவேதங்களினால் துதிக்கப்படுகிறவர்.'– ப. பா)

---

571. திவிஸ்ப்ருசே நம; | —ப. பா.
572. ஸர்வத்ருசே நம: | வ்யாஸாய நம: —ப. பா.
573. வாசஸ்பதயே நம: | அயோனிஜாய நம:—ப. பா.

575. ஸாமகாய நம:
576. ஸாம்னே நம:
577. நிர்வாணாய நம:
578. பேஷஜாய நம:
579. பிஷஜே நம:
580. ஸந்ந்யாஸக்ருதே நம:
581. சமாய நம:
582. சாந்தாய நம:

---

575. ஸாமகானம் செய்பவர்.

576. ஸாமவேதமாயிருப்பவர். (ஒ. 'வேதங்களில் ஸாம வேதமாயிருக்கிறேன்.'—கீ. 10. 22. ஸ்துதியும், துதிக்கப்படு பவரும், துதிப்பவரும் அவரே. ஒ. 'ஸ்தவ்ய: ஸ்தவப்ரிய: ஸ்தோத்ரம் ஸ்துதி: ஸ்தோதாரணப்ரிய:'—வி ஸ. 679-684.)

577. எல்லாத் துன்பங்களுக்கும் அப்பாலாகிய பரமா னந்த நிலை வடிவினர்.

578. (பிறவிப்பிணிக்கு) மருந்தாயிருப்பவர். (ஒ. 'வ்யா மோஹப்ரசமௌஷதம் முனி-மனோ-வ்ருத்தி-ப்ரவ்ருத்த்-யௌஷதம் தைத்யேந்த்ரார்த்திகரௌஷதம் த்ரிஜகதாம் ஸஞ்ஜீவனௌஷதம் | பக்தாத்யந்த-ஹிதௌஷதம் பவபய-ஸனௌஷதம் ச்ரேய: ப்ராப்தி-கரௌஷதம் பிப மன: ஸ்ரீக்ருஷ்ண-திவ்யௌஷதம் ||'—முகுந்தமாலை 27.)

579. வைத்தியராயிருப்பவர். (ஒ. 'ஸம்ஸார-ரோக-நிர்மோக்ஷகாரணீம் பராம் வித்யா—முபதிசதீதி பிஷக்.' கீதை யில் ஸம்ஸாரரோகத்தைப் போக்கும் பரவித்தையை உப தேசித்தவர். 'பிஷக்-தமம் த்வா பிஷஜாம் ச்ருணோமி'—ரிக்வே. 2. 33. 4)

580. மோக்ஷத்திற்காக ஸந்நியாஸ ஆசிரமத்தை ஏற் படுத்தினவர். ('தன் விஷயமான பொறுப்பை ஸ்வாமியி னிடம் ஒப்புவிப்பதுதான் ஸந்நியாஸம். அது தான் ஸம் ஸாரத்துக்குச் சிகித்ஸை.'—ப. பா.)

581. அனைத்தையும் அடக்குபவர். (அல்லது அடக் கத்தை உபதேசிப்பவர். ஒ 'யதீனாம் ப்ரசமோ தர்மோ நியமோ வனவாஸினாம் | தானமேவ க்ருஹஸ்தானாம் சுச் ருஷா ப்ரஹ்மசாரிணாம் ||')

582. விஷய சுகங்களில் பற்றில்லாதவர். (ஒ 'நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம்'—ச்வே. உப. 6. 19 'பொங்குதற்குக் காரணமான மகிமைக் கடல் பெருகியிருந்தும் அலையில்லாக் கடல்போல் அடங்கியிருப்பவர். நாற்புறங்களிலும் தெளி வாகப் பிரகாசிப்பதும் பாவங்களை எரிப்பதும் பார்க்க

583. நிஷ்டாயை நம: 586. சுபாங்காய நம:
584. சாந்த்யை நம: 587. சாந்திதாய நம:
585. பராயணுய நம:

இனியதுமான ஒளியுள்ளவராகவும், தமது கடாக்ஷத்தினுல் யாருக்கும் ஸ்வாதீனப்படாத மிருகங்களுக்கும் சாந்தியை உண்டு பண்ணுகிறவராகவும் இருப்பவர் என்று வியாஸரைப் பற்றிக் கிராதார்ஜுனீயம் கூறுகிறது.'—ப. பா.)

583. ப்ரளயத்தில் எல்லாப் பொருள்களும் முடிவு பெறும் இடமானவர். ('ஸமாதி கலேயாத மனமுள்ளவர்கள் மனத்திற்கு இனிய பிடிப்பாகிய தம் திவ்யமங்கள விக்கிரகத்தில் நிலே பெற்று நிற்கும்படி இருப்பவர்.'—ப. பா.)

584. எல்லா அவித்தைகளும் நீங்கும் நிலேயாயிருப்பவர். (ஒ. 'நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச் சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரிய நிறைசுடராய் எல்லாம் வைத்திருந்த தாரகமாய் ஆனந்தமயமாகி மனவாக் கெட்டாச் சித்துருவாய் நின்ற வொன்றைச் சுகாரம்பப்பெருவெளியைச் சிந்தை செய்வாம்.' தாயுமானவர்.)

585. மறுபடி ஸம்ஸாரத்தில் திரும்பாமலிருக்கும் உயர்ந்த ஸ்தானமாயிருப்பவர். ('பராயண:' எனும் பாடத்தைக் கொண்டால் 'ஸ்தானத்தையுடையவர்' என்று பொருள். 'பரம் உத்க்ருஷ்டம் அயனம் ஸ்தானம் புனராவ்ருத்தி-சங்கா - ரஹிதமிதி பராயணம், புல்லிங்க பக்ஷே பஹுவ்ரீஹி:'—சங்.)

586. அழகிய அங்கம் படைத்தவர். ('யமம், நியமம், ஆஸனம், பிராணுயாமம், பிரத்யாஹாரம், தியானம், தாரணே, ஸமாதி என்னும் சிறந்த அஷ்டாங்க யோகத்தை நிறைவேற்றுகிறவர்.'—ப. பா.)

587. சாந்தியை யளிப்பவர். ('விருப்பு வெறுப்பு முதலியவற்றினின்றும் விடுதலே பெற்றதை அடையாளமாகவுடைய மனச்சாந்தியை அளிப்பவர்.'—சங். 'நிலேயில்லாப் பொருள்களிடை நிலேயுள்ளவனுயும் அறிவுள்ள உயிர்களின் அறிவாயும், ஒருவனுய் நின்று அனேவருடைய ஆசைகளேயும் —ப. பா.

584. சாந்தயே நம:।

588. ஸ்ரஷ்ட்ரே நம:
589. குமுதாய நம:
590. குவலேசயாய நம:
591. **கோஹிதாய நம:**
592. **கோபதயே நம:**
593. **கோப்த்ரே நம:**
594. வ்ருஷபாக்ஷாய நம:

அளிப்பவனுயும் உள்ள அவனே எந்த தீரர்கள் தங்களிடம் உறைபவனைக் காண்கிறார்களோ அவர்களுக்கே அழிவிலாச் சாந்தி உண்டு, பிறர்க்கில்லை.'—கட. உப. 5. 13.)

588. எல்லாவற்றையும் படைத்தவர்.

589. பூமியில் மகிழ்பவர். (அ. 'கௌ பூம்யாம் மோதத இதி குமுத: ।' 'கு எனப்படும் பிரகிருதி மண்டலத்திலுள்ள சேதனர்களுக்குப் போகங்களை அளித்து மகிழ்ந்திருப்பவர்.'—ப. பா.)

590. பூமியைச் சுற்றியிருக்கும் கடலில் சயனித்திருப்பவர். (அ. 'கோ: ப்ருதிவ்யா: வலனுத் ஸம்வரணுத் குவலம் ஜலம் தஸ்மின் சேஷோதரே சேத இதி குவலேசய:'—சங். 'குவலர் எனப்படும் ஜீவர்களிடத்தில் அந்தர்யாமியாக இருந்து அவர்களை நடத்துபவர்.'—ப. பா.)

591. பூமிக்கு அனுகூலம் செய்தவர். (அல்லது கோவர்த்தனமேந்திப் பசுக்களைக் காத்தவர். 'கோ என்னப்படும் பிரகிருதிக்குப் பலவித சிருஷ்டிகளினுல் வரையறையை ஏற்படுத்துகிறவர்.'—ப. பா.)

592. பூமிக்குப்பதி. (போக பூமியான ஸ்வர்க்கத்திற்கு நாயகர்.)

593. உலகரக்ஷகர். (தமது மாயையால் தம்முடைய ஸ்வரூபத்தை மறைப்பவர். 'யோகமாயா-ஸமாவ்ருத:'—கீ 7. 25.)

594. வேண்டியவற்றை யெல்லாம் அருள்கொண்டு பொழியும் கண்களை உடையவர். (அல்லது தர்மத்தையே கண்ணுக உடையவர். 'வேண்டிய பலன்களை வர்ஷிப்பதாகிய தருமத்தையே ஸம்ஸார சக்கரத்திற்கு ஆதாரமான அச்சாக வைத்திருப்பவர்.'—ப. பா.)

595. வ்ருஷப்ரியாய நம: 598. ஸம்க்ஷேப்த்ரே நம:
596. அநிவர்த்திநே நம: 599. க்ஷேமக்ருதே நம:
597. நிவ்ருத்தாத்மனே நம: 600. சிவாய நம:

---

595. தருமத்தில் பிரியம் வைத்தவர். (அல்லது தரும மாகிய பிரியமான வஸ்துவாயிருப்பவர். 'பிரவிருத்தி தருமம் நிவிருத்தி தருமம் ஆகிய இரண்டிலும் அன்பு வைத்திருப்ப வர். அவர் விரும்புவதனுலே இவ்விருவகைக் கருமங்களும் தர்மமாயின. அவரது விருப்பத்தைத் தெரிவிப்பது தான் 'வேத விதிகளின் கருத்து'—ப. பா.)

596. யுத்தங்களில் ஜயமின்றித் திரும்பாதவர். (அல் லது வ்ருஷப்ரியனுதலால் தருமத்தினின்று திரும்பாதவர். ஒ. 'நாவிஜித்ய நிவர்த்ததே'—ராமாயணம் 2. 2. 38. 'பிர விருத்தி தர்மத்திலிருப்பவர்களைத் தூமாதி மார்க்கத்தினுல் பித்ருலோகம் சேர்த்துத் திரும்பவும் இவ்வுலகில் பிறப்பிப்ப தினுல் ஸம்ஸாரத்தை விட்டு நிவிருத்திக்கச் செய்யாதவர்.' ஒ. 'ஏகயா யாத்யனுவ்ருத்தி - மன்யயா-வர்த்ததே புன:'— கீ. 8. 26.)

597. விஷயங்களினின்று திரும்பிய மனமுடையவர். ('நிவ்ருத்தி தர்மத்திலிருக்கும் சேதனர்களுக்கு ஈசுவரராயிருப் பவர்.'—ப. பா,)

598. விஸ்தாரமான உலகத்தைப் பிரளயகாலத்தில் சுருக்குகிறவர். ('பிரவிருத்தி தர்மத்திலிருப்பவர்களின் அறி வையும் மகிமையையும் குறுகும்படி செய்பவர்.'—ப. பா.)

599. தம்மால் அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுகிறவர். ('நிவிருத்தி தர்மத்திலிருப்பவர் களுக்கு அறிவும் மகிமையும் சுருங்காமலிருக்கச் செய்து மோக்ஷமென்னும் க்ஷேமத்தைச் செய்பவர்.' ஒ. 'தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்.'—கீ. 9. 22)

600. தம்முடைய நாமத்தை நினைத்தமாத்திரத்தில் பாவத்தைப் போக்குகிறவர். ('நாமஸ்ம்ருதி-மாத்ரேண பாவ யன் சிவ:'—சங். 'போகத்தை விரும்புகிறவரும் மோக்ஷத்தை விரும்புகிறவருமான யாவருக்கும் அவரவர் அதிகாரத்துக் குரிய நன்மைகளைச் செய்பவர்.'—ப. பா.)

601. ஸ்ரீவத்ஸவக்ஷஸே நம: 605. ஸ்ரீதாய நம:
602. ஸ்ரீவாஸாய நம: 606. ஸ்ரீசாய நம:
603. ஸ்ரீபதயே நம: 607. ஸ்ரீநிவாஸாய நம:
604. ஸ்ரீமதாம் வராய நம: 608. ஸ்ரீநிதயே நம:

---

601. ஸ்ரீவத்ஸம் எனும் மறுவை மார்பிலுடையவர்.
602. ஸ்ரீதேவிக்கு இருப்பிடமாகியவர்.
603. ஸ்ரீதேவியால் பதியாக வரிக்கப்பட்டவர்.

604. ஸ்ரீமான்களாகிய பிரம்மாதி தேவர்களினும் சிறந்தவர். (ஒ. 'ருச: ஸாமானி யஜூ.ஷி I ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்.' 'மகாலக்ஷ்மியின் பூரணகடாக்ஷம் பெற்றவர் பகவான்; அவர் கடாக்ஷலேசம் பெற்றவர்கள் மற்றத் தேவர்கள்.'—ப. பா.)

605. அடியார்களுக்கு ஐசுவரியத்தை அளிப்பவர். ('இவரைச் சார்ந்ததினால் திருமகளுக்கு ஸ்ரீ என்ற பெயர் வந்திருப்பதினால் அந்தத் திருமகளுக்கும் பிராணதாரமாயிருப்பவர்.' ஒ. 'ராகவா! நானும் பிராட்டியும் உம்மை விட்டுப் பிரிந்திருந்தால் நீரிலிருந்து எடுக்கப்பட்ட மீன்களைப்போல் நிமிஷமும் பிழைத்திரோம்.'—ராமாயணத்தில் லக்ஷ்மணன் கூறுவது.)

606. ஸ்ரீதேவியின் நாயகர். ('பிராட்டிக்கும் அவ்வளவு பெருமை வந்ததற்குக் காரணமா யிருப்பவர். திருவுக்குத் திருவாகியவர். எல்லா நிலைமைகளிலும் பிராட்டியைத் தமக்கு ஈசுவரியாக வைத்திருப்பவர். லக்ஷ்மி திவ்யாத்ம ஸ்வரூபத்தில் திருக்கல்யாணகுண ரூபமாகவும், திவ்ய மங்கள விக்கிரகத்தில் திவ்ய ஸ்திரீரூபமாகவும், தமக்கு ஆதாரமான ஸ்வரூபமாகவும் அடிமையாகவும் எப்போதும் இருப்பவள் என்று ஸ்ரீபாஞ்சராத்திரம் ஸநத்குமாரஸம்ஹிதையில் கூறப்படுகிறது.'—ப. பா. ஒ. 'க: ஸ்ரீ: ச்ரிய: பரமஸத்வ-ஸமாச்ரய: க:, க: புண்டரீக - நயன: புருஷோத்தம: க: I'—ஸ்தோத்ர-ரத்னம். *12.*)

607. ஸ்ரீமான்களிடம் வாஸம் செய்பவர். ('ஸ்ரீசப்தேன ஸ்ரீமந்தோ லக்ஷ்யந்தே'—சங். 'நந்தவனத்திலுள்ள கொடிக்குக் கற்பகவிருக்ஷம் போல ஸ்ரீதேவிக்குக் கொழுக்கொம்பாக இருப்பவர்.'—ப. பா.)

608. எல்லாச்சக்திகளுக்கும் பொக்கசமாயிருப்பவர்.

609. ஸ்ரீவிபாவனுய நம:	613. ஸ்ரீமதே நம:
610. ஸ்ரீதராய நம:	614. லோகத்ரயாச்ரயாய நம:
611. ஸ்ரீகராய நம:	615 ஸ்வக்ஷாய நம:
612. ச்ரேயஸே நம:	616. ஸ்வங்காய நம:

609. எல்லாப் பிராணிகளுக்கும் அவரவர் வினைகளுக்குத் தக்கவாறு வெவ்வேறுன செல்வங்களை வகுத்துக் கொடுப்பவர். ('பிராட்டியினுல் தமக்குப் புகழும் மகிமையும் உண்டாக்கப்பட்டிருப்பவர். பிராட்டியானவள் யாரைச் சேர்ந்தவளோ அந்தத் தேஜஸாகிய ராமபிரான் அளவிடமுடியாதவன் ஏன்பது ஸ்ரீராமாயணம் ஆரணிய காண்டம்.'—ப. பா.)

610. எல்லாவுயிர்களுக்குந் தாயான ஸ்ரீதேவியை மார்பில் வகிப்பவர். ('மணிக்கு ஒளிபோலவும் மலருக்கு மணம் போலவும் மதிக்கு நிலவுபோலவும் அமுதத்துக்குச் சுவை போலவும் இயற்கையாகவுள்ள ஸம்பந்தத்தினுல் எப்போதும் லக்ஷ்மியைச் சேர்ந்திருப்பவர்.'—ப. பா.)

611. நினைப்போர், துதிப்போர், அர்ச்சனைபுரிவோர் ஆகியவர்க்குச் செல்வத்தைத் தருபவர். ('பரஸ்வரூபத்திற் போலவே வியூகவிபவாவதாரங்கள் முதலியவற்றிலும் தமக்கு ஒத்தபடி லக்ஷ்மியை அவதரிக்கச் செய்கிறவர். அவரது தேவதா ரூபத்தில் இவளும் தேவதா ரூபமாகவும், அவரது மனுஷ்யாவதாரத்தில் இவளும் மானிடவடிவமாகவும், அவரெடுக்கும் திருமேனிகளுக் கெல்லாம் தக்கபடி தானும் திருமேனி எடுப்பவள் என்பது விஷ்ணுபுராணம்.'—ப. பா.)

612. நித்யஸுகமானப் பிரம்மானந்த ரூபமா யிருப்பவர்.

613. செல்வநாயகர். ('ச்ரேய: ஸ்ரீமதே நம:' என்று ஒரே நாமமாக பட்டர் கொள்ளுகிறுர்.)

614. மூவுலகங்களுக்கும் ஆதாரமாயிருப்பவர்.

615. தாமரை மலருக்கொப்பான அழகிய கண்களை உடையவர்.

616. அழகிய அங்கங்களை உடையவர்.

612-13. ச்ரேய: ஸ்ரீமதே நம: । ப. பா.

617. சதானந்தாய நம:
618 நந்தயே நம:
619. ஜ்யோதிர்கணேச்வராய நம:
620. விஜிதாத்மனே நம:
621. அவிதேயாத்மனே நம:
622. ஸத்கீர்த்தயே நம:
623. ச்சின்னஸம்சயாய நம:

---

617. (ஒரே பரமானந்தம் நூறு வகையாய்ப் பிரிந்திருப்பதால்) பலவகைப்பட்ட ஆனந்தங்களை உடையவர். (ஒ. 'இந்த ஆனந்தத்தின் ஒரு திவலையைக் கொண்டு தான் பிரிதான பிராணிகளெல்லாம் வாழ்கின்றன.'—ப்ரு. உப. 4. 3. 32.)

618. பரமானந்த வடிவமாயிருப்பவர்.

619. ஒளிக்கூட்டங்களுக்கு ஈசுவரர். (ஒ. 'ஸ்வயம் பிரகாசமுள்ள அவனைப் பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கின்றது; அவனொளியாலேயே இவ்வனைத்தும் விளங்குகின்றது.' கட. உப. 5. 15 'எப்போதும் பிரகாசிப்பதனால் வேதத்தில் மரீசி என்று கூறப்படும் நித்ய ஸூரிகளை இங்கே ஜ்யோதிஸ் என்று சொல்லியது.'—ப. பா.)

620. மனதை யடக்கியவர். ('மஹாலக்ஷ்மியும் விரும்பத்தக்க சிறப்பினால் தங்குதடையில்லாமல் ஓங்கிவளரும் திருவுள்ளமும் திருவடி பணிந்தவர்கள் விஷயத்தில் தாழ்ந்து இணங்கும்படி இருப்பவர்.'— ப. பா.)

621. யாருக்கும் ஆட்படாத ஸ்வரூபமுள்ளவர். ('விதேயாத்மனே நம:' என்பது பட்டர் பாடம். தமது பக்தர்கள் 'இங்கு வா, இங்கு நில், இங்கு உட்கார், இதை உண்' என்று கட்டளையிடுவதற்குரிய ஸ்வரூபம் உளளவர்.)

622. பொய்யாத கீர்த்தியுடையவர்.

623. சந்தேகமற்றவர். (எல்லாவற்றையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எப்போதும் நேரில் பார்ப்பவர். ஒ. 'அந்தப் பராபரவஸ்து பார்க்கப்பட்டதும் இவனுடைய இருதய முடிச்சு அவிழ்கிறது. சந்தேகங்களெல்லாம் ஒழிகின்றன. கருமங்களெல்லாம் நாசமடைகின்றன.'—மு. உப. 2. 9.)

---

621. விதேயாத்மனே நம:. ப. பா.

624. உதீர்ணாய நம: 628. பூசயாய நம:
625. ஸர்வதச்சக்ஷுஷே நம: 629. பூஷ்ணாய நம:
626. அனீசாய நம: 630. பூதயே நம:
627. சாச்வதஸ்திராய நம:

---

624. எல்லாப் பிராணிகளுக்கும் மேலானவர். ('வெளிக் கண்ணாலும் காணும்படி வெளிப்படையாக அவதரிப்பவர்.'—ப. பா.)

625. எங்கும் எல்லாவற்றையும் தமது ஞானவொளி யால் காண்பவர். (ஒ. 'அது எங்குங் கை கால்களுடையது; எங்குங் கண்ணுந் தலையும் வாயுமுடையது.'—கீ. 13. 13. "எல்லா விடங்களிலுமுள்ள எல்லாருடைய கண்களுக்கும் புலப்படுகிறவர்.'—ப. பா.)

626. தமக்குமேல் ஈசுவரனில்லாதவர். ('ந தஸ்யேசே கச்சன'—நாரா. உப. 2. 'பக்தர்களுக்குப் பராதீனமாயிருப்ப தால் ஸ்வதந்திரமில்லாதவர்.'—ப. பா.)

627. எக்காலமும் மாறாதிருப்பவர்.

628. (இலங்கைக்கு வழி காணவேண்டிக் கடற்கரையில்) பூமியில் சயனித்தவர். ('பக்தர்கள் அர்ச்சா விக்கிரகங்களில் எழுந்தருளும்படி பிரார்த்திப்பதை ஏற்றுக்கொண்டு பூமியி லுள்ள ஆலயங்களில் சுகமாக உறைபவர்.'—ப. பா.)

629. பல அவதாரங்களினால் பூமியை அலங்கரிப்பவர். ('ஸௌலப்ய குணத்தினால் தம்மை அலங்கரித்துக் கொள் பவர். செல்வர்கள் ஏழைகள் வீடுகளுக்கு விருந்தாகப் போ வதும் அவர்களிடும் போஜனத்தை உண்பதும் அவர்களுக்கு மரியாதை செய்வதும் பூஷணமேயன்றித் தூஷணமாகா தன்றோ?'—ப. பா.)

630. இருப்பு அல்லது ஐசுவரியமாயிருப்பவர். (எல்லா ஐசுவரியங்களுக்கும் காரணமானவர். ஒ. 'விபூதிர்-பூதி-ரைச் வர்யம்'—அமரம். வெளி உபாயங்களாகிய செல்வங்களும உள் உபாயங்களாகிய உறுதியான பக்தியும் இல்லாதவர் களுக்கும் அவற்றையெல்லாம் நிரப்பும் ஸம்பத்தாயிருப் பவர்.'—ப. பா.)

631. விசோகாய நம:
632. சோகநாசனாய நம:
633. அர்ச்சிஷ்மதே நம:
634. அர்ச்சிதாய நம:
635. கும்பாய நம:
636. விசுத்தாத்மனே நம:
637. விசோதனாய நம:
638. அநிருத்தாய நம:
639. அப்ரதிரதாய நம:

631. சோகமில்லாதவர். (ஓ. 'தத்ர கோ மோஹ: க: சோக: ஏகத்வ-மனுபச்யத:' ஒன்றாகிய அவரைக் காண்பவர்க்கே சோகமில்லையென்றால் அவருக்கு சோகம் ஏது? 'அசோக:' என்றும் பட்டர் பாடம்.)

632. நினைத்தவுடன் பக்தர்களின் சோகத்தைப் போக்குகிறவர்.

633. சூரியன் முதலானவர்களுக்கும் ஒளியைக் கொடுக்கும் சிறந்த ஒளி உள்ளவர்.

634. எல்லா உலகங்களாலும் பூஜிக்கப்பட்ட பிரம்மாதி தேவர்களாலும் பூஜிக்கப் பெற்றவர். ('எக்காலமும் எல்லாப் புண்ணிய க்ஷேத்திரங்களிலுமுள்ள கோவில்களிலும் வீடுகளிலும் பக்தர்கள் கண்ணால் கண்டு பூஜிப்பதற்கு எளிய அர்ச்சாவதாரம் செய்திருப்பவர்.'—ப. பா.)

635. சக்ரத்திற்குக் குடம் ஆதாரமாயிருப்பதுபோல் அனைத்திற்கும் ஆதாரமாயிருப்பவர். ('கு எனப்படும் பூமியாகிய க்ஷேத்திரங்கள் ஆலயங்கள் முதலியவற்றில் தியானத்திற்கும் ஆராதனத்திற்கும் விஷயமாகும்படி பிரகாசிப்பவர்.'—ப. பா.)

636. முக்குணங்களையும் கடந்த பரிசுத்த ஸ்வபாவமுள்ளவர்.

637. தம்மை நினைத்தவுடன் பாவங்களைப் போக்குகிறவர்.

638. நாலு வியூஹங்களில் நாலாவதான அநிருத்தர். (பகைவர்களால் ஒருக்காலும் தடுக்க இயலாதவர்.)

639. எதிரியில்லாதவர்.

---

631. அசோகாய நம: । —பா. பே.

640. ப்ரத்யும்னாய நம:
641. அமிதவிக்ரமாய நம:
642. காலநேமினிக்னே நம:
643. வீராய நம:
644. சௌரயே நம:
645. சூரஜனேச்வராய நம:
646. த்ரிலோகாத்மனே நம:
647. த்ரிலோகேசாய நம:
648. கேசவாய நம:
649. கேசிக்னே நம:

640. நாலு வியூஹங்களில் இரண்டாவதான பிரத்யும்னர். (சிறந்த தனமுள்ளவர். எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்கிறவர் என்று பாஞ்சராத்திரம் சொல்லுகிறது.)

641. அளவற்ற மகிமையுள்ளவர். (திரிவிக்கிரமாவதாரத்தில் மூவுலகங்களிலும் தமது திருவடிப் பதிப்பு அடங்காமலிருந்தவர்.)

642. காலநேமி என்னும் அசுரனைக் கொன்றவர். ('காலசக்ரத்தின் வட்டையாகிய அவித்தை எனப்படும் கலிகல்மஷத்தைத் தம்மிடம் சேர்ந்த மாத்திரத்தில் அழிப்பவர்'— ப. பா.)

643. பகைவரை வென்று பராக்கிரமத்துடன் விளங்குபவர்.

644. சூரகுலத்தில் பிறந்த ஸ்ரீ கிருஷ்ணர்.

645. சூரர்களான இந்திரன் முதலானவர்களுக்கும் ஈசுவரர்.

646. மூன்றுலகங்களும் தம்மைவிட வேறல்லாதவர். (மூன்றுலகங்களுக்கும் அந்தர்யாமி.)

647. மூன்றுலகங்களுக்கும் ஈசுவரர்.

648. சூரியன் முதலானவர்களிடமுள்ள கிரணங்களுக்குரியவர். ('கேச ஸஞ்ஜ்ஞிதா ஸூர்யாதி-ஸங்க்ராந்தா அம்சவஸ்-தத்வத்தயா கேசவ:' அல்லது 'க: அ: ஈச: எனப்படும் பிரம்மா விஷ்ணு சிவசக்திகள் மூன்றுக்கும் இருப்பிடமானவர்.' ஒ. நாமம் 23.)

649. கேசி என்னும் அசுரனைக் கொன்றவர்.

---

643. சௌரயே நம: । —ப. பா.

644. சூராய நம: । —ப. பா

650. ஹரயே நம:
651. காமதேவாய நம:
652. காமபாலாய நம:
653. காமினே நம:
654. காந்தாய நம:
655. க்ருதாகமாய நம:
656. அநிர்த்தேச்யவபுஷே நம:
657. விஷ்ணவே நம:
658. வீராய நம:

---

650. பிறப்பிறப்புக்களை அவற்றின் காரணத்தோடு நீக்குபவர். (அல்லது பச்சைவண்ணன். ஹரி என்றால் பச்சை நிறம். ஒ. 'பச்சைமா மலைபோல் மேனி')

651. தர்மார்த்தகாம மோக்ஷங்களை விரும்பும் எல்லோராலும் விரும்பப்பட்ட ஈசுவரர்.

652. ஆசைகளைப் பூர்த்தி செய்பவர்.

653. ஆசைகளெல்லாம் நிறைவேறினவர்.

654. கவர்ச்சி படைத்தவர். (பிரம்மாவுக்கும் முடிவைச் செய்கிறவர்.)

655. ஆகமங்களை வெளியிட்டவர். (ஒ. 'ச்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞே.' 'வேதா: சாஸ்த்ராணி விஜ்ஞான-மேதத் ஸர்வம் ஜனார்த்தனாத்!' வி. ஸ. பலசுருதி.)

656. இப்படிப்பட்டதென்று நிருபிக்கமுடியாத ரூபமுள்ளவர். ('இதம்-தத்-ஈத்ருகேவேதி நிர்த்தேஷ்டும் யத்ர ந சக்யதே குணாத்யதீதத்வாத்-ரூபமஸ்யேத்- யநிர்தேச்ய-வபு:' —சங். ஒ. 'ஏதத்-ததித்ய நிர்தேச்யா'—லலிதாத்ரிசதீ. ஒ. 'ஆணல்லன் பெண்ணல்லன் அலியுமல்லன், காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன், பேணுங்கால் பேணுமுருவாகுமல்லனுமாம், கோணை பெரிதுடைத் தெம்பெம்மானைக் கூறுதலே.'—நம்மாழ்வார்.)

657. வியாபித்திருப்பவர். ('தந்தீ புத்திரனே! என்னுடைய ஒளி ஆகாயத்தையும் பூமியையும் வியாபித்திருப்பதனாலும் பாதத்தினால் உலகங்களை ஆக்கிரமிப்பதனாலும் நான் விஷ்ணுவென்று சொல்லப்படுகிறேன்'—ம. பா. சாந்தி. 350 40 49.)

658. செல்லுதல் வியாபித்தல் படைத்தல் ஒளிர்தல் எறிதல் உண்ணுதல் முதலியவற்றை யுடையவர். ('வீ-கதி-வ்யாப்தி – ப்ரஜன - காந்த்-யஸன - காதனேஷு இதி தாது பாடாத்)

659. அனந்தாய நம: 662. ப்ரஹ்மக்ருதே நம:
660. தனஞ்ஜயாய நம: 663. ப்ரஹ்மணே நம:
661. ப்ரஹ்மண்யாய நம: 664. ப்ரஹ்மணே நம:

659. அளவிடப்படாதவர். (வியாபித்திருப்பதாலும், எக்காலத்திலும் அழியாதிருப்பதாலும், எல்லாவற்றிற்கும் ஆத்மாவாயிருப்பதாலும் இடம் காலம் பொருள் மூன்றிலும் அளவுபடாதவர். ஒ. 'ஸத்யம் ஜ்ஞானம் அனந்தம் ப்ரஹ்ம'—தை. உப. 2 1. ஒ. 'யஸ்யாந்தம் ந விது: ஸுரா·ஸுரகணு தேவாய தஸ்மை நம:'—பாகவதம் 12. 13. 1. ஒ. 'அச்யுத: கல்பவ்ருக்ஷச்ச அனந்த: காமதேனவ: | சிந்தாமணிச்ச கோவிந்தோ நாமத்ரய-முதாஹ்ருதம் ||')

660. அர்ஜுனனுக இருப்பவர். (ஒ. 'நான் பாண்டவர்களில் தனஞ்ஜயன்.'—கீ. 10. 37. 'தனங்களையும் வெறுத்துச் சம்பாதிப்பதற்கும் அனுபவிப்பதற்கும் மிக விரும்பத்தக்கவர்.'—ப. பா.)

661. தவத்திற்கும் வேதத்திற்கும் பிராம்மணர்கட்கும் ஞானத்திற்கும் அனுகூலமானவர். (அல்லது இவற்றை அறிபவர். ஒ. 'தபோ வேதாச்ச விப்ராச்ச ஜ்ஞானஞ்ச ப்ரஹ்ம ஸம்ஜ்ஞிதம்.')

662. தவம் முதலியவற்றை ஏற்படுத்தியவர்.

663. சிருஷ்டி செய்வதில் பிரம்மாவாக இருப்பவர். (ஒ. 'அவனே யகல்ஞாலம் படைத்திடந்தான் அவனே யஃதுண்டுமிழ்ந்தான் அவனே யவனு மவனு மவனும் அவனே மற்றெல்லாமுமறிந்தனமே.'—நம்மாழ்வார். 'பிரம்மக்ருத்-ப்ரஹ்மணே நம:' என்று ஒரே நாமமாக பட்டர் கொள்ளுகிறுர். 'பிரகிருதியினுல் உண்டாகும் மஹத் அஹங்காரம் முதலாக அளவற்ற விஸ்தாரமுள்ள உலகங்களைப் படைப்பவராகிய பிரம்ம தேவரும் எல்லா விதங்களாலும் தம்மால் நியமிக்கப்பட்டு நடக்கும்படி செய்பவர்.)

664. பிரம்மம் எனப்படும் பரம்பொருளாகியவர். ('ப்ருஹத்வாத் ப்ருஹ்மணத்வாத் ஸத்யாதி-லக்ஷணம் ப்ரஹ்ம | ஸத்யம் ஜ்ஞான-மனந்தம் ப்ரஹ்ம இதி ச்ருதே: |'

662-63. ப்ரஹ்மக்ருத்-ப்ரஹ்மணே நம: | —ப. பா.

665. ப்ரஹ்மவிவர்த்தனுய நம:
666. ப்ரஹ்மவிதே நம:
667. ப்ராஹ்மணுப நம
668. ப்ரஹ்மிணே நம:
669. ப்ரஹ்மஜ்ஞாய நம:
670. ப்ராஹ்மணப்ரியாய நம:
671. மஹாக்ரமாய நம:
672. மஹாகர்மணே நம:

ஒ 'ப்ரத்யஸ்தமித-பேதம் யத் ஸத்தாமாத்ர-மகோசரம் | வசஸா-மாத்ம-ஸம்வேத்யம் தஜ்ஜ்ஞானம் ப்ரஹ்ம-ஸஞ்ஜ்ஞிதம் ||'—விஷ்ணுபு. 6. 7. 53.)

665. தவம் முதலியவற்றை வளர்ப்பவர்.

666. வேதத்தை உள்ளபடி உணர்பவர். (ஒ. 'வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம்'—கீ 15. 15. 'ஆதியும் அந்தமுமில்லாத வேதத்தைத் தேவர்களும் ரிஷிகளும் அறியவில்லை. ஜகத்ஸ்ருஷ்டி கர்த்தாவும் பகவானுமாகிய நாராயணர் ஒருவர் மட்டுமே அதனை அறிந்திருக்கிறுர்.'—ம. பா. சாந்தி பர்வம்—மோக்ஷதர்மம்.)

667. பிராம்மண வடிவில் உலகோர்க்கு வேதங்களை ஓதுவிப்பவர். ('வேதத்தை உலகில் நிலைபெறுத்துவதற்காகத் தாமே அத்ரி மகரிஷியிடம் தத்தாத்ரேயரெனும் பிராம்மணராக அவதரித்தவர்.'—ப. பா.)

668. ப்ரம்ம என்னும் சொல்லால் குறிக்கப்பட்டவையெல்லாம் தமக்கு அடங்கியவையாய்க் கொண்டவர்.

669. வேதங்களைத் தம் உருவாக அறிந்தவர்.

670. பிராம்மணர்களுக்குப் பிரியமானவர். (அல்லது பிராம்மணர்களிடத்தில் பிரியமுள்ளவர். ஒ. 'அந்தணரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்.' குறள். ஒ. 'யம் தேவம் தேவகீ—தேவீ வஸுதேவா—தஜீஜனத் | பௌமஸ்ய ப்ரஹ்மணோ குப்த்யை தீப்தமக்னிமிவாரணி: ||'—சாந்தி ப. 46. 31.)

671. பெரிய காலடிகளை யுடையவர். (ஒ. 'சந்நோ விஷ்ணுருரு-க்ரம:'—தை உப. 'சேதனர்கள் நற்கர்மங்களினுல பத்திவைத்து வரிசைக்கிரமமாகத் தம்மிடம் ஏறும்படியாக நீண்ட படிவரிசைகளை வைத்திருப்பவர்.'—ப. பா.)

672. சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமாகிய பெருந் தொழிலுடையவர். ('சிறு பிராணிகளுக்கும் அவ்வவற்றின் கர்மக்கிரமத்தில் மனித உடலளித்து அவைகளும் தமது ஐசுவரி

673. மஹாதேஜஸே நம 676. மஹாயஜ்வனே நம:
674. மஹோரகாய நம: 677. மஹாயஜ்ஞாய நம:
675. மஹாக்ரதவே நம: 678. மஹாஹவிஷே நம:

யத்தை யனுபவிக்க முயலும்படி செய்விக்கும் பெருந்தொழிலுடையவர்.'—ப. பா.)

673. சூரியன் முதலானவர்களுக்கும் ஒளியைக் கொடுக்கும் சிறந்த ஒளியுள்ளவர். ('சேதனர்களின் அனுதியான அஜ்ஞான மென்னும் இருளை யொழிக்கும் பேரொளியுள்ளவர்.' ஒ. 'அவர்களிடம் அருளாலேயே நான் அவர்கள் உள்ளத்தில் நிலை பெற்றுப் பிரகாசிக்கும் ஞான தீபத்தால் அஜ்ஞானத்தாலுண்டான இருளை நாசம் செய்கிறேன்.'—கீ. 10. 11.)

674. மகா ஸர்ப்பவடிவிலிருப்பவர். (ஒ. 'ஸர்ப்பங்களில் நான் வாசுகியா யிருக்கிறேன்.'—கீ. 10. 28. 'தாம் மிகப் பெரியவராயிருந்தும் மிக்க அற்பர்களுக்கும் அந்தர்யாமியாக மார்பகத்தில் பிரவேசித்திருப்பவர்.'—ப. பா.)

675. மஹாக்ரதுவாகிய அசுவமேத வடிவினர். (அல்லது அம் மஹாக்கிரதுவைத் தமதாய்க் கொள்பவர்.)

676. உலகிற்கு வழிகாட்டுபவராய்ச் சிறந்த யாகங்களைச் செய்பவர். (அல்லது சிறந்த யாகம் செய்வோரைத் தம்மவராய்க் கொள்பவர்.)

677. தலைசிறந்த ஜபயஜ்ஞமாயிருப்பவர். ('யஜ்ஞங்களில் நான் ஜபயஜ்ஞமா யிருக்கிறேன்.'—கீ. 10. 25.)

678. மஹா ஹவிஸ்ஸாயிருப்பவர். (ஒ. 'யத் புருஷேண ஹவிஷா | தேவா யஜ்ஞ-மதன்வத ||'—புருஷஸூக்தம். 'ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்ம ஹவி: ||' கீ. 4. 24. 'உலகமெல்லாம் பிரம்ம ஸ்வரூபமாதலின் பிரளய காலத்தில் அவரிடம் ஹோமம் செய்யப்பட்ட உலகமென்னும் பெரிய ஹவிஸ்ஸாக அவரே யிருப்பவர்.'—சங். 'ஸாத்விகர்களினுல் மனம் புத்தி இந்திரியம் முதலியவற்றை ஹவிஸுகளாக ஸமர்ப்பணம் செய்யப்படுகிறவர். ஆத்மா என்னும் சிறந்த ஹவிஸை அங்கிகரிப்பவர்.' 'நானே என்னை ஹோமம் செய்கிறேன்' என்பது நாராயண உபநிஷத்து.)

679. ஸ்தவ்யாய நம:	683. ஸ்தோத்ரே நம:
680. ஸ்தவப்ரியாய நம:	684. ரணப்ரியாய நம:
681. ஸ்தோத்ராய நம:	685. பூர்ணாய நம:
682. ஸ்துதயே நம:	686. பூரயித்ரே நம:

679. எல்லோராலும் துதிக்கப் பெறுகிறவர். ('ஸர்வை: ஸ்தூயதே ந ஸ்தோதா கஸ்யசிதிதி ஸ்தவ்ய:' —சங். 'எந்தக் குணங்களையிட்டு எப்படிப் புகழ்ந்தாலும் அவை பொய்யாகாமல் பொருந்தியிருப்பவர்.'—ப. பா)

680. பக்தர்கள் செய்யும் துதியைப் பிரியமாக ஏற்றுக் கொள்பவர். ('யாராலும் எந்தப் பாஷையாலும் எவ்வகையாலும் செய்யப்படும் ஸ்தோத்திரங்களைச் சொற்பிழை பொருட் பிழை இருந்தாலும் குணங்களைச் சொல்வதாக எண்ணி அன்புடன் அங்கீகரிப்பவர்.'—ப. பா. ஒ. 'ஏற்றிப் பணிந்தவன் பேரிரைஞ்ஞூ றெப்பொழுதும் சாற்றி யுரைத்தல் தவம்.'—பூதத் தாழ்வார்.)

681. துதியும் தாமாகவே இருப்பவர். (ஒ. 'நமஸ்காரஸ்-ததாசீச்ச ஸித்தாந்தோக்தி: பராக்ரம: । விபூதி: ப்ரார்த்தனு சேதி ஷட்விதம் ஸ்தோத்ர-லக்ஷணம் ॥')

682. துதிக்கும் செயலும் தாமாகியவர். ('ஸ்துத:' துதிக்கப் பெற்றவர் என்பது பட்டர் பாடம்.)

683. துதிப்பவரும் அவரேயாகியவர். ('தம்மைத் துதிப்பவரைத் தாம் துதிக்கும் தன்மையுள்ளவர்.'—ப. பா.)

684. (உலக ரக்ஷணத்திற்காகப் பஞ்சாயுதங்களைத் தரிப்பதால்) யுத்தத்தில் விருப்பமுள்ளவர். (அல்லது 'அரணப்ரிய:' எனக்கொண்டால் 'அரணம்' என்பது சரணம் எனப் பொருள்படும்.) (ஒ. பீதம் ப்ரபந்நம் பரிபாதி யத்பயான்— ம்ருத்யு: ப்ரதாவத்-யரணம் தமீமஹி'—பாக. 2. 33.)

685. எல்லாம் நிறைந்தவர்.

686. பக்தர்களின் விருப்பங்களை யெல்லாம் பூர்த்தி செய்விப்பவர்.

---

682. ஸ்துதாய நம: । —ப. பா.

687. புண்யாய நம:
688. புண்யகீர்த்தயே நம:
689. அநாமயாய நம:
690. மனோஜவாய நம:
691. தீர்த்தகராய நம:

---

687. நினைத்தமாத்திரத்தில் எல்லோருடைய பாவங்களையும் போக்குகிறவர்.

688. பாவத்தைப் போக்கும் புகழ் உள்ளவர். (ஒ. 'வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்.'—திருப்பாவை. சுருதி ஸ்மிருதிகள் கூறும் விரதங்கள் பாவத்தைப் போக்கினும் வாஸனையைப் போக்கமாட்டா. பகவானுடைய புகழைப் பாடுதல் இரண்டையும் போக்கும்.)

689. (வினைப்பயனாகி உள்ளும் புறமுமாகிப் பீடிக்கும்) நோய்களால் பீடிக்கப்படாதவர். ('ஸம்ஸாரமென்னும் பெரும் பிணிக்குப் பகையானவர்.'—ப. பா.)

690. மனத்தின் வேகத்திற்கொப்பான வேகமுள்ளவர். (ஒ. 'அநேஜ-தேகம் மனஸோ ஜவீய:' அது அசைவற்றது. ஒன்றாயிருப்பது, மனதைவிட வேகமுள்ளது. 'தத்தாவதோ ஽ன்யானத்யேதி திஷ்டத்' அது நிலையாக நின்றுகொண்டே தாவிச் செல்லும் மற்றவைகளைத் தாண்டுகிறது.'—ஈச. உப. 4.)

691. உலகை உய்விக்கும் வித்தைகளை உண்டாக்கி உபதேசித்தவர். (ஹயக்கிரீவ வடிவுகொண்டு மதுகைடபர்களைக் கொன்றபின் பிரம்மாவிற்குச் சிருஷ்டித் தொடக்கத்திலே எல்லா வித்தைகளையும் உபதேசித்தவர். ஒ. 'யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை । தம் ஹ தேவ-மாத்மபுத்தி-ப்ரகாசம் முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே ||' 'நினைப்பது நாமத்தை உச்சரிப்பது முதலியவை செய்தவுடன் எல்லாப் பாவங்களையும் போக்குவனவாகிய கங்கை புஷ்கரம் முதலான புண்ணியதீர்த்தங்களை உண்டுபண்ணினவர். சுருதி ஸ்மிருதி முதலிய ஸத் ஸம்பிரதாயங்களைப் பிரவர்த்திக்கச் செய்தவர். கடல்போல் இறங்க முடியாத ஆழமான தம்மிடத்தில் பக்தர்கள் இலங்கும்படி படிகளை உண்டுபண்ணினவர்.'—'கங்காதி - தீர்த்த-ஹேதுத்வாத் ச்ருதி-ஸ்ம்ருத்யோ: ப்ரவர்த்தனாத் । ஆத்ம-ப்ரவேச-ஸோபானம் க்ருத்வா தீர்த்தகர: ஸ்ம்ருத: ||'—ப. பா.)

692. வஸுரேதஸே நம:
693. வஸுப்ரதாய நம:
694. வஸுப்ரதாய நம:
695. வாஸுதேவாய நம:
696. வஸவே நம:
697. வஸுமனஸே நம:
698. ஹவிஷே நம:

---

692. பொன்மயமான வீரியத்தை உடையவர். (ஒ. 'தேவ: பூர்வமப: ஸ்ருஷ்ட்வா தாஸு வீர்ய-மபாஸ்ருஜத் | ததண்டமபவத்—தைமம் ப்ரஹ்மண: காரணம் பரம் ||' வியாஸ வசனம். 'தம்முடைய திவ்விய தேஜஸையே அவதாரத்திற்குக் காரணமாக உடையவர்.'—ப. பா.)

693. செல்வத்தை யளிப்பவர். ('சிறந்த செல்வமாகிய தம்மையே புத்திரராகத் தேவகிக்கும் வசுதேவருக்கும் கொடுத்தவர்.'—ப. பா.)

694. பக்தர்களுக்கு மோக்ஷச் செல்வத்தை யளிப்பவர். (அல்லது தேவசத்துருக்களின் செல்வத்தை யழிப்பவர். ஒ. 'விஜ்ஞான-மானந்தம் ப்ரஹ்ம ராதிர்-தாது: பராயணம் திஷ்ட-மானஸ்ய தத்வித:'—ப்ரு. உப. 3. 9. 27.)

695. வசுதேவருக்குப் புத்திரராக அவதரித்தவர்.

696. எல்லாம் தம்மிடம் வசிக்கப் பெற்றவர். (தாம் எல்லாவற்றிலும் வசிப்பவர்; அல்லது மாயையினால் தம் ஸ்வரூபத்தை மறைப்பவர். ஒ. 'ஈசாவாஸ்ய-மிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்' ஈச. உப. 1. – 'திருப்பாற்கடலில் வசிப்பவர்.'—ப. பா.)

697. எல்லாரிடத்திலும் வசிக்கும் மனமுள்ளவர். ('அவிசேஷேண ஸர்வவிஷயேஷு தன்மனோ வஸதீதி வஸு: தன்மனோஸ்யேதி வஸுமனா:'—சங். 'லக்ஷ்மீ பிறந்த இடமாகிய க்ஷீராப்தியில் வாஸம் செய்பவர். வசுதேவரிடம் மனம் வைத்தவர்.'—ப. பா.)

698. ஹவிஸ்ஸாக இருப்பவர். (ஒ. 'ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்ம-ஹவி:—கீ. 4. 24. 'தம்மை ஒளித்துக் கொள்வதற்காக யசோதை நந்தகோபர்களிடம் வளர்ப்பதற்குக் கொடுக்கப்பட்டு அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டவர் என்பது சொற்பொருள்.'—ப. பா.)

699. ஸத்கதயே நம: 702. ஸத்பூதயே நம:

700. ஸத்க்ருதயே நம: 703. ஸத்பராயணாய நம:

701. ஸத்தாயை நம:

---

699. ஸாதுக்களால் அடையப்படுகிறவர். ('அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத ஸந்தமேனம் ததோ விது: இதி ச்ருதே: ப்ரஹ்மாஸ்தீதி யே விதுஸ்தே ஸந்தஸ்தை: ப்ராப்யதே இதி ஸத்கதி:। ஸதீ கதிர் புத்தி: ஸமுத்க்ருஷ்டா அஸ்யேதி வா ஸத்கதி:'—சங். ஒ. 'ஸத்பாவே ஸாதுபாவே ச ஸதித்யேதத் ப்ரயுஜ்யதே। ப்ரசஸ்தே கர்மணி ததா ஸச்சப்த: பார்த்த யுஜ்யதே ||'—கீ. 17. 26.)

700. சிறந்த செய்கைகளை யுடையவர். ('தயிர் வெண்ணெய் திருடினது, உரலில் கட்டுப்பட்டுத் தவழ்ந்தது, ராஸக்ரீடைசெய்தது முதலிய விளையாட்டுச் செய்கைகளும் ஸம்ஸார விலங்குகள் எல்லாவற்றையும் தறிப்பவைகளாகச் சிறந்திருப்பவர்.' ப. பா. ஒ. 'அர்ஜுந, இவ்வண்ணம் என்னுடைய அப்ராக்ருதமான ஜன்மத்தையும் கர்மத்தையும் உள்ளபடி எவன் அறிகிறானோ அவன் உடலைவிட்டு மறுபடியும் பிறவியை யடையமாட்டான். என்னை வந்தடைவான்.'—கீ. 4. 9.)

701. பேதமில்லாத ஞானஸ்வரூபமா யிருப்பவர். (ஒ. 'ஸஜாதீய. விஜாதீய-ஸ்வகத-பேத-ரஹிதானுபூதி: ஸத்தா, ஏகமேவாத்வதீயம் இதி ச்ருதே:'—சங். 'தாமே ஸாதுக்களுக்கு இருப்பாக இருப்பவர்.'—ப. பா.)

702. ஸத்தாகவும் சித்தாகவும் மறுக்க வொண்ணாதவாறு ஒளிர்பவர். ('ஸ ஏவ பரமாத்மா சிதாத்மகோ போதோ பஹுதா பாஸமானத்வாத் ஸத்பூதி: நாநாத்வ-ப்ரதீதேர்-பாத்யமானத்வாந் ந ஸந்நாப்யஸன் ச்ரௌதௌ வா யௌக்திகோ வா பாத: ப்ரபஞ்சஸ்ய விவக்ஷித:—சங். 'ஸாதுக்களுக்குப் புத்திரன் மித்திரன் பந்து தூதன் ஸாரதி முதலிய எல்லாவகை உதவிகளாகவும் தாமே இருப்பவர்.'—ப. பா.)

703. தத்துவத்தை அறிந்தவர்கள் அடையும் சிறந்த இடமாகியவர். ('ஸதாம் தத்வவிதாம் ப்ரக்ருஷ்ட-மயனமிதி ஸத்பராயண: அல்லது ஸாதுக்களையே தமக்கு முக்கிய ஆதாரமாக வைத்திருப்பவர்.)

704. ஶூரஸேனாய நம:	710. ஸர்வாஸுநிலயாய நம:
705. யதுச்ரேஷ்டாய நம:	711. அநலாய நம:
706. ஸந்நிவாஸாய நம:	712. தர்ப்பக்னே நம:
707. ஸுயாமுனாய நம:	713. தர்ப்பதாய நம:
708. பூதாவாஸாய நம:	714. த்ருப்தாய நம:
709. வாஸுதேவாய நம:	

704. (ஹனுமான் முதலான) சூரர்களைச் சேனையில் கொண்டவர்.

705. யதுக்களின் தலைவர்.

706. அறிவாளிகளுக்குப் புகலிடமாகியவர்.

707. நல்ல யமுனைவாசிகளால் சூழப்பெற்றவர். (தாம் யமுனையிற் செய்த லீலைகளெல்லாம் மனத்திற்கு இனியவையாகவும் பாவங்களைப் போக்கிப் பரகதியைத் தருபவையாகவும் இருப்பவர்.)

708. பிராணிகள் தம் அருட்பார்வையில் தங்கும்படி இருப்பவர். (ஒ. 'தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி யெல்லாம் தங்கும்படிக் கிச்சைவைத்துயிர்க்குயிராய்த் தழைத்ததெது.—தாயுமானவர்.)

709. மாயையால் உலகை மறைப்பவர். (வாசுதேவ வியூஹமாயிருப்பவர்.)

710. பிராணன்களுக்கு உறைவிடமான ஜீவாத்ம வடிவினர்.

711. முடிவிலாச் சக்தி படைத்தவர். ('ஆச்ரிதர்களுக்கு எல்லா ஏவல்களையும் செய்தும் போதுமென்று நினையாதவர். தம் பக்தர்கள் விஷயத்தில் பிறர் செய்யும் பிழையைப் பொறுக்க முடியாதவர்.'—ப. பா.)

712. தர்ம விரோதிகளுடைய செருக்கைப் போக்குகிறவர்.

713. தர்மவழியிலிருப்பவர்களுக்குப் பெருமிதமளிப்பவர்.

714. ஆத்மானந்தானுபவத்தில் மகிழ்ந்திருப்பவர். ('அத்ருப்த:' எல்லாவற்றிலும் சிறந்த தமது சக்தியினால் சிறிதும் கர்வமடையாதவர் என்பது பட்டர் பாடம்.)

---

714. அத்ருப்தாய நம: | —ப. பா.

715. துர்த்தராய நம:
716. அபராஜிதாய நம:
717. விச்வமூர்த்தயே நம:
718. மஹாமூர்த்தயே நம:
719. தீப்தமூர்த்தயே நம:
720. அமூர்த்திமதே நம:
721. அநேகமூர்த்தயே நம:

715. மனதில் சிரமப்பட்டு நிறுத்தக்கூடியவர். ('ந சக்யா தாரணு யஸ்ய ப்ரணிதாநுதிஷு ஸர்வோபாதி - விநிர்முக்தத்வாத் ததாபி தத்ப்ரஸாதத: கைச்சித் து:க்கேன தார்யதே ஹ்ருதயே ஜன்மாந்தர-ஸஹஸ்ரேஷு பாவனுயோகாத் தஸ்மாத் துர்த்தர:—சங். 'துஷ்டர்களால் பிடிக்கமுடியாதவர். இந்த அற்பபுத்தியுள்ள துரியோதனன் முதலியவர்கள் ஜ்வலிக்கிற அக்னியைத் துணியினல் பிடிக்க நினைக்கும் சிறுவன் போலவும் பித்தன்போலவும் இந்தத் தாமரைக் கண்ணனைப் பிடிக்க நினைக்கிருர்கள் என்பது ஸ்ரீமகாபாரதம் உத்யோகபர்வம்.'—ப. பா.)

716. வெல்லக்கூடாதவர். (எங்கு கிருஷ்ணரிருக்கிருரோ அங்கு ஜயம் என்பது ஸ்ரீமகாபாரதம்)

717. உலகனைத்தையும் உடலாய்க் கொண்டவர்.

718. ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்டிருக்கும் பெரிய உருவமுடையவர். ('விச்வருபம் காண்பித்தபோது அனேகம் பிரம்மாண்டங்களடங்கிய உலகமனைத்தும் ஒரு மூலையில் அடங்கிக் கிடக்கும்படி பெரிய உருவமுள்ளவர்.'—ப. பா.)

719. ஞானமயமாகப் பிரகாசிக்கும் ரூபமுள்ளவர்.

720. வினையாலுண்டான உடம்பில்லாதவர். ('ஓ. பிறப்பற்றவனுகவும் மாறுபாடற்றவனுகவும் உண்டாயவற்றிற்கெல்லாம் இறைவனுகவும் இருந்தபோதிலும் என்னுடைய பிரகிருதியை வசப்படுத்திக் கொண்டு என் மாயையினுல் நான் தோன்றுகிறேன்.'—கீ. 4. 6.)

721. அவதாரங்களில் பல உடல்களை எடுத்திருப்பவர். ('பதினறுபிரத்துநூறு ஸ்திரீகளுடன் இருந்தபோது ஸ்ரீகிருஷ்ணபகவான் தாமும் அவர்கள் ஒவ்வொருவருக்குந் தக்கபடி அவ்வளவு உருவங்களை எடுத்துக்கொண்டார் என்று ஸ்ரீ விஷ்ணு புராணம் சொல்லுகிறபடி அநேகம் திருமேனிகளை உடையவர்'.—ப. பா. ஓ. வணங்குந் துறைகள் பல பல

722. அவ்யக்தாய நம: 724. சதானனாய நம:
723. சதமூர்த்தயே நம: 725. ஏகஸ்மை நம:

ஆக்கி மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பல ஆக்கி அவை அவைதோறு அணங்கும் பல பல ஆக்கி நின் மூர்த்தி பரப்பி வைத்தாய் இணங்கு நின்னோரை இல்லாய் நின்கண் வேட்கை எழுவிப்பனே.—நம்மாழ்வார்.)

722. இவர் இப்படிப்பட்டவரென்று யாராலும் அறியக் கூடாதவர். (ஒ. 'மதியீனர் மாறுபாடில்லாததும் மேம்பட்ட வேறொன்றில்லாததுமான என்னுடைய பரமாத்ம ஸ்வரூபத்தை அறியமாட்டாதவர்களாய்த் தோன்றுதலில்லாத என்னைத் தோற்றத்தை யடைந்தவனைக் கருதுகின்றனர். நான் யோகமாயையினால் மூடப்பட்டு எல்லோருக்கும் விளங்குவதில்லை.'—கீ. 7. 24-25.)

723. ஞானரூபியாயிருந்தும் மாயையினால் பல உருவங்களாகத் தோன்றுகிறவர். (ஒ. 'பார்த்தா! தெய்வத்தன்மை வாய்ந்தனவும் பல வகையானவும் பல நிறங்களும் வடிவங்களும் உடையனவுமாகிய உருவங்களை நூற்றுக்கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் இனிப் பார்.—கீ. 11. 5.)

724. பல முகங்களையுடையவர். (ஒ. 'பல முகங்களும் கண்களுமுடையது. பல அற்புதக் காட்சிகள் நிறைந்தது.'—கீ. 11. 10.)

725. ஒன்றேயாகியவர். (ஒ. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'—திருமந்திரம். 'ஏகம் ஸத்-விப்ரா பஹுதா வதந்த'—ரிக்வே. 1. 164. 46.) 'எங்ஙனம் ஒரே நெருப்பு உலகப் பொருள்களில் புகுந்து அந்தப் பொருள்களின் உருவத்துக்குத் தக்கவாறு தனித்தனி உருவுடையதாக ஆயிற்றோ அங்ஙனமே உண்டான உயிர்களனைத்திற்கும் ஒன்றேயாகிய அந்தராத்மா அந்தந்த உருவங்களுக்குத் தக்க உருவுடையதாக ஆகி அவைகட்கப்பாலும் உள்ளதாக ஆயிற்று.'—கட. உப. 5. 9. 'ஏகமேவாத்விதீயம்.'—சா. உப. 6. 2. 1. 'எல்வகையிலும் ஒப்பில்லாத பகவானை யாருடனும் சேர்த்து எண்ணக்கூடாமையால் ஒருவர் என்று சொல்வது'—ப. பா.)

725. ஏகாய நம: | —ப. பா.

726. நைகஸ்மை நம: **729. கஸ்மை நம:**
727. ஸவாய நம: **730. யஸ்மை நம:**
728. காய நம:

---

726. மாயையினுல் பல உருவாயிருப்பவர். (ஒ. 'இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே.'—ப்ரு. உப. 2. 5. 19. 'எனது விபூதிகளுக்கு முடிவில்லை என்று பகவான் கீதையில் சொல்லிய படி தமது விபூதிகளினுல் அனந்தமாகவும் இருப்பவர்.'—ப. பா.)

727. ஸோமயாக வடிவினர். ('ஸ:' யாவருக்கும் நிச்சய ஞானத்தை உண்டுபண்ணுகிறவர்; 'வ:' எல்லாம் தம்மிடம் வசிக்கும்படி இருப்பவர் என இரண்டு நாமங்களாகப் பட்டர் கொள்ளுகிருர்; 'ஸாய நம: எனப் பிரயோகம்.)

728. சுகமென்று பொருள்படும் 'க' எனும் சொல்லால் துதிக்கப் படுகிறவர் (எல்லோரிடத்தும் பிரகாசிப்பவர்; அழுக்கானவற்றிலும் பிரகாசிப்பவர்.'—ப. பா. ஒ. 'கம் ப்ரஹ்ம' சா. உப. 4. 10 5.)

729. விசாரித்து அறிதற்குரியவர். (ஸர்வபுருஷார்த்த-ரூபத்வாத் ப்ரஹ்மைவ விசார்யமிதி ப்ரஹ்ம கிம்.'—சங். ஒ. 'அதைத் தேடவேண்டும், அதை அறியவேண்டும்; அதைத் தேடி அறிந்தவன் எல்லா உலகங்களையும் எல்லா ஆசைகளை யும் அடைகிருன்.'—சா. உப. 8. 7. 1. 'கேனேஷிதம் பததி ப்ரேஷிதம் மன:'—கேன. உப. 1. 1.)

730. தானே விளங்குவதான பொருளைக் குறிக்கும் 'யத்' எனும் சொல்லால் துதிக்கப்படுகிறவர். ('யச்சப்தேன ஸ்வதஸ்ஸித்த வஸ்தூத்தேச-வாசினு ப்ரஹ்ம நிர்த்தேச்யதே இதி ப்ரஹ்ம யத்'—சங். ஒ. யதோ வா இமானி பூதானி ஜாயந்தே' 'ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதற்கு எப்போதும் யத்தினப் படுகிறவர்' தை. உப. 3. 1.—ப. பா.)

---

726. நைகாய நம: । —ப. பா.
727. ஸாய நம: । 728. வாய நம: । —ப. பா.
729. கிமே நம: । —ப. பா.
730. யதே நம: । —ப. பா.

731. தஸ்மை நம:
732. பதாயானுத்தமாய நம:
733. லோகபந்தவே நம:
734. லோகநாதாய நம:
735. மாதவாய நம:
736. பக்தவத்ஸலாய நம:
737. ஸுவர்ணவர்ணாய நம:
738. ஹேமாங்காய நம:
739. வராங்காய நம:

731. 'தத்' எனும் சொல்லால் குறிக்கப்படுகிறவர். ('தநோதிதி ப்ரஹ்ம தத்'—சங். 'ஓம் தத் ஸத் என்று பிரம மத்திற்கு மூவகையான குறிப்புப் பெயர் கூறப்பட்டுள்ளது.' —கீ. 17. 23.)

732. முமுக்ஷுக்களால் அடையத்தக்க ஒப்புயர்வற்ற பதவியாயிருப்பவர்.

733. உலகிற்கு உறவாகியவர். (ஒ. 'இவ்வுலகிற்குத் தகப்பனும் தாயும் தாங்குபவனும் பாட்டனும் நானே.'— கீ. 19. 17. 'உறவேல் நமக்கிங்கு ஒழிக்க வொழியாது.'— திருப்பாவை.)

734. உலகங்களை ஆள்பவர்.

735. மதுகுலத்தில் அவதரித்தவர். (ஒ. நாமம் 72.)

736. பக்தர்களிடத்தில் அன்புமிக்கவர்.

737. பொன்னிறமானவர். ('மாற்று ஏறின தங்கம் போலக் குற்றமின்றி விளங்கும் திவ்ய ஸ்வரூபமுள்ளவர்.'— 'யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம் கர்த்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோனிம்'—மு. உப. 3. 1. 3.)

738. பொன்மயமான உடல் படைத்தவர். (ஒ. 'ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:' சா. உப. 1. 6. 6. பொன் சுத்த ஸத்துவத்தைக் குறிக்கும்.)

739. சிறந்த அவயவங்களை உடையவர். (மலர்ந்த கரு நெய்தல் மலரின் இதழ்போன்ற நிறமுள்ளவரும் நாலு கைகளுள்ளவரும் மார்பில் ஸ்ரீவத்ஸமென்னும் அடையாளமுள்ள வருமாக அவதரித்த அந்த ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பார்த்து வசுதேவர் துதித்தார்.'—விஷ்ணு புராணம்.)

731. தஸ்மை நம: । —ப. பா.

740. சந்தனுங்கதினே நம: 744. க்ருதாசிஷே நம:
741. வீரக்னே நம: 745. அசலாய நம:
742. விஷமாய நம: 746. சலாய நம:
743. சூன்யாய நம:

---

740. ஆனந்தத்தைக் கொடுக்கும் தோள்வளைகளை அணிந்தவர்.

741. சத்ரு வீரர்களையும் காமக்குரோதாதிகளையும் ஒழிப்பவர். (ஒ. 'ராமம் வந்தே மஹாவீரம் ராமம் ராஜீவ லோசனம்.')

742. தமக்கு ஒப்பில்லாதவர். (உமக்கொப்பானவர் ஒருவருமில்லை; மேற்பட்டவர் ஏது?'—கீ. 11. 43. 'ஸாதுக்களுக்கு க்ஷேமத்தையும் துஷ்டர்களுக்குப் பயத்தையுந் தருவதால் அவரவர் குணங்களைப் பற்றி வேற்றுமையுள்ளவர்.'—ப. பா.)

743. நிர்க்குணரூபமாதலால் இல்லாதுபோலிருப்பவர். (ஒ. 'இல்லையில்லை யென்னினென்று மில்லாதல்ல இயல்பாகி யென்றுமுள்ள வியற்கையாகிச் சொல்லரிய தன்மையதாயான்றனென்னத் தோன்றுதெல்லாம் விழுங்குஞ் சொரூபவாகி—தாயுமானவர். 'மனுஷ்யாவதாரததிலும் குற்றங்களெல்லாம் நீங்கினவர்.'—ப. பா.)

744. வேண்டுதல் இல்லாதவர். ('க்ருதா: விகலிதா ஆசிஷ: ப்ரார்த்தனு அஸ்யேதி க்ருதாசீ:'—சங். 'தமது திருக்கல்யாண குணங்களினல் உலகங்களைச் செழிப்பிப்பதில் ஆசையுள்ளவர்; இடைச்சேரியிலுள்ள நெய் வெண்ணெய் முதலியவற்றை விரும்பியவர்.'—ப. பா.)

745. அசைவற்றவர். (ஸ்வரூபமும் சக்தியும் குணங்களும் எப்போதும் மாருமலிருப்பவர். 'துரியோதனன் முதலிய துராத்மாக்களினுல் அசைக்க ஒண்ணுதவர்.'—ப. பா.)

746. (காற்று முதலிய உருவங்களில்) அசைபவர். (பக்தர்களின் சொல்லைக் காப்பாற்றத் தமது பிரதிஜ்ஞையையும் விட்டுக்கொடுப்பவர். ஒ 'ஸ்வநிகம-மபஹாய மத்ப்ரதிஜ்ஞாம் ருதமதிகர்த்து-மவப்லுதோரதஸ்த:1 த்ருத-ரதசரணோ ऽப்யகாச்சலத்குர்-ஹரிரிவ ஹந்து-மிபம் கதோத்தரீய' ||—பீஷ்மர்: பாக 1. 9. 37.)

747. அமானினே நம: 751. த்ரிலோகத்ருஷே நம:
748. மானதாய நம: 752. ஸுமேதஸே நம:
749. மான்யாய நம! 753. மேதஜாய நம:
750. லோகஸ்வாமினே நம: 754. தன்யாய நம:

747. அனுத்மவஸ்துக்களில் ஆத்மா என்ற அபிமானம் இல்லாதவர். (ஒ. 'ந வை மானஞ்ச ஸஹிதள வஸத: ஸதா | அயம் ஹி லோகோ மானஸ்ய அஸௌ மௌனஸ்ய தத்விது: ||' 'அன்னுங்களுதி போகேஷு பாவோ மான இதி ஸ்ம்ருத: | ப்ரஹ்மானந்த - ஸுகப்ராப்தி - ஹேதுர் - மௌன இதி ஸ்ம்ருத:' || ஸநத்ஸுஜாதீய பாஷ்யம். 2. 41. 'பக்தர்கள் விஷயத்தில் தம் உயர்வை நினையாதவர். அதனுலன்றே பாண்டவர்களின் தூதராகச் சென்றது.'—ப. பா.)

748. தம்முடைய மாயையால் எல்லாருக்கும் அனுத்ம வஸ்துக்களில் அபிமானத்தைக் கொடுப்பவர். (அல்லது பக்தர்களுக்குக் கௌரவ மளிப்பவர். பக்தியில்லாதவரின் கர்வத்தைக் கண்டிப்பவர். அல்லது பக்தர்களின் அனுத்மாபிமானத்தை நீக்குபவர்.)

749. எல்லோராலும் பூஜிக்கத்தக்கவர். (தர்மபுத்திரரது ராஜஸூய யாகத்தில் அக்ரபூஜை பெற்ற கிருஷ்ணன் யாகத்துக்கு வந்தவர்களுக்குக் கால்கழுவும் பணியைத் தாமே ஏற்றுக் கொண்டார். 'அமானி மானதோ மான்ய:')

750. உலகுக்கெல்லாம் அதிபதி. (இவ்வளவு பெருமையுள்ளவர் இத்தனை எளியரானுர் என்பது.'—ப. பா.)

751. மூவுலகையுந் தாங்குபவர். ('த்ரிலோக த்ருத்' என்பதும் பாடம்.)

752. மங்களகரமான ஞானமுடையவர்.

753. யாகத்தில் உண்டாகிறவர். ('தேவகியானவள் பூர்வஜன்மத்தில் புத்திரனைவேண்டி நோற்ற நோன்பென்னும் யாகத்தின் பலனுக அவதரித்தவர்.'—ப. பா.)

754. எல்லாப் பிரயோஜனங்களையும் பெற்றிருப்பவர். ('க்ருதார்த்தோ தன்ய:'—சங். 'பக்தப் பிரார்த்தனைக்காகத் தாம் அவதரிப்பதைத் தமக்குத் தனலாபமாக நினைப்பவர்.'—ப. பா.)

751. த்ரிலோகத்ருதே நம: | —ப. பா.

755. ஸத்யமேதஸே நம:
756. தராதராய நம:
757. தேஜோவ்ருஷாய நம:
758. த்யுதிதராய நம:
759. ஸர்வசஸ்த்ரப்ருதாம்-வராய நம:
760. ப்ரக்ரஹாய நம:
761. நிக்ரஹாய நம:
762. வ்யக்ராய நம:
763. நைகச்ருங்காய நம:
764. கதாக்ரஜாய நம:

755. பொய்யாத அறிவுள்ளவர்.

756. பூமியைத் தாங்குகிறவர். (கோவர்த்தன கிரியை எடுத்தவர்.)

757. ஒளியைப் பொழிபவர், (சூரிய ரூபியாக ஜலத்தை வர்ஷிப்பவர். அன்பரைக் காப்பாற்றுவதில் தமது சக்தியை வர்ஷிப்பவர்.'—ப. பா.)

758. ஒளி வீசும் அங்கங்களையுடையவர்.

759. ஆயுதம் தரித்தவர் எல்லாரிலும் சிறந்தவர்' (ஒ. 'ராம: சஸ்த்ரப்ருதாமஹம்'—கீ. 10. 31.)

760. (பக்தர் அர்ப்பணம் செய்யும் இலை, பூ முதலியவற்றை) அங்கீகரிப்பவர். (விஷயங்கள் என்னும் காடுகளில் ஓடும் இந்திரியங்களாகிய குதிரைகளைக் கடிவாளம் பிடித்து இழுப்பது போல இழுப்பவர்.)

761. (எல்லாவற்றையும் தம்வசமாக) அடக்கி வைத்திருப்பவர்.

762. முடிவில்லாதவர். (அ. 'அக்ரம்' முடிவு அல்லது அழிவு 'விகதம்' இல்லாததாயிற்று என்பதால் 'வ்யக்ர;' முனைந்திருப்பவர்.—சங்.)

763. அநேகம் கொம்புகளை உடையவர். (தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பவை கொம்புகள். அல்லது நான்கு வேதங்களைக் கொம்புகளாயுடையவர். ஒ. 'சத்வாரி ச்ருங்கா:'—வேத. ஆ. 1. 10. 17.)

764. மந்திரத்தினால் முன் தோன்றுகிறவர். (அல்லது கதன் என்பவனுக்கு முன் தோன்றியவர். 'நிகதேன மந்த்ரேண அக்ரே ஜாயதே இதி நிசப்த வோபம் க்ருத்வா கதாக்ரஜ:'—சங். கதன் என்பவன் வசுதேவருக்கு ஸுநாமை என்னும் மனைவியிடம் பிறந்தவன்.)

765. சதுர்மூர்த்தயே நம: 768. சதுர்க்கதயே நம:
766. சதுர்ப்பாஹவே நம: 769. சதுராத்மனே நம:
767. சதுர்வ்யூஹாய நம:

---

765. நான்கு வடிவுடையவர். ('விராட், ஸூத்ராத்மா, அவ்யாக்ருதம், துரீயம் என்பவை நான்கு வடிவங்கள். அல்லது வெண்மை, செம்மை, பசுமை, கருமை என நான்கு நிறமுள்ள மூர்த்திகள்—சங். 'கிருஷ்ணனாகிய விபவாவதாரத்திலும் அதற்குக் காரணமான வ்யூஹங்களை நினைவூட்டுவது போல பலபத்ரன், வாசுதேவன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்கிற நான்கு மூர்த்திகளை யுடையவர்.'—ப பா.)

766. நான்கு கைகளையுடையவர். (ஒ. 'தேனைவ ரூபேண சதுர்ப் புஜேன ஸஹஸ்ரபாஹோ பவ விச்வமூர்த்தே'—கீ. 11. 46.)

767. நான்கு வியூஹங்களையுடையவர். (ஒ. 'சரீரபுருஷச் சந்த:-புருஷோ வேதபுருஷோ மஹாபுருஷ:'—பஹ்வ்ருசோபநிஷத். 'வியூஹங்களிலிருப்பதுபோலவே விபவாவதாரத்தின் நான்கு பிரிவுகளிலும் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் ஆகிய இந்த ஆறு குணங்களும் வாசுதேவ ரூபத்தில் சமமாக நிரம்பியும் மற்ற மூன்றிலும் இரண்டிரண்டு தலையெடுத்தும் இருப்பவர்.'—ப. பா.)

768. நான்கு வர்ண தர்மங்களையும் ஆசிரம தர்மங்களையும் பின் பற்றி நடப்பவர்க்குப் புகலிடமாகியவர்.

769. (மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற) நான்கு உருவங்களாயிருப்பவர். (அல்லது விருப்பு வெறுப்பற்று அழகிய மனமுடையவர். 'ராகத்வேஷாதி-ரஹிதத்வாச் சதுரம் மன ஆத்மாஸ்யேதி மனோபுத்தி-ரஹங்கார-சித்தாக்ய-புருஷார்த்த-சதுஷ்டயாத்மகத்வாத் வா சதுராத்மா ||'—சங். 'அவ்வவ்வதிகாரிகளின் தாரதம்மியத்துக்கேற்றபடி ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி, துரீயம் எனும் நான்கு நிலைகளிலும் நான்கு உருவங்களுடன் ஸ்துலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் விளங்குபவர்—ப. பா.)

770. சதுர்ப்பாவாய நம: 773. ஸமாவர்த்தாய நம:
771. சதுர்வேதவிதே நம: 774. அநிவ்ருத்தாத்மனே நம:
772. ஏகபதே நம: 775. துர்ஜயாய நம:

---

770. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களுக்கும் காரணமாயிருப்பவர்.

771 நான்கு வேதங்களின் பொருளேயும் உள்ளபடி அறிபவர். (ஒ. 'வேதாந்தக்ருத்—வேதவிதேவ சாஹம்'—கீ. 15. 15. 'நான்கு வேதங்களேயும் அறிந்தவர்களுக்கும் தம்முடைய மகிமையென்னும் பெருங்கடல் ஒரு துளி அளவே தெரியும்படி இருப்பவர்.'—ப. பா.)

772. உலகனைத்தும் தமது ஒரு பாதத்தில் அல்லது பகுதியில் அடங்கியவர். (ஒ. 'பாதோஸ்ய விச்வா பூதானி'—புருஷஸூ. 3. 'விஷ்டப்யாஹ-மிதம் க்ருத்ஸ்ன-மேகாம்சேன ஸ்திதோ ஜகத் |'—கீ. 10. 42. 'சதுர்வேத-விதேகபாத்' என்று ஒரு நாமமாகவும் வரும்.)

773. ஸம்ஸார சக்ரத்தைச் சுழற்றுகிறவர். (ஈச்வர: ஸர்வபூதானும் ஹ்ருத்தேசேऽர்ஜுன திஷ்டதி | ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ரா ரூடானி மாயயா ||'—கீ. 18. 61. 'வ்யூஹாவதாரமாகவும் விபவாவதாரமாகவும் இவ்வுலகில் பலமுறை திரும்பி வந்துகொண்டிருப்பவர்.'—ப. பா.)

774. (எங்கும் இருப்பதால்) ஓரிடத்திலும் இல்லாமற் போகாதவர். (ஒ. அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாயானந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது'—தாயுமானவர். 'ஸர்வத்ர வர்த்தமானத்வாந் ந நிவ்ருத்த ஆத்மா குதோऽபீத்யநிவ்ருத்தாத்மா, நிவ்ருத்த ஆத்மா மனோ விஷயேப்யோஸ்யேதி வா நிவ்ருத்தாத்மா.'—சங். 'தயையினுல் உலகத்தோடு சேர்ந்தாலும் இயற்கையில் ஒன்றிலும் சேராத தனித்த மனமுள்ளவர்.'—ப. பா. ஒ. 'பூதப்ருந்-ந ச பூதஸ்தோ மமாத்மா பூதபாவன:')

775. வெல்ல முடியாதவர்.

---

774. நிவ்ருத்தாத்மனே நம: | —ப. பா.

776. துரதிக்ரமாய நம:
777. துர்லபாய நம:
778. துர்க்கமாய நம:
779. துர்க்காய நம:
780. துராவாஸாய நம:
781. துராரிக்னே நம:
782. சுபாங்காய நம:
783. லோகஸாரங்காய நம:

---

776. எவரும் தம் கட்டளையைத் தாண்டமுடியாதபடி இருப்பவர். (ஒ. பயாதஸ்யாக்னிஸ்-தபதி பயாத் தபதி-ஸூர்ய:'—கட. உப. 6. 3.)

777. (பக்தியாலன்றி) அடைதற்கரியவர். (ஒ. 'ஜன்மாந்தர-ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞான-ஸமாபிதி: | நராணும் க்ஷீணபாபாணும் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே'|| —வியாஸர். 'பக்த்யா லப்யஸ்-த்வனன்யயா'—கீ. 8. 22. புத்திக்ராஹ்ய-மதீந்த்ரியம்' கீ. 6. 21)

778. எளிதில் அறியக் கூடாதவர்.

779. இடையூறுகளினுல் அடைவதற்குக் கடினமாயிருப்பவர். (ஒ. 'மனிதர்களால் ஆயிரவர்க்குள் ஒருவன் சித்தி பெற முயற்சி செய்கிறுன். முயற்சி செய்யும் சித்தர்களுள் யாரோ ஒருவன் என்னை உண்மையில் உணர்கிறுன்.'—கீ 7. 3. 'ஆச்சர்யோ வக்தா குசலோ஽ஸ்ய லப்தா'—கட. உப. 2. 7. 'அவித்தை முதலான மறைவுகள் கோட்டைபோல மூடிக்கொண்டிருப்பதால் பிரவேசிக்கக் கூடாமலிருப்பவர்.'—ப. பா.)

780. (யோகிகளால் யோகத்தில்) மிகுந்த சிரமத்தோடு மனதில் தரிக்கப்படுகிறவர். (து:க்கேனுவாஸ்யதே சித்தே யோகிபி: ஸமாதௌ-இதி துராவாஸ:'—சங். 'த்யானுவஸ்தித-தத்கதேன மனஸா பச்யந்தி யம் யோகின:')

781. துன்மார்க்கத்தில் செல்லுகிற அசுரர் முதலியவர்களை அழிப்பவர்.

782. அழகான அங்கங்களையுடையவராகத் தியானித்தற்குரியவர். ('மாயையினுல் அசுரர்கள் மயங்கும்படி அழகிய உருவெடுத்தவர்.'—ப. பா.)

783. உலகிலுள்ள ஸாராம்சங்களைக் கிரகிப்பவர். (அல்லது உலகில் ஸாரமான பிரணவோபாஸனையால் அடையத் தக்கவர்')

784. ஸுதந்தவே நம:
785. தந்துவர்த்தனாய நம:
786. இந்த்ரகர்மணே நம:
787. மஹாகர்மணே நம
788. க்ருதகர்மணே நம:
789. க்ருதாகமாய நம:
790. உத்பவாய நம:
791. ஸுந்தராய நம:
792. ஸுந்தாய நம:
793. ரத்னநாபாய நம:

---

784. விஸ்தாரமான பிரபஞ்சத்தை வைத்திருப்பவர். (ஒ. 'எங்ஙனம் சிலந்திப்பூச்சி தன்னிடமிருந்து நூலை உண்டாக்கித் தனக்குள்ளேயே இழுத்துக் கொள்ளுகிறதோ, அங்ஙனம் பரம்பொருளினிடமிருந்து இவ்வுலக முண்டாகிறது." மு. உப. 1. 1. 7.)

785. பிரபஞ்சத்தை விருத்தி செய்பவர். (அல்லது அழிப்பவர். தமேவ தந்தும் வர்த்தயதி சேதயதீதி வா தந்து வர்த்தன: —சங்.)

786. இந்திரனைப் போன்ற செய்கையுள்ளவர். (தேவர்களை ஆள்பவர்.)

787. மஹா பூதங்களைப் படைத்தவர். (தஸ்மாத்வா-ஏதஸ்மா-தாத்மன ஆகாச: ஸம்பூத:'—தை. உப. 2. 1.)

788. காரியஞ்செய்து ஆகவேண்டியதொன்று மில்லாதவர். (ஒ. 'ந மே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன—கீ. 3. 22. வேண்டுதல் வேண்டாமை யிலான்'—குறள். அல்லது தர்மமாகிய செயலைச் செய்தவர்.)

789. வேதத்தை உண்டுபண்ணினவர்.

790. உயர்ந்த பிறவி எய்துபவர். (அல்லது பிறப்பில்லாதவர். 'உத்க்ருஷ்டம் பவம் ஜன்ம ஸ்வேச்சயா பஜத இதி உத்பவ: | உத்கத-மபகதம் ஜன்மாஸ்ய ஸர்வகாரணத்வா-திதிவா உத்பவ: ||'—சங்.)

791. பேரழகுள்ளவர்.

792. ஈரமுள்ளவர். (தண்மையுள்ளவர். 'ஸுஷ்டு உதந்தீதி ஸுந்த: | உந்தீ க்லேதனே இதி தாதோ: | ஆர்த்ரீ-பாவஸ்ய வாசக: கருணாகர இத்யர்த்த: ||'—சங்.)

793. அழகிய நாபியுள்ளவர்.

794. ஸுலோசனுய நம:	800. ஸுவர்ணபிந்தவே நம:
795. அர்க்காய நம:	801. அக்ஷோப்யாய நம:
796. வாஜஸனுய நம:	802. ஸர்வவாகீச்வரேச் வராய நம:
797. ச்ருங்கிணே நம:	803. மஹாஹ்ரதாய நம:
798. ஜயந்தாய நம:	804. மஹாகர்த்தாய நம:
799. ஸர்வவிஜ்ஜயினே நம:	

794. அழகிய கண்களை உடையவர். (அல்லது சிறந்த ஞானமுடையவர்.)

795. பிரம்மாதி தேவர்களாலும் அர்ச்சிக்கத் தக்கவர்.

796. அன்னத்தைக் கொடுப்பவர். (அ. 'வாஜம் அன்னம் அர்த்திரும் ஸநோதி ததாதீதி வாஜஸந: — சங்.)

797. கொம்புள்ள மீனுக அவதரித்தவர்.

798. ஜயிப்பவர். (அல்லது ஜயத்துக்குக் காரணமாயிருப்பவர்.)

799. எல்லாந் தெரிந்தவரும் எல்லாப் பகையையும் வென்றவரும் ஆகியவர். ('எல்லாந் தெரிந்தவர்களையும் ஜயிக்கும் திறமையுள்ளவர்.' — ப. ப)

800. பொன்போன்றழகிய அவயவங்களை உடையவர். (அல்லது சிறந்த அக்ஷரமும் அனுஸ்வாரமும் கூடிய மந்திரமாகிய பிரணவமாயிருப்பவர். அ. 'பிந்தவோ஽வயவா: ஸுவர்ண ஸத்ருசா அஸ்யேதி ஸுவர்ண பிந்து: ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: இதி ச்ருதே: | சோபனே வர்ணே஽க்ஷரம் பிந்துச்ச யஸ்மின் மந்த்ராத்மா வா ஸுவர்ணபிந்து:' — சங்.)

801. கலக்கக்கூடாதவர்.

802. பிரம்மா முதலாகப் பேசும் திறமை மிக்கவர்க்கெல்லாம் மேலான ஈசுவரர்.

803. ஆனந்த வெள்ளம் நிரம்பிய பெரிய மடுவாயிருப்பவர். ('அவகாஹ்ய ஸதானந்தம் விச்ரம்ய ஸுகமாஸதே யோகின இதி மஹாஹ்ரத இவ மஹாஹ்ரத:' — சங்.)

804. படுகுழிபோன்ற மாயைக்கதிபர். (ஒ. 'தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா | ' — கீ. 7. 14, அல்லது சிறந்த தேராளி. 'பாபஞ் செய்தவர்கள் தலை-

---

796. வாஜஸனயே நம: | —ப. பா.

805. மஹாபூதாய நம:
806. மஹாநிதயே நம:
807. குமுதாய நம:
808. குந்தராய நம:
809. குந்தாய நம:
810. பர்ஜன்யாய நம:
811. பாவனாய நம:

கிளம்பாமல் அமிழ்ந்து போகும்படியும் புண்ணியஞ் செய்தவர்கள் அடிக்கடி ஆழ்ந்து ஆனந்திக்கும்படியுமிருக்கும் பெருமடுவாயிருப்பவர்'—ப. பா.)

805. காலவரையின்றி எக்காலமும் வியாபித்திருப்பவர். (ஒ. 'அர்ஜுனா! சென்றுவிட்டனவும் நிகழ்வனவும் இனிவருவனவும் ஆகிய பொருள்களை நான் அறிவேன். ஆனால் என்னை எவனும் அறியான்'—கீ. 7. 26. 'மஹான்களைத் தமராகக் கொண்டவர்.'—ப. பா.)

806. எல்லாப் பொருள்களும் சேமித்துவைக்கப்படுமிடம்.

807. பூமியை மகிழ்விப்பவர். ('முக்திபூமியை அளிப்பவர்.'—ப. பா.)

808. குந்தமலர் போன்ற தூய தர்ம பலன்களை யளிப்பவர். (அல்லது தர்ம பலன்களை அங்கீகரிப்பவர். அல்லது வராஹாவதாரத்தில் பூமியைப் பெயர்த்தவர். 'குந்தம் எனப்படும் பரதத்வஞானத்தைக் கொடுப்பவர். கும் எனப்படும் பாவத்தைப் போக்குபவர்.'—ப. பா.)

809. குந்தமலர்போன்றழகிய அங்கமுடையவர். (அல்லது பரசுராமாவதாரத்தில் கசியபருக்குப் பூமியை யாக தக்ஷிணையாகக் கொடுத்தவர். அல்லது பூமியை க்ஷத்திரியர்களில்லாமல் கண்டித்தவர். ஞானம், வைராக்கியம் முதலிய மூற்படிகள் ஏறினவர்களுக்குப் பரபக்தி, பரஞானம், பரமபக்திகளாகிய மேற்படிகளைக் கொடுப்பவர். அழிக்கப்பட்ட பாவம் மீண்டும் அணுகாமலிருக்கச் செய்பவர்.'—ப. பா.)

810. (பிறவித் துன்பத்தின் வெப்பத்தைப் போக்கி இன்பத்தைப் பொழியும்) மேகமா யிருப்பவர்.

811. தம்மை நினைத்த மாத்திரத்தில் பரிசுத்தமாக்குகிறவர். ('பவன:'—தாமே பக்தர்களிடம் செல்லுகிறவர் என்பது பட்டர் பாடம்.)

---

811. பவனாய நம: । —ப. பா.

812. அநிலாய நம:	815. ஸர்வஜ்ஞாய நம:
813. அம்ருதாசாய நம:	816. ஸர்வதோமுகாய நம:
814. அம்ருதவபுஷே நம:	817. ஸுலபாய நம:

812. தம்மை ஏவுதற்கு எவருமில்லாதவர். (அல்லது எப்பொழுதும் தூங்காமல் விழித்திருக்கும் ஞானஸ்வரூபி; அல்லது பக்தர்களுக்கு எளியவர். 'இலதி ப்ரேரணம் கரோதீதி இல: தத்-ரஹிதத்வா-தநில: | இலதி ஸ்வபிதி இத்யஜ்ஞ இலஸ்-தத்விபரீத: நித்யப்ரபுத்த-ஸ்வரூபத்வா-திதி வாऽநில: | அதவா நிலேர்-கஹநார்த்தாத் கப்ரத்யயாந்த-ரூபம் கஹநோऽநில இதி வா'—சங். 'பக்தர்களை அனுக்கிரகிப்பதில் தம்மைத் தூண்டுகிறவர் வேண்டாதவர்.'—ப. பா.)

813. ஆத்மானந்தமெனும் அமுதை உண்பவர். (தேவர்களுக்கு அமுதம் கொடுத்த பிறகு தாமும் அதை உண்டவர். அல்லது வீண் போகாத விருப்பமுள்ளவர். 'அம்ருதா அநச்வரா: அவிநச்வர-பலத்வா-தாசா வாஞ்சாऽஸ்யேதி வா அம்ருதாச:'—சங். 'பக்தர்களுக்குத் தமது குணங்களென்னும் அமுதை ஊட்டுகிறவர்.'—ப. பா.)

814. அழியாத தேகமுள்ளவர். ('தமது திவ்யமங்கள விக்ரஹமும், அமுதம் போலப் போக்யமாயிருப்பவர்.'—ப. பா.)

815. எல்லாந் தெரிந்தவர். (ஒ. 'ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்' மு. உப. 1. 1. 9. 'அர்ஜுந! சென்றுவிட்டனவும், நிகழ்வனவும், இனி வருவனவும் ஆகிய பொருள்களை நான் அறிவேன்; ஆனல் என்னை எவனும் அறியான்.'—கீ. 7. 26.)

816. எங்கும் முகங்களையுடையவர். (ஒ. 'ஸர்வதோऽக்ஷி-சிரோ முகம்'—கீ. 13. 14. 'எங்கும் வழியுள்ளவர். பக்தர்களுக்கு இன்ன வழியிலேதான் அடையலாம் வேறு வழியால் கூடாதென்று இல்லாமல் எந்த வழியாகிலும் எளிதில் அடையக் கூடியவர். எதிர்ப்பக்கம் சேர்ந்த விபீஷணர் முதலானவர்களையும் சரணமென்று சொன்னமாத்திரத்தில் அங்கிகரித்துக் காப்பாற்றியது இதற்கு உதாரணம்.'—ப. பா.)

817. (பச்சிலையோ, பூவோ, பழமோ பக்தியுடன் ஸமர்ப்பித்து) எளிதில் அடையக்கூடியவர். (ஒ 'பத்ரேஷு புஷ்பேஷு பலேஷு தோயேஷ்-வக்ரீவ-லப்யேஷு ஸதைவ ஸத்ஸு | பக்த்யேக-லப்யே புருஷே புராணே முக்த்யை கதம் ந க்ரியதே ப்ரயத்ன:||'—ப. பா.)

818. ஸுவ்ரதாய நம:
819. ஸித்தாய நம:
820. சத்ருஜிதே நம:
821. சத்ருதாபனாய நம:
822. ந்யக்ரோதாய நம:
823. உதும்பராய நம:

818. சிறந்த விரதமுடையவர். (போஜன நியமமுள்ளவர் அல்லது உணவைத் தவிர்த்தவர். "ஒரே தரம் வந்தவனாயினும் 'உன்னுடையவன் நான்' என்று சரண்புகுந்தவனுக்கு எல்லாப் பிராணிகளிடமிருந்தும் அபயமளிப்பேன், இது என் விரதம்." —ராமாயணம்.)

819. வேறு காரணமின்றித் தான் தானேயாகி எப்போது மிருப்பவர். ('தமது உண்மையை அறிந்தவர்களுக்கு முயன்று ஸம்பாதிக்க வேண்டாமல் சித்தமாயிருக்கும் ரக்ஷகர். அவர் ரக்ஷகராயிருப்பது இயற்கையாக அமைந்ததேயன்றிக் காரணம் பற்றியதன்று.'—ப. பா.)

820. சத்துருக்களை ஜயிப்பவர். (தேவர்களுடைய சத்துருக்களே இவருடைய சத்துருக்கள்.)

821. சத்துருக்களைத் தவிக்கச் செய்பவர். ('சத்ருஜிச் சத்ருதாபன:' என்று ஒரே நாமமாக பட்டர் கொள்ளுகிறார். 'தமது திவ்ய சக்தியினால் பூரிக்கப்பட்டுச் சத்துருக்களை ஜயித்தவர்களாகிய ககுத்ஸர் முதலியவர்களைக்கொண்டு பகைவரை வருத்துகிறவர்.'—ப. பா.)

822. கீழேயுள்ள பிரபஞ்சத்திற்கெல்லாம் மேலாயிருப்பவர். (அல்லது தமது மாயையினால் எல்லாப் பிராணிகளையும் கீழே வைத்து மறைப்பவர். அ. 'ந்யக் அவாக் ரோஹதி ஸர்வேஷாமுபரி வர்த்தத இதி ந்யக்ரோத: । ஸர்வாணி பூதானி ந்யக்க்ருத்ய நிஜமாயாம் வ்ருணோதி நிருணத்தீதி வா ந்யக்ரோத: ।'—சங்.)

823. ஆகாயத்திற்கு மேற்பட்டவர். (அன்னம் முதலியவற்றால் அனைத்துலகையும் போஷிப்பவர். அ. "அம்பராதுத்கத: । காரணத்வேனேத்யுதும்பர: । யத்வோதும்பரமன்னாத்யம் தேன ததாத்மனா விச்வம் போஷயன்னுதும்பர: । 'ஊர்வா அன்னாத்ய-முதும்பரம்' இதி ச்ருதே: ।"—சங்.

820-21. சத்ருஜிச்சத்ருதாபனாய நம: । —ப. பா.
822-23. ந்யக்ரோதோதும்பராய நம: । —ப. பா.

824. அச்வத்தாய நம:
825. சாணூராந்த்ர-நிஷூதனாய நம:
826. ஸஹஸ்ரார்ச்சிஷே நம:
827. ஸப்தஜிஹ்வாய நம:
828. ஸப்தைதஸே நம:

'உத்-அம்பர: உதும்பர: என்று ஆனது ஸந்தி ஆர்ஷம். 'ந்யக்ரோதோதும்பர:' என்று பட்டர் பாடத்தில் ஒரே நாமம். 'கீழே நின்று வணங்கிக் கைகூப்புகிறவர்கள் தங்களை நோக்கி அனுக்கிரகிக்கும்படி தடுத்து நிறுத்தப்படுகிறவராகவும் எல்லாக் குணங்களினாலும் உயர்ந்த விபூதிகளை அடைந்தவராகவும் இருப்பவர். மிக உயர்ந்தவர்கள் சேவைசெய்யும்படி இருந்தும் மிகக் கீழ்ப்பட்டவர்களும் அணுகக் கூடியவர்.'—ப. பா.)

824. அரசமரம் போலிருப்பவர். (ஒ. 'எல்லா மரங்களுள்ளும் நான் அரசமரமாயிருக்கிறேன்.'—கீ. 10. 26. நாளைக்கு இருக்கும் என்று சொல்லவியலாத உலகாயிருப்பவர். 'ச்வோऽபி ந ஸ்தாதேத்-யச்வத்த:' ஒ. 'ஊர்த்வ-மூல-மத: சாகமச்வத்தம் ப்ராஹு-ரவ்யயம்.'—கீ. 15. 1.)

825. சாணூரன் என்னும் அந்த்ரதேசத்து மல்லனைக் கொன்றவர்.

826. ஆயிரம் கிரணங்களையுடையவர். (ஒ. 'வானத்தில் ஆயிரம் சூரியர்களின் பிரகாசம் ஒருங்குகூடி உதிக்குமேயானால் அது அந்த மகாபுருஷனுடைய பிரகாசத்திற்கு ஒப்பாக இருக்கும்.'—கீ. 11. 12.)

827. ஏழுநாவுடைமை அக்கினி வடிவாயிருப்பவர். (ஒ. 'காலீ கராலீ ச மனோஜவா ச ஸுலோஹிதா யா ச ஸுதூம்ரவர்ணா । ஸ்புலிங்கினீ விச்வருசீ ச தேவீ லேலாயமானா இதி ஸப்தஜிஹ்வா: ॥'—மு. உப. 1. 2. 4.)

828. ஏழு ஜ்வாலைகளையுடையவராயிருப்பவர். (ஒ. 'ஸப்த தே அக்னே ஸமித: ஸப்த ஜிஹ்வா:'—தை. ஸம். 1. 5. 2. அரசு, அத்தி, பலாசு, வன்னி, விகங்கதம், அசனிஹதம், புஷ்கரபர்ணம் என்னும் ஏழு விதமான ஸமித்துக்களால் செய்யப்படும் யாகங்களை அடைகிறவர்.)

829. ஸப்தவாஹனாய நம: 832. அசிந்த்யாய நம:
830. அமூர்த்தயே நம: 833. பயக்ருதே நம:
831. அநகாய நம: 834. பயநாசனாய நம:

---

829. ஏழு குதிரைகளையுடைய சூரியனாயிருப்பவர் (அல்லது 'ஸப்த' என்னும் தேர்க்குதிரையுடைய சூரியனாயிருப்பவர். ஒ. 'ஏகோ அச்வோ வஹதி ஸப்த-நாமா'—தை. ஆ. 3. 11. 'காயத்ரீ, உஷ்ணிக், அனுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தீ, த்ருஷ்டுப், ஜகதீ என்னும் ஏழு சந்தஸ்களோடுகூடிய வேத மந்திரங்களுக்கு அதிஷ்டான தேவதைகளாகிய சூரியனுடைய தேர்க்குதிரைகள் ஏழையும் தமக்கு வாகனங்களாக உடையவர்.'—ப,பா,)

830. வடிவொன்றில்லாதவர். (ஒ. 'ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய நாம மஹத்யச:' தை. ஆ. 1. 'த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்சைவாமூர்த்தஞ்ச மர்த்யஞ்சாம்ருதஞ்ச ஸ்திதஞ்ச யச்ச ஸச்ச த்யச்ச ।'—ப்ரு. உப. 2. 3. 1. 'பஞ்சபூதமயமான ரூபத்தைக் காட்டிலும் வேறான அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹமுடையவர்'—ப. பா.)

831. பாவத்தால் பற்றப்படாதவர். (ஒ. 'எவ்வாறு எங்கும் நிறைந்த ஆகாயம் ஸூக்ஷ்மத் தன்மையால் களங்கமடைவதில்லையோ அவ்வாறே ஆத்மாவானது உடலில் எங்கும் நிறைந் துறையினும் களங்கமடைவதில்லை.'—கீ. 13. 32.)

832 நினைக்க ஒண்ணாதவர். (ஒ. 'அறியப்படாதது பிரம்மம் என்பது எவன் மதமோ அவனால் அறியப்பட்டதாம். அறியப்பட்டது என்பது எவன் மதமோ அவன் அறியவில்லை. அறிவாளிகளுக்கு அது அறியப்படாதது; அறிவீனர்களால் அறியப்பட்டதாய்க் கருதப்படுவது.'—கேன. உப. 2. 3.)

833. துஷ்டர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணுகிறவர். (ஒ. 'உன்னுடைய அத்புதமான உக்கிர வடிவைக்கண்டு மூவுலகும் பயத்தால் நடுங்குகிறது.'—கீ. 11. 20.)

834. நல்லவர்களுக்குப் பயத்தைப் போக்குபவர். (ஒ. 'எதினின்று எட்டிப் பிடிக்கமுடியாமல் வாய்ச்சொற்கள் திரும்பி விடுகின்றனவோ, மனத்துடன்கூட, அந்தப் பிரம்மானந்தத்தை யறிந்தவன் எக்காரணத்தாலும் பயமடைவ

835. அணவே நம: 840. நிர்க்குணய நம:
836. ப்ருஹதே நம: 841. மஹதே நம:
837. க்ருசாய நம: 842. அத்ருதாய நம:
838. ஸ்தூலாய நம: 843. ஸ்வத்ருதாய நம:
839. குணப்ருதே நம:

தில்லை.'—தை. உப. 2. 9. 'பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம் நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை.'—நம்மாழ்வார்.)

835. மிக்க ஸூக்ஷ்மமாயிருப்பவர். (ஒ. 'ஏஷோऽணுராத்மா சேதஸா வேதிதவ்ய:'—மு. உப. 3. 1. 9. மிகச் சிறியதான இருதயா—காசத்தில் அடங்கியவர்.)

836. மிகவும் பெரிதாயிருப்பவர். (ஒ. 'அணோரணீயான்—மஹதோ மஹீயான்'—கட. உப. 2. 20. 'வானுக்கும் மண்ணுக்கும் இடையிலுள்ள இந்தப் பெருவெளி ஒருவனகிய உன்னாலேயே நிறைந்துள்ளது.'—கீ. 11. 20.)

837. (காற்றுப்போல்) மெல்லியவர்.

838. (எல்லாமாகத் தாமிருப்பதால்) ஸ்தூலமானவரென்று உபசரித்துக் கூறப்படுகிறவர்.

839. (சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களுக்குக் காரணங்களாகிய) முக்குணங்களை மேற்கொள்பவர்.

840. குணங்களில்லாதவர். (ஒ. 'கேவலோ நிர்க்குணச்ச'—ச்வே. உப. 6. 11. ஒ. 'நிர்க்குணம் குணபோக்த்ரு ச.'—கீ. 13. 14.)

841. எல்லாவற்றிலும் மிகச்சிறந்தவர். (சப்தம் முதலிய குணங்கள் இல்லாமையாலும், மிக்க ஸூக்ஷ்மமாயிருப்பதாலும், எப்பொழுதும் தூய்மையாயும் எங்கும் வியாபித்தும் இருக்குந் தன்மைக்கு இடையூறு இன்மையாலும் மகான். ஒ. 'அனங்கோऽசப்தோऽசரீரோऽஸ்பர்சச்ச மஹான் சுசி:'—ஆபஸ்தம்பர் தர்மஸூ. 1. 22. 7.)

842. பிறிதொன்றாலும் தாங்கப்படாதவர்.

843. தம்மைத்தாமே தாங்குபவர். (ஒ. 'ஸ பகவ: கஸ்மின் ப்ரதிஷ்டித இதி ஸ்வே மஹிம்னி' —சா. உப. 7. 24. 1.)

844. ஸ்வாஸ்யாய நம:
845. ப்ராக்வம்சாய நம:
846. வம்சவர்த்தனாய நம:
847. பாரப்ருதே நம:
848. கதிதாய நம:
849. யோகினே நம:

844. அழகிய முகமுள்ளவர் (மங்களகரமானதாய்த் தாமரையின் மத்திய பாகத்திலுள்ள இதழைப்போலச் சிவந்ததாய் எல்லாவற்றினும் மிகுந்த அழகுவாய்ந்ததாய் இருப்பதால் 'ஸ்வாஸ்ய:.' 'பத்மோதர-தல-தாம்ர-மபிருபதமமஸ்யாஸ்ய மிதி ஸ்வாஸ்ய:' அல்லது வேதம் இவருடைய முகத்திலிருந்து வெளிவந்ததால் 'ஸ்வாஸ்ய:'—சங். சிறந்த இருப்பை உடையவர். பரமாத்மாவின் ஐசுவரியமாகிய நிலைமை எக்காலமும் பரிசுத்தமாகச் சிறந்திருப்பது.—ப. பா.)

845. முதன்மையான வம்சமுடையவர். (தமது வம்சமாகிய பிரபஞ்சம் அனைத்திற்கும் முன்னாலுண்டாகியது. ஒ. 'நான் அனைத்திற்கும் பிறப்பிடம், என்னிடமிருந்தே அனைத்தும் பிரவிருத்தித்து இயங்குகின்றது'—கீ. 10. 8.)

846. பிரபஞ்சமாகிய வம்சத்தைப் பெருகச் செய்பவர். (அல்லது ஸம்ஹரிப்பவர்.)

847. உலகின் பாரத்தைத் தாங்குகிறவர்.

848. பரம்பொருள் என மறைகளால் போற்றப்பட்டவர். (ஒ. 'வாஸுதேவ-பரா வேதா வாஸுதேவ-பரா மகா: । வாஸுதேவ-பரா யோகா வாஸுதேவ-பரா:க்ரியா:|| வாஸுதேவ-பரம் ஜ்ஞானம் வாஸுதேவ-பரம் தப: । வாஸுதேவ பரோ தர்மோ வாஸுதேவ-பராகதி: || பாக. 1. 2. 28-29. ஒ. 'வேதேஷு தர்ம-வசனேஷு ததாகமேஷு ராமாயணேபி ச புராண-கதம்பகே வா । ஸர்வத்ர ஸர்வ-விதினு கதிதஸ்-த்வமேவ தஸ்மாத் த்வமேவசரணம் மம சங்கபாணே ||'—சங். 'புருஷாந்ந பரம்-கிஞ்சித் ஸா காஷ்டா ஸா பராகதி:'—கட. உப. 3. 11. 'ஸர்வே வேதா யத்பத-மாமனந்தி'—கட. உப., 2. 15.)

849. (ஞானமாகிய) யோகத்தால் அடையப்படுபவர். (அல்லது 'தமது ஆத்மஸ்வரூபத்தை எப்போதும் பார்த்துக் கொண்டிருப்பவர்'—சங். 'கூடாதனவற்றையும் கூட்டுவதாகிய சிறந்த பிரபாவம் எப்போதும் பொருந்தியிருப்பவர்'.—ப. பா.)

850. யோகீசாய நம:
851. ஸர்வகாமதாய நம:
852. ஆச்ரமாய நம:
853. ச்ரமணாய நம:
854. க்ஷாமாய நம:
855. ஸுபர்ணாய நம:
856. வாயுவாஹனாய நம:
857. தனுர்த்தராய நம:
858. தனுர்வேதாய நம:

---

850. யோகிகளுக்கெல்லாம் சிறந்தவர். (மற்ற யோகிகள் போல இடையூறுகளினால் தடைப்படாமையால் யோகிகளுக்கெல்லாம் சிறந்தவர்.)

851. எல்லா விருப்பங்களையும் அளிப்பவர். (ஒ 'பலமத உபபத்தே:' கருமங்களின் பலன் அவரிடமிருந்தே என்பது யுக்திக்குப் பொருத்தமாதலால்.—பி. சூ. 3. 2. 38. ஒ 'கர்மண்யேவாதிகாரஸ்தே'—கீ 2. 47. காமத்திற்குத் தான் ஜீவன் அதிகாரி. பலனுக்கு அதிகாரி பகவான்.)

852 இளைப்பாறுமிடமாகியவர். ('ஆச்ரமவதாம் ஸர்வேஷாம் ஸம்ஸாராரண்யே ப்ரமதாம் விச்ராம·ஸ்தானத்வா-தாச்ரம:'—சங்.)

853. அவிவேகிகளை வருத்துகிறவர். ('அவிவேகின: ஸர்வான் ஸந்தாபயதீதி ச்ரமண:'—சங்.)

854. பிரஜைகளை ஸம்ஹாரகாலத்தில் அழிப்பவர். ('க்ஷாமா: க்ஷீணா: ஸர்வா: ப்ரஜா: கரோதீதி க்ஷாம:'—சங். 'யோகப்பிரஷ்டர்களும் தம்மை தியானம் செய்யத் தொடங்கியவுடன் அவர்கள் ஸம்ஸாரமென்னும் அகழைத் தாண்டத் திறமையுள்ளவராகும்படி செய்பவர்.'—ப. பா.)

855. வேதங்களென்னும் இலைகளோடு கூடிய ஸம்ஸார விருக்ஷ வடிவினர். (ஒ. 'ச்சந்தாம்ஸி யஸ்ய பர்ணானி'—கீ. 15. 1.)

856 வாயுவை இயக்குவிப்பவர். ('வாயுர்-வஹதி யத்பீத்யா பூதானீதி ஸ வாயு·வாஹன:'—சங். ஒ. 'பீஷாஸ்மாத்-வாத: பவதே'—தை. உப. 2. 8.)

857. வில்லாளியாய் விளங்குபவர். ('ஶ்ரீராமரூபேண தனுர்·தாரயாமாஸேதி தனுர்த்தர:'—சங்.)

858. வில்வித்தையை அறிந்தவர். ('தனுர்வேதம் வேத்தீதி தனுர்வேத:'—சங்.)

859. தண்டாய நம:
860. தமயித்ரே நம:
861. தமாய நம:
862. அபராஜிதாய நம:
863. ஸர்வஸஹாய நம:
864. நியந்த்ரே நம:
865. அநியமாய நம:
866. அயமாய நம:
867. ஸத்வவதே நம:
868. ஸாத்விகாய நம:

859. தண்டிப்போரின் ஆயுதமாகவும் தண்டனையாகவும் இருப்பவர். (ஒ. 'தண்டோ தமயதா-மஸ்மி.'—கீ. 10. 38.)

860. பிரஜைகளை அடக்கியாள்பவர். (துஷ்டர்களைத் தண்டிப்பவர்.)

861. ஆட்சியாலேற்படும் அடக்கமாகவும் இருப்பவர். ('அதம:' தாம் யாராலும் அடக்கப்படாதவர் என்பது பட்டர் பாடம்.)

862. பகைவர்களால் வெல்லப்படாதவர்.

863. அனைத்திலும் வல்லவர். (எல்லாவற்றையுந் தாங்குகிறவர். எல்லாப் பகையையும் ஒடுக்குபவர்.)

864 அனைவரையும் அவரவர் கடமைகளில் நிற்கும்படி செய்பவர் ('பல தேவதைகளிடம் பக்தி வைத்திருக்கும் பலரை அவரவர் விருப்பப்படி தாமே நடத்துகிறவர்.'—ப. பா.)

865. தம்மை அடக்குகிறவர் யாருமில்லாதவர். (அல்லது 'நியம:, யோகத்தின் அங்கமாகிய நியம வடிவினர்'.—சங். 'நியம:' என்பது பட்டர் பாடம். 'உயர்குலம் ஆயுள் போகங்கள் முதலியவற்றை அந்தந்த தேவதா ரூபியாகிக் கொடுப்பவர்.'—ப. பா.)

866. 'அயம:' யமபயமில்லாதவர். (அல்லது 'யம:' யோகத்தின் அங்கமாகிய யம வடிவினர்.—சங். 'யம:' என்பது பட்டர் பாடம். 'விரும்பின வரங்களை யளிக்கும் தேவர்களையும் நடத்துகிறவர்:' —ப. பா.)

867. சூரத்தன்மையும் வீரத்தன்மையும் படைத்தவர். ('மோக்ஷத்திற்குக் காரணமாகிய சுத்த ஸத்துவத்தை அடைந்திருப்பவர்.'—ப. பா.)

868. ஸத்துவ குணத்தைப் பிரதானமாக உடையவர்.

---

861. அதமாய நம: । —ப. பா
865. நியமாய நம: । —ப. பா
866. யமாய நம: । —ப. பா

869. ஸத்யாய நம:
870. ஸத்யதர்ம-பராயணாய நம:
871. அபிப்ராயாய நம:
872. ப்ரியார்ஹாய நம:

('தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம் ஆகிய ஸத்துவ குணத்தின் பலன்களை அளிக்கத்தக்கவர்.'—ப. பா.)

869. நல்லோர்க்கு நல்லவர் அல்லது உள்ளவர். ('ஸத்ஸு ஸாதுத்வாத் ஸத்ய:'—சங். 'ஸாத்விக சாஸ்திரங்களினால் சொல்லப்படுவதினால் உண்மையான மகிமையுடையவர். ஸத்தியத்திற்கு ஆதாரமாயிருப்பவர்.'—ப. பா. ஒ. 'ஸத்தியத்தில் வாசுதேவர் நிலை பெற்றிருக்கிறார். அவரிடத்தில் ஸத்தியம் நிலை பெற்றிருக்கிறது. உண்மையும் இன்மையும் கோவிந்தர் தாம். ஆதலால் அவர் ஸத்தியரென்று சான்றோரால் நினைக்கப்படுகிறார்.'—ம. பா. உத்யோக பர்வம். ஒ. 'ஸத்யஞ்சான்ருதஞ்ச ஸத்யமபவத் l யதிதங்கிஞ்ச l தத் ஸத்யமித்யாசக்ஷதே l'—தை. உப. 2. 6.)

870. ஸத்தியத்தையும் தர்மத்தைவும் முக்கியமாகக் கொண்டவர். ('ஸத்யே யதா-பூதார்த்த-கதனே தர்மே ச சோதனாலக்ஷணே ப்ரகர்ஷேண நியத இதி ஸத்யதர்ம-பராயண:'—சங். 'வேறு காரணமின்றிச் சாஸ்திரவிதியென்று மாத்திரம் ஸாத்விகர்களான அதிகாரிகளால் செய்யப்படும் உத்தமமான நிவிருத்தி தர்மத்தை மிகப் பிரியமாக அங்கீகரிப்பவர்.'—ப. பா.)

871. புருஷார்த்தங்களை அடைய விரும்புவோரால் அணுகி வேண்டப்படுகிறவர். (அல்லது பிரளயகாலத்தில் உலகனைத்தும் தம்மிடம் வந்தடையும்படி இருப்பவர். 'அபிப்ரேயதே புருஷார்த்த-காங்க்ஷிபி-ராபிமுக்யேன, ப்ரலயே ऽஸ்மின் ப்ரைதி ஜகதிதி வாऽபிப்ராய:'—சங். 'ஸாத்விக தர்மத்தை யனுஷ்டித்து நிர்மலராயிருக்கும் அடியார்களினால் வேறு பலனை விரும்பாது தாமே பரமோத்தேச்யமாக நினைக்கப்படுகிறவர்.'—ப. பா.)

872. பிரியமான வஸ்துக்களை அர்ப்பணம் செய்தற்குரியவர். (ஒ. 'யத்யதிஷ்டதமம் லோகே யச்சாஸ்ய தயிதம் க்ருஹே l தத்தத்-குணவதே தேயம் ததேவாக்ஷய-மிச்சதா ll' தக்ஷஸ் 3. 32. 'அனன்ய பக்தியுடன் வந்தடையும் ஞானியாகியவ்டனை அநுக்கிரகிப்பதற்குரியவர்.' ஒ. 'நிச்சயமாக நான்

873. அர்ஹாய நம:	877. ஜ்யோதிஷே நம:
874. ப்ரியக்ருதே நம:	878. ஸுருசயே நம:
875. ப்ரீதிவர்த்தனாய நம:	879. ஹுதபுஜே நம:
876. விஹாயஸகதயே நம:

ஞானிகளுக்கு மிகப்பிரியன், ஞானியும் எனக்குப் பிரியன்.'— கீ. 7. 17.)

873. பூஜித்தற்குரியவர். ('ஸ்வாகதாஸன-ப்ரசம்ஸார்க்ய-பாத்ய-ஸ்துத்யாதிபிர்-பஜதாம் ப்ரியம் கரோதீதி ப்ரியக்ருத்!'—சங். 'வேறொன்றிலும் விருப்பமில்லாத பக்தர்களுக்குத் தாம் ஒருவரே தகுதியாயிருப்பவர்'.—ப. பா.)

874. பக்தர்களின் விருப்பத்தைச் செய்கிறவர். ('இதர பலன்களைக் கருதிப் பக்தி செய்கிறவரையும் அவர் விருப்பங்களை நிறைவேற்றித் தம்மையே விரும்பும்படி செய்கிறவர்'.— ப. பா.)

875. பக்தர்களுக்கு அன்பை விருத்தி செய்கிறவர்.

876. ஆகாயத்திலுறைபவர். (ஆகாயம் என்றது விஷ்ணு பதம் அல்லது ஆதித்யன். 'பக்தியின் முடிவான நிலையில் ஏறப்பெற்றவர்கள் பரமபதம் செல்வதற்குத் தாமே உபாயமாயிருப்பவர்.'—ப. பா.)

877. ஸ்வயமாகவே பிரகாசிப்பவர். (ஒ 'நாராயண பரோ ஜ்யோதி:'—நாராயணஸூக்தம்.)

878. சுபமான இச்சையுடையவர். (அல்லது அழகாய்ப் பிரகாசிப்பவர்.)

879 ஆஹுதியில் அளிக்கப்பட்டதைப் புசிப்பவர். ('ஸமஸ்த தேவதோத்தேசேன ப்ரவ்ருத்தேஷ்வபி கர்மஸு ஹுதம் புங்க்தே புனக்திதி வா ஹுதபுக்'.—சங், ஒ. 'குந்தீ புத்திரனே! சிரத்தையுடன் கூடியவர்களாய் எவர்கள் வேறு தெய்வங்களிடம் பக்தி செலுத்திப் பூஜிக்கின்றார்களோ அவர்களுங்கூட என்னைத்தான் அறியாமல் பூஜிக்கின்றனர். எல்லா யஜ்ஞங்களிலும் உண்பவனும் பலனையளிக்கும் ஆண்டவனும் நானேயன்றோ.''—கீ. 23-24.)

879-80. ஹுதபுக்விபவே நம: 1		—ப. பா.

880. விபவே நம:
881. ரவயே நம:
882. விரோசனாய நம:
883. ஸூர்யாய நம:
884. ஸவித்ரே நம:
885. ரவிலோசனாய நம:
886. அனந்தாய நம:
887. ஹுதபுஜே நம:
888. போக்த்ரே நம:

880. எங்கும் இருப்பவர். (அல்லது மூவுலகிற்கும் பிரபு. 'ஹுதபுக்விபு:—அமிர்தமாகப் பரிணமிக்கும் ஹோமத்திரவியங்களைப் புசிப்பவனாகிய சந்திரன் வளரும் பிறையாகிய சுக்ல பக்ஷமாயிருப்பவர்.'—ப. பா.)

881. சூரியனாக இருப்பவர்.

882. பலவிதமாகப் பிரகாசிப்பவர்.

883. எல்லாவற்றையும் உண்டாக்குகிறவர். (அல்லது ஐசுவரியத்தை யளிப்பவர். 'ஸூதே: ஸுவதேர் வா ஸூர்ய-சப்தோ நிபாத்யதே'—சங்.)

884. உலகங்களைப் பிறக்கச் செய்பவர். ('சூரியனாய் மழையையும் அதனால் பயிர் முதலானவற்றையும் உண்டாக்குகிறவர்.'—ப. பா. ஒ. 'ரஸானாஞ்ச ததா஽஽தானாத் ரவிரித்யபிதீயதே | ப்ரஜானாந்து ப்ரஸவனாத்-ஸவிதேதி நிகத்யதே ||'—விஷ்ணுதர்மோத்தரம்.)

885. சூரியனைக் கண்ணாகவுடையவர். (ஒ 'அக்னிர் மூர்த்தா சக்ஷுஷீ சந்த்ர-ஸூர்யௌ'—மு. உப. 2. 1. 4.)

886. அளவுபடாதவர். (அல்லது ஆதிசேஷஸ்வரூபி. 'நித்யத்வாத் ஸர்வகதத்வாத் தேசகாலபரிச்சேதாபாவாதனந்த: சேஷரூபோ வா'—சங்.)

887. ஹோமம் செய்ததைப் புசிப்பவர்.

888. பிரகிருதியை அனுபவிப்பவர். (அல்லது உலகங்களைக் காப்பவர். 'ப்ரக்ருதிம் போக்யாம் அசேதனாம் புங்க்த இதி போக்தா | ஜகத் பாலயதீதி வா போக்தா |'—சங். ஒ. 'உபத்ரஷ்டா஽னுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர:'—கீ. 13. 22. 'அனந்தஹுதபுக்போக்தா' என்பது ஒரே நாமம். 'அளவற்ற மகிமையுள்ள இந்திரனையும் பிரம்மாவையும் அர்ச்

885-88. அனந்த-ஹுதபுக்-போக்த்ரே நம: | —ப. பா.

889. ஸுகதாய நம:
890. நைகஜாய நம:
891. அக்ரஜாய நம:
892. அநிர்விண்ணுய நம:
893. ஸதாமர்ஷிணே நம:
894. லோகாதிஷ்டானுய நம:
895. அத்புதாய நம:
896. ஸநாத் நம:

சிராதி மார்க்கத்தில் வைத்திருப்பவர். யாகங்களில் ஹோமம் செய்வதைப் புசிப்பதினுல் இந்திரனை ஹுதபுக் என்றும், பிரஜைகளைக் காப்பாற்றுவதனுல் பிரம்மாவை போக்தா என்றும் சொல்லியது.'—ப. பா.)

889. பக்தர்களுக்கு மோக்ஷசுகத்தைக் கொடுப்பவர். (அல்லது 'அஸுகத:' துக்கத்தைக் கண்டிப்பவர்.)

890. (தர்மத்தை ரக்ஷிப்பதற்காக) அநேக அவதாரங்கள் எடுப்பவர். ('நைகத:' எண்ணிறந்த மாலை, மை, ஆடை முதலிய பிரம்மாலங்காரங்களைக் கொடுக்கும் அப்ஸரஸுகள் முக்தனை எதிர்கொண்டழைத்துத் தம்மிடம் சேர்க்கும்படி இருப்பவர்.—ப. பா.)

891. எல்லாவற்றிற்கும் முன்னே இருப்பவர். (ஆதியில் தோன்றிய ஹிரணியகர்ப்ப வடிவினர். 'ஹிரண்யகர்ப்ப: ஸம வர்த்தாக்ரே'—தை. ஸம். 4. 1. 8.)

892. கவலையில்லாதவர். (சலிப்பில்லாதவர்.)

893. ஸாதுக்களுக்கு அனுகூலனுய் அவர்கள் செய்யும் பிழைகளைப் பொறுப்பவர்.

894. உலகங்களுக்கு ஆதாரமானவர்.

895. அற்புதமாயிருப்பவர். ('ஆச்சர்யவத் பச்யதி கச்சி-தேனம்' கீ. 2. 29. 'ஆச்சர்யோ வக்தா குசலோ஽ஸ்ய லப்தா ஆச்சர்யோ ஜ்ஞாதா குசலானுசிஷ்ட:'—கட. உப. 1. 2. 8. 'அத்புதம்' என்றும் பாடம்.)

896. அனுதியான காலரூபியாயிருப்பவர். ('ஸநாதிதி நிபாத: சிரார்த்த-வசன: காலச்ச பரஸ்யைவேதி விகல்பனு காபி'—சங். 'பரஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் புருஷ: ப்ரதமம் த்விஜ । வ்யக்தாவ்யக்தே ததைவான்யே ரூபே காலஸ்ததா பரம் ॥'—விஷ்ணு பு. 1. 2. 15.)

---

890. நைகதாய நம:. —ப. பா.

987. ஸநாதனதமாய நம:	901. ஸ்வஸ்திதாய நம:
898. கபிலாய நம	902. ஸ்வஸ்திக்ருதே நம:
899. கபயே நம:	903. ஸ்வஸ்தயே நம:
900. அப்யயாய நம:	904. ஸ்வஸ்திபுஜே நம:

897. பழமையாயிருக்கும் பிரம்மாதி தேவருக்கும் பழமையாயிருப்பவர். ('ஸர்வகாரணத்வாத்-விரிஞ்ச்யாதீனமபி ஸநாதனனு-மதிசயேன ஸநாதனத்வாத் ஸநாதன-தம:|' —சங். ஒ. 'முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே.'—திருவெம்பாவை.)

898. கபில நிறமுள்ளவர். (அல்லது கபில நிறமுள்ள வடவாக்னியாகக் கடலிலிருப்பவர். 'சுற்றிலும் மின்னிக் கொண்டிருக்கும் மின்னலின் நடுவில் விளங்கும் நீருண்ட மேகம்போலப் பரந்த ஒளியாகிய நித்ய விபூதியின் நடுவில் விளங்குகிறவர்.'—ப. பா.)

899. சூரியனுயிருப்பவர். (அ. 'கம் ஜலம் ரச்மிபி: பிபன் கபி: ஸூர்யோ கபிர்-வராஹோ வா|'—சங். ஒ. 'கபிர்-வராஹ: ச்ரேஷ்டச்ச' ம. பா. சாந்தி. 352. 24.)

900. பிரளயகாலத்தில் உலகம் அடங்குமிடமா யிருப்பவர். (அ. 'அப்யயே ப்ரலயே஽ஸ்மின்னபியந்தி ஜகந்தீத்யப்யய:'—சங். 'கபிரவ்யய:' 'கபயே஽வ்யயாய நம:' என்பது பட்டர் பாடம். 'மாறுதல் ஒன்றுமில்லாதவராகச் சுகத்தைக் காப்பாற்றுகிறவர்.)

901. பக்தர்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவர்.

902. மங்களத்தைச் செய்பவர். ('தம்மைக் குணங்களோடு அனுபவிக்கும்படியாக முக்தர்களுக்கு ஆசீர்வாதம் செய்பவர்.'—ப. பா.)

903 (பரமானந்த வடிவான) மங்களமாகத் தாமே இருப்பவர்.

904. மங்களத்தை யனுபவிப்பவர். (அல்லது பக்தர்களுக்கு மங்களத்தை ஊட்டுவிப்பவர்.)

899–90. கபயே஽வ்யயாய நம: | —ப. பா.
903. ஸ்வஸ்தினே நம: | —ப. பா.

905. ஸ்வஸ்திதக்ஷிணாய நம: 909. விக்ரமிணே நம:
906. அரௌத்ராய நம: 910. ஊர்ஜிதசாஸனாய நம:
907. குண்டலினே நம: 911. சப்தாதிகாய நம:
908. சக்ரிணே நம:

905. மங்களத்தை விரைவாகக் கொடுக்கும் தன்மை உள்ளவர். (ஒ. 'ஸம்ருதே ஸகல-கல்யாண-பாஜனம் யத்ர ஜாயதே । புருஷஸ்-தமஜம் நித்யம் வ்ரஜாமி சரணம் ஹரிம்||' —விஷ்ணு பு. 5. 17. 17. 'தம்மைத் தருவதாகிய தீர்க்க ஸத்ர யாகத்தில் தம் அடியார்களாகிய ருத்விக்களுக்குத் தமக்குக் கைங்கர்யம் செய்யத் தகுதியான திவ்யசரீரம் சக்தி முதலிய அநேக நன்மைகளையும் தக்ஷிணையாக அளிப்பவர்.'—ப. பா.)

906. (ஆசை கோபம் கொடுஞ்செயலாகிய) கொடுமைகளில்லாமலிருப்பவர். (ஒ. 'ஆத்மாவிற்கு நாசம் விளைக்கும் நரகவாயில் காமம், கோபம், லோபம் என மூவகைத்து.'—கீ 16. 21..)

907. ஆதிசேஷ வடிவினர். ('அல்லது பிரகாசிக்கும் குண்டலங்களை அணிந்தவர். அல்லது ஸாங்கியம். யோகம் ஆகியவற்றைக் குண்டலங்களாகக் கொண்டவர்.'—சங்.)

908. (மனஸ் தத்துவமாகிய ஸுதர்சனம் என்னும்) சக்கரத்தைத் தரிப்பவர். ('ஸமஸ்தலோக-ரக்ஷார்த்தம் மனஸ்-தத்வாத்மகம் ஸுதர்சனக்யம் சக்ரம் தத்த இதி சக்ரீ ।'—விஷ்ணு பு. 1. 22. 71.)

909. நடையழகு படைத்தவர், (சிறந்த பராக்கிரமம் உள்ளவர்.)

910. (சுருதி ஸ்ம்ருதி வடிவான) உறுதியான கட்டளைகளைப் பிறப்பிப்பவர். ('ச்ருதி-ஸம்ருதீ மமைவாஜ்ஞே யஸ்தே உல்லங்க்ய வர்த்ததே! ஆஜ்ஞாச்சேதீ மமத்வேஷீ ந மத்பக்தோ ந வைஷ்ணவ: ||')

911. சொல்லுக் கெட்டாதவர். (ஒ. 'யதோ வாசோ நிவர்த்தந்தே'—தை. உப. 2. 4. 'ந சப்த-கோசரே யஸ்ய யோகி-த்யேயம் பரம் பதம்.'—விஷ்ணு பு. 11. 7. 22.)

912. சப்தஸஹாய நம:	916. பேசலாய நம:
913. சிசிராய நம:	917. தக்ஷாய நம:
914. சர்வரீகராய நம:	918. தக்ஷிணாய நம:
915. அக்ரூராய நம:	919. க்ஷமிணாம்வராய நம:

912. (எல்லா வேதங்களாலும் கோஷிக்கப்படுவதால்) எல்லாச் சப்தங்களையுந் தாங்குகிறவர். ஒ. 'ஸர்வே வேதா யத் பத-மாமனந்தி'—கட. உப. 2. 15. 'வேதைச்ச ஸர்வை-ரஹமேவ வேத்ய:'—கீ. 15. 15. 'தெளிவாக உச்சரிக்க மாட்டாத திர்யக் ஜாதிகளின் துக்க சப்தத்தையும் பெரிய பாரம் போலப் பொறுப்பவர். கஜேந்திரன் முதலையின் வாயில் அகப்பட்டு ஆதிமூலமே என்று கதறினதை வருத்தத்தோடு கேட்டவர்.'—ப. பா.)

913. (மூவகைத் தாபங்களால் வாட்டமுற்றோர்க்குக் களைப்பாறும்) குளிர்ந்த இடமாயிருப்பவர்.

914. இரவு போன்ற இருளைச் செய்பவர். ஞானிகளுக்கு இரவு போன்றது ஸம்ஸாரம்; அஞ்ஞானிகளுக்கு இரவு போன்றது ஆத்ம ஞானம். (ஒ. 'எல்லாப் பிராணிகளுக்கும் எது இரவோ அதில் மனமடங்கிய முனிவன் விழிப்புடனிருக்கிறான்; எதில் பிராணிகள் விழிப்புடையனவோ அது உண்மையைக் காணும் முனிவனுக்கு இரவாம்.'—கீ. 2.69.)

915. கொடுமையில்லாதவர். (கொடுமையாவது கோபத்தாலுண்டாவதும் மிகுந்த பற்றுதலோடு கூடியதுமான உள் வெதுப்பு. பகவானுக்குக் காமமின்மையால் கோபமுமில்லை. கொடுமையுமில்லை.)

916. அழகுமிக்கவர். ('கர்மணா மனஸா வாசா வபுஷா ச சோபனத்வாத் பேசல:'—சங்.)

917. ஸாமர்த்தியம் மிகுந்தவர்.

918. எங்கும் செல்லுகிறவர். (அல்லது பகைவரை அழிப்பவர். அல்லது ஸாமர்த்தியம் மிகுந்தவர். 'தக்ஷிண:' எனும் நாமமும் 'தக்ஷ:' என்பதும் ஒரே கருத்துடையன வாய்க் கொள்ளலாம். சொல் வேறுபடுவதால் கூறியது கூறலாகாது.)

919. பொறுப்பவரிற் சிறந்தவர். (தாங்கும் சக்தியுள்ளவர்களுக்கெல்லாம் சிறந்தவர். ஒ. 'க்ஷமயா ப்ருதிவீஸம:' ராமா.—1. 1. 18.)

920. வித்வத்தமாய நம:
921. வீதபயாய நம:
922. புண்யச்ரவணகீர்த்தனாய நம:
923. உத்தாரணாய நம:
924. துஷ்க்ருதிக்னே நம:
925. புண்யாய நம:
926. து:ஸ்வப்ன-நாசனாய நம:
927. வீரக்னே நம:

920. அறிவோரிற் சிறந்தவர்.

921. (ஸம்ஸார) பயமற்றவர்.

922. தம்மைப் பற்றிக் கேட்பவர்க்கும் கீர்த்தனம் செய்பவர்க்கும் புண்ணியத்தைக் கூட்டிவைப்பவர் (ஒ. 'ய இதம் ச்ருணுயாந் நித்யம் யச்சாபி பரிகீர்த்தயேத் | நாசுபம் ப்ராப்னுயாத் கிஞ்கித் ஸோ'முத்ரேஹ ச மானவ:' ||—வி. ஸ. பலசுருதி.)

923. (ஸம்ஸாரக் கடலிலிருந்து) கரையேற்றுகிறவர் (ஒ. 'என்னிடம் நிலை பெற்ற மனமுடைய அவர்களுக்குச் சாவுடன் கூடிய ஸம்ஸாரக் கடலினின்று சீக்கிரத்தில், அர்ஜுனா, நான் கரையேற்றிக் காப்பவனாக ஆகின்றேன்.'—கீ. 12. 7.)

924. பாவங்களைப் போக்குகிறவர். (அல்லது பாவிகளை ஒழிப்பவர்.)

925. புண்ணியத்தை அளிப்பவர். (அல்லது சுருதி ஸ்மிருதிகளின் மூலம் புண்ணியத்தை உபதேசிப்பவர்.)

926. கெட்ட கனவுகளைப் போக்குபவர். (அல்லது தன்னை நினைப்போர்க்குக் கனவுகள் சூசிப்பிக்கும் கெடுதல்கள் வராமல் ஒழிப்பவர், 'என்னையும் உன்னையும் இந்தத் தடாகத்தையும் நினைப்பவர் எவரோ அவருக்குக் கெட்ட கனவு போய்விடும்' என்பது ஸ்ரீ விஷ்ணு தர்மம் கஜேந்திரமோக்ஷ வரலாறு. 912 முதல் 941 வரை உள்ள நாமங்களனைத்திற்கும் கஜேந்திரனுக்கு மோக்ஷமளித்த வரலாற்றுடன் இணைத்துப் பட்டர் பொருள் கூறுகிறார்.)

927. முக்தியளித்து ஸம்ஸாரத்தில் உழல்வோருடைய போக்குகளை அழிப்பவர். (அ. 'விவிதா: ஸம்ஸாரிணாம் கதீர்-முக்தி-ப்ரதானேன ஹந்தீதி வீரஹா |'—சங்.)

928. ரக்ஷணாய நம:
929. ஸத்ப்யோ நம:
930. ஜீவனாய நம:
931. பர்யவஸ்திதாய நம:
932. அனந்தரூபாய நம:
933. அனந்தச்ரியே நம:
934. ஜிதமன்யவே நம:

928. இரக்ஷிப்பவர்.

929. நல்லோர்கள் வடிவாயிருப்பவர். (ஒ. 'ஞானி நானே என்பது என் மதம்.' என்று பகவான் கூறுகிறார்.— கீ. 7. 18. ஒ. 'அஸ்தி ப்ரஹ்மேதி சேத்-வேத | ஸந்த-மேனம் ததோ விதுரிதி |' — தை. உப. 2. 6. 'தம்மை அடுத்தவர்களுக்குத் தாம் உளராயிருப்பவர்.' —ப. பா. 'உளனெனில் உளவன்.' —நம்மாழ்வார்.)

930. எல்லா உயிர்களையும் பிராணனாகி ஜீவிக்கச் செய்பவர். (ஒ. 'எல்லாப் பிராணிகளிடத்தும் உயிராக நான் இருக்கின்றேன்.' — கீ. 7. 9.)

931. எங்கும் வியாபித்திருப்பவர். (ஒ 'எங்கெங்கே பார்த்தாலும் ஏவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்கிருப்பது நீயன்றோ பராபரமே.' — தாயுமானவர்.)

932. ஆதிசேஷவடிவினர். (அல்லது எல்லாப் பிரபஞ்ச ரூபமாயும் இருப்பவர். 'அந்தந்த பக்தர்களைக் காப்பதற்கு அப்போதைக்கப்போது எண்ணிறந்த ரூபங்களை எடுத்திருப்பவர்.' —ப. பா.)

933. அளவற்ற சக்தியுடையவர். (ஒ. பராஸ்ய சக்திர்-விவிதைவ ச்ரூயதே |' —ச்வே. உப. 6. 8. 'அடுத்தவர்களுக்குத் தம்மை அடையும் வரையிலுள்ள அளவற்ற செல்வங்களை வைத்திருப்பவர்.' —ப. பா.)

934. கோபத்தை வென்றவர். (ஒ. 'நூநம் தபோ யஸ்ய ந மன்யு-நிர்ஜயோ ஜ்ஞானம் க்வசித் தச்ச ந ஸங்கவர்ஜிதம் | கச்சின் மஹாம்ஸ்தஸ்ய ந காமநிர்ஜய: ஸ ஈச்வர: கிம் பரதோ வ்யபாச்ரய: ||' —பாக. 8. 8. 20.)

929. ஸந்தாய நம: ப—பா.

935. பயாபஹாய நம: 939. வ்யாதிசாய நம:
936. சதுரச்ராய நம: 940. திசாய நம:
937. கபீராத்மனே நம: 941. அநாதயே நம:
938. விதிசாய நம: 942. புவோபுவே நம:

---

935. பயத்தைப் போக்குபவர். (ஒ. 'ஜன்ம-ம்ருத்யு-ஜராவ்யாதி-பயம் நைவோபஜாயதே' —வி. ஸ. பலச்ருதி.)

936. (அவரவர்க்குத் தக்கபடி கர்மபலன்களைக் கூட்டி வைப்பதால்) நியாயத்துடன் கூடியவர்.

937. ஆழங்காணமுடியாத ஸ்வரூபமுடையவர்.

938. விசேஷமாகப் பலன்களை அளிப்பவர். (அ. 'விவிதானி பலானி அதிகாரிப்யோ விசேஷேண திசதீதி விதிச:' —சங்.)

939. இந்திராதி தேவர்களுக்கு வெவ்வேறான கட்டளைகளை வகுப்பவர்.

940. வேத ரூபியாக எல்லாக் கர்மங்களுக்கும் பலனைச் சுட்டிக் காட்டுபவர்.

941. (தாமே அனைத்திற்கும் காரணமாயிருப்பதால்) தமக்குக் காரணமில்லாதவர். (ஒ 'அநாதியானவனும் பிறப்பில்லாதவனும் உலகத்துக்கெல்லாம் இறைவனுமாகிய என்னை எவன் அறிகிறானோ அவன் மனிதர்களுள் மதிமயக்கம் நீங்கியவன்; எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிறான்.'—கீ. 10. 3)

942. பூமிக்கும் ஆதாரமாகியவர். ('புவ: எல்லா உயிர்களுக்கும் புகலிடமாய்ப் பிரசித்திபெற்ற பூமிக்கும் பூ: ஆதாரமாகியவர்.'—சங். 'கடைத்தேறின பக்தனுக்குத் தாமே இடமாயிருப்பவர்.' —ப. பா. அல்லது பூலோகமாகவும் புவர்லோகமாகவும் இருப்பவர்.)

943. லக்ஷ்ம்யை நம:
944. ஸுவீராய நம:
945. ருசிராங்கதாய நம:
946. ஜனனாய நம:
947. ஜனஜன்மாதயே நம:
948. பீமாய நம:
949. பீமபராக்ரமாய நம:
950. ஆதாரநிலயாய நம:
951. அதாத்ரே நம:

943. உலகின் சோபையாயிருப்பவர். (அல்லது ஆத்ம வித்தையா யிருப்பவர். அல்லது 'பூ: பூமியாகமட்டுமின்றி. புவோ லக்ஷ்மீ: பூமியின் சோபையாகவும் இருப்பவர். ஆத லால் பூர்ப்புவோ லக்ஷ்மீ:' என ஒரு நாமமாகவும் கொள்ள லாம் 'தம்மைச் சேர்ந்தவர்க்குத் தாமே எல்லாவித ஸம்பத்து மாயிருப்பவர்.'—ப. பா.)

944. பலவகை நல்லகதிகளைக் கொடுப்பவர். (பலவகை யாகப் போற்றப்பட்டவர். 'சோபனா விவிதா ஈரா கதயோ யஸ்ய ஸ ஸுவீர: । சோபனம் விவிதம் ஈரண-மஸ்யேதி வா ஸுவீர:'—சங். 'பாண்டவர் முதலான பக்தர்களுக்கு அபாயத்தைப் பரிகரிக்கும் சிறந்த சக்தியுள்ளவர்'—ப. பா.)

945. அழகான தோள்வளைகளை உடையவர். ('மிக்க அழகான தமது திவ்யமங்கள விக்கிரகத்தைப் பக்தர்கள் கண்டு களித்து அனுபவிக்கும்படி கொடுப்பவர்.'—ப. பா.)

946. உயிர்களைப் படைப்பவர்.

947. ஜனங்களின் உற்பத்திக்குக் காரணமாகியவர்.

948. உலகெல்லாம் தம்மிடம் பயந்து நடக்கும்படி இருப்பவர் (ஒ. 'மஹத்பயம் வஜ்ர-முத்யதம்.' கட. உப. 6. 2.)

949. அசுரர் முதலியவர்களுக்குப் பயத்தைத் தரும் பராக்கிரம முள்ளவர்.

950. எல்லாவற்றிற்கும் அடிப்படையான பஞ்ச பூதங் களுக்கும் ஆதாரமாயிருப்பவர். ('பிரஹ்லாதர், விபீஷணர், பாண்டவர்கள் முதலிய ஸாதுக்கள் உலகைத் தாங்குபவர் கள்; அவர்களுக்கு ஆதாரமாகியவர்.'—ப. பா.)

951. தம்மைத் தவிர வேறு ஆதாரம் இல்லாதவர். (அ. 'ஸ்வாத்மனா த்ருதஸ்யான்யோ தாதா நாஸ்தீத்யதாதா.' அல்லது ஸம்ஹார காலத்தில் எல்லா உயிர்களையும் பருகு

951 தாத்ரே நம: —ப. பா.

952. புஷ்பஹாஸாய நம: 956. ப்ராணதாய நம:
953. ப்ரஜாகராய நம: 957. ப்ரணவாய நம:
954. ஊர்த்வகாய நம: 958. பணய நம:
955. ஸத்பதாசாராய நம:

பவர். ஸம்ஹார ஸமயே ஸர்வப்ரஜா தாரயதி பிபதீதி வா தாதா, தேட்பானே இதி தாது:'—சங். 'தாமே தர்மத்தை உபதேசித்தும் உலகைத் தாங்குகிறவர்.'—ப. பா.)

952. புஷ்பம் மலர்வதுபோல் பிரபஞ்ச ரூபமாகச் சிருஷ்டி காலத்தில் தாம் மலர்கிறவர். ('தம்முடைய ஸ்வ-ரூபத்தை அனுபவிக்கும் திறமை உண்டானவர்களுக்கு ஸாயங்காலத்தில் புஷ்பம் மலர்வதுபோலத் தாமே மலர்ந்து மிகக் போக்யராகப் பிரகாசிப்பவர்.'—ப. பா. அல்லது மலர்ந்த புஷ்பங்களில் தமது சிரித்த முகம் தோன்றுவதுபோல் இருப்பவர்.)

953. எப்போதும் விழித்துக் கொண்டிருப்பவர் ('நித்ய-ப்ரபுத்தரூபத்வாத் ப்ரகர்ஷேண ஜாகர்த்தீதி ப்ரஜாகர:'—சங், 'பயிரிடுபவன் பயிரைக் காப்பதுபோல் இரவும் பகலுந் தூங்காமல் பக்தர்களைக் காப்பவர்.'—ப. பா.)

954. எல்லாவற்றிற்கும் மேலிருப்பவர்.

955. ஸதாசாரங்களைத் தாமும் அனுஷ்டிப்பவர். ('நன்மார்க்கங்களில் பக்தர்களைப் பிரவர்த்திக்கச் செய்பவர்.'—ப. பா.)

956. பரீக்ஷித்துக்கு உயிரளித்ததுபோல் இறந்தவர்க்கும் உயிரளிப்பவர். ('விஷயங்களென்னும் விஷங்கள் தீண்டி மயக்கத்தினால் தம்மை மறந்து ஆத்மநாசம் அடைந்தவர்களுக்கு ஆத்மா உய்வதாகிய உயிரைக் கொடுப்பவர்.'—ப. பா.)

957. ஓங்காரப் பொருளாயிருப்பவர். ('ப்ரணவோ நாம பரமாத்மனோ வாசக ஓங்கார: ததபேதோபசாரேணாயம் ப்ரணவ:'—சங்)

958. நாமரூபங்களை விவகரிப்பவர் ('பண வ்யவஹாரே இதி தாது:' ஒ 'ஸர்வாணி ரூபாணி விசித்ய தீர:1 நாமானி க்ருத்வாzபிவதன் யதாஸ்தே'-புருஷஸூக்தம். அல்லது எல்லாப் புண்ணிய கர்மங்களையும் பணமாக ஏற்றுக் கொண்டு அவற்றைச் செய்தவர்க்கு உரிய பலனை யளிப்பவர். இலக்கணையால்

959. ப்ரமாணாய நம:
960. ப்ராணநிலயாய நம:
961. ப்ராணப்ருதே நம:
962. ப்ராணஜீவனாய நம:
963. தத்வாய நம:

'பண:' எனக் கூறப்படுபவராகின்றார்—சங். 'தாம் ஸ்வாமியாகவும் ஜீவர்கள் தமக்கு அடியார்களாகவும் இருக்கும் ஸம்பந்தத்தைச் சில சமயங்களில் தாம் பக்தர்களுக்கு அடிமையாய் இருந்து மாற்றுவதனால் க்ரயவிக்கிரயம் செய்பவர்.'—ப பா.)

959. தானே ஒளிர்வதான ஞானவடிவினர். ('வேதங்களின் ரஹஸ்யார்த்தங்களை ஐயந்திரிபின்றி அறிவிப்பவர்'—ப. பா.)

960. பிராணனுக்கு உறைவிடமாயிருப்பவர். (அல்லது ஜீவாத்மாக்களுக்கு இருப்பிடமானவர். 'கூட்டில் பறவைகள் அடைவது போல எல்லா ஆத்மாக்களும் தம்மிடம் அடங்கும்படி இருப்பவர்.'—ப. பா,)

961. (அன்ன ரஸமாயிருந்து) உயிர்களைப் போஷிப்பவர்.—('ப்ராண-த்ருத்' என்பது பட்டர் பாடம். ஜீவாத்மாக்களைத் தாய்போலத் தாங்குகிறவர்.)

962. பிராணிகளை ஜீவிக்கச் செய்பவர். (ஒ. 'ஸ உ ப்ராணஸ்ய ப்ராண:'—கேன. உப. 'ந ப்ராணேன நாபானேன மர்த்யோ ஜீவதி கச்சன | இதரேண து ஜீவந்தி யஸ்மிந் நேதா-வுபாச்ரிதௌ ||'—கட. உப. 5. 5)

963. பரம் பொருளாகியவர். ('தத்யம், அம்ருதம், ஸத்யம், பரமார்த்தம். ஸத், தத்வம் என்ற சொற்கள் பிரம்மத்தைக் குறிப்பன'—சங். 'தயிரிலும் பாலிலும் வெண்ணெய்போல் சேதனாசேதனங்களாகிய பிரபஞ்சத்தில் வியாபித்திருக்கும் ஸாராம்சமாயிருப்பவர்.—ப. பா.)

961. ப்ராணத்ருதே நம: | —ப. பா.

964. தத்வவிதே நம:
965. ஏகாத்மனே நம:
966. ஜன்மம்ருத்யுஜராதிகாய நம:
967. பூர்ப்புவ: ஸ்வஸ்தரவே நம:
968. தாராய நம:
969. ஸவித்ரே நம:

964. தமது ஸ்வரூபத்தை அறிபவர். ('உன்னுடைய ஸ்வரூபத்தைத் தேவர்களும் உணர்ந்தவர்களல்லர். அசுரர்களும் உணர்ந்தவர்களல்லர். நீயே உன்னால் உன்னை அறிகின்றாய்.'—கீ. 10. 14. 15.)

965. ஒன்றேயாகிய ஆத்மா. (அல்லது எங்கும் வியாபித்திருப்பவர். ஒ 'ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட: ஸர்வ-வ்யாபீ ஸர்வ-பூதாந்தராத்மா'—கட. உப. 'ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத்' ஐதரேய. 1. 1. ஒ. யச்சாப்னோதி யதாதத்தே யச்சாத்தி விஷயானிஹ | யச்சாஸ்ய ஸந்ததோ பாவஸ்தஸ்மா-தாதமேதி கீயதே ||' 'சேதனு-சேதன வர்க்கங்கள் அனைத்திற்கும் தாம் ஒருவரே சோதியும் ஆளுகிறவரும் ஆதரிப்பவருமாயிருப்பவர்.'—ப. பா.)

966. பிறப்பு, இறப்பு, மூப்புக்களைக் கடந்தவர். (ஜாயதே அஸ்தி வர்த்ததே விபரிணமதே அபக்ஷீயதே நச்யதி இதி ஷட்பாவ - விகாராஸ் - தானதீத்ய கச்சதீதி ஜன்ம-ம்ருத்யு-ஜராதிக:'—சங். 'ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்'—கட. உப. 2. 18)

967. பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்ற மூன்று உலகத்தையும் வியாபிக்கும் ஸம்ஸார விருக்ஷ வடிவினர். (அல்லது பூ: புவ: ஸுவ: என்ற வியாஹ்ருதி மந்திரங்களால் உலகை நடத்தி வைப்பவர். 'பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் ஆகியவற்றிலுள்ள பிராணிகள் பழுத்த மரத்தைப் பறவைகள் போல் அடுத்து ஜீவிக்கும்படி இருப்பவர்.'—ப. பா.)

968. பிறவிக் கடலைத் தாண்டுவிப்பவர். (அல்லது பிரணவஸ்வரூபி. ஒ. த்வம் ஹி ந: பிதா யோ஽ஸ்மாக-மவித்யாயா: பரம் பாரம் தாரயஸீதி'—ப்ரச்ன உப. 6.8.)

969. எல்லாவற்றையும் உண்டாக்குகிறவர்.

970. ப்ரபிதாமஹாய நம:
971. யஜ்ஞாய நம:
972. யஜ்ஞபதயே நம:
973. யஜ்வனே நம:
974. யஜ்ஞாங்காய நம:
975. யஜ்ஞவாஹனாய நம:
976. யஜ்ஞப்ருதே நம:
977. யஜ்ஞக்ருதே நம:
978. யஜ்ஞினே நம:

970. பிதாமஹரென்னும் பிரம்ம தேவருக்கும் பிதாவாகியவர்.

971. யாகத்தைச் செய்பவர்களுக்கு அதன் பலனைக் கூட்டுவிப்பவர்.

972. யாகங்களை ரக்ஷிப்பவர். (ஒ. 'அஹம் ஹி ஸர்வயஜ்ஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச'—கீ. 9. 24.)

973. யாகம் செய்பவராயிருப்பவர்.

974. யாகங்களைத் தமது உறுப்புகளாகக் கொண்ட யஜ்ஞவராஹ வடிவினர். (வேதங்களைப் பாதங்களாகவும் யூபங்களைப் பற்களாகவும் அக்கினியை நாக்காகவும் பிரம்மத்தை தலையாகவும் தர்மங்களைக் கேசமாகவும் உடையது வராஹமூர்த்தி.)

975. யாகங்களை நடத்துகிறவர். ('யாகம் செய்பவர்களுக்குச் சக்தியையும் சிரத்தையையும் அதிகாரத்தையும் கொடுத்து யாகத்தை நடத்துகிறவர்.'—ப. பா.)

976. யாகத்தை ஏற்றுக்கொள்பவர். (அல்லது குறைவு வராமல் காப்பவர். யாகங்களில் எக்கக் குறைவினால் எந்தக் கிரியை தவறுகிறதோ அது விஷ்ணுவை ஸ்மரித்த மாத்திரத்தில் பூர்ணமாகிறது. ஒ. 'யஜ்ஞ ஏவாந்ததः ப்ரதிதிஷ்டதி ஸோதர ஜுஹோதி விஷ்ணவே ஸ்வாஹா யஜ்ஞாய ஸ்வாஹா ப்ரதிஷ்டாயை ஸ்வாஹேதி.')

977. ஆதிகாலத்தில் யஜ்ஞத்தைச் சிருஷ்டித்தவர். (ஜகதாதௌ ததந்தே ச யஜ்ஞம் கரோதீதி வா யஜ்ஞக்ருத்.'—சங்.)

978. யாகங்களுக்குத் தலைவர்.

979. யஜ்ஞபுஜே நம: 982. யஜ்ஞகுஹ்யாய நம:
980. யஜ்ஞஸாதனாய நம: 983. அன்னாய நம:
981. யஜ்ஞாந்தக்ருதே நம: 984. அன்னாதாய நம:

---

979. யாகங்களை அனுபவிப்பவர். (ஒ. ஸப்த-ஹஸ்தச் சது: ச்ருங்க: ஸப்தஜிஹ்வோ த்விசிர்ஷக: । த்ரிபாத் ப்ரஸந்நவ தன: ஸுகாஸீன: சுசிஸ்மித: ‖ ஸ்வாஹாந்து தக்ஷிணே பார்ச்வே தேவீம் வாமே ஸ்வதாம் ததா ‖ பிப்ரத்-தக்ஷிண ஹஸ்தைச்ச சக்தி-மன்னம் ஸ்ருசம் ஸ்ருவம் ‖ தோமரம் வ்ய ஜனம் வாமே க்ருத-பாத்ரந்து தாரயன் । மேஷாரூடம் ஜடா பத்தம் கௌரவர்ணம் மஹௌஜஸம் ‖ தூமத்வஜம் லோஹி தாக்ஷம் ஸப்தார்ச்சிஸ்-ஸப்தகாமதம் । ஆத்மாபிமுக-மாஸீன-மேவம் த்யாயேத்-ஹுதாசனம் ‖'

980. யாகங்களைத் தம்மையடையும் ஸாதனமாகக் காட்டுவிப்பவர்.

981. யாகத்தின் பயனைக் கூட்டுவிப்பவர். (அல்லது பூர்ணாஹுதியால் யாகத்தை முற்றுப்பெறச் செய்கிறவர். அல்லது யாகத்தின் பலனாகிற தத்துவஞானத்தை உண்டாக்கு கிறவர். ஒ. 'அர்ஜுனா! கர்மங்களெல்லாம் ஞானத்தில் முடி வடைகின்றன.'—கீ. 4. 33).

982: யஜ்ஞங்களுள் ரகசியமாகிய ஞானயஜ்ஞமாக இருப்பவர். ('யஜ்ஞானம் குஹ்யம் ஜ்ஞானயஜ்ஞ: இஷ்ட-பலரபி-ஸந்தி - ரஹிதோ வா யஜ்ஞ: ததபேதோபசாராத் ப்ரஹ்ம யஜ்ஞகுஹ்யம்.'—சங்.)

983. எல்லோராலும் அன்னம்போல் அனுபவிக்கப்படு கிறவர். (ஒ. 'அன்னத்திலிருந்து பிராணிகள் உண்டாகின் றன. உண்டானவை அன்னத்தால் வளர்கின்றன. 'அத்யதே' உண்ணப்படுகிறது. 'அத்தி' உண்கிறது. ஆகையால் அன்னம் என்று காரணப் பெயரால் குறிக்கப்படுகிறது.'—தை. உப. 2. 2. ஒ. 'உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற் றிலையு மெல்லாம் கண்ணன்'—நம்மாழ்வார். 6. 7. 1.)

984. உலகனைத்தையும் ஸம்ஹார காலத்தில் அன்னத் தைப் போல் உண்பவர். ('ஏவ' என்பது உலகெல்லாம் போக்த்ரு ரூபமாகவும் போக்ய ரூபமாகவும் இருத்தலைக் குறிக்கும். 'ச' என்பது சொற்களனைத்தும் கூடிப் பரமாத்மா வையே சொல்லும் என்பதைக் குறிக்கும்.—சங்.)

985. ஆத்மயோநயே நம: 989. தேவகீநந்தனுய நம:
986. ஸ்வயஞ்ஜாதாய நம: 990. ஸ்ரஷ்ட்ரே நம:
987. வைகானுய நம: 991. க்ஷிதீசாய நம:
988. ஸாமகாயனுய நம: 992. பாபநாசனுய நம:

---

985. தாமே உலகிற்கு உபாதான காரணமாயிருப்பவர்.

986. தாமே தமது பிறப்பிற்கும் காரணமாகியவர். நிமித்த-காரணமபி ஸ ஏவேதி தர்சயிதும் ஸ்வயஞ்ஜாத இதி। 'ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞா-த்ருஷ்டாந்தாநுபரோதாத்'—பி. சூ. 1. 4. 23. இத்யத்ர ஸ்தாபிதம் உபயகாரணத்வம் ஹரே:—சங்.)

987. வராஹமூர்த்தியாகப் பூமியைத் தோண்டியவர். ('ஆச்ரிதர்களுக்கு ஸம்ஸார துக்கத்தைக் கல்லி யெடுப்பவர்.' —ப. பா.)

988. ஸாமகானம் பண்ணுகிறவர். ('பிறவி நீங்கி முக்தியடைந்தவர்கள் தம்மை அடைந்த களிப்பால் ஸாமகானம் செய்யும்படி இருப்பவர்.'—ப. பா.)

989. தேவகியின் புதல்வர். (ஒ. 'ஜ்யோதீம்ஷி சுக்ராணி ச யானி லோகே த்ரயோ லோகா லோகபாலாஸ்-த்ரயீ ச। த்ரயோऽக்னயச்-சாஹுதயச்ச பஞ்ச ஸர்வே தேவா தேவகீபுத்ர ஏவ ॥'—ம. பா. அனுசா. 263. 31. ஒ. தேவகீநந்தன: ஸ்ரஷ்டேதி சக்தி:॥ தேவகீ ஸுத கோவிந்த வாஸுதேவ ஜகத்பதே। தேஹி மே தனயம் க்ருஷ்ண த்வாமஹம் சரணம் கத:॥ இது புத்திரனை யளிக்கும் மந்திரம் எனப்படும்.)

990. உலகங்களைப் படைப்பவர்.

991. பூமிக்கு ஈசுவரர் ('க்ஷிதீச: தசரதாத்மஜ:'—சங். எல்லாவற்றிற்கும் ஈசுவரராயினும் பூமியின் துயரத்தை நீக்குவதற்கு அவதரித்ததனால் பூமிக்கு ஈசுவரர் என்று சிறப்பாகக் கூறினது.'—ப. பா)

992. பாவங்களை ஒழிப்பவர். (ஒ. 'வாயினுற்பாடி மனத்தினுல் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்.'—திருப்பாவை.)

993. சங்கப்ருதே நம: 996. சார்ங்கதன்வனே நம:
994. நந்தகினே நம: 997. கதாதராய நம:
995. சக்ரிணே நம: 998. ரதாங்கபாணயே நம:

993. பாஞ்சஜன்யமென்னும் சங்கத்தைத் தரிப்பவர். ('பாஞ்சஜன்யாக்யம் பூதாத்-யஹங்காராத்மகம் சங்கம் பிப்ரத் சங்கப்ருத்'—சங். ஒ ஆழியெழச் சங்கும் வில்லுமெழ திசை வாழியெழத் தண்டும் வாளுமெழ அண்டம் மோழை யெழ முடி பாதமெழ அப்பன் ஊழியெழ வுலகங் கொண்ட வாறே—நம்மாழ்வார்.)

994. நந்தகமென்னும் வாளை ஏந்தியவர். (வித்யாமயோ நந்தகாக்யோ ऽஸிரஸ்யேதி நந்தகீ'—சங்)

995. ஸுதர்சனமென்னும் சக்ரத்தை உடையவர். 'மனஸ் தத்வாத்மகம் ஸுதர்சனாக்யம் சக்ரமஸ்யாஸ்தீதி சக்ரீ । ஸம்ஸாரசக்ர-மஸ்யாஜ்ஞயா பரிவர்த்தத இதி வா சக்ரீ ।—சங்)

996. சார்ங்கமென்னும் வில்லை உடையவர். ('இந்த்ரியாத் யஹங்காராத்மகம் சார்ங்கம் நாம தனு-ரஸ்யாஸ்தீதி சார்ங்கதன்வா'—சங்.)

997. கௌமோதகி என்னும் கதையைத் தரிப்பவர். ('புத்திதத்வாத்மிகாம் கௌமோதகி-நாம-கதாம் வஹன் கதாதர:'—சங்)

998. சக்கரத்தைக் கையில் கொண்டவர். ("சக்ரீ என்பதனுல் சக்ராயுதம் உடையவர் என்பது கூறப்பட்டிருந்தும் 'ரதாங்கபாணி:' என்று திரும்பவும் கூறியது மற்ற ஆயுதங்களிலிருந்தும் சக்ராயுதம் மட்டும் பிரயோகத்திற்குச் சித்தமாக கையிலெடுத்து, ஒங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பது"—ப. பா. அல்லது பாரதப்போரில் அழுந்திய அர்ஜுனன் தேர்ச் சக்கரத்தைத் தன் கையால் தூக்கியவர் எனவும் கொள்ளலாம்.)

999. அக்ஷோப்யாய நம:

1000. ஸர்வப்ரஹரணாயுதாய நம:

999. எதிரிகளால் கலக்கக் கூடாதவர் (சரணாகதர்களுக்கு அபயம் கொடுப்பது என்கிற உறுதியான விரதத்திலிருந்து எந்தக் காரணத்தாலும் அசைக்க முடியாதவர்—ப. பா.)

1000. எய்துவன எல்லாம் ஆயுதமாய்க் கொண்டவர். (ஆயுதங்களாக நினைக்கப்படாத நகம் முதலியவையும் அவருக்கு நரஸிம்மாவதாரத்தில் ஆயுதங்களாயின என்பது பிரசித்தம். ஸத்திய ஸங்கல்பரும் ஸர்வேசுவரரும் ஆவதை இது குறிக்கும்'. — சங். 'ஏஷ ஸர்வேச்வர:'—மா. உப. 6. ஸர்வப்ரஹரணாயுத: என்பதை இருமுறை சொல்லி ஓம் நம: என்று முடிக்க வேண்டும். இரண்டு முறை முடிவில் சொல்லுவது ஸம்பிரதாயம். ஓம் என்பது மங்களக் குறிப்பு. நம: என்பது சரணாகதியைக் கூறுவது. ஒ 'பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம.' ஈச. உப. 18. ஒ'அதஸீபுஷ்ப-ஸங்காசம் பீதவாஸஸ-மச்யுதம் || யே நமஸ்யந்தி கோவிந்தம் ந தேஷாம் வித்யதே பயம்||'—ம. பா. சாந்தி. 46. 122. 'எல்லாக் குற்றங்களும் ஒழிந்ததும் காரணமும் எண்ணும் எல்லையும் கடந்து எல்லாவற்றிலும் உயர்ந்த மங்களமுமாகிய திவ்யாத்ம ஸ்வரூபம், திவ்யமங்கள விக்ரஹம், திருக்கல்யாண குணங்கள், மகிமை, செய்கைகள், எங்குந் தடைபடாத ஸர்வேசுவரத் தன்மை, யாவருங்கலந்து பழகக் கூடிய எளிமை, ஆபத்திற்குதவுந்தன்மை. வேண்டினவற்றையெல்லாம் அளிக்கும் கல்பக விருக்ஷமாயிருக்கும் ஔதார்யம் ஆகிய இவையெல்லாம் பொருந்தினவரும் சரணாகதர்களுக்கு ஒரே உயிர்த்தோழரும் ஸ்ரிய:பதியும் பகவானுமான புருஷோத்தமரை ஆசிரயித்தவர்களுக்கு எல்லாச் செல்வங்களும் நீங்காமல் வளரும் என்பது இவ்வாயிரநாமங்களினால் தெரிவிக்கப்பட்டது.'—ப. பா.)

இங்ஙனம் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்திற்கு
'ஸமதர்சனம்' எனும் உரை
முற்றும்

இதே ஆசிரியர் உரை எழுதியவை

உபநிஷதங்கள்	ரூ.	பை.
ஈச கேன கட உபநிஷதங்கள்	1	7
ப்ரச்ன-முண்டக மாண்டூக்ய ஐதரேய உபநிஷதங்கள்	1	75
தைத்திரியோ உபநிஷத்து	1	50
சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துகளின் சாரம் (ப்ரஹ்ம சூத்ரத்துடன்)	3	50
மஹாநாராயண உபநிஷத்து (தைத்திரீய நாராயணவல்லி)	3	00
பகவத் கீதை		
ஸ்ரீமத் பகவத் கீதை (அண்ணா உரையுடன்)	8	00
ஸ்தோத்ரங்கள்		
ஸௌந்தர்ய லஹரி பாஷ்யம்	5	00
,, ,, காலிகோ	7	00
,, ,, மூலம் (அச்சில் உள்ளது)		
,, (நாகரம் தமிழ்)		
சிவானந்த லஹரி (பாஷ்யம்)	4	00
,, ,, (மூலம்)	1	00
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்	5	00
,, ,, (காலிகோ)	6	50
ஸ்ரீ லலிதா த்ரிசதி பாஷ்யம்	2	50
,, ,, ஸ்தோத்ரம்	1	00
ஸ்ரீ வித்யா	5	00
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் (பாராயணம்)	2	00
ஸ்ரீ விஷ்ணு ஸ்தோத்ரங்கள்	1	00
ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதம்	4	50
அஷ்டோத்தர ஸத நாமாவளிகள்	0	75
ஸ்ரீ லலிதாஸஹஸ்ர நாமம் (பாராயணம்)	3	00
,, ,, (மூலம்)	1	50

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் :: சென்னை-600004

SRI VISHNU SAHASRANAMA BASHYAM .. Rs. 6-00